சத்தமின்றி முத்தமிடு

மல்லிகா மணிவண்ணன்

கணபதியே அருள்வாய்

அத்தியாயம் ஒன்று

துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம்போம்; நெஞ்சில்

பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்

மெல்லிய குரலில் மீனாக்ஷி பாடிக் கொண்டிருந்தாள் பூஜையறையில். தினமும் கந்த ஷஷ்டி கவசம் முழுதாக சொல்ல வேண்டும் அவளின் அம்மாவின் கட்டளை அது.

“மீனா ஸ்கூல்க்கு டைம் ஆச்சு” என்ற துளசியின் குரல் கேட்க,

“மா, இப்போ தான் ஸ்டார்ட் பண்ணினேன்” என்று பதில் கொடுத்தாள்.

“மனசுக்குள்ள சொல்லிக்கோ, டைம் ஆச்சு, ஸ்கூல் பஸ் வந்துடும் வா!”

“மா” என மகள் அங்கேயே நிற்க,

“ஷ், வா! அப்படியே சாப்பிட ஏமாத்தலாம் பார்க்காதே, நான் ஊட்டி விட மாட்டேன், நீயே தான் சாப்பிடணும்”

“மா” என்று சிணுங்கியபடி மகள் வர,

“சாப்பிடு” என்று அவளின் முன் தட்டை நீட்டினாள் துளசி.

“அம்மா ப்ளீஸ், இன்னும் நான் பேக் எடுத்து வைக்கலை. இன்னைக்கு ஒரு நாள் ஊட்டி விடு. நாளைக்கு இருந்து நானே சாப்பிட்டுக்குவேன்”

“நீ தினமும் இதை தான் சொல்ற”

“எஸ் மா, நேத்து ஒரு பேச்சு, இன்னைக்கு ஒரு பேச்சு, என்கிட்டே கிடையாது” என்று மீனா சொல்லியபடி சத்தமாக சிரித்தாள். எப்போதே கைபேசியில் அவளின் அப்பா யாரிடமோ பேசியதை கேட்டது மகளின் வாய்மொழியாக வந்தது. ஆம் அப்பா வீட்டினில் இருக்கும் பொழுது எல்லாம் மகளின் கவனம் அப்பாவினடதினில் தான்.

“என்ன இது? சத்தமா சிரிக்கிற பழக்கம் பொம்பளை பிள்ளைக்கு!” என்ற கணீர் குரல் ஒலிக்க..

“மெதுவா மெதுவா” என்ற சிறு பதட்டத்துடன் துளசி சொல்ல..

“அது கிடக்குதும்மா ஓல்ட் லேடி” என்று அலட்சியமாய் சொன்ன மீனாக்ஷி, திருநீர்வண்ணன் — துளசியின் பன்னிரண்டு வயது மகள், ஆறாவது வகுப்பில் இருந்தாள்.

மீனாக்ஷியின் இந்த அலட்சியம் அம்மா துளசியை கொண்டு இல்லை, அப்பா திருநீர்வண்ணனை கொண்டு. மகளோடு நேரம் செலவழிக்கும் தந்தையோ, இல்லை மகளை கொண்டாடும் தந்தையோ, இல்லை மகளை கொஞ்சும் தந்தையோ, இல்லை கண்டிக்கும் தந்தையோ திருநீர்வண்ணன் கிடையாது.

ஆனாலும் அவனின் குணம் அனைத்தும் ஒன்று விடாமல் மீனாக்ஷியிடம் இருக்கும், ஏன் உணவு வகைகள், பிடித்தங்கள், பழக்க வழக்கம் எல்லாம் தந்தையை போல தான் மீனாக்ஷிக்கு. அதனால் மகள் என்பதையும் மீறி மீனாக்ஷியை ஆராதிப்பால் துளசி, கணவனிடம் அது முடியாதே!

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் ரகம் துளசி! அப்படி ஒரு பிடித்தம் கணவன் மீது! திருமணதிற்கு பின் தான். இல்லாவிட்டால் திருமணமாகி பன்னிரண்டு வருடங்கள், அவளிடம் சிரித்து பேசியது கிடையாது, அவளை வெளியில் அழைத்து சென்றது கிடையாது, எதுவும் கிடையாது.

இருட்டினில் நடக்கும் சில விஷயங்களை தவிர கணவன் என்ற செய்கை வேறு எதிலும் இருக்காது. எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த ஒரு விஷயம் கணவன் மனைவி ஆக்கிவிடுகிறதே!

மனதில் எத்தனை குறைகள், ஏக்கங்கள் இருந்தாலும் சிறிதும் காட்டிக் கொள்ள மாட்டாள் துளசி. ஏனென்றால்

காட்டுவதற்கு ஆள் கிடையாது. மகளின் முன் முடியவே முடியாது. புத்திசாலிக் குழந்தை, அதையும் விட அம்மாவின் சிறு முக சுணக்கம் அவளிடம் எதிரொலிக்கும். துளசியை விட பத்து மடங்கு முகத்தினை தூக்கி வைத்து சுற்றுவால்.

ஏற்கனவே "அவ அப்பனை கொண்டு அப்படியே இருக்கா! மனுஷங்களை மதிக்கறதே கிடையாது!" என்பது எல்லோரின் பேச்சு. அதனால் துளசி முகத்தினை அமைதியாய் வைக்க கற்றுக் கொண்டாள், மகளால் அவளின் மனநிலையை கணிக்க முடியாதபடி.

"பெரியவங்களை மரியாதையில்லாம பேசக் கூடாது" என்ற கண்டிப்பு துளசியிடம் கிளம்பியது.

"நீ பேசாம எனக்கு ஊட்டி விடு" என்று அம்மாவை அதட்டினாள் மகள்.

காலை ஏழரை மணி அப்போது, ஏழு நாற்பத்தி ஐந்திற்கு அவளின் பஸ் வந்து விடும், உணவுண்டு கொண்டே "லஞ்ச் என்ன?" என்ற மகளிடம் "தேங்காய் சாதம், வெண்டைக்காய்" என்று பதில் கொடுத்தாள்.

"தேங்காய் சாதத்துல நிறைய முந்திரி போட்டியாம்மா" என்றாள் மீனாக்ஷி. ஆம், உணவை ரசித்து உண்பாள்.

‘போட்டேன்” என அம்மா சொல்ல, “இப்படி தான் சொல்லுவ, ஆனா ஒன்னு ரெண்டு தான் இருக்கும்” என மீனா சிணுங்கவும்,

“அதுக்கு மேல எல்லாம் சாப்பிடக் கூடாது” என்று உணவை ஊட்டிக் கொண்டிருந்த துளசி மகளை பார்வையால் ஆராய்ந்தாள். துளசியே உயரம், இந்த வயதிலேயே அவளுக்கு சற்றே குறைவு மீனாக்ஷி.

அவளின் வயதிற்கு அவளின் உயரம் மிக அதிகம், உடலும் அதற்கு தக்கார் போல இருக்கும். “இன்னைக்கு ராத்திரி திருஷ்டி சுத்தி போடணும்” என மனதிற்குள் நினைத்துக் கொண்டே மகள் செல்லும் பக்கமெல்லாம் சென்று உணவை ஊட்டி முடித்தாள்.

அகிலாண்டேஸ்வரி அப்போது தான் குளித்து தயாராகி வெளியே வந்தார்.

திருநீர்வண்ணனின் அம்மா! அதாகப் பட்டது துளசியின் மாமியார். துளசியின் பேச்சு அப்படியே நின்று விட்டது.

“அது என்ன பொட்ட புள்ளைக்கு அப்படி சத்தமா சிரிப்பு” என மீனாவிடம் மீண்டும் வம்பிழுக்க, துளசியின் பார்வை “நீ பேசக் கூடாது” என்ற செய்தியை மகளுக்கு தெரிவித்தது.

மீனா அமைதியாக அவளின் பையை தூக்கி கொண்டு வாசல் போக, துளசி லஞ்ச் பேக் எடுத்துக் கொண்டு பின்னே சென்றாள்.

இருவரும் பதில் சொல்லாமல், எந்த ஒரு பிரதிபலிப்பும் இல்லாமல், யாரோ யாரிடமோ பேசியது போல சென்றது அகிலாண்டேஸ்வரிக்கு அப்படி ஒரு கோபத்தை கிளப்பியது.

“வரட்டும் இவளை” என்று துளசி மீண்டும் வீட்டின் உள் வர பார்த்திருந்தார்.

மகளிடம் பத்திரமாக போ என்று சொல்லியபடி கேட்டை பிடித்து துளசி சொல்ல, “ஓகே மா பை” என்ற படி வீதியில் இறங்கி மீனாக்ஷி நடக்க துவங்கினாள். சிறிது தூரம் நடக்க வேண்டும் மெயின் ரோடிற்கு, அவள் சில அடி எடுத்து வைத்ததுமே பைக்கின் சத்தம் விழ, மீனா செல்லுவதற்கு எதிர்புறமாக திருநீர்வண்ணன் வந்து கொண்டிருந்தான்.

காலையில் ஷட்டில் காக் விளையாட சென்று விட்டு வந்திருந்தான். எப்போதும் எட்டரை மணிக்கு தான் வருவான், இன்று என்னவோ விரைவாக வந்து விட்டான்.

“மீனா நில்லு” என்ற துளசியின் குரலில் மீனாக்ஷி தேங்கி நிற்க, திருநீர்வண்ணன் அருகில் வரவுமே “பஸ்க்கு விடுங்க” என்ற துளசியின் குரல் மெலிதாக உரைத்தாலும், அதில் செய் என்ற செய்தி தான் இருந்தது.

ஆம்! துளசிக்கு திருவினடத்தில் எல்லா விஷயத்திற்கும் தயக்கம். ஆனால் மகள் என்று வந்து விட்டால் சிறு தயக்கமும் இருக்காது. யார் பேச்சினையும் எதற்கும் எப்போதும் கேட்காதவன் திரு. ஆனால் மகள் என்று வந்து விடும் போது மனைவி சொல்வதை செய்து விடுவான்.

அப்பா என்றால் எப்போதும் மீனாட்சிக்கு சற்று பயம். அவன் நின்று என்ன என்பது போல ஒரு பார்வை பார்த்தாலே கண்களில் நீர் தளும்பிவிடும் அவளுக்கு. அவ்வளவு குறும்பு, அவ்வளவு அட்டகாசம் தான் மீனாக்ஷி.

பைக்கை வட்டமடித்து அவன் திருப்பி நிறுத்த, ‘‘வா’’ என்பது போல துளசிக்கு கை அசைத்தாள் மீனா, துளசி அவள் சொல்வது புரிந்து அருகில் வரவும், ‘‘இது கழட்டி கொடுத்திடலாம் பா’’ என்றாள் அவன் முதுகில் இருந்த ஷட்டில் பேட்டை.

மௌனமாக அவன் கழற்றிக் கொடுக்க, ‘‘பை மா’’ என்று மகள் ஏறி அமர, கையசைத்தாள் துளசி.

எல்லாம் செய்தாலும் துளசியை நிமிர்ந்து ஒரு பார்வை பார்க்க மாட்டான், சுவரோடு பேசுவது போல தான்.

பதிமூன்று நீண்ட வருடங்கள், இப்படிப் பட்ட வாழ்க்கை வாழ்வது என்பது எல்லோருக்கும்

சாத்தியம்மல்ல, ஏன் யாருக்குமே சாத்தியமல்ல, எந்த எதிர்பார்ப்புகளும் இன்றி, வாழ்க்கை செல்லும் பாதையில் அதன் போக்கில்.

பதினாறு வயதில் இந்த வாழ்க்கையில் நுழைந்தாள். ஆம்! அவளின் திருமணம் பதினாறாவது வயதில், அவளின் பத்தாவது பரீட்சை விடுமுறையில் நடந்தது.

திருநீர்வண்ணன் அவனின் இளங்கலை படிப்பின் இறுதியில் இருந்த போது வேற்று மதத்தை சேர்ந்த ஒரு பெண்ணின் மீது காதல் வயப்பட்டான், அந்த பெண்ணுமே, மிகவும் தீவிரமான காதல் அவர்களின் பாஷையில்.

அந்த பெண்ணை திருமணம் செய்து கொள்ள இழுத்துக் கொண்டு ஓடிய போது, அவனது அப்பாவினால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு, அந்த பெண்ணின் மொத்த குடும்பமும் சிறையெடுக்கப் பட்டது அவனது அப்பாவினால்.

அந்த பெண்ணின் குடும்பத்தை கூண்டோடு அழித்து விடுவேன் என்ற அப்பாவின் பயமுறுத்தலால், அப்பா சொன்ன திருமணத்திற்கு ஒத்துக் கொண்டான்.

திருவின் வீட்டில் வேலை செய்த வேலவனின் பதினாறு வயது மகளான துளசி அவசர மணமகளானாள்.

அப்படி நடந்தது தான் அவர்களின் திருமணம்.

வேலவன் அவர்களின் வீட்டினில் வேலை செய்த சாதாரண வேலையாள். இவர்களின் வசதிக்கும் வாய்ப்பிற்கும் எங்கேயும் நிகரில்லை. இருந்த ஒரே நிகர் அவர்களின் இனம்.

இன்னும் வசதியாகக் கூட உடனே பெண் பார்த்திருக்கலாம். ஒரே நாளில் கூட நான் நீ என்று போட்டி போட்டு பெண் கொடுத்து இருப்பர் திருவிற்கு.

ஆனால் தன்னுடைய மகன் இப்படி ஒரு காரியத்தை செய்தான் என்று யாருக்கும் தெரிய வருவதில் கூட விருப்பமில்லை அவனின் அப்பாவிற்கு.

அப்படி ஒரு இனப் பற்றுடைய மனிதர் மேகநாதன். திருவின் அப்பா. அதனோடு கூட அவர்களது பெரிய குடும்பம், அவருக்கு இரண்டு தம்பிகள், இரண்டு தங்கைகள். திருநீர்வண்ணன் தான் முதல் மகன் அந்த வீட்டிற்கு. இவனுக்கு கீழே ஆறு பேர், இவனது மற்றும் இவனது சித்தப்பா வீட்டினில். இவனது திருமணம் மற்ற எல்லோரையும் பாதிக்கும் என்பதும் அவருக்கு நிச்சயம். அதை எப்படி அனுமதிக்க முடியும். பாதிப்பு அதையும் விட ஒரு தவறான முன்னுதாரணம்.

ஆனால் இதுவரை அவனின் அவசர திருமணதிற்கான காரணம் யாருக்கும் தெரியாது. ஏன் திருவின் அம்மாவிற்கு கூடத் தெரியாது. ஜாதக தோஷம் திருமணம் நடக்க வேண்டும் என்று மூன்றே நாட்களில் திருமணம் நடத்தினார்.

ஏன் பெண்ணின் தந்தை வேலவனுக்கு கூட தெரியாது. வீட்டில் மேகனாதனையும், திருவையும் தவிர தெரிந்த ஒரே ஜீவன் துளசி. அவளிடம் மேகநாதன் திருமணதிற்கு முன்பே சொல்லி தான் சம்மதம் வாங்கினார்.

அது எப்படி வேறு மத பெண்ணை திருமணம் செய்ய முடியும் என்பது அவளின் எண்ணமும் கூட. திருவை எப்போதாவது பார்த்திருந்தவளும் கூட, அவர் சொன்னதும் சரியென்று விட்டாள்.

இன்று வரை திருவின் ரகசியம் அவளிடம் மட்டுமே. அவளுக்கு தெரியும் என்று திருவிற்கும் தெரியும். ஏனென்றால் திருமணதிற்கு முன் அப்பாவிற்கு தெரியாமல் அவளிடம் சொல்லி திருமணத்தை நிறுத்த முயன்ற பொழுது, ‘‘எனக்குத் தெரியும்’’ என்றிருந்தாள்.

திரு அதிர்ந்து விழித்து வேறு என்ன செய்து திருமணத்தை நிறுத்தலாம் என்று நினைத்திருக்கும் போதே அவனின் திருமணம் முடிந்து இருந்தது.

இது தான் இருபத்தியொரு வயது திருநீர்வண்ணனிற்கும், பதினாறு வயது துளசிக்கும் திருமணம் நடந்த கதை.

உண்மையில் திருமணத்தில் அவனின் தோள் உயரம் தான் துளசி இருப்பாள். திருமணதிற்கு பின் தான் தோளுக்கு மேலேயே வளர்ந்தாள்.

இப்படி வசதியற்று அவசரகதியில் வந்த மருமகளை அந்த வீட்டினில் யாருக்கும் பிடிக்கவில்லை, வசதி என்பதை விட அவர்களின் வீட்டின் வேலையாளின் பெண்.

அகிலாண்டேஸ்வரிக்கும் பிடிக்கவில்லை, மேகநாதனின் தம்பிகளுக்கு, தம்பி மனைவிகளுக்கு தங்கை குடும்பத்தினருக்கு என யாருக்கும்.

“டேய் வேலா” என்பது தான் அவர்களின் அழைப்பாக இருக்கும். அவர்களின் பெண் இந்த வீட்டு மருமகளா? அவன் எங்கள் சம்பந்தியா? அவர்களுக்கு நினைக்கவே முடியவில்லை.

ஆனாலும் நடந்தது!

மேகநாதனை அங்கே மறுத்து பேச யாருக்கும் தைரியம் கிடையாது. அவர் சொல்வது தான் அங்கே ஆணை. எல்லோருக்கும் திருவை பார்த்து அப்படி ஒரு பரிதாபம்! இப்படி ஒரு பெண் மனைவியாக வந்து விட்டாளே என்று.

அவனுக்கு இந்த திருமணம் துளசியை கொண்டு பிடிக்காமல் தான் பேசுவதில்லை, எங்கேயும் அழைத்து செல்வதில்லை என்று தான் இதுவரையும் எல்லோரும் நினைத்து இருந்தனர்.

யாருக்கும் அவனின் காதல் கதை இதுவரை தெரியாது.

துளசியை மேகநாதன் அவர்களின் இனம் என்பதை கொண்டு மட்டும் பார்க்கவில்லை. சிறுவயதில் இருந்தே துளசியை பார்த்திருந்திருகின்றார். அவளின் அமைதியான பதின் வயது அழகு அவரை எப்போதும் ஆகர்ஷிக்கும். பெண்கள் இப்படி இருக்க வேண்டும் என்று தோன்றும்.

என்னவோ துளசியால் திருநீர்வண்ணனை பிடித்து வைக்க முடியும் என்று மனதிற்கு ஸ்திரமாகப் பட, அவளை திருமணம் செய்து வைத்தார்.

திருநீர்வண்ணன் அவளிடம் ஒரு வார்த்தை பேசி யாரும் பார்த்திருக்க முடியாது. பேசினால் என்ன? பேசாவிட்டால் என்ன? துளசியின் பதினேழாவது வயதில் மீனாக்ஷி பிறந்து விட்டாள்.

மேகனாதனிற்கு அதன் பிறகே மனதினில் நிம்மதி வந்தது.

இன்று வரை வீட்டினில் யார் என்ன பேசினாலும் துளசி திரும்ப ஒரு வார்த்தை பேசியது கிடையாது. அமைதியாக கடந்து விடுவாள். யாரும் மதித்து பேசியது கிடையாது, அன்பாக பேசியது கிடையாது. ஆனால் எதையும் அவள் கண்டு கொள்வது கிடையாது

உண்மையில் அவள் மதிப்பதில்லை போல தான் ஒரு தோற்றம் கொடுக்கும்.

அதனால் அவர்களின் பேச்சு எல்லாம் ‘‘இப்படி இவ புருஷன் பிடிக்காம இவ கூட குடும்பம் நடத்தும் போதே

இந்த புள்ளைக்கு இவ்வளவு திமிரு, இன்னும் நல்லா பொழைச்சா, இவ என்ன பண்ணுவா? வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பாளா இருக்கும்” என்பது தான் அவர்களின் நக்கல் பேச்சாக இருந்தது.

திரு என்ற ஒற்றை வார்த்தையே அவளை வானத்திற்கும் பூமிக்கும் குதிக்க வைக்கும் என்பது தான் உண்மை.

காதல் அது இளம் பெண்களுக்கு தான் வரும் என்று யார் சொன்னது! பெண்களுக்கு அதனை கடந்து, வாழும்போதும், அதனையும் விட வாழ்ந்து முடிக்கும் போதும் இருப்பது தான் அதீதம்!

அத்தியாயம் இரண்டு

பஸ் ஸ்டாப்பில் மகளை இறக்கி விட்ட திரு அங்கே பார்க்க, பிள்ளைகளை விட அவர்களின் பெற்றோர்கள் தான் அங்கே அதிகமாக இருந்தனர்.

அதுவும் ஒரே அரட்டை வேறு, அதில் ஒருவன் திருநீர்வண்ணனைப் பார்த்ததும், "திரு சர், நீங்க எங்கே இங்கே?" என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தான்.

"என் பொண்ணு டிராப் பண்ண வந்தேன்" என திரு சொல்ல,

"இவங்க உங்க பொண்ணா, தினமும் தனியா தான் வருவாங்க" என்று மிகவும் மரியாதையாக மீனாட்சியை சொன்னவன், "உங்களுக்கு இவ்வளவு பெரிய பெண்ணா?" என்றும் கேட்டான்.

அவள் தனியாக வருகிறாள் என்பது கவனிக்கப் படுகிறது என்பது ஏனோ திருவிற்கு பிடிக்கவில்லை. பார்ப்பதற்கு பெரிய பெண் போல தான் இருக்கிறாள். ஆனால் முகத்தில் இருக்கும் குழந்தை தனம் சிறு பெண் என்று காண்பித்து கொடுத்து விடும்.

ஆயினும் "என்ன பண்றா இவ? இவளை வந்து விட்டுட்டு போகாம" என்று துளசியை பற்றிய எண்ணம் தான் ஓடியது.

உண்மையில் இந்த வருடம் தான் துளசி மீனாட்சியை தனியாக அனுப்ப ஆரம்பித்து இருந்தாள். மகள் ஆறாம் வகுப்பு வந்து விட்டாள், சுயமாக எல்லாம் செய்து பழக வேண்டும் என்ற எண்ணம் தான்.

ஆனால் பேசியவன் இந்த வருடம் தான் அவனின் மகனை இந்த பள்ளியில் சேர்த்திருந்தான். அதனால் அவனுக்கு தெரியவில்லை. மற்றபடி அங்கே ஸ்டாப்பில் உள்ள அநேகம் பேருக்கு துளசியையும் மீனாக்ஷியையும் தெரியும்.

தொழில் முறை பழக்கம் பேசியவனுக்கு, அவன் திருவை விட பெரியவன், அவனுக்கே நான்காவது படிக்கும் மகன் தான்.

திருவிடம் ஒரு மென்னகை மட்டும், திருவின் ட்ராக் பேன்ட், டி ஷர்ட்டை பார்த்தவன், அவன் எதோ ப்ராக்டிசில் இருந்து வருகிறான் என்று புரிந்து பேச்சை வளர்க்க,

மீனாக்ஷிக்கு எரிச்சல் ஆனது. அப்பா வருவதே அபூர்வம். இதில் அவள் பேசலாமா இல்லை அப்பா பேசுவாரா என்று எத்ரிபார்த்திருக்க, இதில் யாரோ ஒருவன் பேசவும், அந்த எரிச்சல் முகத்தில் அப்படியே தெரிய, முகத்தை திருப்பி வேறு எங்கோ பார்த்து நின்று கொண்டாள்.

அவனிடம் பேசினாலும் திருவிற்கு மகளின் பார்வை புரிய, பேசிக் கொண்டிருந்தவனிடம், ‘‘எக்ஸ்கியுஸ்மி’’ என்று தவிர்த்தவன், மீனாட்சியின் அருகில் வந்து அவள் முதுகில் சுமந்திருந்த புத்தகப் பையை வாங்கி அவன் மாட்டிக் கொண்டு நின்றான்.

அதன் பிறகே மகளின் முகம் தெளிவானது. ‘‘ஸ்கூல்ல என்ன கலாட்டா பண்ணின?’’ என்றான் மெதுவாக. பொதுவாக அக்கறை காட்டுபவனோ கண்டிப்பவனோ கிடையாது. ஆயினும் நேற்று விஷயம் காதிற்கு வந்ததில் இருந்து, தன்னுடைய பெண் இப்படி பனிஷ்மென்ட் வாங்குவதா என்ற எண்ணம்.

கூடவே இதெல்லாம் அவள் துளசியிடம் சொல்கிறாளா இல்லையா என்ற எண்ணம் இருக்க அதற்காகவே இன்று ப்ராக்டிசில் இருந்து விரைவாக வந்தான்.

அதற்கு தக்கார் போல துளசியும் சொல்ல, மகளை அழைத்து கிளம்பினான். இதோ இப்போது கேட்டு விட்டான்.

டபக்கென்று மீனாக்ஷி திரும்பி பார்க்க, ‘‘நேத்து காலைல கிரவுண்ட் சுத்தி பனிஷ்மென்ட்காக இருபது தடவை ஓடியிருக்க’’ என்றான்.

அப்பாவிற்கு தெரிந்து விட்டது எனவும் கடகடவென்று கண்களில் நீர் தளும்பியது. திரு மகளை

பார்த்த பார்வையில் என்ன நடந்தது என்று சொல்ல வேண்டும் என்று மகளுக்கு புரிய,

“என் ஃபிரண்டை அவன் அடிச்சான். அதனால நான் அவனை அடிச்சேன்” என்று ஒரு பையனை அடித்ததை ஒப்புக் கொண்டாள்.

அவளின் கண்களில் நீர் பார்த்தவன் “அழாதே” என்று சிறு குரலில் அதட்டி, “எதுவானாலும் உங்க மேம் கிட்ட தான் கம்ப்ளயின்ட் பண்ணனும். நீ அடிக்கக் கூடாது. அண்ட் ஸ்கூல்ல எது நடந்தாலும் அம்மா கிட்ட சொல்லணும்” என்றவன் சில நொடி இடைவெளி விட்டு “அம்மா கிட்ட சொன்னியா” என்றான்.

இல்லை என்பது போல தலையசைத்தவள் அப்பாவின் கூர்மையான பார்வையில் “அம்மா அடிப்பா” என பதில் சொன்னாள்.

“தப்பு செஞ்சா அடிக்க தான் செய்வாங்க. நீ யாரையும் அடிக்கவெல்லாம் கூடாது” என சொல்லும் போதே பஸ் வந்து விட,

பஸ் நின்றதும் இவனைப் பார்த்ததும் பஸ்சில் இருந்த ஹெல்பர் விரைந்து வந்து “சார் வந்திருக்கீங்க” என்றான் பவ்யமாக.

எப்போதும் தொழிலார்களுக்கு திரு கணக்கே பார்க்க மாட்டான். பண்டிகை என்றால் இவர்கள் அவனின்

தொழிற்சாலை தேடி சென்று பண்டிகை பணத்தை வாங்கிக் கொள்வர். துளசியிடம் முதல் முறை கேட்ட போதே, "சாயந்தரம் அங்கே போங்க மீனா அப்பா இருப்பாங்க பாப்பா பஸ்ல இருக்கோம் சொல்லுங்க" என்று அவள் தான் சொல்லியிருந்தாள். அப்படி பண்டிகை விஷேசம் என்றால் ஆஜராகி விடுவார்கள். அதன் தாக்கம் தான் இந்த பவ்யம்.

திரு பதில் சொல்லாமல் எப்போதும் போல ஒரு மென்னகை, கூடவே ஜோப்பில் இருந்து பணம் எடுத்து அவனிடம் நீட்டினான். யார்கும் தெரியாமல் அதை நிமிடத்தில் வாங்கி தன் ஜோப்பில் வைத்த ஹெல்பர் "பாப்பாவை பத்திரமா பார்த்துக்கறோம்" என்றும் சொல்ல,

"டிரைவர்க்கும் குடுத்துடு" என்றான் திரு.

"சரிங்க சர்" என்றான் பணிவாக.

மீனாக்ஷி இதை பார்த்துக் கொண்டு தானிருந்தாள். அப்பா அதட்டியதில் ஒரு பயத்தில் இருந்தவள், அப்பா பார்த்து "கிளம்பு" என்பது போல தலையசைத்ததும் அவளின் பேக் மறந்து ஏறிவிட்டாள்.

இவனும் கவனிக்க வில்லை, அவனின் பின்புறம் ஷட்டில் பேக் இருக்கும் ஞாபகத்தில் அது மீனாட்சியின் பேக் என்பதை உணராமல் பைக்கை எடுத்து கொண்டு கிளம்பிவிட்டான்.

இரண்டு ஸ்டாப் தாண்டியதும் தான் பேக் இல்லாததை மீனாக்ஷி உணர்ந்தாள், "அச்சோ பேக் இல்லாமல் எப்படி போவது?" என்ற பதட்டத்தில் பஸ் அடுத்த ஸ்டாப்பில் பிள்ளைகளை ஏற்றுவதற்காக நின்றதும் யாரிடமும் சொல்லாமல் இறங்கி விட்டாள். பிள்ளைகள் ஏறியதும் டிரைவர் எதோ சொல்ல அதை கவனித்த ஹெல்பரும் இவள் சட்டென்று இறங்கியதை கவனிக்கவில்லை.

பஸ்சும் கிளம்பிவிட்டது. இவள் வீடிருந்த பக்கம் நடக்க ஆரம்பித்தாள்.

அங்கே திரு வீடு சென்று பைக்கை நிறுத்தி, வீட்டின் உள் நுழைந்தான். துளசியை அதுவரையிலும் "என்ன அது ஏதாவது சொன்னா நின்னு கேட்காம போறது, பதில் சொல்லாம போறது, இந்த பழக்கத்தை பிள்ளைக்கும் கத்துக் கொடுக்கறது" என்று அகிலாண்டேஸ்வரி கத்திக் கொண்டிருந்தார்.

துளசி பதில் எதுவும் பேசாமல் அவர் சொல்வதை எல்லாம் நின்று கேட்டுக் கொண்டிருந்தாள். சமையல் வேலை செய்யும் தனம் பத்து நிமிடத்திற்கு முன்பே வந்து விட்டவள், என்ன செய்வது என்று துளசியை எப்படி கேட்பது என்று எட்டி எட்டி பார்த்துக் கொண்டிருந்தாள்.

உள்ளே வந்த திருவின் கண்களில் அம்மா துளசியை திட்டிக் கொண்டிருப்பதும், அதை தனம் எட்டி எட்டி பார்ப்பதும் கண்ணில் பட,

அவர்களை கடந்து செல்ல இருந்தவன் சில நொடி அங்கே நின்றான். அடுத்த நிமிடம் பேசுவதை அகிலாண்டேஸ்வரி நிறுத்தினார். மேகனாதனால் கூட சில சமயம் அகிலாண்டேஸ்வரியை அடக்க முடியாது. ஆனால் திருவின் ஒரு பார்வை அவரின் வாய்க்கு பூட்டு போட்டு விடும்.

இடைவெளி கிடைத்ததும், "அக்கா! என்ன டிஃபன் பண்ணட்டும்" என்று வேகமாக அங்கே வந்த தனம் கேட்டாள். ஆம், மகளுக்கு காலையில், பின் மதியம் செய்து கொடுக்கும் வேலை மட்டும் தான் துளசிக்கு.

சமையலுக்கு எல்லாம் ஆட்கள் இருந்தனர். அவர்களது பெரிய குடும்பம். ஒரு கேட்டட் கம்யுனிட்டி போல ஒரு பெரிய காம்பவுண்டிற்குள் மூன்று பெரிய பங்களாக்கள். வரிசையாக இருக்கும், மேகனாதனிற்கும் அவரது தம்பிகள், சத்தியனாதனிற்கும் கமலனாதனிற்கும்.

நாதன் பிரதர்ஸ் என்றால் தர்மபுரியில் தெரியாதவர்கள் யாரும் கிடையாது. ஏன் அவர்களின் தொழிலின் கிளைகள் சென்னையிலும் கோவையிலும் உண்டு.

பல தொழில்கள் அரிசி ஆலை, எண்ணெய் ஆலை, பஸ் கம்பனி , துணிக் கடை , கடைகளை லீசிற்கு எடுப்பது இப்படி பல. நாதன் பிரதர்ஸ் என்ற பேரில் எல்லாம் இயங்கினாலும் அண்ணன் தம்பிகள் மூன்று பேரின் தொழில்களும் வேறு வேறு.

முக்கியமாக இதில் மேகனாதனது அரிசி ஆலையும் எண்ணெய் ஆலையும். பெரிய அளவில் ஏற்றுமதி உண்டு. பஸ் கம்பனி சத்தியனாதனிற்கும் துணிக் கடை கமலனாதனிற்கும். தம்பிகளை விட மேகனாதனது வசதி பல படி அதிகம்.

அது இந்த சில வருடங்களாக திருநீர்வண்ணன் தொழிலிற்கு வந்த பிறகு. அசுர வளர்ச்சி தான். முழுநேரமும் அவனின் நேரமும் தொழிலில். அதன் பலன் தான் இந்த வளர்ச்சி.

மேகனாதனிற்கு சில சமயம் கவலையாகக் கூட இருக்கு. இது தாங்கள் அண்ணன் தம்பிகளை பிரித்து விடுமோ என்று. ஒரு பெண் ஒரு ஆண் என்று ஆளுக்கு இரண்டு மக்கள் அவர்களுக்கு. திருவின் வீட்டில் தான் அவர்கள் மூன்று மக்கள். திருவோடு சேர்ந்து இரண்டு ஆண்கள் ஒரு பெண்.

இருவருக்குமே திருமணம் ஆகிவிட்டது. சொந்த அத்தையின் மக்களே, ஆம்! பெரிய அத்தை சாரதாவின் வீட்டிற்கு தங்கை ராதாவை கொடுத்திருக்க, இன்னொரு

அத்தை சித்ராவின் பெண்ணை திருவின் தம்பி வெங்கடேஸ்வரனுக்கு கொண்டு வந்தது.

அத்தைகளை வேறு ஊரில் தான் திருமணம் செய்து கொடுத்திருந்தனர். ஆனால் காலப் போக்கில் எல்லோரும் இப்போது தர்மபுரியில் தான் இருந்தனர். அங்கேயே மேகநாதன் அவர்களுக்கும் தொழில் அமைத்துக் கொடுத்திருந்தார். எல்லோருமே சீரும் சிறப்புமாக இருந்தனர் நாதன் பிரதர்ஸின் தயவில்.

ஆனால் என்ன தான் இருந்தாலும், ஆங்காங்கே சில உட்கட்சி பூசல்கள் போல குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் வந்து கொண்டு தானிருக்கும். முக்கியமாக அகிலாண்டேஸ்வரியால். எல்லாம் என் கணவர் தான் என்ற திமிரில் சற்று எல்லோரிடமும் அதட்டி உருட்டி மிரட்டி பேசுவார். அது அவ்வப்போது பொங்கி குடும்பத்திற்குள் வெடிக்கும்.

சொந்த பந்தங்கள் எப்போதும் மேகனாதனிற்கு மிகவும் முக்கியம் அப்படி எல்லோரையும் வீட்டின் பெரியவராக இழுத்து பிடித்திருப்பார். முக்கியமாய் பொதுவில் ஒரு செலவு என்றால் அவரின் பொறுப்பு தான் அனைத்தும். அதனால் அவரின் மனைவின் அட்டகாசங்களை அனைவரும் ‘‘அவங்க அப்படி தான்’’ என்று கடக்க கற்றுக் கொண்டனர்.

தனம் கேட்கும் போது தான் வெங்கடேஷ் எழுந்து வெளியில் வந்தான். தனம் என்ன சமைப்பது என்று கேட்டுக் கொண்டிருப்பதை பார்த்தவன், "நீங்க ஏன் இவங்ககிட்டயே எப்பவும் என்ன செய்யணும்னு கேட்கறீங்க, ஷோபனா கிட்ட கேட்கறதில்லை" என்று மனைவிக்காக உரிமை குரல் எழுப்பினான்.

அடுத்த நொடி துளசி "அவகிட்ட கேட்டுக்கோ தனம்" என்று சொல்லி அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

"எப்ப ஷோபனாக்கா எழுந்து வர்றது, எப்போ சொல்றது, எல்லோரும் அவங்க வர்றவரை பட்டினி இருப்பீங்களா?" என்று சொல்லிக் கொண்டே தனம் அந்த இடத்தை விட்டு சமையல் அரை உள் சென்று விட்டாள்.

துளசி உள்ளே திருவிற்கு குடிக்க பால் ஊற்றிக் கொண்டிருந்தாள். தனத்திற்கு அவளின் முகம் பார்த்தே பேச பயமாக இருக்க, தனம் அமைதியாக நின்று கொண்டாள்.

கணவனுக்கு பால் எடுத்துக் கொண்டு அவர்களின் ரூம் உள் போக, மகளின் பேகை கழற்றி படுக்கையில் போட்டு இருந்தான். அதுவரையில் அதனை உணரவில்லை. தன் தம்பி பேசியதில் தான் மனம் உழன்று கொண்டிருந்தது.

அப்போது தான் பேகை கவனித்த துளசி "என்ன இது மீனா பேக், இங்கே எப்படி?" என்று நேரடியாக அவனை பார்த்து கேட்காமல் அவளாக பேசுவது போல திருவின் கவனத்தை கவர்ந்தாள்.

அப்போது தான் திரு அதனை கவனித்தவன், "அச்சோ குடுக்க மறந்துட்டேன் போலவே" என்று அவனுக்கு அவனே பேசுவது போல சொல்லிக் கொண்டு திரும்ப அதனை எடுத்துக் கொண்டு பைக்கை நோக்கி விரைந்தான்.

அவனின் பின்னேயே துளசி விரைந்து செல்ல அதற்குள் பைக் கிளப்பி இருந்தான். அவன் செல்லும் வேகத்தை பார்த்தவள் "எதுக்கு இவ்வளவு வேகமா போறாங்க?" என்று நினைத்து நின்று கொண்டிருக்கும் போது தான், அண்ணன் தம்பிகள் மூவரும் வாக்கிங் முடித்து திரும்ப வந்தனர்.

மூவரும் முக ஒற்றுமையோடு இருந்தனர். பார்ப்பவர் அண்ணன் தம்பிகள் என்று சொல்லிவிடுவர். அதுவும் அவர்களின் முறுக்கு மீசை அவர்களின் அடையாளம் என்று கூட சொல்லலாம். எப்போதும் போல அவர்கள் மூவரையும் பார்க்கவும் "இவர் ஏன் மீசை வைக்கலை" என்று துளசி மனதிற்குள் திருவை நினைத்துக் கொண்டாள்.

தம்பிகள் இருவரும் இவள் நிற்பதை கண்டு அண்ணனோடு பேச்சை வளர்க்காமல் அவர்களது வீட்டிற்குப் போய்விட, ‘‘என்னமா எங்க வேகமா திரு போறான்’’ என்றார் மேகநாதன்.

அப்பாவிற்கும் மகனிற்கும் பேச்சு வார்த்தை திரு துளசி திருமணம் நடந்த போது இருந்து விட்டிருந்தது. திரு பேசுவதை நிறுத்தி இருந்தான். அவன் பேசாத போது நான் மட்டும் ஏன் பேச வேண்டும் என்று மேகனாதனும் நிறுத்தி இருந்தார்.

‘‘மீனாக்ஷியை பஸ் ஸ்டாப் கொண்டு போய் விட்டார் மாமா, மறந்து அவளோட ஸ்கூல் பேக் எடுத்துட்டு வந்துட்டார் போல’’ என்றாள்.

‘‘அச்சச்சோ புள்ள பயந்துக்குமே பேக் இல்லைன்னு’’ என்று அவருமே அங்கே இருந்த திண்டில் அமர்ந்து கொண்டார். மீனாக்ஷி தாத்தாவின் செல்லம்.

வேகமாக அவன் ரோட்டை பார்த்து ஓட்ட, ரோட்டின் ஓரத்தில் நடந்து வந்து கொண்டிருந்த மகள் கண்களில் படவில்லை.

ஆனால் திருவை பார்த்து விட்ட மீனாக்ஷி ‘‘அப்பா’’ என்று கத்த, திரு சென்ற வேகத்திற்கு அது காதில் விழவில்லை. அப்பா என்று திரும்ப கத்தி எதிரில் வந்த சைக்கிளை கவனிக்காமல் வேகமாக திரும்ப, சைக்கிள் வந்து வேகமாக மீனாட்சியை இடித்து விட்டது.

இடித்த வேகத்திற்கு அப்படியே ரோட்டில் விழுந்து விட்டாள். இரண்டு கையும் முன் ஊன்றி விழுந்ததினால் கையினில் சிராய்ப்பு, கால் முட்டி இரண்டிலும் நல்ல அடி ரத்தம் வர ஆரம்பித்தது.

வலியில் அழுகை வந்து விட அழுது கொண்டே எழுந்து நின்றாள், அதற்குள் சைக்கிளை எடுத்துக் கொண்டு இடித்தவன் பயந்து அந்த இடத்தை விட்டு வேகமாக நகர்ந்து எதோ ஒரு திருப்பத்தில் மறைந்தே விட்டான்.

இதற்குள் திரு பஸ்ஸினை பிடித்து இருந்தவன், டிரைவர்க்கு சைகை செய்து பஸ்ஸை நிறுத்த செய்தவன், நிறுத்தியதும் டிரைவரிடமே "பொண்ணு பேக் மறந்து விட்டுடேன், குடுத்துடுங்க" என்றான்.

ஹெல்பர் வந்து அதனை பார்த்து இருந்தவன் பார்வையால் பின்னே மீனாக்ஷி எப்போது அமரும் இடம் பார்க்க அங்கே அவள் இல்லை.

திரு கிளம்பப் போக, "சார் இருங்க" என்று அவசரமாக கத்தினான். "என்ன?" என்று திரு பார்க்க, பஸ் முழுவதுமே பார்வையால் ஆராய்ந்து "சார் உங்க பொண்ணு பஸ்ல இல்லை" என்று சொல்லவும்,

திருவிற்கு அப்படியே மனதினில் ஒரு நடுக்கம், ஒரு பதட்டம், முதல் முறை. தன் கண் முன்னே தானே ஏறினாள்.

வேகமாக அவனே ஏறி வந்து பஸ்சின் உள் பார்க்க ஹெல்பர் "மீனாக்ஷி எங்கே?" என்று பக்கத்தில் இருந்த பெண்ணிடம் கேட்க, "அவ அப்போவே இந்த இடத்துல இருந்து எழுந்துட்டா" என்றாள்.

முன் சீட்டில் அமர்ந்திருந்த சிறுவன் ஒருவன் "அந்த அக்கா முன்னமே இறங்கிட்டாங்க" என,

ஹெல்பறை பார்த்து முறைத்தான் திரு, "சார், சத்தியமா அவங்க இறங்கினது தெரியாது" என்றான் திருவின் பார்வையில் சர்வமும் ஒடுங்க.

"இருடா உன்னை வந்து பார்த்துக்கறேன்" என்று வார்த்தைகளை கடித்து துப்பி விட்டு மகளை தேடி போனான்.

பைக்கை மெதுவாக எல்லா இடமும் பார்த்து பார்த்து வர, அதற்குள் காலை விந்தி விந்தி நடந்த படி வீடு வந்து சேர்ந்திருந்தாள் மீனாக்ஷி.

பேத்தியை இப்படி பார்த்ததும் 'என்ன கண்ணு?" என்று மேகநாதன் பதற, துளசி "மீனா" என்று வேகமாக வர, அம்மாவைப் பார்த்ததும் "அம்மா" என்று கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

என்ன ஏதென்று புரியவில்லை, முட்டியில் இருந்த காயம் தெரியவில்லை, கைகளில் சிராய்ப்பு தான் தெரிந்தது.

“என்ன மீனா சொல்லு?” என்று அணைத்தபடியே மனம் பதற அதட்ட,

“விழுந்துட்டேன், வலிக்குது” என்று பெரும் குரலெடுத்து அழுதுகொண்டே சொன்னாள்.

அவளின் அழுகை சத்தத்தில் பக்கத்தில் சித்தப்பா வீட்டினில் இருந்து வெளியே வந்து விட்டனர், இங்கே வீட்டின் உள் இருந்து அகிலாண்டேஸ்வரி வெங்கடேஷ் எல்லாம் வந்து விட. அப்போது கூட வீட்டின் உள் சோபனா உறங்கிக் கொண்டு தான் இருந்தாள்.

“ஒன்னுமில்லை, சின்ன காயம் தான்” என்று மகளை துளசி சமாதானம் செய்து கொண்டே,

“அத்தை அவர் மீனா ஸ்கூல் பேக் கொண்டு போனார். இவளை காணோம்ன்னு தேடுவார், ஃபோன் செஞ்சு சொல்லுங்க” என்று துளசி சொல்லிவிட்டு மகளின் காயங்களை ஆராய்ந்தாள்.

“எதுக்கு நீ திரும்ப வந்த?” என்று மேகநாதன் பேத்தியிடம் கேட்கவும்,

“பேக் மறந்துட்டேன், பேக் இல்லாம எப்படி ஸ்கூல் போறதுன்னு இறங்கிட்டேன்” என்று தேம்பியபடி சொல்ல,

சத்தியநாதன் அதட்டினார் “இப்படி எல்லாம் இறங்கி வரக் கூடாது. ஸ்கூல் போயிட்டு அங்கே ஸ்கூல்

ஆஃபிஸ்ல இருந்து போன் பண்ண வேண்டியது தானே'' என்று சொன்னார்.

சிறு வலி என்றாலும் ஆர்ப்பாட்டம் செய்யும் மீனாக்ஷி இப்போது காயங்களினால் இன்னும் சத்தமாக அழ,

''அழாத மருந்து போடலாம்'' என்று சமாதானம் செய்ய, மீனாக்ஷி இடத்தை விட்டு அசைந்தால் தானே.

துளசியை கட்டிக் கொண்டு அழுது கொண்டே இருக்க,

எல்லோரும் கூடி இருக்க, ஆளுக்கு ஒரு பேச்சாக பேச, இதில் அகிலாண்டேஸ்வரி, துளசி திருவிற்கு அழைத்து சொல்ல சொன்னதை மறந்தார்.

சாலை முழுவது தேடி ஒரு வேலை வீட்டிற்கு சென்றிருப்பாளோ என்று திரு வீட்டிற்கு வர,

கேட்டின் உள், வீட்டின் முன் எல்லோரும் கும்பலாய் இருக்க, மீனாக்ஷி அழுது கொண்டிருக்க, பதறி விட்டான். ஆனாலும் அதனை வெளியில் காண்பித்து விட்டால் திரு இல்லையே. ''யாருக்கும் ஒரு ஃபோன் செஞ்சு சொல்லணும்னு தோணலை'' என்ற கோபம் துளிர் விட ஆரம்பித்தது.

பேத்தியின் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்த மேகநாதன் ''ஒரு நாள் புள்ளையை கொண்டு போய்

ஸ்டாப் விட சொன்னா என்ன கலாட்டா?” என்று பொதுவாய் திருவை பார்த்ததும் சத்தமிட்டார். அதில் இன்னும் அதிகமாகியது.

வேகமாக அருகில் வந்தவன் மீனாட்சியை பார்க்க எங்கோ விழுந்து எழுந்து வந்திருக்கிறாள் என்பது புரிந்தது.

“சும்மா அவனை ஏன் சத்தம் போடறீங்க, யார் பேச்சையும் இவ கேட்டா தானே” என்று அகிலாண்டேஸ்வரி சத்தமிட்டார் மகனுக்கு பரிந்து பேத்தியை திட்டி,

“என்னைக்கு அவன் பொண்டாட்டி பிள்ளைன்னு அக்கறையோட இருந்திருக்கான், எப்போ அவனுக்கு வீட்டு நினைப்பு இருக்கு, பொறுப்பில்லாதவன்” என்று அத்தனை பேர் முன்னும் மேகநாதன் சத்தமிட்டார்.

அப்படி ஒரு கோபம் பொங்கியது. முயன்று அடக்கினான். அது யாருக்கு புரியவில்லை. ஆனால் துளசிக்கு நன்கு புரிந்தது.

“அச்சோ, மாமனார் பேச்சை நிறுத்தினால் பரவாயில்லை” என்பது போல பரிதாபமாக பார்த்து நின்றாள். கூடவே கணவனை அத்தனை பேர் இருக்கும் போது கேள்வி கேட்பது அவளுக்கும் பிடிக்கவில்லை.

திரு எதற்கும் பதில் பேசாமல் அந்த இடத்தை விட்டு படியேறி வீட்டின் உள் செல்ல ஆரம்பித்தான்.

என்னவோ பேத்தியை அடிபட்டு இப்படி அழுகையோடு பார்த்ததும் மேகநாதனுக்கு அப்படி ஒரு கோபம்!

“டேய் நில்லுடா, நான் பேசிட்டே இருக்கேன் நீ போற” என்றார் அவ்வளவு கோபமாக.

அப்போது சத்தியநாதன் “சும்மா ஏன் அண்ணா அவன் மீது கோபப்படறீங்க. என்ன இல்லை நம்மகிட்ட? நீங்க ஏன் அவசரப்பட்டு இப்படி வசதி இல்லாத வீட்ல, அவனுக்கு பிடிக்காம பொண்ணு எடுத்தீங்க. அவனுக்கு பிடிச்சு தானே கட்டி வெச்சிருக்கணும் , இப்போ பொருப்பில்லைன்னு சொன்னா!” என்றார்.

“அவனுக்கு பிடிச்சு தானே கட்டி வெச்சிருக்கணும்” என்ற வார்த்தைகள் ஏதேதோ ஞாபகத்தை திருவிற்கு கொடுத்தது.

இத்தனை வருடங்கள் கழித்தும் தன்னுடைய திருமணம் விமர்சிக்கப்பட்டது முனுக்கென்று துளசியின் கண்களில் நீர் வரவைத்தது. அதுவரை அகிலாண்டேஸ்வரி அவளை திட்டிய போதும் ஒன்றும் தெரியவில்லை.

இப்படி எல்லோர் முன்னும் தான் விமர்சிக்கப் பட்டது மனதை அப்படியே தளரச் செய்தது.

“என்ன பேசற சத்தியா?” என்று மேகநாதன் தம்பியை அதட்ட,

“வேலைக்காரன் புள்ளையை கட்டி வெச்சா இப்படி தான்” என்று ஆளாளுக்கு முனுமுனுக்க, படி ஏறிக்கொண்டிருந்த திரு நின்று பார்த்தான்.

இது தான் சாக்கென்று அகிலாண்டேஸ்வரி “என் பேச்சை யார் கேட்கறா? நான் வேண்டாம்னு தலைப்பாடா அடிச்சிக்கிட்டேன், கேட்டா தானே!” என்று பெரும் குரலில் பேசினார்.

எப்போது திரு படியிறங்கி துளசியின் அருகில் வந்தான் என்றே தெரியவில்லை, ஆளாளுக்கு சலசலவென்று அவர்களுக்குள் பேச்சு.

எல்லோரும் பார்க்க துளசி கண்களில் நீரோடு நின்றிருக்க, திருவிற்கு பொங்கிய ஒரு கோபத்தில் ஆத்திரத்தில் அவளை அணைத்து பிடித்தபடி நின்றிருந்த மீனாட்சியை அவளிடம் இருந்து விலக்கி ஒரு கையால் இழுத்தவன், அடுத்த கையால் துளசியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அப்பு விட,

இதனை அணுவும் எதிர்பார்க்காத துளசி தடுமாறி விழ இருந்தவள், சுதாரித்து நின்றுவிட்டாள். அதிர்ச்சியில்

கண்ணீர் கூட நின்று விட்டது. அப்படியே ஸ்தம்பித்து விட்டாள்.

இப்படி திரு அடித்ததெல்லாம் இல்லை, ஏன் திட்டியது கூட இல்லை. பேசமாட்டான், கண்டு கொள்ள மாட்டான், அவ்வளவே.

அப்படியே கன்னத்தை பிடித்தபடி திருவை பார்த்து நின்றுவிட்டாள். ஆனால் திரு அவளின் பார்வையை சந்திக்கவே இல்லை.

“டேய் என்னடா பண்ற?” என்று கோபத்தில் மேகநாதன் கர்ஜிக்க,

திரு நிறுத்தி நிதானமாக “என்ன சித்தப்பா உங்க அண்ணா அப்படியே பொங்கறார், இத்தனை பேர் பேசும் போது வாங்கிட்டு தானே நிக்கறா இவ, என்னோட ஒரு அடியை வாங்கிட்டு நிற்க மாட்டாளோ?” என்று அப்போதும் துளசியின் முகம் பார்க்காமல் அவளிடம் பேசாமல் சத்தியானதனிடம் பேச,

இப்போது சுற்றி இருந்தவர் ஸ்தம்பித்தனர்.

அத்தியாயம் மூன்று

அதுவரை வேடிக்கை பார்த்திருந்த கமலநாதன் "நீ என்ன சொல்ல வர்ற திரு, தெளிவா சொல்லு!" என்று வாய் திறக்க,

"என்ன சொல்லன்னு தெரியலை சித்தப்பா அதுதான் அவளை அடிச்சேன், நீங்க என் மேல உள்ள அக்கறைல தான் பேசறீங்க இல்லைன்னு சொல்லலை, ஆனாலும் இப்படி பேசறது சரி கிடையாது சித்தப்பா"

"இவளை எங்கப்பா எனக்கு கட்டி வெச்சார் கட்டி வைக்கலை விடுங்க, ஆனா ஒரு பொண்ணை நீங்க இப்படி எல்லோரும் சுத்தி நிக்க அழவிடறது எந்த வகையிலையும் சரி கிடையாது. எனக்கும் அவளுக்கு ஆகுது ஆகலை, பேசறோம் பேசலை, ஆனா ஒரே வீட்ல தானே இருக்கோம், ஒரு பொண்ணை வேற பெத்து வெச்சிருக்கோம், இப்படி பேசறது அவளை மட்டுமில்லை என் பொண்ணையும் பாதிக்கும்!"

"எங்கப்பா மாதிரி ஊருக்குள்ள பெரிய மனுஷங்கன்னு மீசையை முறுக்கிட்டு சுத்தினா பத்தாது, இப்படி சுத்தி நின்னு யாரையும் அழ வைக்க கூடாது, என் வாழ்க்கையை எங்கப்பா எப்போவோ முடிச்சிட்டார், இனி அதை பேசி ஆகப் போறது ஒண்ணுமில்லை, நான் எப்படி நடந்துகிட்டாலும் நீங்க யாரும் அதை

காட்டணும்னு அவசியமில்லை'' என்று மிக நீளமாகப் பேசினான்.

எப்போதும் தொழில் என்று வந்து விட்டால் இப்படி கட் அன்ட் ரைட்டாக தான் பேசுவான், வீட்டில் எந்த அளவிற்கு பேச்சு இல்லையோ தொழிலில் அந்த அளவிற்கு இருக்கும். அது இந்த சில வருடமாக அவனின் வளர்ச்சி அபாரம் என்பதால், அந்த ஒரு வெற்றி அவனின் தன்னம்பிக்கையை வெகுவாக வளர்த்திருக்க, மற்றவர் அவனை பார்க்கும் பார்வையில் தானாக ஒரு மரியாதை வந்திருந்தது.

வெற்றி கொடுக்கும் மரியாதை தனி தானே, சித்தப்பாக்களே அவனிடம் இப்போது ''வா திரு, இங்க வந்து பாரு நம்ம இடம் தானே, வேற என்ன மாத்தலாம், தொழில் பெருக்கலாம்'' என்று சொல்லியிருந்தனர்.

தன்னுடைய மக்களுக்கு திருவை தான் அடையாளம் காண்பிக்க ஆரம்பித்திருந்தனர். ''அவனை பாருங்கடா'' என்பது போல.

ஆனாலும் சிறியவர்களுக்கு அவனின் மனைவியோடு மண வாழ்க்கை அப்படி ஒன்றும் சிறப்பாக கண்களுக்கு தெரியாததால் ''ம்ம், அவருக்கு என்ன வேலை? முழு நேரமும் தொழிலே கதின்னு கிடப்பார். அப்படி ஒரு வாழ்க்கை எல்லாம் எங்களால வாழ முடியாது'' என்று சொல்லுவர்.

இளையவர்கள் சொல்லாதது "அவர் பைத்தியக்காரர் இவ்வளவு அழகான் பொண்டாட்டி இருக்கும் போது வீட்டுக்கு வராம மில்லுல இருக்கார்" என்று நினைத்துக் கொள்வர்.

மேகநாதன் தான் பெரியவர், அதன் பிறகே இரண்டு பெண்கள், அதன் பிறகே சத்தியநாதனும் கமலநாதனும். அதனால் அவர்களின் மக்கள் எல்லாம் இப்போது தான் திருமண வயதை எட்டி இருந்தனர். சத்தியநாதனின் மகனிற்கும் கமலநாதனின் மகளிற்கும் வரன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பெரிய அண்ணனின் வீட்டிற்கு பெண் எடுத்து பெண் கொடுத்திருந்த அவர்களின் தமக்கைகளால் மற்ற இரு தம்பிகளின் மக்களிடம் முடியவில்லை, "சொந்தம் எல்லாம் வேண்டாம்" என்று அவர்களின் மக்கள் தெளிவாக உரைத்திருந்தனர்.

வீட்டில் மட்டுமல்ல உறவுகளில் இருக்கும் அத்தனை பெண்களிலும் துளசி மிக மிக அழகானவள். அவள் வசதியற்றவள் என்பதையும் விட, அந்த வீட்டில் ஒரு எடுபிடி வேலை செய்பவரை போல இருந்தவரின் மகள் என்பதே யாரையும் அவளை நெருங்கி பழக விடவில்லை.

மற்றபடி துளசியிடம் சிறு குறையும் சொல்ல முடியாது!

திரு பேசிக் கொண்டே இருக்க அப்பாவின் கைப்பிடியில் இருந்ததால் மீனாக்ஷியின் முகத்தில் வலியின் சாயல் அதிகமாவதை காணவும், கண்களில் இருந்து திரும்ப நீரும் வர ஆரம்பித்ததையும் பார்த்த துளசி, திரு பேசிக் கொண்டிருக்கும் போதே படியேறி மகளை கை பிடித்து இழுக்க, திரு கைகளை விலக்கினான்.

திரு எப்படி அவளின் முகம் பார்க்கவில்லையோ அப்படி துளசியும் பார்க்கவில்லை. கோபமாக அழுகையாக எப்படியும் பார்க்கவில்லை.

பின் அம்மாவும் மகளும் படியேறி வீட்டின் உள் சென்று விட்டனர்.

ரூமின் உள் சென்றதும் "மா வலிக்குது" என்ற மகள் உடனேயே "உன்னோட கன்னம் வீங்கிடுச்சும்மா" என்றும் சொல்ல,

அதனை சற்று கண்டுகொள்ளாமல் "நீ முதல்ல உன் காயம் எல்லாம் காட்டு" என்று மகளை ஆராய, கைகளில் சிராய்ப்பு, கை முட்டியில் சிராய்ப்பு, பின் காலில் தான் இரண்டு முட்டியிலும் நல்ல காயம் முட்டி பெயர்ந்து உள்ளே சதை தெரிந்தது.

அதனால் தான் இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்று புரிந்தது. துளசி பார்த்ததும் பதறி விட்டாள், எப்படி இப்படி விழுந்த மீனா, "வா" என்று அவளை

குளியலறை அழைத்து போய் பைப்பை திறந்து விட்டு காயத்தை கழுவ,

“மா விடும்மா, விடும்மா” என்ற அவளின் கதறல் வெளியே நன்கு கேட்டது.

வெளியில் இருந்தவர்களுக்கு மகளை போட்டு அடிக்கின்றாளோ என்ற பதைப்பே வர, மேகநாதன் வேகமாக வீட்டின் உள் போக, “அச்சோ பிள்ளையை அடிக்கிறாளோ” என்று அகிலாண்டேஸ்வரியும் போனார். குறும்பு செய்தால் மீனாக்ஷி அடி விழும் தான் ஆனால் சிறு வயதில் இப்போதெல்லாம் அடி இல்லை. துளசி மகளை அப்படி தாங்கினாலும் அதில் கண்டிப்பும் எப்போதும் இருக்கும்

“திரு மீனா ஏன் இப்படி கத்தறா?” என்று பெரிய சித்தி கேட்க,

“காயத்தை கழுவுவாளா இருக்கும் சித்தி” என்று சரியாக கணித்தான் திரு.

ஆனாலும் மனது கேட்காமல் எல்லோரும் உள்ளே செல்ல, படுக்கை அறையில் இருந்து சத்தம் எனபதால் அகிலாண்டேஸ்வரியும் சித்திகளும் உள்ளே செல்ல, குளியறையில் தான் சத்தம்.

எட்டி பார்க்க காயத்திற்கு தான் அத்தனை ஆர்ப்பாட்டம் என்பது புரிந்தது.

“துளசி அவளை விடு” என்று அகிலாண்டேஸ்வரி அவளை வெளியில் அழைத்து வர, எல்லோரும் அவளின் காயம் பார்த்து அதிர்ந்து விட்டனர்.

ஆம் முட்டியில் மேல் தோல் பெயர்ந்து உள்ளே இருந்த சதையே தெரிந்தது.

அப்போது தான் உள்ளே வந்த திரு அந்த காயத்தை பார்த்ததும் மீனாவின் மீது பாய்ந்தான், “அறிவிருக்கா உனக்கு, உன்னை யாரு இறங்கி வர சொன்னா” என்று கத்த, மீனா அப்பாவின் கத்தலில் பயந்து திரும்ப அழுதாள்.

“எப்படி விழுந்த மீனா” என்று மேகநாதன் கேட்க,

“அப்பா என்னை க்ராஸ் செஞ்சு போனார் தாத்தா. என்னை பார்க்கலை. அவரை கூப்பிட்டிட்டே திரும்பினேனா, சைக்கிள் இடிச்சிடுச்சு, கீழ விழுந்துட்டேன்!” என்று தேம்பியபடி சொன்னாள்.

அப்போதுதான் வெங்கடேஷ் ஷோபனாவை எழுப்பி வெளியே வரச் செய்திருந்தான். “எல்லோரும் இருக்காங்க, நீ தூங்கற, உன்னை அப்புறம் தாளிச்சு எடுப்பாங்க” என்று சொல்லி அழைத்து வந்திருந்தான். சொல்லப் போனால் மணி காலை ஒன்பதை நெருங்கியிருந்தது.

நைட்டியோடு அவள் எழுந்து வெளியே வர, ஒன்பது மணிக்கு அவளை அப்படி பார்த்ததும் அண்ணன் தம்பிகள் மூவருமே முகத்தினை சுருக்கினர்.

ஏதாவது பேசினால் "அந்த வேலை செய்யறவன் பொண்ணும், என் பொண்ணும் ஒன்னா?" என்று அவர்களின் உடன் பிறப்பு சண்டைக்கு வரும் பெண்கள் அனைவரும் அமைதி காத்தனர்.

எல்லோரும் இருந்தாலும் ஷோபனாவிற்கு தாய் மாமன்களும் அத்தைகளும் தானே, அருகில் சாவகாசமாக வந்தவள், காயத்தை பார்த்ததும் அகிலாண்டேஸ்வரியிடம் "ஒரு காயத்துக்கு எதுக்கு இவ்வளவு சத்தம் அத்தை" என மீனாவை பற்றி சொல்ல,

துளசியிடம் எப்போதும் ஷோபனா வம்பிற்கு இழுத்தாலும் அதனை கண்டுகொள்ளாமல் கடந்து விடுவாள். இன்று கடக்க முடியவில்லை பெண்ணின் காயம் மனதிற்கு வருத்தத்தை கொடுத்திருக்க இதில் ஷோபனா பேசியது ஒரு கோபத்தை கொடுத்தது.

இனி ஒரு வார்த்தை அவள் பேசினால் திரும்ப பேசும் முடிவில் துளசி இருக்க, அதற்கு அவசியமில்லாமல் போனது.

என்னவோ காலையில் இருந்து எரிச்சலின் உச்சத்தில் இருந்த திரு, கூடவே இப்போது துளசியை அடித்தது

வேறு மனதின் ஒரு ஓரத்தில் உதைத்து இருக்க, மகளின் காயம் எல்லாம் சேர்ந்து அவனை பேச வைத்தது.

“டேய் ஷோபனாவை தள்ளி விட்டு காயம் பண்ணுடா, அவ கத்தறாளா இல்லையான்னு நான் பார்க்கறேன்” என்று திரு சொல்ல,

“என்னடா இவன் இவ்வளவு பேசறான் இன்னைக்கு” என்று தோன்றிய போதும் அவனை யாரும் அதட்டவில்லை, “நீ பேசினியா, நீ வாங்கிக்கோ” என்ற படி நின்றார்கள். ஏனென்றால் மீனாவின் காயம் அப்படி.

“என்ன? என்னை தள்ளி விட சொல்றீங்களா மாமா?” என திருவிடம் சண்டைக்கு கிளம்ப,

“உன் கிட்டயா சொன்னேன், அவன் கிட்ட தானே சொன்னேன், அவன் கிட்ட கேளு” என்று வெங்கடேஷை காட்டினான். வெங்கடேஷ் அவனை எதிர்த்து பேசமாட்டான். சிறு வயதில் இருந்தே. திருவின் வாயை விட கை அதிகம் பேசும். அப்போது வந்த பயம் இப்போது வரை சிறிது இருக்கும்.

திரு உடனேயே “இல்லைனாலும் ஒன்னும் பிரச்சனையில்லை, அவன் விழுந்து எவ்வளவு வலிக்குதுன்னு உன்கிட்ட காட்டுவான்” என்ற பதிலில் “உன் பொண்டாட்டி பேச்சை நிறுத்தலை, நான் என்ன பண்ணுவேன்னு தெரியாது” என்ற செய்தி இருந்தது.

எதற்கும் எந்த பிரதிபலிப்பும் துளசியிடம் இல்லை. மகளின் காயத்தை அழுகையை பார்த்து நின்றாள். அவளின் கன்னம் வேறு வலியில் இழுத்தது.

திரு என்னவோ அப்படி ஒரு கோபத்தில் இருந்தான். அவனுடைய் வாழ்க்கையின் தோல்வி அவனை முரடனாய் மாற்றி இருந்தது. அவனுடைய வெற்றிகள் அவனுக்கே சற்று மமதையை கொடுத்திருக்க, அதிகம் இப்போதெல்லாம் முரட்டுத்தனத்தை செயல்களில் வார்த்தைகளில் காண்பிக்க ஆரம்பித்திருந்தான்.

வெங்கடேஷ் திரும்பி ஷோபனாவை முறைத்தவன், "கொஞ்சம் பேசாம இரு" என்று அதட்டினான்.

"என்னை தள்ளி விட சொல்றாங்க, யாரும் என்னன்னு கேட்கலை" என்று சொல்லியபடியே அவளின் ரூமின் உள் போக,

"அய்யோடா" என்றானது அனைவருக்கும், பின்னே அவளின் அம்மாவிற்கு சொல்லிக் கொண்டிருப்பாள், இன்னும் அரைமணிநேரத்தில் அவர்கள் இங்கே இருப்பார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. அவர் மட்டும்மல் அவருடைய இன்னொரு உடன் பிறப்பும் வரும்.

அக்காவும் தங்கையும் அவ்வளவு ஒற்றுமை, அகிலாண்டேஸ்வரியின் வாய்க்கு மட்டும் சிறிது தயக்கம் காட்டுவார்கள், மகள் என்று வரும் போது அதையும்

கடந்து விடுவார்கள். அவர்கள் மட்டும் வரமாட்டார்கள் ராதாவையும் அழைத்து வருவார்கள், அவள் வேறு வந்து "மா இங்கே ஷோபனாவை பார்த்துக்கற மாதிரி தான் அவங்க என்னை பார்த்துக்குவேன்னு சொல்றாங்க" என்று டென்ஷன் கிளப்புவாள்.

இப்படியாக குடும்பம் ஜே ஜே என்றிருக்கும்..

எல்லோரும் அவரவர் எண்ணங்களில் இருக்க எதையும் துளசி கண்டு கொள்ளாது, நேரத்தை பார்த்தவள், மாமனாரை நோக்கி "மாமா, ஹாஸ்பிடல் கூட்டிட்டு போயிட்டு வந்துடலாம்" என்றாள்.

"ஹாஸ்பிடல் வேண்டாம் ஊசி போடுவாங்க" என்று சிறு பிள்ளையாய் மீனாக்ஷி பேச,

"வாயை மூடு, நீ ரோட்ல நடக்க தெரியாம நடந்து இப்படியா விழுந்து வைப்ப" என்று மகளை கோபத்தில் அதட்டினாள். யார் இருக்கும் போதும் துளசியின் வாய் திறவாது தனிமையில் மட்டுமே மகளுடன் கோபமான பேச்சுக்கள். மற்றபடி யாரும் இருக்கும் போதும் அவர்களின் கவனத்தை கவராத பேச்சுக்கள் தான்.

இப்போது இவள் அதட்டவும் புருஷனுக்கும் பெண்டாட்டிக்கும் என்னவாகிற்று என்று வீடு அமைதியாக கிரகிக்க முற்பட்டது.

"மா வலிக்குதும்மா" என மீண்டும் தேம்ப,

“ஹாஸ்பிடல் போயிட்டு வந்தா கொஞ்சம் குறையும்” எனச் சொல்லி, அவள் குளிப்பதற்காக வேகமாக சென்றாள்.

தினமும் அவளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு தான் குளிப்பாள். இன்று அதற்கு நேரமே இல்லாமல் பல கலாட்டாக்கள்.

வேகமாக குளித்து தயாரான போதும், இருபது நிமிடங்கள் ஆகிவிட்டது. இப்போது அவரவர் அவரவர் வீட்டிற்கு சென்று இருந்தனர். வீட்டு ஆட்கள் மட்டுமே.

வந்தவள் “வா நீ டிரஸ் மாத்துவியாம்” என்று அவளை ரூமிற்கு உள் அழைத்து செல்வதற்கு நடக்க வைப்பதற்குள் “ஷ் ஹப்பா” என்று ஆகிவிட்டது.

சென்று அவளுக்கு மாற்றி ரூமில் படுக்க வைத்து மகளுக்கு ஜூஸ் விட்டு கொடுத்து என வேலைகள் விரைவாக ஓட, நேரம் பத்தை நெருங்கிக் கொண்டிருக்க அப்போதுதான் தான் தனம் சமையலுக்கு ரெடி செய்து கொண்டிருந்தாள்.

“என்ன இவ்வளவு நேரம்?” என்று துளசி கேட்க,

“அந்த மகராசி சொல்லுவாங்கன்னு சொல்லிட்டீங்க. அவங்க சொல்ற மாதிரி தெரியலை, அதுதான் ஏதோ ஒன்னு பண்ணிட்டு இருக்கேன்” என்று அவளும் நொடித்தாள்.

பின்னே அவளுக்கு வேலையாக வேண்டாமா?

“நீ எப்போவோ செய், இப்போ தள்ளு” என்ற துளசி, தோசை கல்லை வைத்து தோசை சுட ஆரம்பித்தாள். தோசை ஒரு பக்கம் சுட, சட்னி ஆட்ட முனைய,

“நான் ஆட்டறேன்க்கா” என்று தனம் அருகில் வர,

“நான் இந்த இடத்தை விட்டு நகர்ற வரைக்கும் நீ வரக் கூடாது” என்று மெல்லிய குரலில் என்றாலும் ஸ்திரமாக சொல்ல. தனம் நகர்ந்து நின்று கொண்டாள்.

வேகமாக சட்னி ஆட்டி, தோசைகளை வார்த்து டைனிங் டேபிளில் வைக்க, மேகநாதன் வந்தவர் உண்டு முடிக்க, பின்னே திருவும் வந்தவன் உண்டு முடிக்க,

பின்பு அடுப்பை அணைத்து, “இப்போ என்னவோ செஞ்சிக்கோ” என்று துளசி நகரப் போக,

‘உங்களுக்குக்கா” என்று தனம் கேட்க, “இல்லை பசிக்கலை” என்று சொல்லி நகர்ந்தாள்.

அதுவரையிலும் தனம் துளசியின் முகத்தை தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என்ன இப்படி பார்க்கற?” என்று துளசி அவளையும் மீறி அதட்ட,

“உங்க கன்னம்” என்று தனம் இழுக்க, அதற்கு பதிலே சொல்லாமல் நகர்ந்து விட்டாள் துளசி.

அடிவாங்கியிருக்கிறார்கள் என்று தனத்திற்கு புரிந்தது. ஆனாலும் எதையும் காண்பித்து கொள்ளாமல் இப்படி வேலை செய்கிறார்கள். "மனுஷியா என்ன?" என்ற எண்ணம் தான் தனத்திற்கு ஓடியது.

துளசி சமையலறை விட்டு வெளியே வந்த சமயம், வீட்டின் மூன்று பெண்மக்களும் உள்ளே நுழைந்தனர். மேகநாதனின் தங்கைகள் சாரதாவும் சித்ராவும், கூட அவரின் மகள் ராதா அதாகப் பட்டது திருவின் தங்கை. ராதாவிற்கு எட்டு வயதில் ஒரு மகன் இருந்தான். மீனாக்ஷி படிக்கும் பள்ளி தான் அவன் படிக்கின்றான்.

"வாங்க சித்தி, வாங்க அண்ணி" என்று துளசி வரவேற்று, உள்ளே சென்று தண்ணீர் எடுத்து வந்து உபசரிக்க, அகிலாண்டேஸ்வரி அவர்களை அப்போது தான் பார்த்தவர், "வா ராதா" என்று மகளை வரவேற்று விட்டு, "வாங்க அண்ணி" என்று அவரின் நாத்தனார்களை வரவேற்றார்.

மேகநாதன் வந்தவர் "வாங்க பொண்ணுங்களா" என்று அருகில் அமர்ந்தார்.

துளசி தண்ணீர் கொடுக்க, "இப்போ தான் குடிச்சிட்டு வந்தோம்" என்று சாரதாவும் சித்ராவும் மறுத்து விட, "எனக்கு தொண்டை சரியில்லை பச்சை தண்ணீர் வேண்டாம்" என்று நாசூக்காக ராதா மறுத்து விட,

துளசிக்கு நன்றாக தெரியும், அது தான் கொடுப்பதினால் அவர்கள் மறுக்கிறார்கள் என்று. ராதா பொதுவில் அப்படி செய்ய மாட்டாள் இன்று தனது அத்தைகளை கொண்டு செய்கிறாள் எனப் புரிந்தது.

“கொடுப்பது என் கடமை நீ, குடித்தால் என்ன? குடிக்காவிட்டால் என்ன?” என்ற மனநிலை துளசிக்கு எப்போதும் உண்டு, பதில் பேசாமல் அந்த தண்ணீரை எடுத்து உள்ளே சென்றவள் அதனை அப்படியே வைக்காமல், கீழே ஊற்றி விட, என்னவென்று தெரியாத போதும் தனம் வேடிக்கை பார்த்து நிற்க, இப்படியாக தனம் நேரத்தை தான் கடத்திக் கொண்டிருந்தாள் ஒழிய சமையல் செய்வதாக காணோம்.

சட்னியும் இருவர் சாப்பிடும் அளவிற்கே துளசி அரைத்து இருந்தாள்.

தங்கைகள் வந்ததால் மேகநாதன் அவர்களோடு அமர்ந்து விட்டார். அவருக்கு தெரியும் அவர் நகர்ந்து விட்டால், வீட்டினில் பிரளயத்தையே உருவாக்கி விடுவர்.

“ஹாஸ்பிடல் எப்படி போற துளசி” என்று அவர் கேட்க, அதுவே சொன்னது “நான் வரவில்லை, நீ போ” என்று.

“நீங்க வந்தா உடனே விட்டுடுவாங்க, நான் போனா டோக்கன் போட்டு காத்துட்டு நிக்கணும். அரை மணிநேரம் வந்துடலாம்” என்றாள். எல்லாம் திருவின்

அத்தைகளின் முன்னேயே. மகளின் வலி அப்படி பேச வைத்தது.

இதைல்லாம் ரூமின் உள் மில்லுக்கு கிளம்ப தயாராகி கொண்டிருந்த திருவின் காதினில் விழுந்தது. ரூம் இரண்டு பிரிவுகளாக இருக்கும், ஒரு ரூமின் உள் இருந்து இன்னொரு ரூம் போகலாம். உள் இருந்த ரூமில் துளசியும் மீனாட்சியும் உபயோகிக்க, வெளியே இருந்த ரூம் திரு இருப்பான். அவன் அங்கே தான் தயாராகிக் கொண்டிருக்க, சத்தம் நன்கு கேட்டது.

“ஏன் கொஞ்சம் நேரம் இருந்து பார்த்துட்டு வரமாட்டியோ?” என சாரதா சொல்ல,

“வலிக்கு ரொம்ப அழறா சித்தி” என்று துளசி பதில் கொடுத்தாள்.

“என்னவோ என் பொண்ணை தள்ளி விடறேன்னு சொன்னானாமே உன் வீட்டுக்காரன், இதெல்லாம் கேட்டுட்டு என் கூடப் பொறந்தவங்களும் இருக்காங்க. என்ன புதுசா பாசம் பொண்ணு மேல உன் வீட்டுக்காரனுக்கு பொங்குது” என்று நேரடியாகப் பேசினார். உள்ளே திரு இருப்பது தெரிந்தே அவனின் காதில் விழ சத்தமாகப் பேசினார்.

“அப்படி கேளும்மா” என்றபடி ஷோபனா வர,

இதற்கு மேல் இவர்களிடம் ஆகாது என்று உணர்ந்த துளசி, ரூமின் உள் சென்றவள், திருவின் பர்ஸ் எப்போதும் இருக்கும் இடத்தினில் இருக்க, திரு எப்படியும் கவனிப்பான் என புரிந்து அதிலிருந்து ஹாஸ்பிடல் செல்ல பணத்தை எடுத்தாள்.

அதுவே தனியாகப் போகப் போகிறாள் என்று காண்பித்து கொடுக்க, துளசி கைபேசி எடுத்து ஆட்டோவிற்கு சொல்வதையும் கவனித்தான்.

மீனாக்ஷி படுத்தும் பாட்டிற்கு எப்படி தனியாக போய் வருவாள் என்று தோன்றிய போதும், "நான் அழைத்துப் போகிறேன் என்றோ, கூட வருகிறேன்" என்றோ சொல்லவில்லை.

வெளியே மேகநாதன் "இப்படி எல்லாம் பேசாத சாரதா, நீ பேசறது சரியில்லை" என்று தங்கையிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"அவன் பொண்ணு போய் விழுந்து எழுந்து வந்தா என் பொண்ணை அவன் தள்ளி விடுவானா, எப்படி அப்படி சொல்லலாம்" என்றார் கோபமாக.

"சும்மா பிரச்சனை பண்ணாத சாரதா, ஷோபனாவும் பார்த்து பேசணும். என் பேத்தி வலில அப்படி அழுதுட்டு இருக்கா, ஷோபனா ஒரு சின்ன காயத்துக்கு

எதுக்கு இவளவு ஆர்ப்பாட்டம்னு பேசியிருக்க கூடாது, காயமும் அதிகம்'' என்று சொல்ல,

ரூமின் உள் திருவின் காதினில் விழுந்தது.

''என்ன வேணா இருக்கட்டும், என் மகளை பேச அவன் யாரு'' என,

அதுவரை ரூமின் உள்ளே இருந்த திரு வெளியில் வந்தவன், அத்தையை பார்த்து ''நான் யாரா அத்தை'' என்றான் சிறு அலட்சிய சிரிப்போடு.

கூடவே ''உங்க பொண்ணுக்கு நான் யாரும் கிடையாது. ஆனா என் பொண்ணை பேசினா நான் பேசினேன். புதுசா என்ன பாசம்னு கேட்காதீங்க உங்க மாதிரி தப்புக்கு துணை போற பாசம் எனக்கு தேவையில்லை. உங்க கிட்ட என் பாசத்தை காட்டணும்னு எனக்கு அவசியமுமில்லை. ஆனா வேறு சிலதை காட்டி ஆகணும்னு காண்பிச்சிட்டீங்க'' என அவன் சொல்லும் போதே வெங்கடேஷ் வந்தவன்,

''இதுகளுக்கு பட்டா தான் புத்தி வரும்'' என்று அவன் பாட்டிற்கு வெளியில் சென்று விட்டான். வந்தவர்களை ''வாங்க'' என்று கூட சொல்லவில்லை. மனைவியை அடித்த கணவன் உணவை முடித்திருக்க, மனைவியை தாங்கி, அவள் என்ன டிஃபன் செய்ய வேண்டும் என்று சொல்லுவாள்'' எனச் சொன்ன தான்

பட்டியினோடு செல்கிறோம் என்பது அவனின் மனதிற்கு உரைத்தது.

ஷோபனா வெங்கடேஷ் அமருவான் என்று பார்க்க அவன் சென்றது ஒரு கோபத்தை கொடுத்தது.

திரு மகளை கிளப்பிக் கொண்டிருந்த துளசியிடம் பேசாமல் "அம்மா மீனாவை ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டுப் போக ஆட்டோ சொல்லியிருப்பா போல, வேண்டாம்னு சொல்லு, கார் வரச் சொல்றேன்" என்றவன்,

நேராக சாரதாவின் கணவருக்கு போன் அடித்தவன்,

"எப்படியிருக்கீங்க மாமா" என்று பேச்சை ஆரம்பித்து, "பணம் கேட்டிருந்தீங்க இல்லை , இருபது லட்சம் இப்போதைக்கு என்னால முடியாதுன்னு சொல்ல ஆசை. ஆனா எப்போவுமே முடியாது மாமா, எங்கப்பா தங்கச்சிங்க இங்க வந்து உட்கார்ந்துகிட்டு என்னை கேள்வி கேட்டுட்டு இருக்காங்க நான் யாருன்னு. நான் யாருமில்லை உங்களுக்கு"

"போன வருஷம் இங்க வீட்ல இருந்து எங்க கார் எடுத்துட்டுப் போனீங்க, இன்னைக்கு வரைக்கும் அதை கொண்டு வந்து விடலை. அதை உடனே அனுப்பிவிடுங்க" என்று பேசப் பேச,

சாரதாவின் முகம் இருண்டு விட்டது.

எப்போது எது பேசினாலும் கண்டு கொள்ளாமல் போகும் திருவிடம் இப்படி ஒரு பரிமாணம் எதிர்பார்க்கவில்லை.

இந்த பேச்சுக்கள் இந்த ஆர்பாட்டங்கள் எதிலும் பாதிக்கப் படாதவளாக துளசி.

“கார் வர்ற வரைக்கும் காத்திருக்க முடியாது, நீங்க ஃபோன் செஞ்சு அந்த அட்டண்டர் கிட்ட எங்களை சீக்கிரம் உள்ள அனுப்ப சொல்லி சொல்லிடுங்க மாமா” என்று மாமனாரிடம் சொல்லி மீனாட்சியை அழைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

பேச்சை நிறுத்தி துளசியை தான் கவனித்தான் திரு. பின்னே அவன் பேசப் பேச, துளசி அவனை பார்த்திருந்தாளே. அவன் பார்க்கும் வரை விடாது பார்த்திருக்க வேறு வழியில்லாமல் பார்த்திருந்தான். அந்த பார்வை “என்ன லூசு மாதிரி பேசற நீ” என்பதாக திருவிற்கு தோற்றம் கொடுத்தது. உடனே பேச்சை நிறுத்தி விட்டான்.

அந்த பக்கம் “திரு திரு” என்று கத்திய அவனின் மாமா உடனே இங்கே வீட்டிற்கு கிளம்பியிருந்தார்.

மீனாக்ஷி விந்தி விந்தி நடக்க, “இதோ கொஞ்சம் தூரம் தான், வாசல் வந்திடும், அங்க இருந்து கொஞ்சம் தூரம் தான், ரோட் வந்திடும், நாம போறதுக்குள்ள

ஆட்டோ வந்திடுவான்'' என்று சொல்லி அழைத்து செல்வதையே பார்த்திருந்தான்.

''எல்லோர் முன்னையும் அடிச்சிருக்கேன், அதுக்கான பிரதிபலிப்பு ஒன்னுமே இல்லாம அசராம வேலையைப் பார்க்கறா. சரியான திமிர். இதுல நான் பேசினா என்னை லூசுன்னு பார்க்கறா'' என்று தோன்றியது.

இப்போது அவனின் கோபம் எல்லாம் அப்பாவின் மீது திரும்பியது. இத்தனை வருடங்களாக பேசாதவன் ''எல்லோரையும் பேச விட்டு வேடிக்கை பார்க்கறீங்களா நீங்க?'' என்று அவரிடம் சண்டைக்கு கிளம்பினான்.

''பரவாயில்லை துளசி கிளம்பிட்டா. இல்லை, உங்களை அடிக்க முடியாத பாவத்துக்கு அவளை தான் அடிச்சிருப்பேன்'' என்று சொல்லிச் செல்ல, மேகநாதன் எல்லாம் எதற்கும் அசரவில்லை. என்னவோ பேசிக் கொள் என்ற பாவனையோடு இருந்தவர்,

எதுவும் நடவாதது போல ''அப்புறம்'' என்று தங்கைகளிடம் பேச, அவர்கள் யாராலும் பேச முடியவில்லை. மேகநாதனிடம் எல்லாம் இப்படி யாரும் பேச மாட்டர்.

அகிலாண்டேஸ்வரி தான் ''திரு அப்பா கிட்ட என்ன பேசற'' என்று அதட்டி கத்த, அது அவனின் காதில் கூட விழுந்திருக்காது, வெளியே விரைந்திருந்தான்.

மேகநாதன் தங்கைகளையும் மகளையும் பார்த்தவர் "பிறந்த வீடு வேண்டும்னு நினைச்சா பார்த்து பேசணும் பார்த்து நடந்துக்கணும் திரு கிட்ட, என் பேத்தி கிட்ட, முக்கியமா துளசி கிட்ட. அவ தண்ணி குடுத்தா கூட நீங்க குடிக்க மாட்டீங்க. அப்போ இனிமே இந்த வீடு உங்களுக்கு எதுவும் செய்ய வேண்டாம் அப்படி தானே" என்றார் ஸ்திரமாக.

கூடவே ஷோபனாவை காண்பித்து "இவளுக்கு செய்யவே ஆள் வேண்டும், இதுல இவ உங்களுக்கு என்ன செய்வா, வாங்க தான் பார்ப்பா, செய்ய எல்லாம் மாட்டா, வேற வீட்ட்ல குடுத்திருந்தா இந்நேரம் உங்க வீட்டுக்கு வந்து உட்கார்ந்திருப்பா, என் பையனாப் போகவும் குடும்பம் நடத்தறான்" என்றே சொல்லி அவர் அந்த இடத்தை விட்டு எழுந்தவர்,

மகளை ஒரு பார்வை பார்த்தவர் பேசவே இல்லை அவளிடம், பின்னே துளசியிடம் நன்றாக நடக்க வேண்டும் என்று அத்தனை முறை அவர் சொல்லிக் கொடுத்திருக்க, இன்று அவள் தண்ணீர் கூட வாங்காதது அவருக்கு அப்படி ஒரு கோபத்தை கொடுத்திருந்தது.

எத்தனை வருடங்களாக எல்லோருக்கும் படித்து படித்து சொல்கிறார். ஆனாலும் எல்லோரும் திரும்ப திரும்ப பேசுவது அவருக்கு ஒரு எரிச்சலையும் ஆதங்கத்தையும் கொடுத்திருந்தது.

‘‘நான் ஹாஸ்பிடல் போறேன்’’ என்று பேத்தியை பார்க்கச் சென்றார்.

அத்தியாயம் நான்கு

திருவின் மாமா நாகேந்திரன் எந்த வேகத்தில் வந்தாரோ மேகநாதன் கிளம்பும் முன் அவரை பிடித்திருந்தார்.

“வாங்க மாப்பிள்ளை” என்ற மேகநாதனின் அழைப்புக்கு கூட செவி சாய்க்காமல் “திரு இல்லீங்களா மச்சான்” என்றார் அவசரமாக.

“இப்போ தான் கிளம்பினான்” என்று மேகநாதன் சொல்ல, அவர் தளர்வாக சோஃபாவில் அமர, எல்லோரும் அவரைத் தான் பார்த்திருந்தனர்.

ஒன்றுமே பேசாமல் நாகேந்திரன் தன் மனைவியைப் ஒரு பார்வை பார்க்க, சாரதாவிற்கு சர்வமும் நடுங்கியது.

“சும்மா பார்த்துட்டு நிக்கற, தண்ணி கொண்டு வா!” என்று மேகநாதன் அகிலாண்டேஸ்வரியை அதட்ட, அவர் தன் கணமான சரீரத்தை தூக்கி கொண்டு போனார். அப்போதும் ராதாவோ இல்லை ஷோபனாவோ போகவில்லை.

அகிலாண்டேஸ்வரி உள்ளே சென்று தனத்தை அதட்டினார் “தண்ணிய மொல்லுறி”. அவள் ஒரு க்ளாசில் கொடுக்க அதை கொண்டு வந்து நாகேந்திரனிடம் கொடுத்தார்.

“என்ன மச்சான் பிரச்சனை? திரு ஏன் அப்படி பேசினான்?” என்று நாகேந்திரன் கேட்க,

“மாப்பிள்ளை இப்ப வரைக்கு பசங்களை கைக்குள்ள தான் வெச்சிருக்கேன். ஆனா போன நிமிஷம் இருந்து வெக்க கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன். நானே கைக்குள்ள வெச்சிருந்தா நான் போன பிறகு உங்க யாருக்குமே இந்த வீடு இல்லாம போய்டும். இப்போ இருந்தே அவங்கவங்களுக்குறிய மரியாதை கொடுத்தா தான் எல்லாம் சரியா வரும்”

“திரு இன்னும் சின்ன பையன் கிடையாது” என்று நிறுத்தினார்.

“அவனை யாரு சின்ன பையன் சொல்றா?” என்று அவர் கேட்க,

“என் தங்கச்சிங்க பண்றது அப்படி தான் இருக்கு, அவன் இருக்கும் போது அவன் காதுபட கேட்டா கேட்கட்டும்ன்னு அவனைப் பத்தி பேசறாங்க, என் கிட்ட தான் அவங்களுக்கு உரிமை. என் பசங்க கிட்ட அவங்க மரியாதையா நடந்தா தான் அவங்க நடப்பாங்க, இதுல நான் ஒன்னுமே செய்ய முடியாது” என்று விட்டார். சாரதா அண்ணனின் பதிலில் “ஆங்” என்று விழித்தார்.

எப்போதும் மேகநாதன் இப்படி பேசியது கிடையாது. மேகநாதனுக்கே இன்று என்ன பொண்ணு மேல திடீர் பாசம் என்ற வார்த்தை கோபப் படுத்தி இருந்தது.

“என்னடி பிரச்சனை பண்ணின இங்க?” என்று நாகேந்திரன் சாரதாவை நோக்கி கர்ஜிக்க,

“நம்ம ஷோபனாவை தள்ளி விடறேன்னு சொல்லியிருக்கான், அதைத் தான் கேட்டேன்”

“நீ யாருடி அதை கேட்க, உன் பொண்ணை கட்டி குடுத்துட்ட, இங்க அவளுக்கு ஒரு பிரச்சனைன்னா இங்க இருக்குற அத்தனை பேருமே கேட்பாங்க. அப்படியும் அவங்க கேட்கலைன்னா இவ தான் எதோ தப்பா பேசியிருக்கா, அந்த அறிவு கூடவாடி உனக்கு கிடையாது”

மேகநாதன் பொறுக்காமல் சொல்லியே விட்டார். “என் பேத்தி கீழ விழுந்து அடி பட்டு காயத்தோடு வந்து அழுதுட்டு இருக்கா, உங்க பொண்ணு ஒரு சின்ன காயத்துக்கு எதுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம்னு கேட்கறா” என்றவர், கூடவே எல்லோரையும் விட மீனாக்ஷி அவருக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும் காண்பித்தார்.

அதாகப் பட்டது நாகேந்திரனிடம், “நீங்க ஷோபனாவை உங்க வீட்டுக்கு கூட்டிட்டுப் போய்

கொஞ்சம் புத்தி மதி சொல்லி அனுப்புங்க, உங்களுக்கு தெரியுமா? திரு காலையில துளசியை எல்லார் முன்னையும் அடிச்சான், ஆனாலும் அவ என் பையன் வயிறை வாட விடலை, அவனுக்கு உரியதை கவனிச்சிட்டு தான் பொண்ணை கூட ஹாஸ்பிடல் கூட்டிட்டிப் போறா”

“ஆனா என் இன்னொரு பையன் ஷோபனா என்ன சொன்னாலும் கேட்பான், பாருங்க அவன் சாப்பிடாம தான் போறான். இந்த வீட்ல உங்க பொண்ணுக்கு என்ன வேலை என் பையனுக்கு சாப்பாடு போடறதை தவிர. அதை கூடச் செய்ய முடியலைன்னா என்ன இருக்கு? அவ எதுக்கு இங்க இருக்கணும்?” என்று நாகேந்திரனிடம் கேட்டார்.

இப்படி எல்லாம் வரக் கூடும் என்று யாரும் நினைக்கவில்லை. எல்லோரும் ஸ்தம்பித்து இருக்க அகிலாண்டேவரிக்கே தன கணவரின் இந்த பரிமாணம் புதியது. தங்கைகள், மகள் என்று உருகுபவர் இப்படி பேசுவது “ஆ” என வாய் பிளந்து பார்த்தார்.

சாரதா இது தான் சாக்கென்று “எங்கண்ணன் இப்படி பேசுவாருன்னு நான் நினைச்சது இல்லையே. அண்ணனா இல்லையே எனக்கு அப்பாவா தானே இருந்தாரு” என்று புலம்ப ஆரம்பித்தார்.

இன்னொரு தங்கை சித்ரா "அண்ணா, ஒரு வேலைக்காரன் பொண்ணும் நம்ம ஷோபனாவும் ஒன்னா" என்று எப்போதும் படிக்கும் பாட்டினை படித்தார்.

இவ்வளவு பேசியும் இந்தப் பேச்சா என்று அப்படி ஒரு கோபம் மேகநாதனுக்கு வந்து விட, "என்ன வேலைக்காரன் பொண்ணு? அது நான் பார்த்து பண்ணி வெச்ச கல்யாணம்! அந்த மரியாதையை கூட உங்களுக்கு குடுக்க தெரியலைள்ள, எத்தனை முறை சொல்லியும் திரும்ப வேலைக்காரன் பொண்ணு பேசறீங்க. அதுக்கு மரியாதை குடுக்கலைன்றது எனக்கு குடுக்காததுக்கு சமம் தான்!" என்றவர்,

"முதல்ல தான் அவன் வேலைக்காரன் பொண்ணு, அவ கல்யாணம் நடந்த அடுத்த நொடி, திரு வோட பொண்டாட்டி. இந்த வீட்டுக்கு அவளும் ஒரு எஜமானி மறந்திட வேண்டாம்" என்றவர்,

"நான் ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடறேன்" என்று நாகேந்திரனிடம் சொல்லி கிளம்பினார்.

அதற்குள் கேட்டின் முன் ஆட்டோ நிற்கும் சத்தம் கேட்டது. "இவ்வளவு விரைவாக எப்படி வந்தார்கள். இந்த கலாட்டாவில் நான் அட்டண்டரிடம் ஃபோன் செய்து சொல்லவேயில்லயே" என்று மேகநாதன் நினைக்க,

இரு கால் முட்டிகளிலும் கட்டோடு தடுமாறியபடி மீனாக்ஷி துளசியின் உதவியோடு கீழே இறங்க, தன்னுடைய வயதினையும் மறந்து மேகநாதன் ஓடினார் "பார்த்து பார்த்து" என்று.

பின் பேத்தியை பிடித்துக் கொள்ள, அவரின் உதவியோடு மீனாக்ஷி நடக்க ஆரம்பிக்க, துளசி ஆட்டோவை கட் செய்து உள்ளே வந்தாள்.

நாகேந்திரனை பார்த்தவள் "வாங்க சித்தப்பா" என்று அழைத்து, மீனாக்ஷி கால் கீழே விட்டு அமர்ந்திருப்பதை பார்த்தவள், அவள் கால் நீட்டி வைத்துக் கொள்ள வசதியாக ஒரு டீப்பாய் இழுத்து போட்டு அமரவைத்தாள்.

நாகேந்திரனுக்கு மனைவியை மகளை எல்லாம் முறைக்க மட்டுமே முடிந்தது. இவர்கள் எல்லாம் பேசிக் கொண்டிருக்க ராதா எப்போதோ அவளின் ரூமின் உள் சென்றிருந்தாள்.

துளசி பின் சமையலறை சென்று நாகேந்திரனுக்கும் மேகநாதனிற்கும் காபி கலந்து எடுத்து வந்தாள். மேகநாதனின் பார்வை "பார் என் மருமகளின் லட்சணமும், உன் பெண்ணின் லட்சணமும்" என்று சாரதாவை குற்றம் சாடியது.

அவர்கள் தான் கொடுத்த தண்ணீர் கூட குடிக்காததினால் பெண்கள் யாருக்கும் துளசி காஃபி

விடவில்லை. அதனால் அகிலாண்டேஸ்வரிக்கும் விடவில்லை.

“உங்களை பார்த்தவுடனே விட்டுட்டாங்களா” என்று மேகநாதன் துளசியிடம் கேட்க,

“நீங்க தானே ஃபோன் செஞ்சு சொன்னீங்க, ஐயா ஃபோன் பண்ணினாருன்னு அந்த அட்டண்டர் சொன்னானே”

“நான் சொல்லலையே ம்மா” என்றவர், “ஒரு வேளை திரு சொல்லியிருப்பான்” என்றார்.

நாகேந்திரன் மீனாட்சியிடம் “ரொம்ப வலிக்குதா எப்படி விழுந்த?” என்று பேச்சு கொடுத்தார்.

துளசி அதற்குள் உள்ளே சென்று தனம் என்ன செய்தால் என்று பார்க்க மதிய சமையல் ஒன்றுமே ஆரம்பிக்கவில்லை.

அவளின் பார்வை புரிந்தே “காலையிலயே யாரும் சாப்பிடலை” என தனம் சொல்ல,

“நீ சாப்பிட்டியா இல்லையா?” என்று துளசி பாயிண்ட்டை பிடிக்க தனம் அசடு வழிந்தாள். அவளிடம் என்ன சமைக்க வேண்டும் என்று பட்டியலிட,

“இவ்வளவு எப்படி கொஞ்சம் நேரத்துல செய்ய முடியும்”

“ஒரு மணிநேரம் இல்லை ஒன்னரை மணிநேரம் உனக்கு கொஞ்சம் நேரமா? நீ தள்ளு சரிப்படமாட்ட” என்று துளசி தன் புடவையை இழுத்து சொருகினாள்.

“இல்லை, இல்லை பண்றேன்” என்று தனம் இறங்க, இருவருமாக சேர்ந்து சமைக்க ஆரம்பித்தனர்.

நாகேந்திரன் பணம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற பதை பதைப்போடு அப்படியே அமர்ந்திருந்தார். அவருக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. மேகநாதனிடம் தனியாக பேசும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தார்.

பெண்கள் அப்படியே அமர்ந்திருப்பதை பார்த்து “போங்க உங்க தம்பிங்க வீட்டுக்குப் போயிட்டு வாங்க” என்றவர், மகளிடம் “நீ போய் குளி” என நாகேந்திரன் அதட்ட அங்கே சபை கலைந்தது.

அகிலாண்டேஸ்வரி மகளிடம் போய் விட, “அம்மா சாப்பிட ஏதாவது கொடும்மா” என்றாள் மகள், “காலையில சாப்பிடக் கூட இல்லை. இந்த அத்தைங்க இழுத்துட்டு வந்துருச்சுங்க”

“அப்புறம் ஏண்டி துளசி தண்ணி கொடுத்தப்போ குடிக்கலை, குடிச்சிருந்தா இந்நேரம் வித விதமா பலகாரம் செஞ்சு கொடுத்திருப்பா, காலாட்டிட்டு

சாப்பிட்டு இருக்கலாம். இன்னைக்கு உங்களால நானும் சாப்பிடலை'' என்றார் அகிலாண்டேஸ்வரி.

''இந்த ஷோபனா ஒரு வேலை செய்யறது கிடையாது. அப்பா சொன்ன மாதிரி கொஞ்சம் நாள் அம்மா வீட்டுக்கு போயிட்டு வரட்டும்'' அங்கே அம்மா மகளுக்கு இடையினில் அரட்டை கச்சேரி ஆரம்பிக்க,

அவர்கள் இருவரும் மட்டும் இருப்பதை உணர்ந்த துளசி, தனத்திடம் அவர்களுக்கு காஃபியும் தீனி வகைகளும் கொடுத்து விட்டாள்.

பார்த்ததும் தான் ''ஷப்பா'' என்றானது அகிலாண்டேஸ்வரிக்கு.

''உன் வீடு தானே, நீ போய் என்ன வேணுமோ தனத்துக்கிட்ட சொல்ல மாட்டியா?'' என ராதா வினவ,

''எனக்கு மட்டுமா சொல்ல முடியும்! உங்க அத்தைங்களுக்கும் சொல்லணும். நொட்டை நொல்லைம்பாங்க. அதுவுமில்லாம துளசி தண்ணி கொடுத்து வேண்டாம்னு சொல்லிட்டாங்க. நான் எழுந்து போனா உங்கப்பா அவ்வளவு தான்''

இவர்கள் பேச்சிற்கு தக்கமாதிரி, அங்கே தம்பியின் வீட்டிற்கு சென்ற தமக்கைகள், அங்கே அவர்களின் மனைவிமார்களிடம் ''அண்ணா இப்படி சொல்லிட்டார்.

அப்படி சொல்லிட்டார். ஷோபனாவை திரும்ப கூட்டிட்டு போக சொல்லிட்டார்” எனப் பெரிய புகார் வாசிக்க,

“என்ன இது?” என்று அவர்கள், அவர்களின் கணவன்மார்களிடம் சொல்ல,

எல்லோரும் மதிய உணர்விற்கு வீடு வந்தவர்கள் மொத்தமாக “எப்படி நீங்க இப்படிச் சொல்லலாம்?” என்று அண்ணன் முன் நின்றனர். அதாகப் பட்டது ஷோபனாவை வீட்டிற்கு அழைத்து செல்லுங்கள்” என்று.

இவர்கள் தான் இப்படி பேசினரே தவிர ஷோபனா அசரவில்லை.

மேகநாதான் அவர்களுக்கு பதிலே சொல்லாமல் “சாப்பாடு ரெடியா பாரு, என்ன ஸ்பெஷல்? பொண்ணுங்களும் மாப்பிள்ளையும் வந்திருக்காங்க” என அகிலாண்டேஸ்வரியிடம் கேட்க,

அவருக்கு தெரியாதே அவர் இன்னும் சமையல் அறை பக்கம் செல்லவே இல்லையே! கணவனை பார்த்து விழிக்க, “உன் சின்ன மருமக அவங்க அப்பா அம்மாவை வரவெச்சு இருக்காளே, என்ன ஸ்பெஷலாம்?” என்றார்.

அதற்கு ஷோபனா அலட்டிக்கொள்ளவில்லை, “அவர் போ என்று சொன்னால் நான் போய் விடுவேணா?”

என்ற இறுமாப்பு தான், அவ்வளவு நேரத்திற்கும் குளித்து தயாராகி இருந்தாள்.

இதற்கு காலையில் இருந்து உணவு உண்ணவில்லை. ஆனால் சமையல் அறை பக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

“துளசி” என்ற மேகநாதனின் அழைப்புக்கு வந்த துளசியிடம், “சாப்பாடு ரெடியா?” என்றார்.

“வீட்ல எல்லாம் ரெடி மாமா. சித்தி சித்தப்பா அண்ணி வந்திருக்கிறதாலா வெளில அசைவம் கொஞ்சம் சொல்லியிருக்கேன். அது மட்டும் வரணும்” என்று அவள் சொல்லவும்,

“இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?”

“ஒரு அரை மணிநேரம்”

“சரி” என்று அவர் சொல்லிவிட,

“மா தூங்கறேன்” என்ற மீனாவின் அழைப்பில் எல்லா வேலைகளையும் அப்படியே விட்டு மகளின் அருகில் வந்து அவளை எழுப்பி நிறுத்த முற்பட,அப்போதுதான் திரு வீட்டின் உள் நுழைந்தான்.

ஏனோ அன்று மனதே சரியில்லை. துளசி மீனாட்சியை எழுப்பி நிறுத்த முயற்சி செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, விரைந்து வந்து மகளை

நிறுத்தியவன். அவளின் இரண்டு முட்டியிலும் பெரிய கட்டை பார்த்ததும் டென்ஷன் ஆகிவிட்டான்.

திரும்பவும் அவளை திட்டினான், "நீ பார்த்து வராமா பாரு எவ்வளவு காயம்னு" என்று அதட்டினான்.

துளசி அவளின் இன்னொரு பக்கம் பிடித்திருப்பதை பார்த்து எப்போதும் போல அவளின் முகம் பார்க்காமல் "கை எடு" என்றான்.

துளசி எடுக்கவும், அப்படியே இரு கையிலும் மகளை ஏந்திக் கொண்டவன் அவர்களின் ரூம் சென்றான்.

யாரையும் கவனிக்கவும் இல்லை, எப்போதும் இருப்பவர்கள் தானே எனச் சென்று விட்டான்.

ஆனால் அவனை பார்ப்பதற்கே அங்கே வந்திருந்த நாகேந்திரனுக்கு முகம் சுருங்கி விட்டது. எழுந்து சென்று விடுவோமா என்ற நினைப்பிற்கே வந்துவிட்டார்.

உண்மையில் திரு அவரை கவனிக்கவில்லை.

உள்ளே சென்று மகளை விட்டவன் துளசி அருகில் இருக்கவும், முன்புறம் இருந்த அவனின் ரூமின் உள் வந்து படுத்து கொள்ள,

மீனாட்சியை சௌகர்யமாக படுக்க வைத்தவள் முன்புறம் வர, அங்கே திரு படுத்திருப்பதை பார்த்தாள். இப்படி பகலில் எல்லாம் லேசில் படுப்பவன் கிடையாது.

வீடே வரமாட்டான், அது வேறு! இன்று வந்ததும் இல்லாமல் படுத்தும் இருக்கிறான்!

நாகேந்திரனின் முக மாற்றங்களை அவள் கவனித்து தானே இருந்தாள். நிச்சயம் திருவின் பேச்சு தான் இங்கே அவரை வர வைத்திருக்கும் என்று புரிந்தது.

“நாகேந்திரன் சித்தப்பா வந்திருக்காரு” என்றாள் மெல்லிய குரலில், அவன் பதில் சொல்ல மாட்டான் என்று தெரியும் ஆனாலும் பேசினாள், “உங்களை பார்க்கத் தான் வந்திருப்பாரு போல, அநேகமா பணத்துக்காகத் தான் இருக்கும். சாரதா சித்தி பத்தி தெரியாததா? அவங்களை கொண்டு உதவி செய்யாம இருக்க வேண்டாம்” என்று சொல்லி அவனின் முகம் பார்க்க கண்கள் மூடி கையை தலைக்கு கொடுத்து படுத்திருந்தான்

கேட்டிருப்பான் என்று புரிந்தது!

பின்பு அவள் பாட்டிற்கு வேலையை பார்க்க சென்று விட்டாள்.

“அந்த அடி எல்லார் முன்னையும் அடிச்சிருக்கேன். கொஞ்சமாவது இவளுக்கு சூடு சொரணை இருக்கா? என்னை பார்த்து எதுக்கு அடிச்சன்னு கேள்வி கேட்காம, நான் என்ன செய்யணும்னு சொல்லிட்டுப் போறா!” என்று கடுப்பாக நினைத்தான்.

ஆம்! அடித்து விட்டான் தான், என்னவோ மனது உதைத்தது அவன் செய்தது சரியில்லை என்று. அவள் சண்டை போட்டாலாவது நான் அப்படி தான் என எகிறலாம். ஆனால் அவளிடம் தான் அதற்கு எந்த எதிர்ப்பும் இல்லையே. முதல் முறை அடித்ததால் அதிர்ச்சியில் நின்று விட்டாள். அடுத்த முறை அடித்தால் அநேகமாக அடுத்த கன்னத்தையும் காண்பிக்க கூடும் என்று தோன்றியது.

அந்த நினைப்பு மனதில் இருந்த இறுக்கத்தை தளர்த்தியது. முகத்திலும் ஒரு புன்னகையை கொடுத்தது. ஆனாலும் சிறிது நேரத்தில் எழுந்து வெளியே வந்து விட்டான்.

பின் அவனின் மாமாவை பார்த்து "வாங்க மாமா!" என்றவன், "நான் நீங்க வந்ததை கவனிக்கலை" என்று சொல்லி அவரின் அருகில் அமர்ந்தான். கூடவே ஒரே யோசனை எதற்கு இத்தனை பேர் இன்னும் இங்கே என்பது போல,

அவரும் உடனே "என்ன மாப்பிள்ளை அப்படி பொசுக்குன்னு சொல்லிட்ட, பொண்ணுங்களை எல்லாம் தொழில்ல இழுக்கலாமா, வெளில ஆம்பளைங்க எவ்வளவு கஷ்டப்படறாங்க, தொழில்ல என்ன நடக்குதுன்னு எதுவும் தெரியாம சொகுசா இருக்குறாங்க. இதுல எனக்கு பிரச்சனை வேற இழுத்து விடறாங்க"

“மூணு வேலை உங்க அத்தை நல்லா கொட்டிக்கறா தானே அந்த திமிர் பேச வைக்குது” என்று அனைவர் முன்னும் சாரதாவைப் பேசினார்.

“விடுங்க மாமா, பணம் நான் ஏற்பாடு பண்றேன். இனி இதை பத்தி பேச வேண்டாம்” என்று விட்டான் முடிவாக.

அதற்கு பின் தான் அவரின் முகமே தெளிந்தது.

“ரொம்ப பயந்துட்டேன் மாப்பிள்ளை, பணத்துக்கு என்ன பண்றதுன்னு” என்று திரு வின் கை பிடித்து நன்றி சொல்ல,

அப்போது சொல்லியிருந்த உணவு வகைகள் வந்து விட, துளசி அதனை வாங்கி சரி பார்த்தவள், “இந்த பாத்திரம் எல்லாம் மாத்தி குடுத்துடு” என்று தனத்திற்கு பணித்தவள் திருவின் அருகினில் வந்தாள்.

எப்போதும் இந்த மாதிரி பொது விஷயங்கள் எனும் போது மேகநாதனிடம் தான் “பணம் கொடுத்து விடுங்கள் மாமா” என்பாள்.

ஆனால் இன்று என்னவோ திருவிடம் வந்தவள் எதுவும் பேசாமலேயே கை நீட்ட, உணவு வந்ததை பார்த்தவன் பணம் கொடுக்க தான் கைநீட்டுகிறாள் என்று புரிந்து, எவ்வளவு பணம் என்று கேட்கமால் பர்சை

எடுத்து அப்படியே நீட்ட, அதனை வாங்கி கொண்டு வாசல் விரைந்தாள்.

எல்லோருமே இதனை பார்த்து தான் இருந்தார். "இவங்களுக்குள்ள தலையிட்டா நாம தான் ஜோக்கர் ஆகணும் போல" என்று தான் அவனின் சித்தப்பாக்களின் மனதில் தோன்றியது.

பின்பு உள்ளே வந்து விட்டவள், அகிலாண்டேஸ்வரியை தனியாக அழைத்து, "நான் பரிமாறினா அவங்க எல்லாம் எந்த அளவுக்கு சாப்பிடுவாங்க சொல்ல முடியாது. காலையில இருந்து இன்னைக்கு ஒரே பிரச்சனை. நீங்க சின்ன அத்தைங்க கிட்ட சொல்லி பரிமாறிக்கங்க, நான் மீனாட்சிக்கு சாதம் சாப்பிடக் கொடுக்கறேன்" என்று சொல்லி அவரின் பதிலை கூட எதிர்பாராமல் என் வேலை முடிந்தது என்பது போல நடந்து விட்டாள்.

எல்லோரும் உண்டு முடிக்கும் வரையிலும் வெளியில் வரவில்லை, வெளியில் என்ன நடந்தது என்றும் தெரியாது. திரு அவன் உண்டு முடித்து ரூமின் உள் வந்து பார்க்க மீனாக்ஷி உணவு உண்டு உறங்கியிருக்க துளசி அவளின் பக்கத்தில் வெறுமனே படுத்து இருந்தாள்.

திரு வந்து பார்த்ததும் எழுந்து அமர,

மகளின் அருகில் வந்து பார்த்தவன், பின்பு வெளியில் சென்று விட்டான். மில்லுகே சென்று விட்டான்.

எல்லோரும் உண்டு முடித்த பிறகு ஷோபனாவை குறித்த பஞ்சாயத்து ஆரம்பிக்க, துளசி எதனையும் கண்டு கொள்ளவில்லை. எல்லோரும் உண்டு விட்டார்கள் என்று தெரிந்த பிறகு சமையல் அறையில் நின்ற படியே உண்டு முடித்தாள். டைனிங் ஹாலில் அமர்ந்தாள், ஹாலில் இருப்பவர்களுக்கு நன்கு தெரியும் என்பதால் அங்கேயே உண்டு விட்டவள்,

‘‘நாலு மணி போல எல்லோருக்கும் காஃபி வைக்கணும். கொஞ்சமா கீரை போண்டா போடு’’ என்று தனத்திற்கு பணித்து விட்டு அவளின் ரூமின் உள் புகுந்து கொண்டாள்.

அவர்களின் பேச்சினில் தலையிடவில்லை என்பதை விட என்ன பேசுகிறார்கள் என்பதனைக் கூட கவனிக்கவில்லை. இந்த முறை மேகநாதன் லேசில் விடவில்லை உடைத்து பேசிவிட்டார். ஆம்! அன்று திரு ஷோபனாவை பேசியிருக்கவும் அதனை பிடித்துக் கொண்டார்.

‘‘எதுக்கு கல்யாணம் பண்றது, என் பையன் பட்டினியா வெளில போய் வேலை பார்ப்பானா?’’

“அப்படித் தான் பார்க்கணும்ன்னு நீங்க சொல்றீங்களா?” என்று தம்பிகளை கேட்க அவர்களால் வாய் திறக்க முடியவில்லை.

“காலையில சாப்பிடாம போன பையன் இன்னும் வீடு வரலை. யாராவது வாங்கன்னு கூப்பிட்டாங்களா கூடத் தெரியலை”

காலையில் கணவன் எல்லோர் முன்பும் “வாயை மூடிட்டு இரு” என்று சொன்ன கோபத்தில் இருந்த ஷோபனா அவனை அதுவரை அழைக்கவில்லை. வீட்டினில் இப்படி தடபுடலாய் ஒரு விருந்து நடந்திருக்க அது கூட வெங்கடேஷிற்குத் தெரியவில்லை.

திரு மில்லிற்கு சென்றவன், வேலையாள் விட்டு வெங்கடேஷிடம் சொல்லி வீட்டிற்கு செல்லச் சொல்லியிருந்தான். அது தான் திரு!

இந்த கேள்வி கேட்கும் போதே வெங்கடேஷ் வீட்டினுள் நுழைய, “பாருங்க சொல்லாமையா மாப்பிள்ளை வர்றாரு” என்று சாரதா பேச,

“யார்ரா உன்கிட்ட வீட்டுக்கு வரச்சொன்னா?” என்று மேகநாதன் கேட்டார்.

“திரு தான் பா ஆளுங்க கிட்ட சொல்லி வீட்டுக்குப் போகச் சொன்னான்”

மேகநாதன் பார்த்த பார்வையில் சாரதா கப்பென்று வாயை மூடிக் கொள்ள, யாராலும் எதுவும் பேசமுடியவில்லை.

“என்ன விஷேஷம் பா எல்லோரும் கூடியிருக்கீங்க” என்றபடி வெங்கடேஷ் அமர,

“முதல்ல நீ சாப்பிடு, சும்மா அத்தைங்க வந்தாங்கன்னு எல்லோரும் இருக்கோம்” என்றவர், “பசியா இருப்பான் சாப்பாடு போடு” என்று அகிலாண்டேஸ்வரியை பார்த்துச் சொல்ல,

“நீங்க உட்காருங்கம்மா” என்ற ராதா, “என்ன ஷோபனா போவியா மாட்டியா” என்று அதட்ட அதன் பிறகே ஷோபனா எழுந்து சென்றாள்.

இப்படியாக பலதும் ஓடினாலும் நான்கு மணிக்கு சரியாக காபி பலகாரம் என்று துளசி தன் கடமையை செய்ய, இந்த முறை வீடே சற்று அசந்து தான் அவளை பார்த்தது.

எதோ பெரிய வீட்டில் வாழ வந்துவிட்டோம் என்ற பயத்தினில் கட்டாயத்தில் வேலை செய்கிறாள், அனுசரித்து போகிறாள் என்று நினைத்திருக்க, “அப்படி எதுவும் இல்லை, நான் நினைப்பதை தான் நான் செய்கிறேன்” என்பதாக தான் இருந்தது அவளின் செயல்கள். அடிவாங்கியும் கன்னத்தில் அதன்

தடயங்கள் கூட மறையாத போதும், எதுவும் நடவாத மாதிரி இயல்பாக அவளின் வேலைகளை செய்வது அவள் எவ்வளவு உறுதியானவள் என்று காண்பித்து கொடுத்தது.

ஆம்! அதுதான் துளசி என் கடன் பணி செய்வதே என இருப்பாள். இது தான் அவள். இந்த அவளின் குணங்களே திருவை அவளிடம் பிடித்து நிறுத்தியிருந்தது.

ஆம்! பல சமயம் தனக்குள் சிக்கி சின்னாபின்னமாகி விடுவான் திரு. அவனுடைய கடந்த கால காதல் அவனை துரத்தி கொண்டிருந்தது இன்னம். நான் அதிலிருந்து வந்து விட்டேன் என்று சொல்லவே மீனாக்ஷியை அவசரமாக பெற்றுக் கொண்டான்.

இன்று வரை துளசியின் முகம் பார்த்து பேசுவதில்லை. ஆனாலும் துளசி எந்த குறையும் சொல்லிக்கொள்ளாமல் காண்பிக்காமல் இருப்பதினால் தான் அவனால் வாழ்க்கையில் செயல் படவே முடிந்தது.

அத்தியாயம் ஐந்து

ஆம்! திருவை இன்னும் அது துரத்துகின்றது. அவனின் கடந்த கால காதல். இப்போது நிச்சயம் அவனுக்கு காதல் இல்லை. ஆனால் குற்ற உணர்ச்சி அதிகம் இருக்கிறது.

மேகநாதனை பார்த்து திருவிற்கு தான் பயம். அவளுக்கு இல்லை, ஷெரினா, அவளின் பெயர். அவளுடைய குடும்பத்தில் அப்பா, அவள், தம்பி மட்டுமே!

மேகநாதன் மூன்று பேரையும் சிறையெடுத்து அவசரமாகத் திருவின் திருமணத்தை முடித்தார். அவர்களை தொலைத்து விடுவேன் என்ற மேகநாதனின் மிரட்டல் எல்லாம் மகனிடம் மட்டுமே. மற்றபடி அவர்கள் ஷெரினின் வீட்டினரை எல்லாம் மிரட்டவில்லை.

மகளுக்காகத் தான் தாங்கள் சிறையெடுக்கப் பட்டிருக்கிறோம் என்பதே அவளின் பரிதாபமான தந்தைக்கு தெரியாது. ஏன் அவளுக்குமே தெரியாது. எதற்கு யார் என்று தெரியாமல் அவர்கள் குழம்பிப் போய் இருக்க, எப்படி அழைத்து செல்லப் பட்டார்களோ அப்படியே எந்த சேதாரமுமின்றி திரு துளசியின் கழுத்தில் தாலி கட்டியதுமே விடுவிக்கப் பட்டார்கள்.

திருவிடம் அவனின் தந்தை சொன்னது இதுதான், ‘‘விட்டுட்டேன்னு மட்டும் நினைச்சிடாதே திரும்ப

ஏதாவது கோக்கு மாக்கு பண்ணின, உன்னை பயமுறுத்துறதுக்காக அடைச்சு வெச்சேன். ஆனா உண்மையா அவங்களை எதுவும் செய்ய நினைக்கலை. ஏதாவது செய்ய வெச்சிடாதே”

அப்பா செய்வார் எனத் தெரியும் , அவரின் தீவிரம் தெரிந்தவன். அதனால் தான் பயந்து திருமணதிற்கு ஒத்துக் கொண்டான். இருபத்தியொரு வயது இளைஞன் வீட்டை விட்டு வெளியுலகம் அதிகம் தெரியாதவன், அப்பாவின் கைக்குள் வளர்ந்தவன், அவனால் அவரை மீறி செயல் படமுடியவில்லை.

காதல், ஆனால் இதெல்லாம் பார்த்து வருவதில்லையே, வந்து விட்டதே. அதுவும் ஷெரீனா முதல் வருடம் இவன் மூன்றாம் வருடம் ஆனாலும் பற்றிக் கொண்டது இருபுறமுமே.

இதோ விஷயம் தெரிந்ததும் மேகநாதன் விஷயத்தை முடித்து விட்டார்.

ஷெரீனாவைப் பொறுத்தவரை திருநீர்வண்ணன் அவளின் சூப்பர் ஹீரோ. வீட்டிற்கு வந்ததும் தாங்கள் கடத்தப்பட்டதை சொல்ல அவனை தான் தேடினாள். ஆனால் அவனை பிடிக்க முடியவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து அவனின் திருமணம் கேள்விப்பட்ட போது அவளின் இயக்கமே நின்று

விட்டது. என்ன செய்வது என்று கூட தெரியவில்லை. திருவை பார்க்கவும் முடியவில்லை.

ஒரு வாரம் கழித்து அவனின் வேறு ஒரு நண்பன் மூலம் வரவைத்து பேசியபோது தான் அவர்களை கடத்தியது அவனின் அப்பா என்பதே தெரியும்.

“உங்கப்பா விட மாட்டார்னா, வா, நாம செத்து போயிடலாம்” என்பதே அவளின் வாதமாக இருந்தது. திருவைப் பிரிவதை அவளால் கனவிலும் நினைக்க முடியவில்லை. இதற்கு வருடக் கணக்கான காதல் கூட இல்லை. மூன்றே மாத காதல். சேலத்தில் கல்லூரி இருக்க, தர்மபுரியில் இருந்து பேருந்தில் போகும் போது தான் ஆரம்பித்தது.

கல்லூரி உள்ளே மட்டும் என்றால் மேகநாதனிற்கு தெரிய வாய்ப்பில்லை. பேருந்து என்பதால் அவரின் காதிற்கு உடனே சென்று விட்டது.

பின்னே அவன் செல்லும் பஸ், அவர்களின் பஸ் கம்பனியினது. திருவின் முட்டாள் தனத்தின் உச்சம் இது. ஆனால் காதல் வந்த பின்னே அவனின் புத்திசாலித்தனம் மழுங்கி விட்டதோ? அல்லது காதலுக்கு கண் இல்லை என்பதோ? ஆம் சுற்றம் பார்க்கும் கண் அவனிடம் இல்லை.

ஷெரீனாவை அவளுக்கு தெரியாமல் மேகநாதன் பார்த்தார், அவருக்கு தோன்றியது பெண்ணின் அழகில்

தான் திரு மயங்கியிருப்பான் என்பதாக. வசதியில்லாதவர்கள் தான் ஆனாலும் அவர்கள் இனம் என்றிருந்தால் கண்டிப்பாய் மகனுக்கு பச்சை கொடி காட்டியிருப்பார். ஆனால் இங்கே முடியாது.

வேறு அவருக்கு சிறப்பாக ஷெரீனாவிடத்தில் எதுவும் தெரியவில்லை. அதன் பொருட்டே அவளை விட அழகான பெண் வேண்டும் எனப் பார்த்தார்.

யார்? யார்? என யோசித்த போது பதினேழு வயது துளசி தான் அவரின் கண் முன் வந்தாள். அதன் பொருட்டே, வேலையாளின் மகள் என்றும் பார்க்காமல் கொண்டு வந்தார்.

அவரின் ஊரின் பிரசித்தி பெற்ற பெருமாள் கோவிலின் பட்டயக்காரர் அவர், கோவிலின் தர்மகர்த்தா, இதையும் விட அனுதினமும் விஷ்ணு நாமம் உச்சரிப்பவர்.

அவரின் வீட்டிற்கு வேற்று இன மருமகள், அவரால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. அப்படி மட்டும் நடந்து விட்டால் உயிரை விட்டு விடுவார்.

ஷெரீனாவிற்கு திருவின் திருமணம் தெரிந்ததில் இருந்து, ‘‘வா செத்துப் போகலாம்’’ என,

‘‘என்ன பைத்தியக்காரத்தனம் இது ஷெரின், இப்படி எல்லாம் பேசாதே, லவ் பண்ணினோம் நடக்கலை, விட்டுடு, யாருக்கும் தெரியாது, உன்னோட

வாழ்க்கையைப் பாரு, நம்ம காதல் அதிகம் யாருக்கும் தெரியாது!''

''இனிமே நான் காலேஜ் வர மாட்டேன். அப்பா விட மாட்டார். அதனால யாருக்கும் இனிமே தெரிய வரவும் வாய்ப்பில்லை'' எனத் தெளிவாக சொன்னான்.

''இல்லை, எனக்கு உன்னை விட்டு இருக்க முடியாது. உனக்கும் அப்படி தான், எனக்குத் தெரியும்'' என்றவள்,

''அப்போ சாக வேண்டாம். வா! வந்துடு! நாம எங்கேயாவது போயிடலாம்! கல்யாணம் பண்ணிக்கலாம்!'' என ஷெரீனா பிடிவாதம் பிடித்தாள்.

''எனக்கு கல்யாணம் முடிஞ்சிடுச்சு, புரிஞ்சிக்கோ!'' என திரு எவ்வளவோ பேசியும்,

''இல்லை, உன்னால என்னை விட்டு இருக்க முடியாது! எனக்கு தெரியும், நீ வந்துடுவ, நான் உனக்கு காத்திருப்பேன்'' என்று சொல்லிச் சென்றாள்.

பின் விடாது அவனுக்கு தொலைபேசி அழைப்பு விடுக்க, சொல்லிச் சொல்லி பார்த்தவன், ஒரு கட்டத்தில் அதனை எடுக்காமல் விட்டான்.

இந்த களேப்பாரங்களில் துளசி என்று ஒருத்தியை திருமணம் செய்தது ஞாபகத்தில் இருந்தாலும், அவளை கண்டு கொள்ள கூட மாட்டான்.

‘‘நான் காதலிக்கிறேன் என்று சொல்லியும் என்னை திருமணம் செய்திருக்கிறாள் என்றால் அவளின் எதிர்பார்ப்பு என்ன? அவள் எப்படிப்பட்ட பெண்ணாக இருப்பாள்’’ இப்படி தான் அவனின் தோற்றம் துளசியை பற்றி.

இவன் அலைபேசி எடுக்காமல் விட, ஷெரீனா தற்கொலை முயற்சி செய்ய, இவனுக்கு சர்வமும் ஆடியது.

எப்படியோ அவளின் அப்பா அவளை பிழைக்க வைத்து விட, அதன் பிறகே அவளின் அப்பாவிற்கு மகளின் காதல் தெரிய வந்தது.

யாருக்கும் தெரியாமலேயே முடிந்திருக்கக் கூட அவர்களின் காதல் விஷயம், அவளின் அப்பாவிற்கு முதன் முதலில் தெரிய வர, அந்த மனிதர் திக்கு முக்காடிப் போனார். இதற்கா மனைவி இறந்ததும் மறு திருமணம் கூட செய்யாமல் பெண்ணை கண்ணாக வளர்த்தேன். மிகவும் மனது விட்டார்.

பின் அவளுக்கு ஆயிரத்தி எட்டு புத்தி மதிகள் சொல்லி தேற்றிய போதும், மகளின் தற்கொலை முயற்சியால் பெரிய ஹாஸ்பிடலில் சேர்த்திருக்க, அதன் பில்லே கிட்ட தட்ட ஒரு லட்சம் வந்திருந்தது.

மகளை ஒரு பக்கம் தேற்றிக் கொண்டே பணத்திற்கு அவர் அலைய, விஷயம் தெரிந்த திரு அவருக்கு உதவினான்.

அது அவனின் இன்னொரு மிகப் பெரிய தவறாகிப் போனது.

இவன் என்னை விட மாட்டான் என்ற எண்ணம் ஷெரீனாவின் மனதினில் பதிந்தது. ஆனால் திரு செய்ததற்கு காரணம் அவனால் ஒரு உயிர் போய்விடக் கூடாது என்பது தான்.

ஆம்! காதல் எல்லாம் போய் ஒரு எரிச்சலில் இருந்தான். அப்பாவிடம் ஏற்கனவே தோற்று விட்டான். இதில் இவளிடம் படித்து படித்து சொல்ல, இப்படி செய்து வைத்தால் என்ன செய்வான். உயிர் என்ன அவ்வளவு ஈசியா. அதற்காக போராடுவோர் எத்தனை பேர்!

பணம் கொடுத்து, ஷெரீனாவின் அப்பாவிடம் எல்லாம் விஷயத்தையும் சொல்லி விட்டவன், மன்னிப்பும் கேட்டு, பெண்ணை பார்த்துக் கொள்ள சொன்னான்.

ஆனாலும் என்னை இவன் விடமாட்டான் என்ற எண்ணம் தான் ஷெரீனாவிடம் ஸ்திரமாக இருந்தது.

அதன் பொருட்டே முகம் கூட சரியாகப் பார்க்காத துளசியிடம், அதுவரை ஒரு வார்த்தை கூட சரியாகப் பேசியிராத துளசியுடன் கூடி அவளை கர்ப்பமாக்கினான்.

கர்ப்பம் என்று தெரிந்த நிமிடம், ஷெரீனாவிடம் “பாரு, எனக்கு குழந்தை பிறக்கப் போகுது. இனி நாம சேர வாய்ப்பில்லை” என்றான் முடிவு போல.

இதை ஷெரினாவால் தாளவே முடியாமல் பித்து பிடித்தவள் போலானால்.

ஒன்றிரண்டு வருடங்கள் அவளுக்கு சிகிச்சையளித்து, தேற்றி, பின் அவளின் அப்பா அவளைத் திருமணம் செய்து கொடுத்தார்.

இதன் மொத்த செலவும் திருவின் தலையில் தான். இதற்கெல்லாம் செலவு செய்யும் அளவிற்கு வசதி கிடையாது. அதையும் விட அவளின் அப்பா வேலைக்கு செல்ல முடியாத நிலை.

வேலை சென்றால் இவளை அழைத்து கொண்டு ட்ரீட்மென்ட் அது இதென்று எப்படிப் பார்க்க முடியும். வீட்டில் இவளை எப்படி தனியாக விட முடியும்.

விஷயங்கள் யாருக்கும் தெரிய வராமல் எப்படியோ அவளை சரி படுத்தி திருமணம் செய்து கொடுத்தார்.

ஆனால் அந்தோ பரிதாபம், திருமணம் ஆன உடனே, பெரிய உண்மை விளம்பியாக அவள் தன் கணவனிடம் தன்னுடைய கடந்த கால காதலை கூற, அப்போது ஆரம்பித்தது அவளுக்கு சித்ரவதைகள்! முட்டாள் பெண் அவளின் வாழ்க்கையை அவளே அழித்துக் கொண்டாள்.

ஷ்! அதன் பிறகு எல்லாம் தொடர் கதையாகிப் போக, ஒன்று போக எதோ ஒன்று அவளின் வாழ்க்கையில் நடந்து கொண்டே இருக்க, என்னால் தானோ என்ற குற்ற உணர்ச்சியின் பிடியில் முழுவதுமாக இருந்தான் திரு இதுவரையிலும்.

தொழிலில் இருக்கும் வெற்றி மட்டுமே அவனை உயிர்ப்போடு வைத்திருக்கிறது. மற்றபடி வாழ்க்கையில் மிகவும் மோசமாக தோற்ற, தோற்றுக் கொண்டிருக்கும் மனிதன் என அவனுக்கு அவனே தெரிந்து இருந்தவன்.

துளசியின் முகம் தவிர்க்க காரணம், அவளின் அழகு முகம் மட்டுமே. தெரிந்து தானே வந்தாள் அனுபவிக்கட்டும் என்ற எண்ணம் தான் வாழ்க்கையை தொடங்கும் போது. அவள் கர்ப்பமான போது தானாகவே என் மனைவி என்ற எண்ணம் வந்திருந்தது.

ஆனாலும் பழைய எண்ணமும் மாறவில்லை. ஒரு வேளை இந்த ஷெரினாவின் வாழ்க்கை நன்றாக இருந்திருந்தால், அவனின் வாழ்க்கையும் நன்றாக இருந்திருக்குமோ என்னவோ. அதில் பிரச்சனைகள் எப்போதும் இருக்க, அது இவன் காதுகளில் எப்போதும் விழுந்து கொண்டே இருக்க, அந்த பெண் எப்படியோ இவனுக்கு விடுதலை என்பது இல்லாமல் போனது.

எது எப்படி இருந்தாலும் சில வருடங்களாக துளசியிடம் ஈர்ப்பு அதிகம் தான். அதனாலேயே இன்னம் தவிர்த்தான்.

அவரவர் வாழ்க்கை எப்படியோ அப்படித்தான்! அதற்கு நான் என்ன செய்ய முடியும் என்று விட்டு போகாமல், தன்னால் தான் என்று வாழ்க்கையை மிகவும் சிக்கலாக்கிக் கொண்ட மனிதன்.

ஆனால் அவன் செய்வது அவனுக்கே பிடிக்கவில்லை. எப்படி இதில் இருந்து வெளியில் வருவது என்றும் தெரியவில்லை. தொழிலின் வெற்றியோடு சேர்ந்து வாழ்க்கையின் தோல்வியும் அவனை முரட்டு மனிதனோடு முட்டாள் மனிதனாயும் ஆக்கி இருந்தது.

வாழ்க்கையை அனுபவிக்க அல்ல வாழ்க்கையை வாழவே தெரியாத முட்டாள் மனிதனாய்!

இதில் துளசி என்ற மனுஷி அவனை எந்த வகையிலாவது தொந்தரவு செய்திருந்தாலோ, நீ சரியில்லை என்ற சொல்லியிருந்தாலோ, வாழ்க்கை வாழ வேண்டு என்ற ஆசை, இல்லையில்லை எண்ணம் அதுதான் சரியான சொல் அது இல்லாமல் போயிருக்கும்.

மீனாக்ஷி! அவனின் ரத்தம், அவனின் மகள், எல்லாம் தெரிந்தாலும் புரிந்தாலும் அவளை கொஞ்சம் வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், அவனால் அதை செய்ய முடியாமல் ஒரு இயலாமை இருக்கும்.

மொத்தத்தில் ஒரு பைத்தியக்காரன் அவன்!

ஆயினும் அந்த பைத்தியக்காரன் மேல் பைத்தியமாய் இருந்த துளசி, அவனின் இந்த பாராமுகத்தை பதிமூன்று வருடங்கள் சகித்துக் கொண்டாள். ஒரு ஆயுள் தண்டனைக்கு சமானம்.

அவளுக்கு தெரியவே தெரியாது, ஷெரீனா என்ற பெண் இன்னம் அவனின் வாழ்க்கையில் எதோ ஒருவகையில் சம்மந்தப்பட்டு இருக்கிறாள் என்று. தெரிந்தால் அவளின் இந்த பைத்தியக்காரத்தனம் இருக்குமா? யாராலும் சொல்ல இயலாது. ஏன் அவளாளுமே!

அந்தோ பரிதாபம், மூன்று மாதத்தில் மகனின் காதலைக் கண்டு பிடித்த மேகநாதனால் அவனின் இந்த பதிமூன்று வருட தொடர்ப்பு தெரிய வரவேயில்லை.

காரணம் ஷெரீனா என்ற பெண் அவ்வபோது அலைபேசியில் மட்டுமே பேசுவாள். பல வருடங்களாக அதுவும் இல்லை. தொடர்ப்பில் இருந்தது எல்லாம் அவளின் அப்பாவும் தம்பியும் மட்டுமே.

மிகவும் சிதிலமடைந்த கதியற்ற மனிதர்கள், எதர்க்கெடுத்தாலும் திருவிடம் வந்து நிற்ப்பர்.

சிறையெடுத்து இருந்தாலும் ஆட்கள் மூலமாக என்பதால், மேகநாதனிற்கு ஷெரீனாவின் குடும்பத்தினரை தெரியவில்லை. ஷெரினாவை மட்டுமே தெரியும்.

அது முடிந்த கதை என நினைத்திருக்க, அது தொடரும் அத்தியாயம் என அவருக்கு தெரியவில்லை. தெரிந்திருந்தால் மொத்த குடும்பத்தையும் முடித்து மகனுக்கு நிம்மதியும் விடுதலையும் கொடுத்திருப்பார்.

“அப்பா சொல்றாங்க, ஒரு ரெண்டு நாள் நீ உங்க வீட்ல இருந்துட்டு வர்றதாம்” என்று வெங்கடேஷ் ஷோபனாவிடம் சொன்னான்.

“சொன்னா, நான் போகணுமா? யார் சொன்னாலும் போக மாட்டேன். முடிஞ்சா என்னை வெளில அனுப்பி பாருங்க” என்று அவள் கத்திய கத்தல் அங்கிருந்த அனைவருக்கும் கேட்க மேகநாதனால் தங்கையிடம் கடிந்து கொள்வதை தவிர வேறு முடியவில்லை.

எல்லோரும் கிளம்பிவிட, வீடு மிகவும் அமைதியாக இருந்தது. மீனாக்ஷி உறங்கி எழுந்தவள், “அம்மா டீ வீ பார்க்கறேன்” என நொச்சினாள்.

திரு இருக்கும் ரூமில் தான் டீவீ இருக்கும், அது விட்டால் ஹாலில். “ஹாலுக்கு வேணாம், அப்பா டீவி பார்க்கிறேன்” என மகள் சொல்ல, அவளை திருவின் படுக்கையில் வசதியாக அமர வைத்து, டீவீ கார்டூன் போட்டு விட, மகள் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

மாலை ஆறு மணி வரை தான் தனம் இருப்பாள், பின்பு இரவிற்கு ஏதாவது செய்து வைத்து சென்றுவிடுவாள்.

“மா, எனக்கு இன்னைக்கு நூடுல்ஸ் வேண்டும்” என்று விட, அதற்காக பொடிப்பொடியாய் காய் நறுக்கி மகளுக்கு செய்து கொடுத்து, மாத்திரை கொடுத்து, அவளை அவர்கள் படுக்கும் இடம் போகலாம் என்று துளசி சொல்லவும்.

“இல்லை, நான் இங்கயே படுக்கறேன், டீ வீ பார்த்துகிட்டே” என்று விட்டாள் மீனாக்ஷி.

மீனாக்ஷி வலியில் இருப்பதால் துளசியும் மறுக்க வில்லை. அங்கேயே படுக்க விட்டு அவளும் அருகில் படுத்துக் கொள்ள, சிறிது நேரத்திற்கு எல்லாம் மீனாக்ஷி உறங்கிவிட்டாள், கூடவே அருகில் படுத்திருந்த துளசியும்.

பத்து மணி போல தான் திரு வந்தான். ரூமின் கதவை திறந்து உள்ளே வந்தவனுக்கு மனைவியும் மகளும் அவனின் படுக்கையில் உறங்குவது பார்த்து அப்படியே நின்று விட்டான் சில நொடிகள்.

பின்பு மெதுவாக மகளின் புறம் வந்து நின்று அவளை பார்த்திருந்தான். அடிபட்டதில் முகம் வாடி ஓய்ந்து போய் தெரிந்தது. அப்பா சொன்ன மாதிரி ஒரு நாள் மகளை கொண்டு போய் விட்டு இவ்வளவு

கலாட்டா இழுத்து வைத்து விட்டேனோ என்று நினைத்துக் கொண்டே அங்கிருந்தே மனைவியை பார்த்தான்.

அவன் அடித்த தடம் இன்னும் மங்கலாய் கன்னத்தில் தெரிந்தது. ஏன் அடித்தாய் அவளை என்று மனசாட்சி கேள்வி எழுப்ப, அதனை ஒதுக்கி தள்ளியவன், அவளின் முகத்தை பார்த்து நின்றான்.

துளசி பார்க்கும் போதோ அவள் விழித்திருக்கும் போதோ முகம் பார்க்காதவன், உறங்கும் போது சந்தர்ப்பம் கிடைத்தால் அவ்வப்போது ரசிப்பது தான்.

அவளின் முகத்தினை சிறிது நேரம் பார்த்திருக்க மனது அமைதியாய் உணர்ந்தது.

துளசியின் அருகில் படுத்திருந்த மீனாக்ஷி சிறிது அசைந்தாள். அந்த அசைவில் துளசி விழித்துக் கொள்ள, அவள் விழிக்க போகிறாள் என்று நொடிப் பொழுதில் உணர்ந்தவன், சட்டென்று திரும்பி நடக்க ஆரம்பித்தான். என்னவோ அப்போது தான் வருவது போல.

துளசியும் அவனை பார்த்ததும் எழுந்து கொண்டாள். உணவு எடுத்து வைக்க வெளியில் செல்ல, இவன் உடை மாற்றி முகம் கை கால் கழுவி உணவு மேஜையின் முன் அமர்ந்த போது வீட்டில் யாரும் விழித்திருப்பதாய் தெரியவில்லை.

அவன் உண்ணும் அளவு தெரிந்து பரிமாற, அமைதியாக உண்டு, அங்கே இருந்த டி வீ போட்டு அமர்ந்து கொண்டான். துளசி உண்டு ஒதுங்க வைத்து வந்தவள், அவனிடம் "நாங்க இங்கயே தூங்கிக்கறோம். நீங்க உள்ள தூங்குங்க" என்று சொல்லி அவன் பதிலுக்காய் காத்திருந்தாள்.

"சரி" என்பதாய் தலையசைத்தான். பின்பு அவள் நடக்க துவங்க "சாரி" என்ற குரல் கேட்டது.

வேகமாக துளசி திரும்ப,அவளை பார்க்காமல் "சாரி, நான் அடிச்சிருக்க கூடாது" என்று எதோ சுவற்றிடம் சொல்வது போலச் சொல்ல,

"இதுக்கு இவர் சாரி கேட்காமலேயே இருந்திருக்கலாம்" என்று தோன்ற, நின்றவள் எந்த பதிலும் சொல்லாமல் திரும்ப நடக்க ஆரம்பித்தாள்.

"சரியான அழுத்தம்" என்று திருவிற்கு தோன்றியது. "இத்தனை நாள் என்னுடன் வாழ்ந்தும் இன்னும் வேலைக்காரன் மகள் என்கிறார்கள், நாளை என் மகளையும் வேலைக்காரன் பேத்தி என்பார்களா?"

இதற்கு என்றைக்கு துளசிக்கும் திருவிருக்கும் திருமணம் ஆகிற்றோ அன்றே அவளின் அப்பா வேலவன் இங்கே வேலையை விட்டு நின்று விட்டார்.

துளசிக்கு ஒரு தங்கையும் தம்பியும். மேகநாதன் அவர்களை சென்னைக்கு குடிபெயர்த்திருந்தார்.

அங்கே அவர்களின் நிறுவனம் ஒன்றிருக்க, அதை பார்த்துக் கொள்ளும் பணி. சம்பளமும் அவர் முன்பு வாங்கி கொண்டிருந்ததை விட பல மடங்கு அதிகம்.

சம்மந்தி என்ற முறையில் அவரின் தரம் உயர வேண்டிய கட்டாயத்தில் இருக்க, அது கொண்டு இந்த ஏற்பாடு. அப்போதுதானே அவர் வர போக இருக்க, அவருக்கு மரியாதை இருக்கும் என நினைத்தார்.

ஆனால் அது அப்போதும் அவருக்கு கிடைத்த பாடாக இல்லாது போக, ஒரு கட்டத்தில் ‘‘உங்களை பார்க்க வேண்டும் என்றால் நான் வருகிறேன். நான் சொல்லாமல் எப்போதும் நீங்கள் இங்கே வரக் கூடாது’’ என்று விட்டாள் துளசி.

அன்றிலிருந்து அவர்கள் இங்கே வருது நின்று போக ஏதாவது என்றால் வேலவன் மட்டுமே வருவார். துளசியாக அவர்கள் வீட்டிற்கு சென்றால் தான் உண்டு. அதிகம் செல்ல மாட்டாள், திருவிற்கும் தனக்கும் ஏற்கனவே பேச்சு வார்த்தை கிடையாது. அடிக்கடி அங்கே செல்வதினால் ஏதாவது இன்னும் இடைவெளி விழுந்து விட்டாள் என்ற பயம் அவளிற்கு.

ஆனால் துளசி அம்மா வீட்டினரின் வாழ்க்கை தரம் இப்போது அதிகமாகியிருந்தது. தம்பி தங்கையின்

படிப்பினால். இயற்கையாகவே படிப்பு இருவருக்கும் நன்றாக வர, தங்கை மீரா மருத்துவ படிப்பின் ஹவுசர்ஜனில் இருக்க, தம்பி பிரசன்னா எம் டெக் பவர் எலெக்ட்ரானிக்ஸ் முடித்து வேலையில் அமர்ந்து இரண்டு வருடங்கள் ஆகியிருந்தது. பெரிய வேலை தான். அது மட்டுமே அவளுக்கு தெரியும்! என்ன சம்பளம்? என்ன விவரம்? இதெல்லாம் தெரியாது. அவளும் கேட்டதில்லை. அவனும் சொன்னதில்லை.

என்னவோ எல்லா இடத்திலும் தள்ளி நின்று விட்டது போல ஒரு உணர்வு.

பிறந்த வீட்டினரின் நினைவு வர, படுத்திருந்த துளசிக்கு என்ன வாழ்க்கை இது என்ற சலிப்பு தட்டியது. அம்மாவை அழைத்து பேசலாம் என்றால் நேரம் பதினோன்றிற்கும் மேல் ஆகியிருந்தது. இப்போது எப்படி அழைக்க?

காலையில் இருந்து நடந்த நிகழ்வுகளால் மனது மிகவும் ஒய்ந்து போயிருந்தது. திருவின் அருகாமையை மனது என்னவோ அன்று வெகுவாகத் தேடியது. “உன்னை அடிச்சிருக்கான் உனக்கு கொஞ்சம் கூட ரோஷமே வரலையா?” என்று மனம் முரண்ட, “போடி வேலையை பார்த்துட்டு” என்று திட்டி அதனை தூர ஒதுக்கினாள்.

திரு உறங்க வரவும், அவனையே பார்த்து தான் படுத்திருந்தாள். எப்போதும் போல அவன் பார்த்தால் தானே, அவளை கடந்து உள்ளே இருக்கும் ரூம் சென்று விட்டான்.

எழுந்து போய் அவனின் அருகில் படுக்க மனது உந்த எழுந்து கூட அமர்ந்து கொண்டாள். சென்று படுத்தால் அவன் எதுவும் சொல்லப் போவதில்லை. என்னவோ அவனின் ஒற்றை அணைப்பிற்காய் மனது வெகுவாக ஏங்கியது.

செல்லவும் எதோ தயக்கம், அப்படியே அமர்ந்திருந்தாள். படுத்துக் கொண்டே போனை நோண்டிக்கொண்டு இருந்தவன், சார்ஜ் இன்னும் இரண்டு பர்செண்டே இருப்பதை உணர்ந்து ஃபோனை சார்ஜில் போட எழுந்து இந்த ரூம் வந்தவன் துளசி அமர்ந்திருப்பதை பார்த்தான்.

எதற்கு அமர்ந்திருகின்றால் என்ற யோசனை வந்த போதும், சார்ஜர் எடுத்து உள்ளே சென்றான்.

அவன் பாட்டிற்கு வந்தது, பின் தான் அமர்ந்திருப்பதை பார்த்தும், அவன் பாட்டிற்கு சென்றது, அப்படி ஒரு இயலாமையை கொடுக்க, கண்களில் தானாக நீர் பெருக, அமைதியாக படுத்துக் கொண்டாள்.

கைப்பேசியை சார்ஜில் போட்டு விட்டவன், பின்பு திரும்ப வெளியே வந்து பார்க்க அவள் படுத்துக்

கொண்டது தெரிந்தது. இவன் புறம் முகம் தெரியும் படி தான் படுத்திருந்தாள். கண்களில் தண்ணீர் வருவது போலத் தெரிய,

“தண்ணி வேணும்” என்றான் சற்று சத்தமாக, அவனுக்கு தண்ணீர் தேவையிருக்கவில்லை, அப்படியே இருந்தாலும் அவன் போய் எடுத்துக் கொள்வான், துளசி தனியாக அழுகிறாளோ என்று தான் கேட்டான்.

துளசி அன்று தண்ணீர் எடுத்து வர மறந்தும் இருந்தாள். எழுந்து சென்று தண்ணீர் எடுத்து வந்து பார்க்க, அவன் ரூமின் உள் சென்றிருப்பது புரிந்தது.

சலிப்பாக இருந்தது. உள்ளே சென்று தண்ணீரை மேஜை மேல் வைத்து திரும்ப, திரு உள்ளே கதவை தாளிடுவது புரிய, சலிப்பான மனது அப்படியே படபடபிற்கு தாவியது.

“மீனாக்ஷி வலில முழிச்சிட்டா?” என துளசி மெல்லிய குரலில் சொல்ல,

“முழிச்சா கூப்பிடுவா?” என்றான் அமைதியான குரலில்.

“இல்லை, நான் போறேன்!” என்று துளசி சொல்லும் போதே குரல் கமறியது. அந்த குரல் திருவின் காதினை எட்டினாலும் அதனை ஒதுக்கி ரூமின் விளக்கை அணைத்து விடி விளக்கை போட்டு விட்டான்.

“இல்லை, நான் போறேன்!” என்ற துளசியின் குரல் மீண்டும் காதில் விழுந்த போதும் கண்டுகொள்ளாமல் அவளின் அருகில் நெருங்க, முடியாது என்பது போல துளசி அசையாமல் அங்கேயே நின்றிருந்தாள். அருகில் வந்து திரு நிற்க,

துளசி அவன் முகம் பாராமல் எங்கேயோ பார்த்து நின்றாள். ஒரு டென்ஷன் கூட அவளின் முகத்தில்.

துளசியின் இந்த பிடிவாதம் திருவிற்கு புதிது. மௌனமாகவே எல்லாம் அவர்களுக்குள் முடிந்து விடும்.

இதுவரை அவனை மறுத்ததும் இல்லை, அவனுக்கு மறுத்ததும் இல்லை!

அமைதியாக நின்றிருந்தால் விட்டு விடுவான் என்று நினைக்க, அவளே எதிர்பாராமல் அவளை இரு கைகளிலும் ஏந்திக் கொண்டான். துளசி இதழ்கள் அப்படியே பூட்டு போட்டுக் கொண்டது.

திருவின் செய்கையில் மலைத்து விழித்து பார்த்தாள் அவனின் முகத்தினை. திமிறி இறங்க வேண்டும் என்றெல்லாம் தோன்றவில்லை. எப்படி அசால்டாக என்னை தூக்குகிறான் என்று தோன்ற, துளசிக்கு எல்லாம் மறந்து போனது மீனாக்ஷி உள்பட, நினைவில் நின்றது திரு மட்டுமே!

துளசியின் முகம் பார்த்த திருவிற்கும் எல்லாம் மறந்து போனது. அவனின் சிக்கல்கள், எரிச்சல்கள்,

அவளிடம் அவன் பேசமாட்டான், அப்பா கட்டாயப் படுத்தி செய்து வைத்த திருமணம், இவளுக்கு எல்லாம் தெரிந்தும் இவள் ஏன் என்னை திருமணம் செய்ய வேண்டும் என்பது போல!

அவளை கைகளில் ஏந்தியவன் நான்கே அடி தூரத்தில் இருந்த கட்டிலுக்கு மிகவும் மெதுவாக நடந்து படுக்கையில் விட, துளசியின் கண்கள் தாமாக ஒரு மயக்கத்தில் மூடிக் கொண்டது.

நெற்றியில் முத்தமிட்டான், சிறு சத்தம் வந்தது! பின்பு கன்னத்தில் முத்தமிட்டான், அதுவும் சிறிது சத்தம் எழுப்பியது!

இதழ்களில் ஒரு நீண்ட ஆழ்ந்த முத்தம் பதிக்க, அதில் சத்தமே வரவில்லை. பிரிந்தால் தானே சத்தம் வரும்!

சத்தமின்றி முத்தமிட்டான்!

அத்தியாயம் ஆறு

காலையில் துளசி விழித்த போது அவள் மீனாட்சியின் அருகில் படுத்திருந்தாள். அவளாக இங்கே வரவில்லை. அனேகமாக களைப்பில் உறங்கியிருக்கக் கூடும் என்று அனுமானித்தவள், அவன் தூக்கி இங்கே வந்து படுக்க வைத்திருப்பான் என்பதே அவளின் காலையை வண்ணமயமாக்கியது.

நேரம் ஏழு மணியை தொட்டு இருந்தது. இவ்வளவு நேரம் அவள் உறங்குவது என்பது அரிது. அவளது காலை ஐந்தரை மணிக்கு எல்லாம் தொடங்கி விடும்.

எழுந்தவள் விரைந்து குளித்து வெளியே போன போது தனமே வந்திருந்தாள். திரு இல்லை எப்போதும் போல ஷட்டில் ப்ராக்டிஸ் சென்றிருந்தான். மீனாக்ஷியை பள்ளிக்கு அனுப்பும் வேலை இல்லையென்பதால் அவள் தாமதமாக எழுந்ததால் ஒன்றுமில்லை.

காலை ஆறு மணிக்கு சென்றால் எட்டரை மணிக்கு தான் வருவான். கிட்ட தட்ட பத்து வருடங்களாக அப்படித் தான். அதனால் அவனின் உடல் அவனின் உயரத்திற்கு தக்க கச்சிதமாக இருக்கும். தனியாக உடற்பயிற்சி என்று இல்லை. இதுவே அவனின் உடற் பயிற்சி. ஆறடிக்கும் ஒரு அங்குலமே குறைவு, மாநிறம், வசீகரமான முகம் என இருப்பான்.

என்ன திருவின் முகத்தினில் மீசை இல்லாதது துளசிக்கு மிகப் பெரிய குறை. ஆனால் அவனிடம் சொல்ல முடியாதே!

அவர்கள் ஊரின் லயன்ஸ் க்ளப் செக்ரட்டரி அவன். அங்கே தான் அவர்களின் பயிற்சியும் கூட. அவன் ஊரில் பெரிய மனிதன், அதையும் விட எல்லாம் பெரிய மனிதர்களும் பழக்கம்.

மேகநாதனுக்கு ஒரு மாதிரி ஆட்களை தெரியும் என்றால் இவனுக்கு வேறு மாதிரி. அதாவது குடும்பம் பாரம்பரியம், அவர்களின் ஆட்கள், அவர்களின் சிறப்பு, கோவில் வேலை, இப்படி அவர் இருக்க, தொழில் வகையில் எல்லோரும் அவனுக்கு பழக்கம். திருவின் கொடுக்கல் வாங்கல் அதிகம். அதனால் அவனுக்கு எல்லோரிடமும் முக்கியத்துவமும் அதிகம்.

திரு உடற்பயிற்சி செய்து உடலை சீராக வைத்திருக்க, துளசிக்கு அது எதுவும் இல்லாமலேயே உடல் கச்சிதமாக இருக்கும். பன்னிரண்டு வயது பெண்ணிற்கு அம்மா என்றால் யாரும் நம்பமாட்டார்கள். உங்கள் தங்கையா என்று கேட்கும் படியாகத் தான் அவளின் தோற்றம் இருக்கும்.

அவளின் வயதே இருபத்தி எட்டு தான் ஆனாலும் இருபத்தி இரண்டு வயது பெண்ணின் தோற்றம் தான். நல்ல நிறம், அழகான முகம், மென்மையான சருமம்,

நல்ல உயரம் என சொல்லிக் கொண்டே போகும் அளவிற்கு அழகி.

அதையும் விட அவளின் நடை உடை பாவனை, அது இன்னுமே சிறப்பு. ஒரு கசங்கிய உடையிலோ, இல்லை அழுங்கிய முகமோ, கலைந்த தலையோடோ இல்லை நைட்டியோடோ அவளை பார்க்கவே முடியாது.

காலை எழுந்து ரூமை விட்டு வெளியே வரும் போது எப்படி இருப்பாளோ அப்படியே இரவு உறங்கும் வரையிலும் தோற்றம் இருக்கும். உடை கூட கசங்காது. இதற்கு அத்தனை வேலை செய்வாள். அவளின் தோற்றப் பொலிவு அப்படி.

இவள் சமையல் அறையில் நுழையவுமே "நேத்து மாதிரி இன்னைக்கும் டிஃபன் வேலை ஹோகயான்னு நினைச்சேன்" என தனம் வாயடிக்க,

"ஷ், வேலையை பார்" என்று அவளை அதட்டி , மகளுக்கு பாலை விட ஆரம்பித்தாள். அதட்டினாலும் அதில் ஒரு உரிமை தான் கோபம் இல்லை.

அப்போது வெங்கடேஷ் வந்து சமையல் அறையை எட்டிப் பார்த்தான். "சின்னவரு வந்து பார்க்கறாரு க்கா" என தனம் சொல்ல,

"போ, போய் என்ன வேணும்னு கேளு"

“என்ன காபிக்கு பார்ப்பாரா இருக்கும், நல்ல அம்மா நல்ல பொண்டாட்டி அவருக்கு” என்று நங்கு பேசினாள்.

“வாயை மூடிட்டு வேலையைப் பார்க்கணும்” என்று துளசி இப்போதும் அதட்ட, அதில் உரிமை இல்லை கோபம் இருந்தது.

தனம் வாயை ஜிப் போட்டு மூடிக் கொண்டாள். துளசிக்கு கோபம் வந்தால் லேசில் போகாது.

வெங்கடேஷ் எப்போதும் துளசியிடம் சகஜமாக பேச மாட்டான். ஏதாவது பெரிய தேவையிருந்தால் மட்டுமே பேசுவான். துளசி எப்போதும் தள்ளி தான் நிற்பாள்.

“காஃபி கேட்டார்க்கா அவருக்கும் அவர் சம்சாரத்துக்கும், குடுத்துட்டேன், அப்படியே உங்க வீட்டம்மா வந்து என்ன சமைக்கன்னு சொல்லுவாங்கலான்னா கேட்டேன். பதிலே சொல்லாம போயிட்டாரு” என தனம் சொல்ல,

“நீ அடங்கவே மாட்ட” என்று சொல்லி மகளை சென்று எழுப்பினாள்.

“மா வலிக்குது” என மீனாக்ஷி சொல்ல, அவளை வெகுவாக தேற்றி அவளுக்கு வேண்டிய உதவிகளை செய்து முகம் கழுவ வைத்து உடை மாற்றி விட்டு வந்த போது கிட்ட தட்ட ஒரு மணி நேரம் ஆகியிருந்தது.

மெதுவாக அவளை கைபிடித்து கூட்டி வந்து ஹாலில் அமர வைத்தாள். கோவில் விஷயமாக மேகநாதன் விரைவில் வீட்டை விட்டு கிளம்பியிருக்க, அகிலாண்டேஸ்வரியும் அவரோடு சென்றிருந்தார்.

மீனாக்ஷி மட்டும் தனியாக அமர்ந்திருக்க, துளசி சமையல் அறையினுள் சென்று விட, அவள் தனியாக அமர்ந்திருப்பதை பார்த்த வெங்கடேஷ் அவளின் அருகில் வந்து, "இப்போ எப்படி இருக்கு வலி மீனா" என்று பேச்சு கொடுக்க ஆரம்பித்தான்.

"இன்னும் வலிக்குது சித்தப்பா" என அவள் சொல்ல,

"அப்படி தனியா இறங்கி வரலாமா? தப்பில்லையா? இனிமே அப்படி எல்லாம் வரக் கூடாது" என்று சொல்லிக் கொண்டிருக்க, அப்போது தான் எழுந்து வந்த ஷோபனா இவர்கள் பேசிக் கொண்டிருப்பதை பார்த்ததும் அருகில் வந்தமர்ந்து,

"ஆமா, ஒரு சின்ன காயத்துக்கு எதுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம்" என நேற்று சொன்னதையே திரும்பவும் சொல்ல,

வெங்கடேஷ் "திரும்பவுமா" என்பது போல ஷோபனாவை பார்த்து முறைத்தான், மீனாக்ஷி கல கல வென சிரிக்க ஆரம்பித்தாள் சத்தமாக. இவள் சிரிப்பு

சத்தம் கேட்டு துளசியும் சமையல் அறையில் இருந்து எட்டிப் பார்த்தாள்.

மகளின் சிரிப்பு சத்தம் கேட்டுக் கொண்டே தான் திரு வீட்டின் உள் நுழைந்தான்.

“ஏய் எதுக்கு சிரிக்கிற?” என ஷோபனா கேட்க,

அவளிடம் பதில் சொல்லமால் “எல்லா கோட்டையும் அழிச்சிட்டு முதல்ல இருந்து போடறாங்க சித்தப்பா” என மீனாக்ஷி சொல்ல, வெங்கடேஷிர்க்குமே சிரிப்பு,

அதோடு விட்டேனா என்பது போல வெங்கடேஷிடம் “ஹை பை” வேறு மீனாக்ஷி கொடுத்தாள்.

“என்ன என்னை கிண்டல் பண்றீங்களா?” என்று ஷோபனா கோபமாக எழவும்,

“ஹேய், உட்காரு, சின்ன சின்ன ஜோக், என்ஜாய் பண்ணனும்” என ஷோபனாவின் கை பிடித்து வெங்கடேஷ் இழுக்க, அவன் மேலேயே அவள் விழ, அதற்கும் வெங்கடேஷும் மீனாட்சியும் சிரிக்க, திரு அவர்களை கடந்து செல்ல, துளசி மீண்டும் சமையல் அறையில் நுழைந்து கொண்டாள்.

மெதுவாக சிரிப்பு அடங்கியதும், மீனாக்ஷி ஷோபனாவை பார்த்து “என்னை ஏய் சொல்லாதீங்க சித்தி, எனக்குப் பிடிக்கலை” என்றாள் நிமிர்வாக.

இந்த மாதிரி ஒரு பாவனை திருவிடம் தான் இருக்கும்.

“ம்ம், சொன்னா என்ன பண்ணுவ?” என்றாள் ஷோபனா அலட்சியமாக.

“நீ பேசறது சரியில்லை ஷோபி” என்று வெங்கடேஷ் அதட்டினான்.

“அப்படி தான் சொல்லுவேன்” என ஷோபனா திமிராக பேச,

“தட்ஸ் ஓகே, நானும் உங்களை சித்தின்னு கூப்பிடமாட்டேன். ஏய்ன்னு கூப்பிடுவேன் அண்ட் எங்க அப்பா அம்மா கிட்ட உங்களுக்கு குட்டி பாப்பா வரும் போது அப்படி தான் கூப்பிட சொல்வேன்” என்றாள் சொல்வதை செய்வேன் என்ற பாவனையில்.

“ஆறாவது தான் படிக்கிற? என்ன பேச்சு பேசற நீ?” என கீச்சுக் குரலில் ஷோபனா கத்த, திருவும் துளசியும் வேகமாக என்னவோ ஏதோவென்று வர, ஷோபனாவின் கத்தலுக்கு சிறிதும் அசையாமல் மீனாக்ஷி அமர்ந்திருக்க, வெங்கடேஷ் எப்போதும் போல ஷோபனாவை முறைத்துப் பார்த்திருந்தான்.

துளசியை பார்த்ததும் “அம்மா பசிக்குது” என meenaakshi சொல்லவும்,

“ரெண்டு நிமிஷம் இரு” என்றவள் திருவிற்கு பால் எடுத்து ரூமின் புறம் நகர ஆரம்பித்த போது, திரு வந்து ஹாலில் அமர, ஷோபனா எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

திரு அமர்ந்ததும் பாலை கொடுத்து விட்டு துளசி நகர்ந்து விட, வெங்கடேஷிற்கு அவர்களை பார்த்து பொறாமையாக இருந்தது. ஒரு நாள் கூட ஷோபனா துளசியை போல பொறுப்பாக இருந்ததில்லை, இப்படி அவனிற்கு எதுவும் செய்ததில்லை அவளாக. வெங்கடேஷ் நான்கு முறை கேட்ட பிறகு தான் இடத்தை விட்டு அசைவாள்.

முன்பெல்லாம் என்ன இவர்கள் பேசிக்கொள்வதில்லை , வெளியே செல்வதில்லை, இதெல்லாம் ஒரு வாழ்க்கையா என அலட்சியமாக தான் திருவையும் துளசியையும் பார்த்தால் தோன்றும்.

ஆனால் அவனுக்கு திருமணமான பிறகு, அவர்களை பார்க்கும் போது திருவின் வாழ்க்கை மிகவும் அமைதியாக போவதாக தான் தோன்றுகின்றது.

வீட்டில் எல்லாம் துளசி பார்த்து கொள்வதாகட்டும் அவனுக்கு பார்த்துப் பார்த்து செய்வதாகட்டும், இப்படி எல்லாம் ஷோபனாவிடம் எதிர் பார்க்க முடியாது. அகிலாண்டேஸ்வரி கூட மேகநாதனுக்கோ, மக்களுக்கோ செய்ததில்லை.

மீனாக்ஷிய துளசி பார்த்துக் கொள்வது போல எங்களுக்கு குழந்தை பிறந்தால் இவள் பார்த்துக் கொள்வாளா என்று தான் ஷோபனாவை பற்றி இப்போதெல்லாம் தோன்றிகிறது.

அதுவும் நேற்று அத்தனை பேர் முன் திரு துளசியை அடித்த போதும் அதற்கு எந்த ஆரப்பாட்டமும் செய்யவில்லை, ஏன் சிறு முக சுணக்கம் கூட காட்டவில்லை. அப்படி மட்டும் ஷோபனாவை அடித்து இருந்தால் அந்த நொடியே ஊரையே கூட்டி இருப்பாள். என்னவோ வாழ்க்கை பிடிப்பற்றதாக தோன்ற ஆரம்பித்தது.

அதுவின் ஷோபனாவின் தோற்றம் சுமார், இதில் அவள் எந்நேரமும் அழுது வடிந்து நைட்டியில் சுற்றுவது வெங்கடேஷிற்கு எரிச்சலை தர ஆரம்பித்தது. துளசியை இவ்வளவு அழகாக திருவிற்கு மணமுடித்து வைத்து சொந்தம் என்று தன் அப்பா தனக்கு மட்டும் அநீதி செய்து விட்டதாக தோன்ற ஆரம்பித்து இருந்தது.

ஆனாலும் எங்கேயும் ஷோபனாவை இதுவரை விட்டுக் கொடுத்ததில்லை, அவனால் முடிந்தவரை அவளுக்கு பார்த்து பார்த்து செய்கிறான். அவள் அப்படி இல்லாத போது மனது இப்போதெல்லாம் ஏமாற்றமாக உணர ஆரம்பித்து இருக்கிறது.

ஒரு பெருமூச்சோடு அமர்ந்திருந்தான். பின்பு உணவு மேஜை மேல் உணவு வைக்கப் பட்டதும் அவனாக

எடுத்து போட்டுக் கொண்டு உண்டு, திரும்ப ரூமின் உள்ளே கூட செல்லாமல் வெளியில் சென்று விட்டான்.

சிறிது நேரம் கழித்து ஷோபனா வந்து வெங்கடேஷை தேடிய போது மீனாக்ஷி அவளாகவே "சித்தப்பா வெளில போயிட்டார்" என்று சொல்ல,

"என்ன போயிட்டானா? வரட்டும்!" என்று அடுத்த சண்டைக்கு காரணம் தேடிக் கொண்டாள்.

அவள் உள்ளே சென்றதை உறுதி படுத்திக் கொண்டு "என்ன மீனாக்ஷி கலாட்டா? என்ன அவங்க கூட வம்பு வளர்க்கற?" என்று துளசி மகளை கடிந்தாள்.

"அப்பா தான் ஏய் கூப்பிட்டா இப்படி பேசணும் சொன்னாங்க" என்று மீனாக்ஷி பதில் சொன்னாள். ஆம்! திரு தான் ஓரிருமுறை கவனித்து விட்டு சொல்லிக் கொடுத்திருந்தான்.

துளசி திருவை திரும்பிப் பார்க்க, அவன் மும்முறமாக தினசரி படித்துக் கொண்டிருந்தான்.

இவர்கள் பேசியது காதில் விழாமலா இருக்கும், துளசி அவனுக்கு கேட்கும் படியாக சத்தமாக, "இப்படி எல்லாம் மரியாதையில்லாம பேசக் கூடாது" என்று மகளிடம் சொல்ல,

"என்ன பேசினாங்கன்னு தெரியாம மரியாதை இல்லாம பேசக் கூடாதுன்னு உங்கம்மா சூப்பரா

சொல்றா'' என்றான் மீனாட்சியிடம். அப்போதும் தினசரியிலிருந்து தலையை விலக்கவில்லை.

''ஹ ஹ'' என மகள் சத்தமாக எப்பொழுதும் போல சிரிக்க, துளசி இப்போது திருவை தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின் மகளை பார்த்து முறைக்க, மீனாக்ஷி வாய் மேல் சிரிக்க மாட்டேன் என்பது போல கைவைத்து அப்போதும் சிரித்துக் கொண்டிருக்க,

அவளின் சிரிப்பு துளசியையும் தொற்ற, ''போடி'' என்று சலிப்பவள் போல அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள் புன்னகை முகத்தோடு.

அவள் நடக்க, ''மா, நீங்க சிரிக்கும் போது ரொம்ப அழகா இருக்கீங்க'' என்று மீனாக்ஷி சொல்ல, ''என்னடா பேச்சு இது?'' என திரும்பிப் பார்த்தாள்.

பேப்பர் மறைத்திருந்த திருவின் முகத்தினில் புன்னகை. ஆம்! அவனின் முகம் தெரியாமல் இருக்க பேப்பரை உயர்த்தி பிடித்திருந்தான்.

''ஆனா மா நீங்க என்னை மாதிரி சிரிச்சா இன்னும் ரொம்ப அழகா இருப்பீங்க'' என்றும் மீனாக்ஷி சொல்ல, துளசியின் முகத்தினில் விரிந்த சிரிப்பு கூடவே அவளின் பார்வை திருவின் புறம்.

அந்தோ! அவனின் முகத்தை தான் பேப்பர் மறைத்து இருந்ததே!

இந்த மாதிரி அவன் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை, மீனாக்ஷி சொல்லும் போது கூட முகம் பார்க்க மாட்டானா! அவன் பார்க்காவிட்டால் போகின்றது எனக்கு முகம் காட்ட மறுக்கிறான்.

சட்டென்று மனம் சுணங்க "அதெல்லாம் தானா வரணும் மீனா" என்று சொல்லி திரும்பி நடந்து விட்டாள். மீனாக்ஷியால் துளசியின் குரலின் பேதத்தை கண்டு கொள்ள முடியவில்லை.

திருவிற்கு புரிந்தது. பேப்பரை இறக்கி அவன் பார்க்கும் போது சமையல் அறையின் உள் நுழைந்திருந்தாள்.

உள்ளே சென்றவளுக்கு தானாக ஒரு பெருமூச்சு கிளம்ப, "எப்போதிருந்து நீ இதெல்லாம் எதிர் பார்க்க ஆரம்பித்தாய்" என்று தோன்ற, சுதாரித்து கொண்டவள், மகளுக்கு உணவை தட்டில் போட்டு கொண்டு போய் கொடுக்க,

"மா ஊட்டி விடு" என்று வாய் திறந்தாள்.

"இன்னைக்கு எந்த பஸ் போகும், நீயே சாப்பிடு!" என்று துளசி சொல்ல,

“இல்லை நீதான் ஊட்டி விடணும்” என்று மீனாக்ஷி பிடிவாதம் பிடித்தாள்.

“நீ பெரிய பொண்ணு ஆகிட்ட, இன்னும் சின்ன பொண்ணு மாதிரி பிடிவாதம் பிடிக்க கூடாது” என துளசி அதட்ட,

“சின்ன பொண்ணா இருந்தாலும், பெரிய பொண்ணு ஆனாலும், நான் உன் பொண்ணு தானே! என்று சொல்லி ஒரு மயக்கும் புன்னகை சிந்த,

“சரியான வாயாடி” என்று சொல்லி துளசி உணவு ஊட்ட ஆரம்பித்தாள். மகளோடும் மனைவியோடும் இருக்கும் அந்த பொழுது ரம்மியமாய் இருக்க, குளிக்க போகும் எண்ணம் கூட இன்றி அப்படியே அமர்ந்து கொண்டான் திரு.

துளசி மகளுக்கு ஊட்டி முடித்து எழுந்து போன பிறகு, “பெரிய பொண்ணாகிட்ட இன்னம் அம்மாவை ஊட்ட விட சொல்வியா” என்று அப்பா கேட்க,

“அம்மா ஊட்டி விட்டா அவ்வளவு டேஸ்டா இருக்கும் பா , வேணும்னா நீங்களும் ஊட்டி விட சொல்லுங்க, அப்புறம் சொல்லுங்க நான் செய்யறது சரியா தப்பான்னு” என்று வியாக்கியானம் பேசினாள்.

“இதேதடா” என்று அசடு வழிய இருந்தவன், நொடியில் சுதாரித்து, மகளை ஒரு பார்வை பார்த்தவாறே, குளிக்க எழுந்து சென்று விட்டான்.

“தப்பா பேசிட்டோமா, இல்லையே, அப்பா கோவிச்சிட்டாங்களா?” என்று எப்போதும் போல மீனாக்ஷி கவலையில் ஆழ்ந்து விட,

துளசி அந்த புறம் நடக்க, “மா அப்பா கோவிச்சிட்டாங்க போல” என்று நடந்ததை சொல்ல,

“உன்னை யாரு அதிகமா பேசச் சொன்னா” என்று மகளை கடிந்து, “இனிமே இப்படி எல்லாம் பேசாதே” என்று சொன்னாள்.

மீனாக்ஷியின் முகம் மொத்தமாய் சுருங்கிவிட, துளசியின் மனமும் சுருங்கியது. நேற்றைய இரவின் இனிமையில், இன்றைய பகலில் திருவிடம் ஒரு இணக்கத்தை எதிர்பார்த்திருக்க, இன்னும் முகம் கூடப் பார்க்க மறுப்பது எப்போதையும் விட ஒரு காயத்தைக் கொடுத்தது.

“மா தாத்தா” என்ற மீனாக்ஷியின் குரல் செவியைத் தீண்ட, வாசலை பார்க்க வேலவன் மனைவி ரத்னாவுடன் வந்து கொண்டிருந்தார். “ஹை பாட்டி கூட வர்றாங்க” என்று மீனாக்ஷி குதூகலித்தாள்.

“வாங்கம்மா, வாங்கப்பா” என்று துளசி முகத்தை சற்று உற்சாகமாய் மாற்றி வரவேற்றாள்.

“மீனாக்கு அடிபட்டிருக்கு, நீ ஏன் எங்களுக்கு ஒரு வார்த்தை கூட சொல்லலை” என்று வந்தவுடனே ரத்னா குறைபட,

“சின்ன அடிதான் மா” என்று துளசி சமாளித்தாள்.

“இல்லை பாட்டி, பெரிய அடி, ரொம்ப வலிக்குது” என்று மீனாக்ஷி அதற்கு ஒத்து ஊதினாள்.

“உங்களுக்கு யார் சொன்னா பா?” என்று துளசி கேட்க,

“பிரசன்னா சொன்னான் மா” என்று வேலவன் சொல்ல,

“அவனுக்கு எப்படி தெரியும்” என்று துளசி கேட்டாள்.

“அது தெரியலை, நான் கேட்டுக்கலையே” என்று அவர் நிறுத்திக் கொள்ள, எப்போது தான் இவர் மாறுவாரோ என்றிருந்தது.

“எப்படி தெரியும்?” என்று துளசியின் மண்டை குடைய,

“அவன் சொன்னாலும் அப்படிதானான்னு நீங்க எனக்கு ஏன் பா ஃபோன்ல கேட்கலை” என்றவளிடம்,

“உன்னை பார்க்கணும் போல இருந்துச்சுன்னு அம்மா சொன்னா, நாங்க கேட்டா நீ வேண்டாம்னு சொல்லுவ, அதான் சொல்லாம கொள்ளாம வந்துட்டோம்” என்றார்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் துளசி மௌனியாகிவிட்டாள்.

“யாராவது ஏதாவது பேசுவாங்க, இல்லை சரியா மரியாதை கொடுக்க மாட்டாங்கன்னு தான் நீ சொல்ற. எங்களுக்கு புரியுது! ஆனா எங்களுக்கு உன்னை விட அதெல்லாம் பெருசில்லை துளசி” என்று அம்மா மெதுவாக அவளுக்கு மட்டும் கேட்கும் படி சொன்னார்.

திரு கிளம்பி வெளியில் வர, அவனை பார்த்ததும் அமர்ந்திருந்த வேலவனும் ரத்னாவும் எழுந்து நின்றனர்.

“வாங்க” என்றவன், “உட்காருங்க” என்று சொல்லி, “நான் மில்லுக்கு கிளம்பறேன்” என்று வேலவனை பார்த்து ஒரு வார்த்தை சொல்லி கிளம்பிவிட்டான்.

முன்பெல்லாம் அது கூட சொல்ல மாட்டான் இப்போது ஓரிரண்டு வார்த்தைகள் வருகிறது.

சாப்பிடாமல் போகிறான் என்று துளசிக்கு தெரிந்த போதும், அப்பா அம்மா வந்திருப்பதால் அப்படி செல்கிறான் எனப் புரிந்தது.

அவன் தனியாக சாப்பிட முடியாது, மரியாதைக்கு அவரையும் அழைக்க வேண்டும். இன்னும் அந்த சகஜ மனப்பான்மை கிடையாது, ஒட்டுதலும் கிடையாது. அதுதான் உண்ணாமல் செல்கிறான் என்று புரிந்தது.

ஆனாலும் எதுவும் செய்ய இயலாதவளாக பார்த்து நின்றாள். பின்னே இவன் மரியாதை கொடுத்தால் தானே வேலையாள் என்ற பேச்சு மறையும்.

இவளின் யோசனைகள் ஓடும் போதே அவன் பைக்கை கிளப்பி சென்று விட்டான். செல்லும் அவனையே பார்த்து நின்றாள்.

பின்பு அப்பாவிற்கும் அம்மாவிற்கும் தண்ணீர் கொடுத்து சாப்பிட கட்டாயப் படுத்த, வேறு வழியில்லாமல் உண்ண அமர்ந்தனர்.

அப்போது பார்த்து ஷோபனாவும் டைனிங் டேபிள் வந்தவள், துளசியின் அப்பாவும் அம்மாவும் உண்டு கொண்டு அமர்ந்திருப்பதை பார்த்தும், அருகில் வந்து ஒரு ப்ளேட் எடுத்து தனக்கு தேவையானதை வைத்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

எப்படி பார்த்தும் பேசாமல் இருப்பது என "வாம்மா" என்று ரத்னா பேச,

அலட்சியமாய் அவரை பார்த்தவள் "நீங்க எதுக்கு என்னை வாம்மா சொல்றீங்க. எங்க வீடு இது" என்றாள் பட்டென்று. அங்கே ஒரு சங்கடமான சூழ்நிலை.

ரத்னா என்ன பதில் பேசுவது என்று தெரியாமல் விழிக்க, வேலவன் சாப்பிடுவதையே நிறுத்தி இருந்தார்.

சொல்லிவிட்டு ஷோபனா பாட்டிற்கு சென்றிருந்தால் கூடப் பரவாயில்லை. அவள் பதிலை வேறு எதிர்பார்த்து நிற்க, வேறு வழியில்லாமல் துளசி பதில் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானாள்.

"அது சும்மா ஒரு பேச்சுக்கு, ஒரு மரியாதைக்கு சொல்றது. இது உன் வீடு தான். இவங்க அதை இல்லைன்னு சொல்லலை" என்றாள் அழுத்தமாக.

பொதுவாக ஷோபனா எது பேசினாலும் துளசி பதில் பேசுவது கிடையாது. ஷோபனாவும் அதிகமாக எல்லாம் துளசியை வம்பிழுக்க மாட்டாள். "நீயெல்லாம் ஒரு ஆளு, உன் கூட சண்டை போடணுமா?" என்ற பார்வை தான் துளசி பார்ப்பதாகத் தோன்றும்.

"நான் ஒன்னும் உன்கிட்ட பேசலை" என்று துளசியை பேசினாள். இதற்கு துளசியை விட நான்கு வயது இளையவள்.

என்னவோ திருவின் பாராமுகம் அன்று துளசிக்கு ஒரு எரிச்சலை கொடுத்திருக்க, பதிலுக்கு பதில் பேசினாள்.

“நீ என்கிட்டே பேசலைன்னாலும், நான் உன்கிட்ட தான் பதில் சொல்றேன்” என்று துளசி இன்னும் அழுத்தமாக சொல்ல,

“இந்த வீட்ல நிம்மதியா சாப்பிடக் கூட முடியலை. இந்தா நீயே கொட்டிக்கோ” என்று எடுத்த உணவினை அப்படியே மேஜை மீது வைத்து அவளின் ரூமின் உள் புகுந்து விட்டாள்.

மீனாக்ஷி இதெல்லாம் பார்த்து சோஃபாவில் அமர்ந்திருந்தாள்.

ரத்னாவும் வேலவனும் என்ன செய்வது என்று தெரியாமல் உணவினையும் உண்ணாமல் இருக்க,

“நீங்க சாப்பிடுங்கப்பா அவ எப்பவும் அப்படி தான்” என்று சொல்லி துளசியும் ஒரு தட்டை வைத்துக் கொண்டு உணவினை உண்ண ஆரம்பித்தாள்.

ரூமின் உள்ளே இருந்து எட்டி பார்த்த ஷோபனாவிற்கு அது அப்படி ஒரு கடுப்பை கிளப்பியது.

வேகமாக வெளியே வந்தவள் “ஏய் தனம், எனக்கு டிஃபன் கொண்டு வா. என் வீட்ல கண்டதும் உட்கார்ந்து

சாப்பிடுதுங்க, எனக்கு சாப்பாடு இல்லை” என்று கத்தினாள்.

ரத்னாவும் வேலவனும் திகைத்து எழுந்து நின்று விட, துளசிக்கு கோபம் கட்டுக் கடங்காமல் பொங்கியது.

அத்தியாயம் ஏழு

சரியாக அந்த நேரம் மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் வர, இவர்களை பார்த்ததும் "வா வேலா" என்றவர், "வாம்மா" என்றார் ரத்னாவையும் பார்த்து.

அகிலாண்டேஸ்வரியும் "வாங்க" என்றார், இல்லையென்றால் மேகநாதன் தொலைத்து விடுவார், அதையும் விட துளசி பின்னே அவருக்கு எந்த வேலையும் செய்து கொடுக்க மாட்டாள்.

அவர்கள் உண்டு கொண்டிருப்பதில் இருந்து எழுந்து நின்று கொண்டிருக்க, துளசியின் முகத்தினில் இருந்த இறுக்கம் எதோ சரியில்லை என்று காட்டியது.

ஷோபனா நைட்டியோடு அப்போது தான் சமையல் அறை வாசலில் நின்று கொண்டு இருப்பதை பார்த்த மேகநாதன் "என்னம்மா" என்றார் துளசியை பார்த்து.

இவர்கள் வராமல் இருந்திருந்தாலாவது கை கழுவி இருப்பர். இப்போது இவர்கள் இருக்கும் போது இப்படி கை கழுவது அவர்களுக்கு மரியாதை இல்லையில்லையா? ஆனாலும் உண்ணவும் மனதில்லை! அவர்களை பார்த்து புன்னகை புரியவும் முகம் ஒத்துழைக்கவில்லை.

ரத்னாவிற்கு வேறு ஏகமாகப் பதட்டம் ஆகியது துளசி "கோபிப்பாளோ" என்று. "இதுக்கு தானே உங்களை இங்கே வர வேண்டாம் சொல்றேன்" என்பதாகத் தானே அவளின் எண்ணம் இருக்கும்.

"என்னமா?" என்று மீண்டும் மேகநாதன் கேட்கவும்,

"ரொம்ப பேசறா மாமா" என்று ஷோபனாவை சொல்ல,

சூழ்நிலையின் இறுக்கமோ தாக்கமோ புரியாமல், "என்ன நான் பேசறேனா? என்ன பேசறேன்? இங்க வந்து கண்டவங்களும் சாப்பிடறாங்க, எனக்கு சாப்பிட முடியலை சொன்னேன்" என்று அவள் பேசியதை அப்படியே திரும்பச் சொல்லிவிட்டாள்.

அதிர்ந்தனர் மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் "என்ன பேசற நீ? என்று அகிலாண்டேஸ்வரியே அதட்டி விட்டார்.

"என்ன எல்லோரும் சேர்ந்து என்னை மிரட்டுறீங்களா?" என்று ஷோபனா அதற்கும் கத்த,

என்ன செய்வது என்றே அவர்களுக்குத் தெரியவில்லை.

"உனக்கு கொஞ்சமாவது மரியாதை தெரியுதா?" என்று மேகநாதன் சத்தமிட்டார்.

“எனக்கு தெரியும், ஆனா இவங்களுக்கு குடுக்கணும்ன்னு அவசியமில்லை” என்றும் சொல்லிவிட, துளசியின் கோபம் ஏகத்திற்கும் எகிறியது.

துளசி அவளிடமோ இல்லை மாமனார் மாமியாரிடமோ ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

வேலவனிடம் திரும்பி, “இப்ப நீங்க இங்க வேலை செய்யறவங்களா வந்திருக்கீங்களா இல்லை என்னோட அப்பா அம்மாவா வந்திருக்கீங்களா?” என்றாள் ஒரு புயலை உள்ளடக்கிய குரலில்.

“உன்னோட அப்பா அம்மாவா” என்று வேலவன் தயங்கி சொல்ல,

“அப்புறம் எதுக்கு வேடிக்கை பார்த்துட்டு இருக்கீங்க, கிளம்புங்க முதல்ல!” என்றாள் அவர்களை பார்த்து.

“ஏன்? ஏன்? பேசாமா இரு!” என்று அகிலாண்டேஸ்வரி சூழலை கையினில் எடுத்து துளசியை பார்த்து சொல்ல,

“போதும் அத்தை, நான் இந்த வீட்டுக்கு வந்து பதிமூணு வருஷம் ஆகிடுச்சு, எங்க வீட்ல நான் பதினாறு வருசம் தான் இருந்தேன். இன்னும் கொஞ்சம் வருஷம் போனா அங்க இருந்ததை விட இங்கே அதிகம். இன்னும் அவங்க பொண்ணா தான் என்னை பார்க்கறீங்க இந்த குடும்பத்துல எல்லோரும். என்னோட

அப்பா அம்மாவா இவங்க பார்க்கப் படறது இல்லை. நீங்க எல்லோரும் அப்படி பார்க்கறதால அப்படி பேசறதால தான் இவ எல்லாம் பேசறா'' என்று கை நீட்டி ஷோபனாவை குற்றம் சாட்டியவள்,

''போதும் இவங்களுக்கு இங்க கிடைக்கிற மரியாதை'' என்று அகிலாண்டேஸ்வரியை பார்த்து சொல்லி,

''இனி நீங்க இந்த வாசப் படியை மிதிக்க கூடாது கிளம்புங்க'' என்றாள் அப்படி ஒரு கடினமான குரலில்.

ரத்னாவிற்கு கண்கள் கலங்கி விட்டது. வேலவனின் கைகால்கள் எல்லாம் வெலவெலத்து விட்டது.

''ஏன் துளசி அவளை பத்தி உனக்கு தெரியாததா?'' என மேகநாதன் மருமகளிடம் சமாதானம் பேசினார்.

''அவளை பத்தி எனக்கு தெரியணும்ன்ற அவசியமே இனிமே எனக்கு எப்பவுமே இல்லை மாமா'' என்றாள்.

அவள் வெளியே செல்லுங்கள் என்று சொன்ன பிறகும் மேகநாதனின் முகம் பார்த்து வேலவன் நிற்க, துளசிக்கு அப்படி ஒரு கோபம் பொங்க ஒரு இயலாமையுடன் பெற்றோரை பார்த்து நின்றாள்.

''வாங்க போகலாம்'' என்று ரத்னா வேலவனை வறுபுறுத்தி அழைத்து சென்றார். இருவரும் கை கழுவ கூட இல்லை, மேகநாதன் துளசி பேசியதை அதிர்ச்சியாகப் பார்த்திருந்தார்.

“இருக்க சொல்லு துளசி அவங்களை” என்று அகிலாண்டேஸ்வரி சொல்ல,

“வேண்டாம் அத்தை” என்றவள் கூடவே “நான் ஒரு ரெண்டு நாள் எங்க அம்மா வீட்டுக்கு போய் இருந்துட்டு வர்றேன்” என்றும் சொல்லிவிட்டாள்.

“இப்போ எப்படி போவ துளசி, மீனாக்ஷி கால்ல கட்டு போட்டு இருக்காங்க” என்று மேகநாதன் பதற,

“இல்லை மாமா நான் அவளை பத்திரமா கூட்டிட்டு போயிடுவேன். அங்க மீரா பார்த்துக்குவா, படிப்பை முடிக்க போறா, அவளும் இப்போ டாக்டர் தான், பார்த்துக்குவா!” என்று சொல்லியவள்,

“மீனா, அப்பாக்கு ஃபோன் பண்ணு” என்று துளசி சொல்ல,

துளசியின் தொலைபேசியில் இருந்து அழைப்பு என்றதும், அவளின் அப்பா வந்திருப்பதால் எதோ வேலையாக அழைக்கிறாள் என்று நினைத்துக் கொண்டு எடுத்து காதினில் வைத்தான்.

“அப்பா கிட்ட நானும் அம்மாவும் ரெண்டு நாள் ஊருக்கு போறோம்ன்னு சொல்லு” என்று துளசி சொல்லும் போதே,

“அப்பா இங்க ஒரே பிரச்சனை, சித்தி பேசினாங்க. அம்மா, தாத்தா பாட்டியை வீட்டை விட்டு வெளிய போகச் சொல்லிட்டாங்க. இப்போ நானும் அம்மாவும் ரெண்டு நாள் போறோம்னு சொல்ல சொன்னாங்க!” என்று சுருக்கமாக மொத்த விஷயத்தையும் பகிர்ந்து விட்டாள்.

திருவிற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. “இரு, நான் வீட்டுக்கு வர்றேன்” என்று கிளம்பியவன்,

விரைந்து வீட்டிற்கு வந்தான், வரும் வழியில் தான் வேலவனும் ரத்னாவும் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருப்பதை பார்த்தான்.

“அம்மா அவங்களை வீட்டை விட்டு போகச் சொல்லிட்டாங்க” என்ற மீனாக்ஷியின் வார்த்தைகள் ஞாபகத்தில் வர, பைக்கை நிறுத்தி அவர்களின் அருகில் சென்றான்.

ரத்னா கலங்கிய கண்களை துடைத்துக் கொண்டிருப்பது தெரிய, வேலவன் என்ற மனிதர் பாவமாக நின்று கொண்டிருந்தார்.

இவனை பார்த்ததும் இருவரும் விழிக்க, “எதுவா இருந்தாலும் பேசிக்கலாம் வீட்டுக்கு வாங்க” என்றான்.

திரு அவர்களிடம் பேசியதை ஒரு ஆச்சர்யத்துடன் உள் வாங்கினாலும் “இல்லை தம்பி வேண்டாம்” என்றார் வேலவன்.

“நான் சொல்றேன் வாங்க” என்றான் சிறு வற்புறுத்தலோடு, சகஜமாக பேசாத மருமகன் வந்து பேசும் போது அவர்களும் தான் என்ன செய்வர், போவதா வேண்டாமா என்று யோசித்து நிற்க,

ஒரு ஆட்டோ அழைத்தவன், அவர்களின் வீட்டை சொல்லி பின்னேயே இவனும் வர, ரத்னாவிற்கு வேலவனிற்கும் என்ன செய்வது என்று தெரியாமல் திரு சொன்னபடி செய்தனர்.

வீட்டின் முன் ஆட்டோ நிற்க, வீட்டிற்கு உள் திருவின் பைக் வர, அது தெரியாமல் துளசி உள்ளே அவளிற்கும் மீனாக்ஷிக்கும் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

ஷோபனாவிற்கு கண்ணெல்லாம் இங்கே தான், என்ன செய்கிறாள் துளசி என்பது போல, இத்தனை நாட்களாக துளசியின் வீட்டினரை பற்றிய வேலைகாரர்கள் என்ற உருவகம், கூடவே அவளின் அகங்கார குணம் அவளை அப்படி பேச வைத்திருந்தது.

பேசியது மட்டுமில்லாமல் பேசியதற்கான வருத்தமும் இல்லை. ஏனென்றால் அவர்கள் அவளுக்கு ஒரு பொருட்டே கிடையாது.

“உள்ள வாங்க” என்று திரு சொன்னாலும், “துளசி சொல்லட்டும்” என்று விட்டார் ரத்னா.

“அம்மாவை கூப்பிடு மீனா” என்ற படி திரு உள்ளே வர, இவர்கள் வந்ததை பார்த்தும் “என்ன வேலா அவ சொல்றதை பெரிசா வெச்சிக்க வேண்டாம், நீ வா” என்று மேகநாதனும் அழைத்தார்.

“துளசி கோவிச்சுப்பாங்க ஐயா” என்று விட்டார் அவருமே!

மீனாக்ஷியின் அழைப்புக்கு வெளியே வந்த துளசியிடம், “அம்மாவை தாத்தாவையும் பாட்டியையும் உள்ளே வரச் சொல்லு” என்றான் திரு.

“அவங்க வரமாட்டாங்க” என்ற துளசியின் குரல் ஸ்திரமாக ஒலிக்க, அதிர்ந்து துளசியை பார்த்தான் திரு. ஆனால் இப்போது துளசி அவனை பார்க்கவில்லை.

“நான் ரெண்டு நாள் ஊருக்கு போயிட்டு வர்றேன் இவளை அலைய வைக்க முடியாது, சௌகர்யமா கூட்டிட்டு போகணும். எனக்கு ஊருக்கு போக வண்டி வேணும்” என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.

இப்படி ஒரு துளசியை திருமணமான நாளில் இருந்து இப்போது தான் பார்க்கிறான் திரு.

“ஊருக்கு தானே போகலாம், ஆனா அவங்களை உள்ள வரச் சொல்லு” என்றான் அப்போதும்.

“சொல்ல மாட்டேன் எனக்கு வண்டி சொல்லுங்க” என்றாள் குரலில் ஒரு ஸ்திரத் தன்மையோடு.

எல்லோர் முன்னும் சண்டையிட வாக்குவாதம் செய்ய விருப்பமில்லாதவனாக திருவும் வண்டிக்கு ஏற்பாடு செய்ய அலைபேசியை எடுத்தான்.

“எதுக்கு துளசி இவ்வளவு பிடிவாதம்” என்று அகிலாண்டேஸ்வரி பேச,

“அதுதானே எப்பவும் வாங்கற பேச்சு தானே, இப்போ மட்டும் புதுசா என்ன வீராப்பு!” என்று ஷோபனா வெளியே வந்து வாயை விட்டாள்.

“நீ உள்ள போ முதல்ல” என்று அகிலாண்டேஸ்வரி பொறுக்க முடியாமல் அதட்டினர்.

ஃபோன் பேசி வந்த திருவிடம் அவனின் முகம் பார்த்தாள். அவன் கோபமாக எங்கோ பார்த்துக் கொண்டு இருந்தான்.

“என்னை ஒரு நிமிஷம் பாருங்க” என்றாள் துளசி எல்லோர் முன்னேயும். அவன் எதற்கென்று புரியாத போதும் துளசி சொல்லியதை தட்டாமல் செய்தான்.

அவளின் முகம் பார்த்தவனிடம், “இவங்கப்பாக்கு நீங்க பணம் குடுக்கக் கூடாது” என்றாள் ஆணை போல ஷோபனாவை பார்த்துக் கொண்டே.

“ஏன் எதற்கு” என்று எதுவும் கேட்காமல், “சரி குடுக்கலை” என்றான் உடனே, அதுவரை அலட்சிய பாவனை பூசியிருந்த ஷோபனாவின் முகம் மாற ஆரம்பித்தது.

“கண்டிப்பா குடுக்கக் கூடாது” என்றாள் மீண்டும்.

“குடுக்க மாட்டேன்” என்று மீண்டும் திரு பொறுமையாக சொல்லியவன், “அவங்களை உள்ள கூப்பிடு” என்றான்.

“வேண்டாம்” என்று சொல்லிய போது கண்கள் கலங்கி அவளுக்கு அழுகை வந்து விட்டது. பின்பு திரு எதுவும் வற்புறுத்தவில்லை.

அதுவரையிலும் அவர்கள் வாசலில் நின்றனர். பின் அவளும் பையை தூக்கியவள் “நான் போயிட்டு வர்றேன்” என்று மாமனாரிடமும் மாமியாரிடம் சொல்லி வெளியில் வர, பெற்றவர்கள் முகத்தினில் அவ்வளவு கலவரம்!

அவர்களின் முகங்களை பார்த்த திரு தான் “ரெண்டு நாள் இருந்துட்டு வர வர்றா” எனச் சொல்ல அவர்களின் முகங்கள் தெளிந்தது.

திருமணமாகி இத்தனை வருடங்களில் திரு அவர்களிடம் அதிகமாக பேசுவதே இன்று தான். அதுவே அவர்களை இன்னும் தேங்கி அங்கே இருக்க வைத்தது.

அதற்குள் இன்னோவா வந்து விட, துளசியின் இந்த பரிமாணத்தில் பிடிவாதத்தில் திருவால் எதுவும் யோசிக்க கூட முடியவில்லை. காலையில் இருந்த இதமான மனநிலை எங்கே? இப்போது என்ன நடக்கிறது! அதுவும் துளசி இப்படி எப்போதும் நடக்க மாட்டாள்.

அவளை ஓரளவிற்கு புரிந்தது, அவளுக்கு என்றால் அமைதியாய் கடந்து இருப்பாள். பெற்றோர் என்பதால் இந்த பிடிவாதம்.

மீனாக்ஷியை அவன் தான் அழைத்து வந்தான். அவளை முன் சீட்டில் அமர வைத்து அதனை நன்றாக சாய்வாக வைத்து தலையணை எடுத்து வந்து வசதியாக அமர வைத்தவன், "வலிக்குதா?" என்றும் மகளிடம் கேட்டான்.

"வலிக்குது, ஆனா இதனால வலிக்கலை" என்று மீனாக்ஷி புன்னகைக்க, ஏனோ அவர்களை போக வேண்டாம் என்று சொல்லத் தோன்றியது.

மேகநாதன் வெளியில் கூட வரவில்லை, துளசியின் இந்த பிடிவாதம் அவரை தளரச் செய்திருந்தது. அகிலாண்டேஸ்வரி தான் நின்று பார்த்திருந்தார்.

மகனை இப்படி அவர் பார்த்ததேயில்லை. இவ்வளவு அக்கறையாக, அதுவும் துளசி சொல்ல அடுத்த நொடி சரியென்றது, என்னவோ மகன் பிடிப்பற்று துளசியுடன்

குடும்பம் நடத்துவதாக இத்தனை நாள் நினைத்திருக்க, அப்படி இல்லை என்று நிச்சயமாய் தோன்றியது.

அவரின் இயல்புக்கு மாறாய் எதுவும் பேசாமல் அமைதியாய் பார்த்திருந்தார். திருவை மட்டுமே பார்த்திருந்தார். வீட்டில் சகஜமாய் திரு பேசும் ஒரே ஜீவன் அவர் மட்டும் தானே. "நான் மக்களை சரியாக கவனிக்க வில்லையோ, அவர்களை தெரியவில்லையோ?" என்று பார்த்திருந்தார்.

எல்லோரும் ஏறிய பிறகு, "பத்திரமா பார்த்து கூட்டிட்டு போ" என்று சொன்னவன், "பணம் என்கிட்டே இங்க வந்த பிறகு வாங்கிக்கோ" என்றும் உரைத்தான்.

துளசி ஏறி அமர்ந்தவள் கண்களை மூடிக் கொண்டாள், "உன்னை பார்க்க விருப்பமில்லை என்பது போலா இல்லை கோபதினாலா" எதனால் என்று தெரியவில்லை.

அவளுடைய அம்மாவிற்கும் அப்பாவிற்குமே அவளிடம் பேச பயமாய் இருந்தது.

"என்ன வந்தது இவளுக்கு" என்ற யோசனை மட்டுமே திருவிடம், செல்லும் வாகனத்தை பார்த்து நின்றவன், வீட்டின் உள் கூட வரவில்லை, அப்படியே பைக்கினை எடுத்தான்.

மகனின் முகமே சரியில்லை என்று உணர்ந்தார். “திரு” என்ற அகிலாண்டேஸ்வரியின் அழைப்பில், எதுவும் பேச பிடிக்காதவனாக “கொஞ்சம் வேலை இருக்கும்மா” என்று சொல்லிச் சென்று விட்டான்.

அவர் அப்படியே நின்று விட்டார்!

திரு சென்றதுமே அவனின் சித்திகள் இருவரும் அங்கே வந்து விட்டனர். சத்தியநாதனின் மனைவி வசுமதியும் கமலானதனின் மனைவி மேகலாவும்.

“அப்போவே வரலாம்னு பார்த்தோம், எதுக்கு அவங்க ரெண்டு பேரும் வெளியவே நின்னுட்டு இருந்தாங்க!”

“அதான் வரலையா” என்று கேட்டவர், “எவங்க ரெண்டு பேரும்” என்றார் கூடவே,

வசுமதியும் மேகலாவும் புரியாமல் பார்த்து இருக்க, “துளசியோட அப்பா அம்மான்னாவது சொல்லணும் இல்லை திரு நமக்கு இல்லாம போய்டுவான்” என்றார் பெருமூச்சோடு.

“என்ன சொல்றீங்க?” என்று அவர்கள் புரியாமல் கேட்க,

“அவங்க அப்பா அம்மாக்கு மரியாதை குடுக்கலைன்னா துளசி நம்மளை கண்டுக்க மாட்டா, துளசி பார்க்கலை திருவும் பார்க்க மாட்டான்”

“என்ன ஆச்சு?” என்று இருவரும் கேட்க,

“ஒரு பிடாரியை வீட்டுக்கு கொண்டு வந்திருக்கேனே மருமகளா சொந்தம்னு” என்றே சொல்லிவிட்டார்.

“என்ன அக்கா இப்படி பேசறீங்க?” என்று இருவரும் அதிர்ச்சியாய் பார்த்தனர்.

“வீட்டுக்கு வந்த ரெண்டு பேரும் சாப்பிட்டிட்டு இருந்தப்போ பேசியிருக்கா கண்டவங்கன்னு, அவங்க அதுக்கப்புறம் சாப்பிடக் கூட இல்லை, துளசி இனிமே அவங்களை இந்த வீட்டு வாசப்படி மிதிக்க கூடாதுன்னு சொல்லிட்டா, எங்க யாராலையும் பேச முடியலை!”

“ஏன் திரு அப்பா பேசியும் துளசி கேட்கலை, ரெண்டு நாள் இருந்துட்டு வர்றேன் கிளம்பிட்டா.

நாம இதுவரை துளசியோட அப்பா அம்மாக்கு பெருசா மரியாதை குடுத்தது இல்லைன்னாலும் வீட்டுக்கு வந்தவங்களை அவமானப்படுத்தினது இல்லை. இன்னைக்கு அதுவும் செஞ்சிட்டோம்” என்றார் வருத்தமாக.

ஆம்! ஆகிலாண்டேஸ்வரி பெரிய ஆள் நான் தான் என்று காட்டுவதற்காக ஆதிக்கத்தை காண்பிப்பார், பேசுவார், இப்படி தான். ஆனால் அவரால் குடும்பம் என்றும் உடைந்தது கிடையாது. அதனால் தான் மேகநாதன் தம்பிகள் தங்கைகள் என்று அனைவரையும் அரவணைத்து போகிறார்.

“சும்மா தங்கச்சி பொண்ணுன்னு தராதரம் இல்லாம கொண்டு வந்துட்டோம் போல. துளசில பத்துல ஒரு பங்கு கூட இல்லை” என்று கோபத்தில் பேச ஆரம்பிக்க,

“அக்கா பேசாம இருங்க, அவங்க அம்மா, அப்புறம் சித்ரா அண்ணி வந்து குதிச்சிடுவாங்க” என்றனர்.

“வரட்டும்! எவ வேணா வரட்டும்! எனக்கு என் பசங்க வாழ்க்கை முக்கியம். துளசியும் திருவையும் விடுங்க, வெங்கடேஷ் எப்படி இவளோட குடும்பம் நடத்துவான். இவ இப்படி பேசினா நாளைக்கு என் பையன் தான் எல்லோர்கிட்டயும் அசிங்கப் படணும்” என்று ஏறக்குறைய சத்தமாக பேசினார் ஷோபனாவிற்கு கேட்கட்டும் என்றே!

உடனே அவள் ரூமில் இருந்து வெளியில் வந்தாள். மேகநாதன் அங்கே அமர்ந்திருந்தவர் “இப்போது என்ன?” என்பது போலப் பார்த்தார், ஆனாலும் மனைவி பேசுவதில் தலையிடவில்லை. சோர்ந்து விட்டார். நேற்று தானே அவ்வளவு நடந்தது இன்று மீண்டும்!

உடல்நிலை என்னவோ அவருக்கு செய்ய, "அகிலா சத்தம் வேண்டாம், எனக்கு ஒரு காஃபி கொடு" என்று தளர்ந்த குரலில் சொல்ல, அகிலா என்னவோ என்று கணவரின் அருகில் செல்ல, தன் கணவருக்கு வசுமதி அழைக்க, மேகலா வேகமாக சமையல் அறையின் உள் போக, அங்கே தனம் காஃபி தான் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

அவள் கொடுக்கவுமே மேகலா விரைந்து வந்து மேகனாதனிடம் கொடுக்க, அதனை குடித்த பிறகு சற்று ஆசுவாசமனவர். "எனக்கு ஒரு மாதிரி இருக்கு படுக்கறேன்" என்று சொல்லி படுக்கை அறைக்குள் சென்று படுத்து கொண்டார்.

வீடே களேபாரமானது, "உங்கம்மாவை வரச் சொல்லு" என்று ஷோபனாவிடம் கடுமையான குரலில் அகிலாண்டேஸ்வரி சொல்ல,

"எனக்கென்ன பயமா?" என அவள் சொல்லி அம்மாவை அழைக்க முற்பட்டாள்.

அவ்வளவு தான் பொங்கியதே கோபம் அகிலாண்டேஸ்வரிக்கு, அவரே தன்னுடைய அலைபேசியில் இருந்து அழைத்தவர், "பொண்ணையா பெத்து வெச்சிருக்க, சொந்தம்ன்ற பேர்ல என் வீட்டுக்காரரை ஏமாத்தி எங்க வீட்டுக்கு அனுப்பி என் பையன் வாழ்க்கையை வீணாகிட்ட, இத்தனை நாளா

உங்களை ஆதரிச்ச பாவத்துக்கு உங்க அண்ணனை படுக்க வெச்சிட்ட" என்று சாரதாவிடம் பேச ஆரம்பித்தவர், அதன் பின் பிடி பிடி என பிடிக்க,

அகிலாண்டேஸ்வரி பேசுவார் எனத் தெரியும், ஆனால் இவ்வளவு பேசுவார் என்பதே இப்போது தான் ஷோபனாவிற்கு தெரியும்.

"மெண்டல் புள்ளையை கட்டிக் கொடுத்து இருக்கீங்கன்னு சொல்லி, என் பையனுக்கு விவாகரத்து வாங்கி, வேற பொண்ணை கட்டி வெக்கற அளவுக்கு யோசனை வர வெச்சிடாத" என ஒரு ஆட்டமே ஆடினார்.

அதற்குள் சத்தியநாதனும் கமலநாதனும் வந்து விட்டனர்.

"தெரியலை, மாமா ஒரு மாதிரி இருக்குன்னு போய் படுத்துக்கிட்டார்" என்று வசுமதி சொல்லவும்,

"ஏன், என்ன ஆச்சு?" என்றனர் இருவரும்.

நடந்தவைகளை சொல்ல "நேத்து தானே சொன்னோம் இவளுக்கு அறிவிருக்குதா இல்லையா" என்று எல்லோரும் நேரடியாக ஷோபனாவை திட்டினர்.

அதற்குள் நாகேந்திரன் சாரதாவோடு வந்திருந்தார், வந்தவரிடம் அகிலாண்டேஸ்வரி சண்டைக்கு கிளம்ப, திருவும் வெங்கடேஷும் அப்பாவிற்கு உடல் நிலை

சரியில்லை என்று சொல்லப் பட்டிருக்க வீட்டிற்கு வந்தனர்.

அவரை பார்த்ததும் திரு, "சாரி மாமா, என்னால பணம் குடுக்க முடியாது, நேத்தே உங்க பொண்ணு பேசினதுக்கு பணம் குடுக்க கூடாதுன்ற முடிவுல தான் இருந்தேன். ஆனா துளசி தான் பணம் குடுக்க சொன்னா. அதனால தான் கொடுக்கறேன்னு சொன்னேன்"

"இன்னைக்கு என்ன நடந்ததுன்னு எனக்கு தெரியாது. ஆனா துளசி ஷோபனாவோட அப்பாவுக்கு நாம பணம் குடுக்க கூடாதுன்னு சொல்லிட்டா. இனி என்னால ஒன்னும் பண்ண முடியாது, குடுக்க முடியாது!" என்று சொல்லி அப்பாவை பார்க்க செல்ல, ஒரு வார்த்தை கூட பேசாமல் ஷோபனாவை திரும்பியும் பார்க்காமல் அண்ணனின் பின்னோடு வெங்கடேஷும் சென்றான்.

கணவன் தன்னை திரும்பி கூட பார்க்காததில் கொஞ்சம் பயம் பிறந்தது ஷோபனாவின் மனதில்.

அப்படியே அமர்ந்து விட்டார் நாகேந்திரன், மிகப் பெரிய தொகை அப்படியே தொகையாக வட்டியில்லாமல் திரு மட்டுமே கொடுப்பான். வேறு யாராயிருந்தாலும் வட்டி கேட்பார். வட்டி மட்டுமே மாதத்திற்கு அறுபது அல்லது எழுபதாயிரம் வரும் ஒரு வருடம் என்றாலும் அதுவே ஆறேழு லட்சம், இப்போதும் தொழிலில் சிக்கல் அவரால் என்ன செய்வது என்று யோசிக்கக் கூட

முடியவில்லை. ஷோபனாவிற்கு ஒரு தம்பி, அவன் இன்னும் கல்லூரி படிப்பை கூட முடிக்கவில்லை.

மனம் நொந்து விட்டார், பெண்ணை பார்த்த பார்வை "நீ எனக்கு பிறக்காமையே இருந்திருக்கலாம்" என்று சொல்லியது.

அதற்கும் அகிலாண்டேஸ்வரி சாரதாவை விட்டு அவரையே பிடித்தார், "பண கஷ்டம் வரும் போகும், அதல்ல இங்க பிரச்சனை, எப்படி மரியாதையில்லாம சாப்பிடறவங்களை பேசிட்டா, மூணு வேளையும் ஒரு வேலையும் செய்யாம கொட்டிக்கறா இல்லையா, அந்த திமிர் பேசுது. என்ன அப்படி நீங்க ஒரு ஜமீன் குடும்பம் எல்லோரையும் அலட்சியமா பேச, ஆளும் அவளும், சொந்தம்னு இல்லைனா உங்க வசதிக்கும் இவ முகத்துக்கும் உங்களை திரும்பி கூட பார்த்திருக்க மாட்டோம்!" என்று ஏகத்திற்கும் பேச,

அப்போது தான் திரு அப்பாவை பார்த்து விட்டு வெளியில் வந்தவன்,

"என்ன பேசறீங்க நீங்க? முதல்ல வாயை அடக்குங்க!" என்றான் அதிகாரமாக. அவனின் சப்தத்திற்கு பிறகே அகிலாண்டேஸ்வரி பேசுவதை நிறுத்தினார்.

அதுவரை அவரை யாராலும் அடக்க முடியவில்லை.

“இப்போ தான் அவர் சுகர் லெவல் பார்த்தேன், அது கொஞ்சம் குறைவா இருக்கு. இன்னும் குறைவா இருந்திருக்கும், அதனால் அவருக்கு அப்படி இருந்திருக்கும். எழுந்த பிறகு வெங்கடேஷை ஹாஸ்பிடல் கூட்டிட்டு போகச் சொல்லியிருக்கேன்” என்றவன்,

“அவர் பக்கத்துல போய் இருக்காம எதுக்கு இந்த கத்து கத்தறீங்க? வீடா என்ன இது? இப்படி இங்க இனிமே எந்த சத்தமும் யாராலையும் இருக்க கூடாது, உங்களை எல்லாம் பார்த்து என் பொண்ணும் வீணாப் போயிடுவா போல, மரியாதையான வார்த்தை பேசி எல்லோருக்கும் மரியாதை குடுத்து இருக்க முடிஞ்சா இருங்க, இல்லை யாரா இருந்தாலும் கிளம்பிட்டே இருங்க!”

“இந்த சத்தம் இந்த வீட்ல இருக்க கூடாது. நீங்கன்னாலும் சரி உங்க வீட்டுக்காரர்னாலும் சரி இல்லை யாரா இருந்தாலும் சரி” என்றான் சத்தமாக எல்லோருக்கும் பொதுவாக, அவன் சொன்னது என்னவோ ஷோபனாவிற்கு தான் ஆனாலும் அம்மாவை பார்த்தே சொன்னான்.

அதற்குள் நாகேந்திரன் அவனின் மற்ற இரு மச்சான்களிடமும் திருவிடம் சொல்ல சொல்லி தூது செல்ல,

அவர்களும் தட்ட முடியாது அவனிடம் சொல்ல, "இல்லை சித்தப்பா துளசியை மீறி என்னால செய்ய முடியாது" என்றான் தெளிவாக.

"எப்போ இருந்து நீ துளசிக்கு இவ்வளவு முக்கியத்துவம் குடுக்க ஆரம்பிச்ச" என்று பொறுக்கமாட்டாமல் கமலநாதன் கேட்டே விட்டார்.

"எப்போ குடுக்கலை" என்றான் அவரிடம் பதிலுக்கு.

"நீங்க பேசியே நாங்க பார்த்ததில்லை" என்று அவர் சொல்ல,

"அதனால அவ எனக்கு முக்கியம் இல்லையா?" என்றான்.

இதற்கு என்ன பதில் சொல்வார்கள், இப்படியாக வீடு அல்லோலகல்லோலப் பட்டது. ஆனாலும் அவன் பணம் கொடுக்க ஒத்துக் கொள்ளவில்லை.

எது எப்படி இருந்தாலும் அப்பா எழுந்து வந்த போது அவரிடம் பேசாமல் வெங்கடேஷிடம் தான் ஹாஸ்பிடல் அழைத்து செல்லச் சொன்னான்.

"இவ்வளவு பேசற அப்பா கிட்ட ஏன்டா பேசறதில்லை" என்று சத்தியநாதன் கேட்க,

“எனக்கும் அவருக்கும் ஆயிரம் இருக்கும் சித்தப்பா, நான் ஏன் பேசறதில்லைன்னு அவரை கேட்க சொல்லுங்க” என்றான்.

யாரும் அவனிடம் பேச முடியாமல் பின் வாங்கினர்.

இப்படி இங்கே எல்லாம் ஓட, கிட்ட தட்ட ஐந்து மணி நேரத்தில் சென்னையில் அவர்களின் வீட்டை அடைந்தார்கள்.

வாடகை வீடு தான், ஆனாலும் சற்று பெரிய வீடு, பிரசன்னாவின் நண்பன் ஒருவனின் வீடு. அதனால் குறைந்த வாடகைக்கு விட்டிருந்தான்.

இவர்கள் வந்த போது நைட் டியூட்டி முடிந்து வந்த மீரா உறக்கத்தில் இருந்தாள். ஒரு வழியாக பெல் அடித்து அவளை எழுப்ப, இவர்களை பார்த்ததும் ஆச்சர்யம், கூடவே மீனாவை பார்த்தவள் “அச்சோ என்ன ஆச்சு” என்று பதறி அவளின் கை பிடிக்க,

“சைக்கிள் இடிச்சிடுச்சு, எனக்கு அடி பட்டுடுச்சு” என மீனாக்ஷி சொன்னாள்.

“எப்போ?” என்று பதறி மீரா விசாரிக்க,

அவளுக்கு தெரியாது என்று துளசிக்கு புரிய, அப்பாவிடம் “மீரா கிட்ட சொல்லலையா” என்றாள்.

“இல்லை அவ நேத்து காலையிலயே போயிட்டா, பிரசன்னா நைட் தான் சொன்னான். நாங்க விடியக் காலைல கிளம்பிட்டோம்”

“அவனுக்கு எப்படி தெரியும்” என்றாள் மீண்டும்.

“அதை அவன் கிட்ட தான் கேட்கணும்” என்று ரத்னா சொல்லவும் , அதற்குள் மீனாக்ஷி இடையிட்டாள்,

“மா அப்பா இதை உங்க கிட்ட குடுக்க சொன்னார்” என்று கொடுத்தாள்.

ஒரு சின்ன கவர், அதில் பணமும் அவனின் ஏ டி எம் கார்டும் இருந்தது. “பின் நம்பர் உங்க ஃபோன்க்கு மெசேஜ் பண்ணியிருக்காங்களாம்” என்றவள்,

“நாம ஷாப்பிங் போகலாம்மா” என்று ஆர்வமாகப் பேச,

“போகலாம்” என்று முணுமுணுத்து, “அம்மா பசிக்குது” என்றாள் அவரின் மகளாக. கூடவே “சாரிம்மா” என்றும் சொல்ல, “ஷ், என்ன இது? அது ஒரு பைத்தியக்காரி போல, அந்த கத்து கத்தறா, விடு!” என்று ரத்னா தான் மகளை சமாதானப் படுத்தும் படி ஆகிற்று.

மீரா என்ன என்று கேட்க, துளசி எதுவும் சொல்லவில்லை! ரத்னா சொல்ல ஆரம்பிக்க, இப்படியாக

பல மாதங்களுக்கு பிறகு தாய் வீட்டிற்கு சீராட வந்து விட்டாலும் மனம் முழுவதும் திருவிடமே இருந்தது.

தான் ஏன் இப்போது இப்படி ஆகிவிட்டோம் என்ற யோசனையில் ஆழ்ந்தாள்! பதில் தான் பிடிபடவில்லை!

வேண்டாம் எதிர்பார்ப்புகளை வைக்காதே, ஏமாற்றங்களை தாங்க இயலாது என தன்னை தானே சமாதானம் செய்ய ஆரம்பித்தாள்.

ஏன் போனா? ஏன் போனா? என்று திருவின் மனதை அரிக்க ஆரம்பித்தது. அவனால் இயல்பாக இருக்க இயலவில்லை. மகளின் காயங்கள் வேறு அவனை உறுத்த, இப்போது எதற்கு கூட்டிக்கொண்டு செல்ல வேண்டும் என்று துளசியின் மீது கோபம் வந்தது.

துளசி வர ஒரு வாரத்திற்கும் மேல் ஆகியது. மீனாக்ஷியின் கட்டு பிரித்த பிறகு தான் வந்தாள். ஆனாலும் காயங்கள் இன்னும் முழுதாக ஆறவில்லை. அந்த ஒரு வாரமும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மனைவியின் அலைபேசிக்கு அழைக்க மகள் தான் எடுத்து பேசுவாள். இதுவே அவனின் இயல்புக்கு மாறானது.

அதுவே அவனை வெகுவாக கஷ்டப் படுத்தி இருக்க, இருந்த கோபமும் அதிகாமகியது, மீண்டும் துளசி வீடு வந்த போது , அவளின் ஃபோனை எடுத்து சுவரை நோக்கி ஒரு வீச வீசி சென்றான்.

துளசி ஸ்தம்பித்து பார்த்தாள், அவளுக்குள்ளும் ஒரு கோபம் துளிர் விட துவங்க, இருவருமே அவர்களின் இயல்பை தொலைத்து தான் இருந்தனர்.

துளசியை முகம் கொண்டு பார்க்காவிட்டாலும் பேசாவிட்டாலும் வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் அவளை உணர்ந்து தானே இருப்பான். பேசுவதையும் பார்பதையும் விட உணருவது இன்னும் உன்னதம் அல்லவா!

எத்தனை மனைவிகள் பேசும் போது கணவர்கள் காது கொடுத்து கேட்டாலும், முகம் பார்த்தாலும் அதனை அப்படியே விட்டுவிடுவர். ஆனால் திரு எப்போதுமே அவளை அதிகம் உணருவான். அவள் நடப்பதை, இருப்பதை, அவள் மகளுடன் பேசுவதை, இப்படி பல!

அவள் உறங்கும் போது முகம் பார்ப்பான் தானே!

அது இல்லாததால் ஒரு வெறுமை அவனுக்குள்! அதற்காக அவளின் குரல் கேட்க அழைத்தால் அவளுக்கு பதில் மீனாக்ஷி தான் எடுத்தாள்.

“அம்மா எங்கே?” என்று ஒரு வார்த்தை கேட்டிருந்தால் அடுத்த நிமிடம் அம்மாவிடம் சொல்லியிருப்பாள் மீனாக்ஷி.

இல்லை “அப்பா என்னை கேட்டாரா?” என்று துளசி கேட்டிருந்தாலும் அடுத்த நிமிடம் திருவிடும் சொல்லியிருப்பாள் மீனாக்ஷி.

இருவருமே அதனை செய்யவில்லை!

அவனுக்கு பிடித்தால் எனக்கென்ன? பிடிக்காவிட்டால் எனக்கென்ன? எனக்கு அவனை பிடித்திருக்கிறது என்ற மனநிலையுடன் இத்தனை நாட்கள் இருந்ததினால் தான் எல்லாவற்றையும் அமைதியாக கடக்க முடிந்தது.

இப்போது புதிதாக திருவிற்கும் தன்னை பிடிக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு துளிர் விட, அதனைக் கொண்டே துளசியின் இந்த பரிமாணம்.

ஆனால் அது திருவை அத்தனை கோபப்படுத்த, அவளின் குரலை கூட கேட்க முடியவில்லை என்ற ஆதங்கத்தில் ஃபோனை எடுத்து வீசி உடைத்து சென்றான். துளசி அப்படியே விக்கித்து நின்று விட்டாள்!

அத்தியாயம் எட்டு

திருவின் முகத்தினில் ஒரு கோபமும் ஒரு இறுக்கமும் எப்போதும் தங்கி விட்டது. துளசியுமே முகத்தை தூக்கி வைத்து சுற்ற, அவர்களின் வீடே களையிழந்துவிட்டது. மேகநாதனிற்கும் சற்று உடல் நலம் குறைய, அது இன்னும் சூழலை கணப்படுத்தியது.

எப்போதும் போல வேலைகளை துளசி பார்த்துக் கொண்டாலும், செய்து கொண்டாலும் திருவிடம் ஒரு பாராமுகத்தை காண்பிக்க ஆரம்பித்தாள். அப்படியே திரு அதை அவளிடம் திருப்புவான் என்பதை மறந்து போனாள். வாழ்க்கையில் ஒரு சலிப்பு தட்டியது. அவளுள் நடந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் கூட அதற்கு காரணமாய் இருக்கலாம்.

“இப்படியே என் வாழ்க்கை கழிந்து விடுமா?” என்ற பயம். “இன்றாவது உடல் ரீதியாய் ஒரு தொடர்பு, நாளை வயதாகி விட்டால், மகளும் திருமணமாகி சென்று விட்டால், எனக்கு வாழ்க்கையில் எதுவுமே இல்லையா?” என்னென்னவோ சிந்தனைகள்.

ஃபோன் உடைந்து இரண்டு மூன்று நாள் ஆகியிருக்க, அப்பா தான் உடைத்தார் என்று தெரியாத மீனாக்ஷி “அப்பா, அம்மா ஃபோன் உடைஞ்சிடுச்சு, புதுசு வாங்கணும்!” என்றாள்.

துளசியும் அங்கே தான் எதோ வேலையாய் இருந்தாள், மகள் கேட்பது நன்கு காதில் விழுந்தது. திரு அவளிடம், "அதுதான் லேண்ட் லைன் இருக்கே மீனா! அது போதும், அம்மாக்கு எதுக்கு ஃபோன், அம்மா தான் யார் கூடவும் பேசறது இல்லையே" என்றான்.

துளசிக்கு நன்கு புரிந்தது, அவனிடம் ஃபோனில் பேசாததற்கு தான் இந்த கலாட்டா என்று.

துளசி மகளிடம் பேசுவது போல அவளும் பதில் சொன்னாள், "அம்மாக்கு ஃபோன் தேவையில்லை மீனாக்ஷி. ஏன்னா அம்மா யார் கூடவும் பேசறதில்லைன்றதை விட அம்மா கூடவும் யாரும் பேசறதில்லை" என்றாள்.

இந்த பதிலில் மகளிற்கு, அம்மாவிற்கும் அப்பாவிற்கும் தான் ஏதோ என புரிந்து இருவரையும் பார்க்க, மகளின் முன் பேச விரும்பாதவனாக விருட்டென்று எழுந்து கிளம்பி விட்டான், அந்த இரவு நேரத்தில்!

கிட்ட தட்ட ஒரு மணி நேரம் கழித்து வந்த போது துளசி உறங்கியிருக்க, ஏனென்று தெரியாமல் ஒரு கோபம் கனன்றது. "நான் பைத்தியக்காரன் மாதிரி சுற்றினால் இவள் எதுவுமில்லாதது போல உறங்குவாளா?" என்று.

கோபத்தை யார் மீது காண்பிப்பது என்று தெரியவில்லை. கோபம்! கோபம்! கோபம்! மட்டுமே

பிரதானமாய். அவன் எப்படி இருந்தாலுமே துளசி எப்போதும் முகம் திருப்பியதில்லை. இப்படி ஏட்டிக்கு போட்டியாய் பேசியது இல்லை. அது அவனால் தாளவே முடியவில்லை. இப்படி ஒரு துளசியை அவன் பார்த்ததுமில்லை. இந்த துளசி அவனுக்கு பிடித்தமும் இல்லை. முதலிலிருந்தே துளசி இப்படி என்றிருந்தால் பழகியிருப்பானோ என்னவோ, இந்த தீடீர் மாற்றம் அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அப்படியே எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தான் என்று தெரியவில்லை. கோபம் சற்று மட்டு பட்டதும், தான் இவ்வளவு பலகீனமானவனா என்ற நினைப்பு ஓடியது. “இல்லை, நான் பலகீனமானவன் இல்லை” என்று சொல்லிக் கொண்டவன், அடுத்த நாள் இருந்து இன்னும் இறுக்கமாய் முகமூடி அணிந்து கொண்டான்.

ஆம், முகமூடி தான்! துளசியை பார்ப்பதில்லை, பேசுவதில்லை என்பது போய் தவிர்க்க ஆரம்பித்தான். வீடு தங்குவதே இல்லை. துளசியும் மிகவும் சோர்ந்து போனாள். கிட்ட தட்ட ஒரு மாதம்! பார்ப்பதில்லை என்பது போய் இந்த பாராமுகம் தாங்க இயலவில்லை.

முடியவில்லை! அவளால் சத்தியமாய் முடியவில்லை. தன்னுள்ளே மிக அதிகமான போராட்டங்கள், அவனை பற்றி உனக்கு தெரியாததா? எதற்கு எதிர்பார்த்து

உன்னுடைய நிம்மதி போய் அவனுடைய நிம்மதியும் கெடுக்கிறாய் என்ற மனோ பாவத்திற்கு வந்து விட்டாள்.

திருவின் இறுக்கமான முகம் அவளை மிகவும் இம்சித்தது. எதிலும் நாட்டமில்லை. மீனாக்ஷி மட்டுமே அவளிடம் வாய் கொடுக்கும் ஆள். மற்றபடி மேகநாதன் கேட்டாலும் அகிலாண்டேஸ்வரி கேட்டாலும் ஒற்றை வார்த்தை மட்டுமே பதில்.

ஷோபனாவையும் வெங்கடேஷையும் முற்றிலும் தவிர்த்து விட்டாள். அவர்கள் இருந்தாலே ரூமிற்குள் அடைந்து விடுவாள். ஷோபனாவும் அதிகம் எதுவும் வம்பிழுக்க வில்லை. வெங்கடேஷ் அவளை பயப்படுத்தி வைத்திருந்தான்.

இப்படி இருந்தால் உனக்கும் எனக்கும் சரிவராது பிரிவு தான் என்று. அதனால் அடக்கியே வாசித்தாள். அதையும் விட நாகேந்திரனுக்கு பணமும் அவன் தான் ஏற்பாடு செய்து கொடுத்தான். அதனாலும் அமைதியானாள். வீட்டில் சில சில வேலைகளும் செய்ய ஆரம்பித்து இருந்தாள்.

ஆனாலும் வீடு ஏன் இப்படி ஆகிவிட்டது என்ற கவலை மேகநாதனுக்கும் அகிலாண்டேஸ்வரிக்கும் அதிகமாகியது. இப்படி அவர்களின் வீடு இருந்தது இல்லை.

எப்போதும் கடவுளை வணங்கும் துளசி இப்போது கடவுளை கூட நாடுவதாக தெரியவில்லை. அவளின் நினைவில் திரு திரு என்ற மனிதன் மட்டுமே. மகள் கூட பின் தான்.

முன்பானால் மகளுக்கு தெரியாமல் கவலைகளை மறைத்து இருந்தவளுக்கு இப்போது அது கூட முடியவில்லை. அம்மாவும் அப்பாவும் இப்படி தான் என மகளின் மனதில் ஒரு பிம்பம் இருக்க, அதனால் அவர்களின் வாழ்க்கை முறையில் பெரிதாய் முன்பு வித்தியாசங்கள் அவளுக்கு தெரியவில்லை.

ஆனால் இப்போது தெரிந்தது! துளசியிடமே, "அம்மா உனக்கு அப்பாக்கும் சண்டையா" என்று இரண்டு மூன்று முறை கேட்டு விட்டாள்.

"இல்லையே" என்று துளசி சொன்னாலும், "நீ பொய் சொல்ற" என்று சொல்லும் மகளிடம் என்ன சொல்வாள்.

"நீ இதெல்லாம் யோசிக்காதே, அப்படி எதுவும் இல்லை. அப்படி இருந்தாலும் சரியாகிடும்" என்று சொல்லியிருந்தாள்.

அதுவும் மீனாக்ஷி முழு ஆண்டு பரீட்சை லீவில் வேறு இருக்க, முழு நேரமும் அவளுக்கு அம்மாவை கவனிப்பது தவிர வேறு வேலை என்ன?

மகள் வீட்டில் இருப்பதால் அவளுடன் அதிக நேரம் செலவழிப்பதால் கொஞ்சம் யோசனைகள் குறைந்து இருந்தது. இல்லையென்றால் இன்னும் இன்னும் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பாள்.

ஆனாலும் இப்போதெல்லாம் திருவின் இந்த பாராமுகம் அப்படி வருத்தப்படுத்த ஆரம்பிக்க, "என்ன உனக்கு வீண் பிடிவாதம். அவனிடம் நல்ல மாதிரி நட" எனத் தோன்ற, என்ன நல்ல மாதிரி நடப்பது என்று கூடத் தெரியவில்லை.

சோர்ந்து ஓய்ந்து தெரிந்தாள். திரு அவளை பார்த்தால் தானே, அவளின் நிலை தெரிய. கடிவாளமிட்டது போல செல்பவனை யார் என்ன செய்ய முடியும்.

அவன் இப்படி பாராமுகம் காண்பிக்க, காண்பிக்க, "நான் யார் அவனிற்கு" என்ற எண்ணம் ஓங்க ஆரம்பித்தது.

இந்த உளைச்சல்களுக்கெல்லாம் சிகரம் வைத்தார் போல, அன்று காலையில் எட்டு மணிக்கே நாகேந்திரனும் சாரதாவும் அழைக்கக் வந்திருந்தனர். அவரின் தொழிலை விரிவு படுத்தி இருந்தார், அதற்கு பணம் போதாமல் வேலைகள் பாதியில் நிற்க, அதுவரை போட்ட பணமும் நஷ்டமாகும் சூழ்நிலை. அதற்காக தான் திருவிடம் பணம் கேட்டிருந்தார். வட்டியில்லா

பணம், வட்டியோடு பணம் வாங்கினால் வட்டி கட்டவே சரியாகப் போய்விடும், லாபம் பார்க்க முடியாது.

காலையிலேயே புது விஸ்தரிப்பின் பூஜைக்கு அழைக்க வந்தவர், வீட்டில் இருக்கும் ஒவ்வொருவரையும் தனித் தனியாக அழைத்தார்.

வீட்டிற்கு வந்தவர் என்பதால் துளசி வந்து "வாங்க சித்தப்பா, வாங்க சித்தி" என்று மரியாதை வைக்க, அவரும் சாரதாவும் அவள் புறம் திரும்பக் கூட இல்லை.

எல்லோரும் ஹாலில் இருந்தனர், மேகநாதன் அகிலாண்டேஸ்வரி, வெங்கடேஷ், ஷோபனா, மீனாக்ஷியும் அங்கே தான் அமர்ந்திருந்தாள். எல்லோரும் இதனை கவனித்தனர்.

திரும்பக் கூட இல்லாத போது அவளுக்கு அழைப்பு ஏது?

ஆனால் துளசி அதனை எல்லாம் கண்டு கொள்ளவில்லை, "வாங்க" என்று அழைத்து விட்டு அவளின் ரூம் உள்ளே சென்று விட்டாள். அது ஒரு மாதிரி அவர்களை எரிச்சல் படுத்தியது. ஷோபனா வேறு துளசி தான் திருவிடம் பணம் கொடுக்க கூடாது என்று சொன்னாள் என்றும் சொல்லியிருந்தாள்.

திரு பணம் கொடுக்காத போது பணத்திற்கு நாயாய் பேயாய் அலைந்தும் பணம் பிரட்ட முடியவில்லை.

கடைசியில் வெங்கடேஷ் தான் பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்திருந்தான். பணத்திற்கு அலைந்ததில் அப்படி ஒரு ஆத்திரத்தில் இருந்தார் திருவின் மேலும் துளசியின் மேலும்.

அவர் அழைத்துக் கொண்டிருந்த போதே திருவும் அவரின் டென்னிஸ் ப்ராக்டிஸ் முடிந்து வந்து விட்டான்.

“வாங்க மாமா” என்று அவனும் அழைக்க,

“அதான் வந்துட்டேனே மாப்பிள. நீ பணம் குடுக்கலைன்னாலும் இப்போ என்ன வேலை ஆரம்பிக்காமையா விட்டுட்டோம்” என்று அவனை பார்த்த உடனே ஆரம்பித்தார்.

“அச்சோ, இவர் எதுக்கு இதை பேசுகிறார்” என்று அங்கிருந்த அனைவருக்குமே ஒரு மாதிரி ஆகியது. ஷோபனாவிற்கே “இப்போ தான் இந்த அத்தை என்னை திட்டாம இருக்காங்க, இந்தப்பா என்ன செய்யறார்?” என்று தோன்ற ஆரம்பித்தது.

பின்னே அகிலாண்டேஸ்வரியா கொக்கா என்பது போல ஷோபனாவை பேசி பேசியே ஒரு வழியாக்கி இருந்தார்.

திரு ஒன்றுமே பேசவில்லை, “சந்தோஷம் மாமா” என்று சொல்லி இடத்தை விட்டு நகர ஆரம்பித்தான்.

“என்ன மாப்பிள சந்தோசம்ன்னு ஒரு வார்த்தைல முடிச்சிட்ட, உன் பொண்டாட்டி அந்த ஒண்ணுமில்லாதவ எனக்கு பணம் குடுக்க கூடாது சொன்னாலாமே” என்றும் பேச, திரு ஆத்திரத்தின் உச்சிக்கே சென்றான். விட்டால் அவரை அடித்து விடும் கோபம் பொங்கியது. மிக முயன்று கட்டுக்குள் வந்தான். அவனின் முகம் அதனை நன்கு பிரதிபலித்தது.

பணம் ஏற்பாடு செய்து கொடுத்த வெங்கடேஷிற்கும் அப்படி ஒரு கோபம் பொங்கியது.

மேகநாதன் “மச்சான் தேவை இல்லாதது பேசாதீங்க” என்று நேரடியாகவே நாகேந்திரனிடம் கோபப்பட்டார்.

“எப்படி நான் இதை விட முடியும், எனக்கு பணம் குடுக்க கூடாதுன்னு எவ்வளவு தைரியம் இருந்தா சொல்லுவா? இந்த வீட்டு மூத்த மாப்பிள்ளை நானு!” என்று எகிறினார்.

அவர் வரும் போதே முடிவோடு வந்திருக்கிறார் என்று அனைவருக்கும் புரிந்தது.

“என் பொண்டாட்டி ஒன்னுமில்லாதவலா உங்களுக்கு” என்று நிறுத்தி நிதானமாகக் கேட்டான் திரு.

அதற்குள் தான் அங்கே அடிபடுவதால் ரூமின் வாசல் அருகே வந்து நின்றாள் துளசி.

“ஆமா, இல்லையா பின்ன? ஒரு தோடு போட்டு அவ கல்யாணம் பண்ணி வந்தா, எங்க பொண்ணு அப்படியா?” என்று சாரதாவும் பேசினார்.

திரு இன்னும் நிதானமாகவே “தேவையில்லாதது பேச வேண்டாம். அவ உங்களுக்கு பணம் குடுக்க வேண்டாம்னு எப்பவும் சொல்லல. ஷோபனாவோட அம்மா அப்பாக்கு குடுக்க வேண்டாம் தான் சொன்னா”

“அது மட்டும் சொல்லலாமா?” என்று அவர் பேசும் போதே,

“நீங்க பேசாதீங்க, பேசறது சரியில்லை!” என்றான் கோபமாய் வெங்கடேஷ். மாமனார் என்பதையும் விட பணம் அவன் தானே ஏற்பாடு செய்து கொடுத்திருந்தான்.

வீட்டுக்கு வந்த மாபிள்ளையை எப்படி வெளியே போ என்று சொல்வது என்ற யோசனைக்கே வந்து விட்டார் மேகநாதன். மகன்கள் இருவரும் பேசிக் கொள்ளும் போது தான் நுழைவது சரியல்ல என்று அகிலாண்டேஸ்வரி மௌனம் காத்தார்.

“அவங்கப்பாக்கு உங்க பொண்ணு மரியாதை குடுக்கலை, அதனால அவ பணம் கொடுக்க வேண்டாம் சொன்னா! அதனால் இப்படி இனி பார்க்கும் போதெல்லாம் தேவையில்லாமையோ, மரியாதை

இல்லாமையோ பேச வேண்டாம்!'' என்றான் கறார் குரலில் திரு.

''என்ன இவங்கப்பாம்மா பெரிய ஆளா? அவங்களுக்கு மரியாதை குடுக்கலைன்னு இவ எங்களுக்கும் குடுக்க மாட்டாளா?'' என்று ஏகத்திற்கும் எகிற,

''சும்மா நானும் பார்த்துட்டே இருக்கேன், என்ன நீங்க அவ இவன்னு பேசறீங்க? யார் நீங்க? இல்லை யார் நீங்க? என் பொண்டாட்டியை மரியாதையில்லாம பேச! இது எங்கப்பாவோட வீடா போயிடிச்சு இல்லை முதல்ல வெளில போடான்னு சொல்லியிருப்பேன்!'' என்று திரு தன் பொறுமையை விட்டு கத்தினான் .

''எங்க சொல்லிடுவியா? என்னை சொல்லிடுவியா?'' என்று அவர் அவன் அருகில் வேஷ்டியை மடித்து கட்டி நெருங்க,

வெங்கடேஷும் மேகநாதனும் ''என்ன பண்றீங்க நீங்க?'' என்று நாகேந்திரனை நிறுத்தினர்.

துளசிக்கு அழுகை பொங்கியது ''என்னடா இது?'' என்பது போல,

''பணம் வந்த உடனே என்ன மாதிரி நடக்கறீங்க நீங்க என்ன மனுஷன்யா நீ'' என்று திருவும் பேசிவிட்டான்.

“என்ன மனுஷன்னா கேட்கற நீ? உன்னை விட பெரிய மனுஷன்டா! ஒரு பணம் கேட்டா குடுக்கறேன்னு சொல்லிட்டு, அவ்வளவு கெஞ்ச வெச்சிட்டு, என்னை அசிங்கப் படுத்திட்ட நீ! அப்படி என்ன ஊரு உலகத்துல இல்லாத பொண்டாட்டி நீ கட்டியிருக்க, அவ சொன்னா குடுக்கமாட்டியா!” என்று கத்தினார்.

அதற்கு மேல் பொறுக்க முடியாதவராக மேகநாதன், “நீங்க பேசறது கொஞ்சமும் சரியில்லை. மச்சான்றதுக்காக எங்க பொண்ணை மரியாதையில்லாம பேசறதை நாங்க பொறுத்துக்க முடியாது. வாங்க, நாம சத்தியா வீட்டுக்கு போகலாம்” என்று அவர் பேச,

“நீ முதல்ல இங்க இருந்து வெளில போடா” என்றே சொல்லி விட்டான் திரு.

“நீ என்னடா சொல்றது? இது என்ன உன் வீடு மட்டுமா? என் பொண்டாட்டியோட பிறந்த வீடு, என் பொண்ணோட புகுந்த வீடு!” என்று அவர் அப்போதும் வாய் பேசி நின்றார்.

அதற்கு மேல் பொறுக்க முடியாதவனாக, “தப்பு தான்! என் தப்பு தான் இப்படி பேசறீங்க! உங்களுக்கு பணம் எப்படி வந்ததுன்னாவது தெரியுமா?” என்று வெங்கடேஷ் பேசப் பேச,

துளசி இருப்பதை பார்த்து "டேய் வெங்கடேஷ், பேசாம இரு!" என்று திரு அதட்டும் போதே,

"இவன் தான் கொடுத்தான், உங்க பொண்ணு எங்கப்பா ரொம்ப சிரமப்படறார்ன்னு கெஞ்சி கேட்டான்னு நான் பணத்துக்கு நாயா பேயா அலையறதை பார்த்து எங்கண்ணன் தான் கொடுத்தான். அவன் மூலமாவே பயனடைஞ்சிட்டு அவனையே இப்படி பேசறீங்களே நீங்க எல்லாம் சத்தியமா மனுஷனே இல்லை!" என்று சொல்ல,

அதை கேட்டிருந்த துளசி அப்படியே நின்று விட்டாள்.

"ஓஹ்! அப்போது என்னுடைய பேச்சிற்கு எந்த மரியாதையும் இல்லை, அதையும் விட பணமும் கொடுத்து விட்டு இத்தனை நாட்களாக என்னை திரும்பியும் பார்க்கவில்லை!"

"வேண்டாம்! இப்படி ஒரு வாழ்க்கை எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று தோன்ற ஒரு நிமிடமும் யோசிக்கவில்லை,

மகளிடம் வந்தவள் ஆவேசமாக "எழுந்துரு மீனா!" என்றாள். இத்தனை நேரம் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்திருந்த மீனாக்ஷி அம்மாவின் பேச்சை தட்டாமல் செய்ய,

அவளின் கை பிடித்தவள் யாரிடமும் எதுவும் சொல்லாமல் வாயிலை பார்த்து நடக்க,

“துளசி எங்க போற?” என்று அகிலாண்டேஸ்வரி கேட்க,

“போதும் அத்தை, எனக்கு இங்க இருக்கவே முடியலை, உங்க வீட்டுக்கு கல்யாணம் பண்ணி வந்தா என்னை யார் வேணும்னாலும் என்ன வேணா பேசலாம்னு இருக்கா?”

“அவ இவன்னு எப்படி பேசறாங்க, அதையும் கேட்டுட்டு இங்க எல்லோரும் இருக்கீங்க, இவர் யார் என்னை பத்தி பேச, முதல்ல இவர் பொண்ணு இப்போ இவர். எதனால் இதெல்லாம்? நீங்க, உங்க பையன், உங்களை சுத்தி இருக்குறவங்க, எனக்கு குடுத்த மரியாதை பார்த்து தான் இவங்களுக்கு என்னை இப்படி பேச தைரியம் வருது!”

“இவர் தம்பி பணத்துக்கு அலையறார்னு பணத்தை தூக்கி கொடுத்தாரே, அந்த தம்பி ஒரு நாளாவது என்னை அண்ணின்னு கூப்பிட்டு இருப்பாரா? இருந்திருந்தா அவர் வீட்டுக்காரம்மா என்னை என் வீட்டு ஆளுங்களை பேசுமா?”

துளசி பேசப் பேச வெங்கடேஷிற்கு மனதிற்கு கஷ்டமாய் போய் விட்டது. ஆம்! துளசி சொல்வது சரி தானே! மரியாதை குறைவாய் எல்லாம் துளசியை

நடத்தியது கிடையாது என்றாலும், துளசி சொல்வது போல தானே!

அதிலும் திரு தம்பியை எங்கேயும் விட்டுக் கொடுத்தது இல்லை. இதோ பணத்திற்கு அலைகிறான் என்று தெரிந்ததும், அடுத்த நிமிடம் அவனாகவே அழைத்து கொடுத்தான். இப்போது அதனால் தான் இவ்வளவு பிரச்சனைகள்! அப்போதும் பல முறை சொன்னான் வெளில தெரியக் கூடாது என!

“முதல்ல உங்க பையன் என்கிட்டே பேசறாரா? என் பேர் சொல்லி கூப்பிடுறாரா?” என்று ஆத்திரத்தில் பேசியவள், தங்களை பற்றி நடுசபையில் பேச விருப்பமில்லாதவளாக “போதும், எனக்கு உங்க வீட்ல இருந்தது போதும்!” என்று கிளம்ப,

துளசி தங்களைப் பற்றி எல்லோர் முன்னும் பேசியது அப்படி ஒரு கோபத்தை திருவின் உள் கிளப்பியது.

“ஏய், எங்கடி போற, ஒழுங்கா உள்ள போ!” என்று திரு ஆவேசமாக கத்தினான். இப்படி எல்லோர் முன்னும் அவள் செல்கிறேன் என்றது அவனுக்கு அவமானமாய் தான் தோன்றியது.

அவனிடம் பதிலே பேசவில்லை, அவள் பாட்டிற்கு நடந்தாள்.

“சொல்லிட்டே இருக்கேன் துளசி, உள்ள போ!” என்று திரு பேசப் பேச அவள் வாயில்படியை தாண்டி விட்டாள். அப்படி ஒரு கோபம் திருவிற்கு பொங்க, எதிரில் இருந்த சேரை எட்டி உதைக்க அது பறந்து சுவரில் பட்டு விழுந்தது.

எல்லோரும் அவனின் கோபத்தை பார்த்து அதிர்ந்து நின்றனர்.

மகனின் இந்த பரிமாணத்தில் பெற்றவர்கள் ஏறக்குறைய பயந்து தான் நின்றனர்.

பின் அவ்வளவு வேகமாக வந்து துளசி மீனாக்ஷியை பிடித்திருந்ததை இழுத்தவன், “நீ போறதானா போடி, என் பொண்ணை ஏன் கூட்டிட்டி போற, நீ போடி போ!” என்று சொல்லி மகளை மட்டும் வீட்டுக்குள், “அப்பா விடுங்க!” என்று மகள் கத்தக் கத்த, தர தர வென்று இழுத்து வந்தவன், அவர்களின் ரூமின் உள் இருந்த ரூமில் வைத்து பூட்டி விட்டான். பின் அவனின் ரூமில் கையை தலைக்கு கொடுத்து அமர்ந்து விட்டான்.

அப்படி ஒரு கண்மண் தெரியாத ஆத்திரம்!

அகிலாண்டேஸ்வரியும் “என்னடா பண்ற திரு?” என்று கத்திக் கொண்டிருந்தார். மேகநாதன் துளசியிடம் விரைந்தார்.

துளசி ஒரு நிமிடமே தேங்கி நின்றவள், செருப்பைக் கூட போட்டுக் கொள்ளாமல் விறு விறு வென்று படியிறங்கி நடக்க ஆரம்பித்தாள்.

நாகேந்திரன் அருகில் வந்த வெங்கடேஷ் "உங்க பொண்ணைக் கூட்டிட்டு கிளம்பிடுங்க, இனிமே நீங்க யாரும் எங்க வீட்டு வாசல் படியை மிதிக்க கூடாது!" என்று சொல்லி வேகமாக அவன் தான் துளசியின் பின் படியிறங்கி ஓடினான்.

அத்தியாயம் ஒன்பது

“என்னவாகிற்று எனக்கு?” என்று துளசி நினைக்காத நாளே இல்லை. ஆம்! அந்த நிமிடம் என்னவாகிற்று என்று தெரியவில்லை வீட்டை விட்டு வந்து விட்டாள். வந்து இதோ மூன்று மாதம் ஆகிவிட்டது.

வெங்கடேஷ் பின்னோடு வந்து அழைத்த போது கையினில் காசில்லாததால் “என்னை பஸ் வெச்சி விடுங்க” என்று மட்டும் சொல்ல,

“சரி வாங்க” என்று சொல்லி அவளிற்கு அவசரத்திற்கு ஒரு ஸ்லிப்பர் வாங்கி கொடுத்து பணம் கொடுத்து அனுப்பிவிட்டவன்,

“அது நான் ரொம்ப பணத்துக்கு அலைஞ்சேன், அதுக்காக கொடுத்தான்!” என்று விளக்கமும் கொடுக்க,

“கொடுத்தது பிரச்சனையில்லை, என்கிட்டே சொல்லவேயில்லை” என்று மட்டும் முடித்துக் கொண்டு பஸ் ஏறிவிட்டாள்.

இப்போது வீட்டை விட்டு வந்ததை நினைத்தால் சிறு பிள்ளைத்தனமாய் தோன்றியது!

அவள் வந்த அடுத்த நாளே மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் அவளின் பின்னே வந்தனர். “வீட்டிற்கு வா” என அழைத்து. ஆனால் அவளுக்கு

போக மனதில்லை. ‘‘வர மாட்டேன்’’ என்றும் சொல்லவில்லை.

‘‘இன்னும் கொஞ்சம் நாள் கழிச்சு வர்றேன் அத்தை, அப்படி என்னால இங்க ரொம்ப நாள் இருக்க முடியாது. எனக்கு வேற போக இடமும் கிடையாது, நான் படிக்கவும் இல்லை வேலைக்கும் போக முடியாது, படிக்காதவங்க எல்லாம் வேலை செய்ய முடியாதுன்னு கிடையாது அப்படி என் குடும்பத்தை விட்டு தனியா நிக்கிற அளவுக்கு எனக்கு மனப் பக்குவம் கிடையாது’’

‘‘கொஞ்சம் நாள் இருந்து கொஞ்சமா எனக்குள்ள இருக்குற சூடு சொரணை எல்லாம் ஒழிச்சிட்டு வர்றேன். எனக்கு இப்போ ரொம்ப செத்து போகணும் போல இருக்கு, ஆனா என் பொண்ணுக்கு கல்யாணம் ஆகற வரையாவது நான் இருக்கணும் தானே’’ என அழுது கொண்டே சொல்ல,

அந்த பெரியவர்களுக்கு அப்போது எதுவும் செய்ய முடியவில்லை. ‘‘சீக்கிரம் வந்துடு, உன் பொண்ணு முகத்தை எங்களால பார்க்க முடியலை’’ என்றனர்.

‘‘வந்துடறேன்’’ என்று தான் சொல்லி அனுப்பினாள். ஆனால் இதுவரை போக கால் வரவில்லை. அவளுள் ஒரு அதீதமான சோர்வு கூட.

மகளின் ஞாபகம்! கூடவே திருவின் ஞாபகம்! ‘‘என்னை போ என்று கோபத்தில் சொல்லிவிட்டான் தான். ஆனால் இது வரை வா என்று கூட கூப்பிடவில்லையே’’ இப்போது அவளிடம் கைபேசியும் இல்லை. பிரசன்னாவும் மீராவும் ‘‘வாங்கி கொடுக்கவா’’ என்று கேட்டும் அவளுக்கு வைத்துக் கொள்ள மனதில்லை.

திரு! அவனின் நிலை என்ன என்று யாராலும் கணிக்க முடியவில்லை. ஏனென்றால் அவன் எப்போதும் போல இருப்பது போலத் தான் தோன்றியது.

அம்மா சென்ற அன்று, அம்மாவின் பின் போக மகள் ஏகத்திற்கும் ரகளை செய்ய, மகளை விட்டான் ஒரு அரை! அதை பார்த்து மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் மீனாக்ஷியை தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டனர். ‘‘மனுஷனாடா நீ, இனிமே புள்ள மேலே கை வை பாரு!’’ என்று அகிலாண்டேஸ்வரி அவனை பிடித்து தள்ளினார்.

அம்மாவின் கோபம் பார்த்து தான் அடங்கினான். விட்டிருந்தால் மகனை அடித்திருப்பார்.

‘‘இந்த சண்டைகளை பார்த்த மீனாக்ஷி பின் அம்மாவிடம் போகிறேன்’’ என்று அப்பாவிடம் கேட்கவேயில்லை.

இந்த களேபாரத்தில் நடந்த நல்ல விஷயம் அகிலாண்டேஸ்வரியும் மீனாக்ஷியும் நெருங்கியது மட்டும் தான். ஆனாலும் அம்மாவின் நினைவு அவ்வப் போது வரும் போது அழ ஆரம்பித்து விடுவாள் மீனாக்ஷி.

அப்போது துளசியின் பேச்சு மட்டுமே அவளை தேற்றும். ஆம்! வீட்டின் அலைபேசியில் இருந்து அம்மாவிற்கு அழைத்து விடுவாள்.

“அம்மா சீக்கிரம் வந்துடுவேன், இப்படி அழக் கூடாது! கலாட்டா பண்ணக் கூடாது! நீ தானே அப்பாவை பார்த்துக்கணும்!” என்று சொல்வாள்.

“போ, போ, நான் யாரையும் பார்க்க மாட்டேன்” என்று அலைபேசியிலேயே கத்துவாள் மீனாக்ஷி.

“ஷ், அப்படி எல்லாம் பேசக்கூடாது, அம்மா சீக்கிரம் வந்துடுவேன்”

“இப்படி தான் நீ எப்பவும் சொல்ற, ஆனா வரமாட்டேங்கற” என்றவள் அன்று அலைபேசி வைத்த பிறகும் வெகுவாக அழுது விட, அதிசயமாய் விரைவில் வீடு வந்த திருவிற்கு அதனை பார்த்து கஷ்டமாகப் போய் விட்டது.

மகள் அழுகிறாள்! அவன் அழவில்லை! அதுவே வித்தியாசம். முன்பிருந்தே யாரிடமும் எதுவும் காண்பித்து பழக்கப்படாதவன் என்பதால் எல்லோருக்கும்

அவன் எந்த பாதிப்பும் இல்லாத கல் மனிதனாய் தான் தோன்றினான்.

ஆனால் உண்மையில் மனதளவில், உடலளவில் சிதலமடைந்து கொண்டிருந்தான். "போய் விட்டாளா? என்னை விட்டு போய் விட்டாளா? அவ்வளவு தானா நான் அவளிற்கு, போகட்டுமே! எனக்கு என்ன?" என்பது போல தான் வீராப்பு!

இன்று மகள் தேம்பி தேம்பி அழவும், அப்படி கஷ்டமாய் போய் விட்டது. அவளுக்கு ஏழாம் வகுப்பு பள்ளி திறந்தும் ஒரு இரண்டு மாதம் ஆகியிருக்க, பிடிவாதத்திற்காகவே புத்தகம் என்ற ஒன்றை கையில் எடுத்து படிக்கவேயில்லை.

அம்மா வேண்டும் அழைத்து வாருங்கள் என்று அப்பாவிடம் கேட்கவேயில்லை. கேட்டிருந்தால் அதை சாக்கிட்டாவது சென்றிருப்பானோ என்னவோ? மீனாக்ஷி அம்மாவிடம் தான் வா வா என்று சொல்லி கொண்டிருந்தாள். பிடிவாதத்தில் அப்பாவை கொண்டு அப்படியே பிறந்திருந்தாள்.

ஸ்கூலில் எந்த நோட்டும் எழுதுவதில்லை. அவர்கள் கொடுக்கும் வேலையையும் செய்வதில்லை. எத்தனை பனிஷ்மென்ட் கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறாள் என்று பள்ளியில் இருந்து அழைத்து சொன்னார்.

சீக்கிரம் சரி செய்து விடுகிறேன் என்று அவர்களிடம் சொல்லியிருந்தான், அதனால் தான் அன்று விரைவில் வீடு வந்திருந்தான். வந்த போது அம்மாவும் அப்பாவும் கோவில் சென்றிருக்க, தனம் சமையல் அறையில் இருக்க, ஹாலில் இருந்து இவள் துளசியிடம் அழைத்து பேசிக் கொண்டிருப்பது கண்களில் பட்டது.

பேசி முடித்து தான் அப்படி தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்தாள்,

மகளின் அருகில் போய் அமர்ந்தவன் "அழக் கூடாது மீனா" என்று சொல்ல,

"அப்போ என்னை அம்மா கிட்ட கொண்டு போய் விடறீங்களா?" என்றாள்.

"சரி" என்பது போல தானாக அவன் தலை ஆடியது.

"எப்போ? எப்போ?" என்று மகள் கண்களை துடைத்து வேகமாய் கேட்க,

"நீ ஸ்கூல்ல எல்லா வொர்க்சும் செஞ்சு குட் கேர்ள்ன்னு அவங்க சொன்னா" என்று சொன்ன அடுத்த நிமிடம், என்னவோ இரண்டு மாத வேலையை அன்றே முடித்து விடுபவள் போல பள்ளியின் பையை எடுத்து அமர்ந்தாள்.

பார்த்தவனுக்கு தான் கண்கள் கலங்கி விடுமோ என்பது போல ஆகிற்று. ‘‘ஏண்டி உயிரை எடுக்கற, வந்துடுடி!’’ என்றான் மானசீகமாக. அது துளசியின் காதுகளை எட்டியதோ?

மகளின் அழுகை துளசியையும் அசைத்திருக்க, நாளை காலை கிளம்பலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

காலை கிளம்பலாம் என்று முடிவெடுத்து அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து குளித்து இருந்தவள், ஐந்து மணிக்கு பிரசன்னாவை எழுப்பி பஸ் வைத்து விட சொல்லலாம் என்று யோசித்துக் கொண்டிருக்க, துளசியிடம் இருந்த அவளின் அம்மாவின் கைபேசி அழைத்தது.

அதுவும் திருவின் வீட்டின் லேண்ட் லைனில் இருந்து, என்னவோ ஏதோவென்று துளசி எடுக்க,

‘‘மா’’ என்ற மகளின் குரல் ஹீனமாய் ஒலித்தது.

‘‘என்னம்மா?’’ என்று பதறி துளசி கேட்க,

‘‘மா, எனக்கு எதோ டிசீஸ் வந்துடுச்சு. நான் செத்துப் போகப் போறேன்’’ என்றாள் அதே குரலில்.

மனம் அப்படி பதறிய போதும் ‘‘ஷ், உளறாதே!’’ என்று மகளை சப்தமாய் அதட்டிய துளசி, ‘‘என்ன? என்ன தெளிவா சொல்லு?’’ என்றாள்.

“மா” என்று மகள் தன் நிலையை சொல்ல,

“ஷப்பாடா” என்று மனம் ஆனா போதும், மகளுடன் தான் அப்போது இல்லாத நிலையை அறவே வெறுத்தவள், “அது ஒன்னுமில்லைடா, அது நல்ல விஷயம் தான்!” என்று மகளுக்கு விளக்கி,

“பாட்டி இல்லையா? பாட்டியை கூப்பிடு, அம்மா இப்போ கிளம்பி ஊருக்கு வர்றேன்” என்றாள்.

“இல்லை, பாட்டி இல்லை, தாத்தாவும் பாட்டியும் நேத்து நைட் திருப்பதி போனாங்க”

“சரி, ஒன்னும் பிரச்சனையில்லை, பயப்படாதே அம்மாவோட கபோர்ட்ல” என்று ஆரம்பித்து அவளுக்கு விளக்கி, என்ன செய்ய வேண்டும் என்று சொல்லி, “பின்ன நீ போய் படுத்துக்கோ, அம்மா வந்துடுவேன் காலையில” என்றாள்.

“நிஜம்மா” என மகள் கேட்க, “நிஜம்மா” என்று சொல்லியவள்,

ஃபோன் வைத்தவுடன் பிரசன்னாவை எழுப்பி, “ஊருக்கு போகானும் வா” என்றாள்.

“பஸ் ஏத்திவிட சொன்ன அக்கா” என்றவனிடம்,

“இல்லை ஒரு அவசரம், எனக்கு போகணும்! டென்ஷனா இருக்கு, தனியா போக முடியாது, ஒரு டேக்சி பேசு” என்றவள்,

“அம்மா அப்பாவை எழுப்பாதே, நாம கிளம்பலாம், பின்ன சொல்லிக்கலாம்!” என்று அவனை தயாராக கூட விடாமல், அப்படியே அவனின் முக்கால் பேன்ட், டி ஷர்டில் உறங்கியிருந்தவன் முகம் மட்டும் கழுவ செய்து கூட்டி வந்தாள்.

“என்ன விஷயம்?” என்றவனிடம், “நீ வருவியா இல்லை நான் தனியா போகவா” என, அதன் பிறகு பிரசன்னா எதுவும் கேட்கவில்லை.

காரில் வரும் போதே அவளின் அம்மா அழைத்தவர் “எங்க துளசி இருக்க?” என,

“மா, பிரசன்னாவோட ஊருக்கு போயிட்டு இருக்கேன். போயிட்டு கூப்பிடறேன். பிரச்சனை ஒண்ணுமில்லை” என்று மட்டும் சொல்லி வைத்து விட்டவள்,

பின்னே திருவை அழைத்தால்! ஆம், திருவை தான் அழைத்தால்!

பிரசன்னாவின் கைபேசியில் இருந்து தான் அழைத்தால். பிரசன்னாவின் நம்பர் திருவிடம் இருந்தது. மனைவியின் நினைவில் வெகு நேரம் உறங்காமல்

இருந்தவன், மூன்று மணிக்கு மேல் தான் உறங்கியிருந்தான். அதனால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

விடாமல் இரண்டு மூன்று முறை அடித்த பிறகு தான் எடுத்தான். "ஹல்லோ" என்ற குரலிலேயே அவன் உறக்கம் தெளியவில்லை என்று துளசிக்கு புரிந்தது.

"நான் வீட்டுக்கு வந்துட்டு இருக்கேன், நான் வர்றவரை மீனாட்சியை தனியா விட்டுட்டு எங்கயும் போக வேண்டாம்" என்ற துளசியின் குரல் கேட்க,

அடித்து பிடித்து எழுந்து உட்கார்ந்தான். பின் அழைப்பு எந்த நம்பரில் இருந்து என்று பார்க்க பிரசன்னாவின் நம்பரில் இருந்து.

"துளசி" என்ற அவனின் அழைப்பு உயிர்வரை தீண்டியது. அவளின் பேரை சொல்லி எப்போதாவது அழைத்தானா என்பதெல்லாம் ஞாபகமில்லை. இப்போது கேட்டதே அப்படி நெகிழ்த்தியது. உடலில் ஒரு சிலிர்ப்பு, கண்களை மூடிக் கொண்டாள்.

"சே, சே, இவனை விட்டா இத்தனை நாள் தனியாக உட்கார்ந்து இருந்தேன்!" என்று தான் அந்த நொடி தோன்றியது.

பின் திரு அமைதியாகிவிட ,அவள் சொல்லியதெல்லாம் திரும்ப சொன்னாள்.

“நான் வந்துட்டு இருக்கேன், மீனாக்ஷியை படுத்திருக்க சொல்லியிருக்கேன், அவளை தொந்தரவு பண்ணவேண்டாம். படுத்திருந்தா தூங்கிடுவா, நீங்க அவளை விட்டு எங்கேயும் போகாதீங்க”

“மாமாவும் அத்தையும் திருப்பதி போனாங்கலாமே, போகக் கூடாது! அவங்களை திரும்ப வரச் சொல்லுங்க!” என்று பட படவென்று சொல்ல, புரிந்தது போலவும் இருக்க, புரியாதது போலவும் இருக்க,

“ஏன்?” என்றான் ஒற்றை வார்த்தையில்.

“மீனாக்ஷி பெரிய பொண்ணாகிட்டா” என்றாள் தாழ்ந்த குரலில், அருகில் அமர்ந்திருந்த பிரசன்னாவிற்கு நன்கு கேட்டது.

“அதுக்குள்ளயா, பன்னண்டு வயசு தானே ஆகுது” என்றான் கவலையான குரலில் திரு.

“அது பத்தியெல்லாம் ஒன்னுமில்லை, ஒரு ஒருத்தர் ஒரு ஒரு மாதிரி!” என்று திருவிடம் சொல்லியவள், “அத்தையை திரும்பி வரச் சொல்லுங்க, காரணம் சொல்ல வேண்டாம், காரணம் சொன்னா அவங்க சின்ன அத்தைங்க கிட்ட எல்லாம் சொல்லிடுவாங்க! அவங்க உடனே மீனாக்ஷியை பார்க்க வீட்டுக்கு வந்துடுவாங்க!”

“நான் வர்ற வரை யாரும் அவளை தொந்தரவு பண்ண வேண்டாம். காலையிலயே ரொம்ப பயந்துட்டா!

பயந்து தான் ஃபோன் பண்ணினா, இவங்க வந்து ஆர்ப்பாட்டம் பண்ணினா என்னவோ ஏதோன்னு நினைக்க போறா, நான் சொல்லி தான் இருக்கேன், நான் வந்துட்டே இருக்கேன்!" என்று சொல்ல,

"ம்ம், ம்ம்" என்று உம் கொட்டிக் கொண்டிருந்தான்.

துளசி பேசி முடித்த பிறகும் அவனுக்கு கைபேசியை வைக்க மனதில்லை, அப்படியே வைத்திருந்தான், "வெச்சிடட்டுமா?" என்று துளசி கேட்க,

அதற்கும் "ம்ம்" தான்.

தான் முன்பிருந்தே இப்படி அவனிடம் பேசி பேச வைத்திருக்க வேண்டும். அவனை தள்ளி தள்ளி நிற்க விட்டது என்னுடைய தவறு என்று தோன்ற ஆரம்பித்தது. இத்தனை நாட்கள் நடந்ததற்கு திரு வின் மேல் தப்பு சொல்லாமல் அவள் மேலேயே தப்பு சொல்லிக் கொண்டாள். புதிய முடிவாக அவள் மனதிற்குள் எப்போதும் திருவுடன் பேசுவதை இனி அவனுடன் நேராக பேச முடிவெடுத்துக் கொண்டாள். என்னவோ அந்த நிமிடம் தோன்றியது, "உன் வாழ்க்கை உன் கையில்! அவனிடம் முறைத்துக் கொண்டு முட்டாள் தனம் செய்யாதே!" என்று.

இப்படி முடிவெடுத்த பிறகு மனது மிகவும் லேசாக உணர்ந்தது. இந்த சில மாதங்களாக மனதை அழுத்திக் கொண்டிருந்த பாரம் மாயமாய் மறைந்தது.

பின் பிரசன்னாவிடம் திரும்பி "சாரி பிரசன்னா, அங்கே வீட்ல அத்தை இல்லை, அத்தை கிட்ட சொல்லாம இங்க அம்மா கிட்ட சொல்றது சரியில்லை. அத்தை கிட்ட இப்போவே சொன்னா நான் வீட்டுக்கு போறதுகுள்ளயே அங்கே பெரிய கும்பலே இருக்கும்!"

"என் பொண்ணை என்னை தவிர வேற யாரும் முதல்ல பார்க்கறதுல இஷ்டமில்லை அதான்!" என்றாள்.

"தட்ஸ் ஓகே கா" என்றவன், அவளின் கையை தட்டி கொடுத்து கண்களை மூடிக் கொண்டான். பின்னே என்னவோ ஏதோவென்று அவனும் பயந்து இருந்தான். இப்போது தான் மனது ஆசுவாசமாகியது.

திருவிற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. இவன் வெளியில் இவன் படுக்கையில் படுத்திருக்க, மீனாக்ஷி அங்கே உள்ளே அம்மாவின் படுக்கையில்!

மெதுவாக எழுந்து உள்ளே சென்றான்.

மீனாக்ஷி தலை முதல் கால் வரை போர்வையை போர்த்திக் கொண்டு படுத்திருந்தாள். ஏ சீ ஓடிக் கொண்டிருக்க, ஏ சீ யை அணைத்தவன் ஃபேன் போட்டு அங்கிருந்த ஜன்னலை திறந்து விட்டான். அப்போது தான் விடியத் துவங்கி இருந்தது.

தலை வரை போர்த்தியிருந்த போர்வையை முகம் தெரியுமாறு மெதுவாக எடுத்து விட்டான். அவன் எடுத்து விடவுமே கண்கள் திறந்து விட்டாள் மீனாக்ஷி.

அப்பாவை பார்த்ததும் "அப்பா நான் இன்னைக்கு ஸ்கூல் போகலை, அம்மா வர்றேன்னு சொன்னாங்க"

"சரி போகவேண்டாம். அம்மா வரட்டும்" என்று முடித்து கொண்டான்.

திரும்ப மகள் போர்வையை எடுத்து முகத்தினை மூடிக் கொள்ள, "முகம் முழுசும் போர்த்தாதே, முகத்தை வெளில காட்டு, இல்லை தலை வலிக்கும்" என்று சொல்லியவனாக, "நான் வெளில தான் இருக்கேன், எதுன்னாலும் அப்பாவை கூப்பிடு" என்று சொல்ல,

"பா பசிக்குது" என்று உடனே மகள் பதில் சொல்ல,

"என்ன வேணும்?" என்றவனிடம்,

"பால் வேண்டாம் காஃபி கொடுக்கறீங்களா?" என்றாள் சலுகையாக.

"ம்ம்ம்" என்று தலையாட்டி வந்துவிட்டான்.

சமையலறை வந்து பார்த்தால் அங்கே எல்லாம் துடைத்து வைத்து க்ளீனாக இருந்தது.

பால் இருக்கா இல்லையா என்று தெரியவில்லை. பிரிட்ஜ் திறந்து பார்த்தால் அங்கே இருந்தது. எடுத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பை பற்ற வைத்தான்.

முன்னே பின்னே அவன் சமையலறை வந்ததாக அவனுக்கு ஞாபகமே இல்லை. எப்போதும் எல்லாம் டைனிங் டேபிள் மேல் இருக்கும், துளசி இருப்பாள், அம்மா இருப்பார், அதனால் சமையல் அறைக்குள் அவன் நுழைவதே கிடையாது. அங்கே தனம் வேறு எப்போதும் இருப்பாள் அதனால் வரவே மாட்டான்.

ஒரு வழியாக பாலை காய்ச்சியவனுக்கு காஃபி தூள் எங்கே? சர்க்கரை எங்கே? என்று தெரியவில்லை. தெரிந்தாலும் அது எவ்வளவு போட வேண்டும் என்ற அளவு தெரியாது.

வேறு வழியில்லாமல் பிரசன்னாவின் கைபேசிக்கு அழைத்தான். அவனின் எண் பார்த்தவுடனே பிரசன்னா துளசியிடம் கொடுக்க,

துளசி எடுத்ததும், "இந்த தனம் இன்னும் வரலை, மீனா காஃபி கேட்டா, காஃபி தூள் சர்க்கரை எல்லாம் எங்கே இருக்கு" என்றான்.

திரு அழைத்தது ஆனந்தமாக இருக்க, திரு கேட்டதில் துளசிக்கு சிரிப்பு வந்தது. "தனம் வர இன்னும் ரெண்டு மணி நேரம் இருக்கு, நீங்க சமையல் கட்டுலையா இருக்கீங்க?" என்று ஆச்சர்யம் போல

வினவியவள், "உங்களுக்கு அடுப்பையாவது பத்த வைக்க தெரியுமா?" என்றாள் புன்னகையுடன்.

"அதெல்லாம் தெரியும்" என்றான் மிடுக்காக.

"உங்களுக்கு தெரியும்னு எனக்கு தெரியாதே" என்று புன்னகையுடனே பதில் சொன்னவள், "உங்க தம்பி எழுந்தாச்சான்னு எட்டி பாருங்க, அவர் கிட்ட கேளுங்க எடுத்து தருவார், இல்லை அவர் கிட்டயே கலக்கி குடுக்க சொல்லுங்க" என்றவள்,

"ஆமாம், நான் தான் அவளை தூங்கச் சொன்னேனே, நீங்க எழுப்பிணீங்களா?" என்று கேட்டாள்.

"இல்லை, போர்வை முழுசா போர்த்தியிருந்தா, முகம் தெரியுற மாதிரி எடுத்து விட்டேன்!" என்றவனிடம்,

"அதுதானே பார்த்தேன், அவ அப்படி செய்யாம இருந்தா தூங்கியிருப்பா, காஃபி குடுத்துட்டு அவளை தூங்க விட்டுடுங்க!" என்று சொல்ல,

இது தான் திருமணமானதில் இருந்து அவர்களுக்குள் நடந்த மிக நீண்ட பேச்சு வார்த்தை!

துளசி சொன்னது போல எட்டி பார்க்க, அப்போது தான் வெங்கடேஷ் எழுந்து வந்து கொண்டிருந்தான்.

“டேய், ஒரு காஃபி போடு, மீனா கேட்டா, எனக்கு போடத் தெரியாது!” என்றான் திரு.

“என்னது நீ பால் காய்ச்சினியா” என்று அவனும் ஆச்சர்யப் பட்டுக் கொண்டே அண்ணன் கேட்டதை செய்து கொடுக்க, எடுத்து போய் மகளிடம் கொடுத்து, அவள் குடித்ததும் டம்பளர் வாங்கியவன், “அம்மா உன்னை தூங்க சொன்னா!” என்றான்.

“நீங்க பேசினீங்களாப்பா” என்று கேட்ட மகளின் முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி!

“ஆம்” என்பது போல தலையாட்டியவன், “தூங்கு” என்பது போலக் கை காட்ட,

“தூக்கம் வரலை, உங்க மொபைல் தர்றீங்களா?” என்று மகள் கேம் விளையாடக் கேட்க,

“அதெல்லாம் தூக்கம் வருமாம், உங்க அம்மா தான் சொல்றா! நோ கேம்ஸ், பேசாமா தூங்கு!” என்று கண்டிப்பான குரலில் சொல்ல, மீனாக்ஷி அவன் சொல் பேச்சு கேட்டு தூங்குவது போல கண்களை மூடி கொண்டாள்.

வெளியில் வந்து அமர்ந்தவன், அதன் பின்னே தான் அப்பா அம்மாவிடம் “திரும்ப வாருங்கள்” என்று சொல்லி துளசிக்காக வாசல் பார்த்து காத்திருந்தான்.

அத்தியாயம் பத்து

துளசி வரும் போது காலை பத்து மணி, அதுவரையிலும் திரு மகளை பார்ப்பதும் பின் வந்து சோபாவில் அமர்வதுமாக இருக்க,

“என்ன இது, இந்த அண்ணன் என்ன பண்றாரு? குட்டி போட்ட பூனை மாதிரி சுத்தறாரு!” என்று தனம் எட்டி எட்டி பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெங்கடேஷ் வெளியே கிளம்பியிருந்தான், அவனுக்கு தெரியவில்லை, திருவும் சொல்லவில்லை! மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் வேறு ஒரு பக்கம் எதற்கு வரவேண்டும் என்று போனில் துலைத்து எடுத்தனர்

“மா! துளசி தான் சொன்னா மா!” என்று முடித்து விட்டான்.

“துளசி” என்ற பெயர் வந்ததும் அமைதியாகி விட்டனர். எப்படியோ சேர்ந்து வாழ்ந்தால் சரி என்ற நிலைக்கு வந்திருந்தனர். ஷோபனாவையும் அவளின் அப்பா வீட்டிற்கு அனுப்பி விட்டான் வெங்கடேஷ்.

ஏற்கனவே கொஞ்சம் பயந்து தான் இருந்தாள் ஷோபனா, “இப்போது போ” என்று அனுப்பி விட்டவன், “நான் வர சொல்லறவரை நீ இங்கே தான். என்னை கூப்பிட்டுக்குவார்ன்னு நீ யார் கிட்டயாவது சொன்ன,

திரும்ப கூப்பிடவே மாட்டேன்” என்று பயமுறுத்தி அனுப்பியிருந்தான்.

மக்களின் நல வாழ்விற்கு, திருப்பத்தை எதிர்பார்த்து திருப்பதி கிளம்பியிருக்க, சென்று சேரும் முன்னேயே பிடி அருள் புரிந்து விட்டேன் என்று கடவுள் அனுக்கிரஹம் புரிந்து விட்டார்.

அப்படி திரு ரூமிற்கும் ஹாலிற்கும் அலைய, மீனாக்ஷி நல்ல உறக்கத்தில் தான்.

பின் அவன் ஹாலில் அமர்ந்திருந்த போது தான் துளசி வந்தாள். வேகமாக அவள் வீட்டிற்குள் வர, திரு வரும் அவளையே விழி எடுக்காமல் பார்த்திருந்தான்.

அவனை பார்த்ததும் ஒரு நொடி தயங்கி நின்றவள், பின் வேகமாக ரூமின் உள்ளே போக, செல்லும் அவளை யோசனையுடன் பார்த்திருந்தான்.

மெலிந்திருந்தாள், கண்களை சுற்றி லேசான கரு வளையம், அதனையும் மீறி அவளின் தோற்றம்! அவனுக்குள் ஒரு சந்தேகத்தை தோற்றுவித்தது.

மனம் சட்டென்று ஒரு பரவச நிலையை உணர, அம்மாடி என்று இதயம் துடித்தது. ஆனால் அவளிடம் ஒரு பிரதிபலிப்பும் தெரியவில்லை. எவ்வளவு பெரிய விஷயம். எப்படி என்னை பார்க்கும் போது சாதாரணமாக கடக்க முடியும்?

அந்த யோசனையில் இருந்தான். டேக்சி வாயிலில் நிற்க, அதன் பிறகே பணம் கொடுக்க வேண்டுமோ என்று வெளியில் வந்து பார்க்க, பிரசன்னா அங்கேயே நின்றிருப்பது தெரிந்தது.

அவனை பார்த்தும் வருடங்கள் இருக்க, அவன் கல்லூரி படிக்கும் போது பார்த்தது, ஒல்லியாய் உயரமாய் இருந்த பையன் இப்போது முழு ஆண்மகனாய் அங்கே வந்த டாக்சியில் சாய்ந்து நின்றிருக்க,

“உள்ள வா பிரசன்னா, ஏன் அங்கேயே நிக்கற” என்றான்.

“தெரியலை, அக்கா ஒன்னுமே சொல்லலை!” என்று அவன் சொல்ல,

“அவ மீனாக்ஷியை பார்க்கற டென்ஷன்ல இறங்கி ஓடியிருப்பா, நீ உள்ள வா, பழசையே பிடிச்சிட்டு தொங்கிட்டு, உங்க அக்கா சொல்லணும்னு வெயிட் பண்ணக் கூடாது!” என்று கறாராகப் பேசினான்.

தன்னால் எந்த பிரச்னையும் எப்போதும் வருவதை விரும்பாத பிரசன்னா உள்ளே வந்து விட்டான். அவனின் உடைகளை பார்த்தவுடனே துளசி தயாராகும் வரை கூட விடவில்லை என்று புரிந்தது.

“அவசரமா கூட்டிட்டு வந்துட்டாளா?” என்று திரு பேச,

“என்னிடமா பேசினார் இவர்” என்று அதிசயித்து பார்த்த பிரசன்னா “ஆம்” என்பது போல தலையசைத்தான்.

“உட்காரு” என்று சொல்ல, பிரசன்னா எதுவும் பேசாமல் உட்கார்ந்து விட்டான்.

கிட்ட தட்ட கால் மணிநேரம் கடந்து துளசி வந்தவள், “அத்தைக்கு ஃபோன் பண்ணி கொடுங்க” என்று சொல்லி, பின் அகிலாண்டேஸ்வரியிடம் பேசினாள். விஷயத்தை சொல்லி, தான் அங்கே வந்து விட்டதையும் சொல்லி என்ன செய்ய வேண்டும் என்று கேட்டாள்.

“உன் சின்ன அத்தைங்களை போய் கூப்பிடு, அவங்க வந்து எல்லாம் பார்த்துக்குவாங்க! நாங்க வர இன்னும் ஒரு மணிநேரத்துக்கு மேல ஆகும்” என்றார்.

பின் துளசி சென்று அவர்களை அழைக்க, துளசியை பார்த்து அவர்களுக்கு ஆச்சர்யம், அதையும் விட இந்த விஷயத்தை கேள்வி பட்டு சந்தோசம்!

உடனே அவர்கள் கிளம்பி வந்து விட்டனர்! எல்லாம் அவர்கள் பார்த்துக் கொள்ள, திரு அழைத்து வெங்கடேஷிற்கு சொன்னான்.

மகளுக்கு உணவு எடுத்து போய் கொடுத்து “அவ சாப்பிடட்டும் அத்தை, பின்ன என்ன பண்ணணுமோ

பண்ணிக்கலாம்!'' என்று துளசி சொல்ல, அவர்கள் மறுத்து எதுவும் பேசவில்லை.

பிரசன்னா பரிதாபமாக அங்கே அமர்ந்திருப்பதை பார்த்த திரு, ''துளசி'' என்று அழைத்தவன், ''எங்களுக்கு டிஃபன் எடுத்து வை'' என்றான்.

''நீங்க இன்னும் சாப்பிடலையா?'' என்றவள் ''தனம்'' என்று குரல் கொடுக்க,

''அக்கா வந்துட்டீங்களா?'' என்று வேகமாக அவள் சமையல் அறை விட்டு ஏறக்குறைய ஓடிவந்தாள். தனத்தின் முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி.

''அண்ணா காலையில இருந்து அங்குட்டும் இங்குட்டும் அசைஞ்சிட்டே இருந்தாரா? என்னவோன்னு நினைச்சேன்! நீங்க வர்றதுக்கு தானா!'' என்று அதிசயிக்க,

தனம் பேசியதை காதில் வாங்காதவன் போல திரு அமர்ந்திருக்க, துளசியின் முகம் புன்னகையில் மலர்ந்தது.

''தனம் நம்ம வீட்ல விஷேஷம், மீனாக்ஷி பெரிய பொண்ணு ஆகிட்டா, வேலை இருந்துட்டே இருக்கும், ஒரு ரெண்டு பேரை ஒரு பத்து நாளைக்கு கூட கூப்பிட்டுக்கோ, என்ன பணமோ குடுத்துக்கலாம்''

“ஐ அப்படியா” என்று சந்தோஷித்தவள், “நான் ஃபோன் பேசறேன்” என்று உள்ளே போய் விட்டாள்.

“வா பிரசன்னா” என்றவள் அமரவைத்து இருவருக்கும் பரிமாற, “நீயும் உட்காரு துளசி, எல்லோரும் வந்துட்டா சாப்பிட முடியாது” என்றான் திரு.

“என்னிடமா பேசியது? நான் இவனுடன் அமர்ந்து சாப்பிடுவதா?” என்று விழி விரித்தாள் துளசி.

“உட்காரு” என்றான் சிறு அதட்டலோடு! அவன் உணவு உண்ணும் நேரம் இன்னும் அவளை அருகில் பார்க்கலாம் அல்லவா!

பார்வை முழுவதும் துளசியிடம், அவனால் பார்வையை விலக்க முடியவில்லை, காதல் பார்வையல்ல, ஆராய்ச்சி பார்வை.

அப்போதும் திருவின் பக்கம் அமரவில்லை, பிரசன்னாவின் பக்கம் அமர்ந்து தான் உண்டாள். வேகமாக உண்ண, “மெதுவா சாப்பிடு, அஞ்சு நிமிஷத்துல ஒன்னுமாகாது” என்றும் அதட்டினான்.

உணவு உண்டவுடனே பிரசன்னா “நான் கிளம்பட்டுமா?” என,

“இரு பிரசன்னா” என்று திருவும், “சரி கிளம்பு” என்று துளசியும் ஒரே நேரத்தில் சொல்ல,

“ஏன்?” என்ற பார்வை திருவிடம் கிளம்ப,

“இன்னும் முறையா சொல்லலை, இவன் என்னை கொண்டு வந்து விட வந்தான். எல்லோரும் வர வர இவனை தெரியாது, யார்ன்னு கேட்பாங்க, அப்புறம் நம்ம கிட்ட சொல்லாம இவங்களுக்கு சொல்லிட்டாங்களான்ற பேச்சு வரும், அவன் போகட்டும்!”

இதில் இவ்வளவு இருக்கிறதா என்று பார்த்திருந்தனர் திருவும் பிரசன்னாவும்.

பின் பிரசன்னா கிளம்ப, “நாம ஏதாவது டாக்சிக்கு பணம் கொடுக்கணுமா?” என்று திரு கேட்க,

அவனை நேரடியாக முறைத்தவள், “நல்லா சம்பாரிக்கறான். இது அவனுக்கு ஒரு பணமில்லை, அப்படியே அவனுக்கு சம்பாதனை இல்லைனாலும் இந்த மாதிரி பணம் குடுத்தா அவனை அசிங்கப்படுத்தற மாதிரி, எங்க அப்பா அம்மாகிட்ட நடக்கற மாதிரியே அவன் கிட்டயும் செய்யக் கூடாது!” என்று கண்டிப்பாகச் சொல்ல,

“தெரியாம கேட்டுட்டேன், என்னை விட்டுடு!” என்ற பாவனையை கண்களில் காண்பித்து, அவனை வழியனுப்ப வெளியில் சென்றான் திரு.

அப்போது சரியாக அகிலாண்டேஸ்வரி வந்து விட, வீடே இன்னும் பரபரப்பானது. "எங்க போற நீ?" என்று பிரசன்னாவை அப்படியே பிடித்து இழுத்து வந்தார்.

"இங்கயே இரு! தாய் மாமன் நீ தான் சடங்கெல்லாம் செய்யணும்" என்று சொல்லிவிட, தன் உடையை குனிந்து பார்த்துக் கொண்டவன்,

"அத்தை, நான் போய் வேற டிரஸ் எடுத்துட்டு வர்றேன்"

"அட! ஆம்பிள்ளை பையனுக்கு என்ன அழகு? நீ உள்ள வா!" என்று அவனை அழைத்து வந்து அமர்த்தி விட, பரிதாபமாக அமர்ந்திருந்தான்.

திரு தான் "உள்ள போய் ரெஸ்ட் எடு, இல்லை டீ வீ பாரு, நான் தேவைன்னா கூப்பிடறேன்" என்று அவனின் ரூமிற்கு அழைத்து சென்று விட, இத்தனை கும்பலுக்கு பழக்கப் படாத பிரசன்னா பேசாமல் அங்கேயே இருந்து கொண்டான்.

"துளசி, உங்கம்மா வீட்டுக்கு ஃபோன் போடு" என்று அவர் சொல்ல, பின்பு முறையாய் அவர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

இப்போது சாரதா வீட்டினருடன் பேசுவதில்லை. அதனால் இன்னொரு தங்கைக்கு மட்டும் அழைப்பு எப்படி விடுவது என்ற யோசனை, கூடவே அங்கே

தங்களின் மகளும் வாழ்க்கை பட்டிருக்கிறாள், இப்படி மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் ஆலோசித்து கொண்டிருக்க,

வெங்கடேஷ் இதுதான் சாக்கென்று "எங்க வீட்டுக்கு போறேன்னு சொல்லிட்டு கிளம்பி வா. நான் உங்க வீதி முக்குல நிக்கறேன்" என்று ஷோபனாவிடம் சொல்ல, ஷோபனாவும் வந்து விட்டாள்.

"சித்தி, எதுன்னாலும் இவளையும் வெச்சிக்கங்க, வாய் பேசினா உடனே என்னை கூப்பிட்டு விடுங்க" என்று வெங்கடேஷ் சொல்லவும்,

"அப்போ எங்கம்மாவை திட்ட வேண்டாம்னு சொல்ற" என்று நிருபமா கேட்க,

"ஹேய், நீ எப்போ வந்த?" என்றான் வெங்கடேஷ்.

"எனக்கு இப்போ லீவ், நான் இங்க வந்து ரெண்டு நாள் ஆச்சு, உனக்கு உன் பொண்டாட்டியை பிரிஞ்ச ஏக்கத்துல தங்கச்சியை கூட கண்ணே தெரியலை போல" என்றாள்.

நிருபமா சத்தியநாதன் வசுமதியின் பெண், எஞ்சினியரிங் கடைசி வருஷத்தில் சென்னையில் படித்துக் கொண்டிருந்தாள்.

"அப்போ இன்னொரு வாலு எங்கே?"

“நானும் இங்கே தான் இருக்கேன்” என்று கமலநாதன் மேகலாவின் பெண் யாழினி சொன்னாள். அவளும் நிருபமாவின் கல்லூரியில் முதல் வருடம் படித்து கொண்டிருந்தாள்.

அவர்களின் ஆண்மக்கள் இருவரும் படித்து முடித்து வேலையில் இருந்தனர். ஒருவன் புனேயில், மற்றொருவன் அமெரிக்காவில். அவர்கள் இருவருக்குமே பெண் பார்த்துக் கொண்டிருந்தனர். இங்கே தொழிலை கையில் எடுத்தது திருவும் வெங்கடேஷும் தான். திரு படிப்பை முடிக்கவில்லை, வெங்கடேஷ் படித்தும் அவனின் தந்தை அவனை வேலைக்கு அனுப்பவில்லை.

“என்ன அண்ணா பதிலே காணோம்” என்ற நிருபமாவின் குரல் ஓங்கி ஒலிக்க, இப்படியாக வீடு களை கட்டியது.

இந்த சப்தத்தில் பாதிக்கப்படாத இரு ஜீவன்கள் திருவும் துளசியும்!

துளசியின் கவனம் முழுவதும் மகளிடம் இருக்க, திருவின் கவனம் முழுவதும் துளசியிடம்.

எல்லோரும் இருப்பதால் மீனாக்ஷியின் வாய் பூட்டுடைத்து பேசிக் கொண்டிருந்தது.

மேகநாதன் அகிலாண்டேஸ்வரி மூலமாக திருவிடம் எதோ கேட்க வர, “உங்களுக்கும் அம்மாக்கும் என்ன தோணுதோ பண்ணிக்கங்க, நானும் ஒன்னும் சொல்ல

மாட்டேன், துளசியும் சொல்ல மாட்டா!'' என்று விட்டான் அவரிடம் நேரடியாக.

தன்னிடமா மகன் பேசினான் என்று வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

திருவின் கவனம் எல்லாம் துளசியிடம் மட்டுமே!

அவனுக்கு மனது அடித்து சொல்லியது அப்படித் தான் என, ஆனால் துளசியை பார்க்க அவள் மிக இயல்பாய் இருந்தாள். அவளுள் நடந்திருந்த மாற்றம் அவளுக்கு தெரியவில்லையோ என்று தான் தோன்றியது.

ஆம்! முதல் பார்வையிலேயே துளசியின் தோற்றத்தை படம் பிடித்தவனுக்கு, அவளின் அந்த சோர்ந்த, லேசாக கருவளையத்தோடு கூடிய கண்கள், அவள் மீனாக்ஷியை கருவில் தாங்கி இருந்த போது இருந்த முகத்தினை ஞாபகப் படுத்தியது.

எப்போது அவளுடன்... யோசிக்க, மாதக் கணக்கு வந்தது. உற்று பார்த்த போது லேசாக மேடிட ஆரம்பித்து இருந்த அவளின் வயிறும் தெரிய, அதைக் கூட தெரியாமல் இருக்கிறாளா? இல்லை சொல்ல விருப்பமில்லையா? குழம்பி போனான்!

துளசி உடுத்தும் காட்டன் புடவைகளில் அந்த லேசான மேடிட்ட வயிறு யார் கண்ணுக்கும் தெரிய வாய்ப்பில்லை! ஆனால் மனைவியை அணு அணுவாய்

கண்களிலேயே அளக்கும் திருவின் கண்களுக்கு தப்பவில்லை!

அவனுக்கு தெரிந்தே ஆகவேண்டும், ஒரு வேளை என்னிடம் சொல்ல விருப்பமில்லையா? அப்போது திரும்ப போய் விடுவாளா? மனது அப்படித் தடுமாற, அவனால் ஒன்றும் முடியவில்லை.

அவள் பாட்டிற்கு அந்த பக்கமும் இந்த பக்கமும் திரிந்து வந்தவர்களை கவனித்து கொண்டிருக்க,

துளசி அவனின் புறம் வந்த போது, "எனக்கு உன்கிட்ட பேசணும் மேல வா" என்று சொல்லி மாடிக்கு சென்று விட்டான்.

அவன் சொன்ன த்வனி ஒரு பயத்தை கொடுக்க, இப்போது என்னவோ என்றும் தோன்ற, துளசியின் முகம் கலக்கத்தை தத்தெடுத்தது.

திரு எதோ சொல்வதையும், இவளின் முகம் கலங்குவதையும் பார்த்திருந்த அகிலாண்டேஸ்வரி அருகில் வந்து "என்ன துளசி?" என்றார்.

"அத்தை அவர் என்னவோ பேசணும்னு மேல கூப்பிடறார்"

"போயிட்டுவா, அவன் கோபப்பட்டாலும், திட்டினாலும் பொறுமையா பேசு! சண்டை போடாத!"

“நாம எப்போடா சண்டை போட்டோம்? அவர் எப்போடா திட்டினார்? இவங்க ஏன் இப்படி சொல்றாங்க? எல்லோரும் இருக்காங்க, திரும்ப எல்லோர் முன்னையும் பிரச்சனையா? என்னால முடியாது!” என்று யோசித்துக் கொண்டே ஏறினாள்.

அது பெரிய மொட்டை மாடி, அவள் வந்ததும் அதன் கதவை தாளிட்டான். அவனின் செய்கையில் என்ன செய்கிறான் என்று விழிவிரித்து பார்க்கும் போதே, நடந்து யார் கண்ணிலும் எங்கே இருந்து பார்த்தாலும் தெரியாத ஒரு நிழலான இடத்திற்கு சென்று நின்று கொண்டவன்,

“உனக்கு ஏதாவது என்கிட்ட சொல்லணுமா?” என்றான் அங்கிருந்தே! பார்வையால் மீண்டும் அவளின் தோற்றத்தை ஆராய்ந்து கொண்டே!

“இல்லையே” என்பது போல தலையாட்டியவளுக்கு, ஒருவேளை கோபித்து கொண்டு வீட்டை விட்டு சென்றதற்கு சொல்கிறானோ?” என்று தோன்ற,

“இனிமே நீங்க பேசாம இருந்தாலும், நீங்க என்னை பார்க்கலைன்னாலும் நான் போக மாட்டேன்” என்று சொன்னாள்.

உண்மையில் அவளுக்கு தெரியவில்லை! எப்போதும் நாட்கள் தள்ளி தள்ளி தான் வீட்டிற்கு தூரம் ஆவாள்.

சில சமயம் இரண்டு மூன்று மாதம் கூட ஆகும். அதனால் கவனிக்கவில்லை, அதையும் விட திருவின் ஞாபகமும் பெண்ணின் ஞாபகமும் இருக்க, வேறு எதிலும் சிந்தனை செல்லவில்லை. இப்படியும் இருக்கக் கூடுமோ என்று கிஞ்சித்தும் தோன்றவேயில்லை.

அவளின் முகத்தை பார்த்து பேசும் அத்தனை பேருக்கும் அவளுள் இருந்த சோர்வோ, அது எதனால் வந்ததோ என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்க,

முகம் பார்த்து பேசாமல் எங்கோ பார்த்து பேசுபவனுக்கு இன்று பார்த்துமே அவளுள் இருந்த வித்தியாசத்தை கண்டு கொண்டான்!

அவளுக்கு தெரியவேயில்லை என்று புரிய, ஒருவேளை நான் தான் தப்பாக நினைக்கிறோமோ என்ற குழப்பம் வர,

“இங்கே வா” என்பது போல முகத்தினை சீரியசாக வைத்து அழைத்தான்.

அவனின் அருகில் நடக்க நடக்க துளசிக்கு பயம் தான் வந்தது! கால்கள் பின்னியது அவனின் பார்வையின் தீட்சண்யத்தில்! எதுக்கு விட்டுட்டு போன என அடிப்பாரோ என்ற பயமே வந்து விட்டது! இப்படி என்று தோன்றவேயில்லை அதுவரையிலுமே!

அருகில் வந்ததும் துளசியின் கலங்கிய முகத்தை பார்த்ததும் மனதிற்குள் ஏதோ பிசைய அவளே எதிர்பாராமல் இறுக்கமாக அணைத்து கொண்டான்.

அவனின் அணைப்பில் அடங்கி அப்படியே நிற்க, நிமிடமாக அப்படியே நின்றவன், அணைப்பை விலக்காமல் முகம் நிமிர்த்தியவன் "என்னை பாரு" என்றான்.

துளசி அவன் முகம் பார்த்ததும் "உனக்கு ஏதாவது சொல்லணுமா?" என்றான் மீண்டும்.

அவளுக்கு சத்தியமாய் என்ன எதிர்பார்க்கிறான் என்று புரியவில்லை, "எனக்கு என்ன கேட்கறீங்கன்னு புரியலை" என்று கலங்கிய முகத்தோடு சொல்ல,

அதற்கு மேல் அவளின் முகத்தினை அருகில் பார்த்து தாள முடியாமல், துடிக்கும் அவளின் இதழ்களை வெறிக்க பார்த்தவன், அவளின் இதழ்களில் சத்தமின்றி முத்தமிட்டான்! உதடுகள் பிரியாத நீண்ட முத்தம்!

துளசியின் மனதினில் தானாக ஒரு ஆசுவாசம் பிறக்க அப்படியே நின்றாள்.

கூடவே கைகள் புடவைக்குள் நுழைந்து அவளின் மணி வயிற்றை தடவிக் கொடுக்க, உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடிய போதும்,

துளசிக்கு அப்போது தான் அவன் சொல்ல வருவது புரிய, மெதுவாக நாள் கணக்கு எல்லாம் பார்க்க, இத்தனை நாட்களாக கவனிக்காதது புரிய, எப்படி எப்படி கவனிக்காமல் விட்டோம் என்று தோன்ற, கடகடவென்று பயத்தில் கண்களில் இருந்து நீர் வழிந்தது.

அவனின் முத்தம் உப்பு கரித்தது!

துளசிக்கு ஒரு பதட்டம், பயம், மகிழ்ச்சி எல்லாம் ஒருங்கே தோன்றியது, அவளிடம் இருந்து விலகியவன் "அழக் கூடாது" என்றான்.

ஆனாலும் அவளிற்கு கண்ணீர் பெருகியது!

கண்களில் இருந்து நீர் இறங்க, அவனின் உதடுகளாலேயே கண்ணீரை துடைத்தவன், "நாலு மாசமாவது இருக்கும்!" என்று சரியாகச் சொன்னான்.

ஊடலோ கூடலோ துளசியினது எதுவும் அவன் மறப்பது இல்லையே!

கீழே மகள் இருப்பாள், தேடுவாள், என்றெல்லாம் மனதில் ஓடிய போதும் அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள் துளசி.

கூடவே பயம் மகள் சமைந்து இருக்க இப்போது தான் கர்ப்பமா?

அவனை அணைத்துக் கொண்டே மீண்டும் கண்ணீர் உகுக்க, அவனின் சட்டை நனைந்தது.

“என்ன துளசி?” என்று ஆதூரமாகக் கேட்டான்.

“இப்போ நான் இப்படின்னா எல்லோரும் கிண்டல் பண்ண மாட்டாங்களா?” என்றாள்.

“எதுக்கு பண்ணுவாங்க? நாம என்ன கிழவன் கிழவியா ஆகிட்டோம். நிறைய பேருக்கு இப்போல்லாம் நம்ம வயசுல தான் முதல் குழந்தையே பிறக்குது! எங்கப்பா நமக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணி வெச்சிட்டார். சொல்லப் போனா நீ மேஜர் கூட ஆகலை, குழந்தை பிறந்திடுச்சு!” என்று வெகுவாக சமாதானம் செய்தான்.

துளசியின் கலங்கிய முகம், அழுகை எல்லாம் அவனை சமாதானம் சொல்ல வைத்த போதும்,

ஒரு கூச்சம் தயக்கம் துளசியினுள் வந்து அமர்ந்து கொண்டது!

கூடவே இது தங்களின் யோசனை தானே ஒருவேளை இல்லாவிடடால், அவனை நிமிர்ந்து பார்த்தவள் கண்கள் அதனை பிரதிபலிக்க,

அதனை உணர்ந்தவன் “நிச்சயம் அதுதான்! நீ மீனாக்ஷி வயத்துல இருக்கும் போது இப்படி தான் இருப்ப, இப்போ கொஞ்சம் உயரமாகிட்ட, அப்போ இருந்ததை விட உடம்பு கொஞ்சம் வந்துடுச்சு, முகமும் சின்ன பிள்ளை முகத்துல இருந்து ஒரு பொண்ணோட

முகமா மாறிடுச்சு” என்று மாற்றங்களை பட்டியலிட்டவன், “ஆனாலும் எனக்கு உள் மனசு சொல்லுது, நீ இப்போ அப்படி தான்னு” என்று சொல்லும் அவனை விழிஎடுக்காமல் பார்த்திருந்தாள்!

என்னை இவன் இவ்வளவு உணருகிறானா என்று!

ஆம்! அப்போது அவ்வளவாக பிடித்தம் என்பது இல்லாத போதும் குழந்தைக்காக என்று ஒரு உறவு என்ற போதும், துளசி அவனை கவர்ந்தாள். “அப்போது எனக்கு முன்பிருந்தது என்ன? அது என்ன காதல்?” என்று அவன் குழம்பியதும் உண்டு!

மனம் ஒரு விசித்திர ஜந்து! அதனையும் விட கணவன் என்ற உறவுக்கு எப்படி பெண்கள் அடிமையோ அப்படி தானே மனைவி என்ற உறவும்!

பெண்களுக்காவது தாலி என்ற ஒன்று இருக்க, ஆண்களுக்கு அது இல்லாத போதும் பிணைப்பு இல்லையா என்ன?

“இப்படி பார்க்காதே, அப்புறம் திரும்ப திரும்ப கிஸ் பண்ணத் தோணும். அதுக்கு தான் நான் உன்னை நீ பார்க்கும் போது பார்க்கறதில்லை. உன்னை தொட்டுட்டே இருக்கத் தோணும். நாம என்ன தனி தீவுலையா இருக்கோம். உனக்கு சொன்னா புரியாது. கூடவே என்னோட காரணங்கள். எங்கப்பா முன்னாடி நான் நல்லா இருக்க முடியாது. ஆனாலும் இப்போ குழந்தை

வந்துடுச்சு. பரவாயில்லை நம்ம பொண்ணுக்கு பொண்ணு பிறந்ததுக்கு அப்புறம் வராம போச்சு, ம்ம், இப்போவே அதை சொல்லவும் முடியாது” என்றும் புன்னகையோடு பேசினான்.

என்னவோ புதிதாய் காதல் வந்த கன்னி பையன் போல!

அவனின் பேச்சில் என்ன என்ற ஆச்சர்யத்தை அவளின் கண்கள் காண்பிக்க, அவன் பேச்சில் முகமும் செம்மையுற, என்ன அவளின் வாழ்க்கை வண்ணமயமாகிவிட்டதா! நம்பத் தான் முடியவில்லை!

ஆனாலும் திருவை நம்பவும் முடியவில்லை, தனிமையில் பிதற்றுகிறவன் எப்படி மாறுவான் என்றும் சொல்ல முடியாது. அவனோட பதிமூன்று வருடங்கள் ஆகிற்றே! அவன் எப்படி இருந்தாலும் பிடித்தமே அதில் மாற்றமில்லை!

அவளின் நெற்றியில் மென்மையாக முத்தம் பதித்து அணைத்துக் கொண்டவன் மனது பிள்ளை செல்வத்துக்காக ஒரு வேண்டுதல் வைக்க,

துளசியிடம் கூட அவ்வளவு எதிர்பார்ப்பு இல்லை என்பது தான் உண்மை!

அத்தியாயம் பதினொன்று

அணைத்து இருந்தவளை மெதுவாக விளக்கியவன், "உங்க வீட்ல வேற இதுக்கு ஒரு டாக்டர் இருக்குறா? உங்கம்மாக்கும் தெரியலை?" என்று குறைபட்டான்.

"ரெண்டு மாசமா அவ வீட்ல இல்லை, எங்கயோ திருநெல்வேலி பக்கம் அவளுக்கு போஸ்டிங் போட்டிருக்காங்க, இதோட அவளுக்கு படிப்பும் முடியுது! எனக்கே தெரியலை அம்மாக்கு எப்படி தெரியும்!"

"நான் யாரையும் எதுவும் சொல்லலை? போதுமா! அவளுக்கு கூப்பிட்டு வீட்ல எப்படி டெஸ்ட் பண்றதுன்னு முதல்ல கேளு, நாமளாவும் நினைக்க கூடாது!" என்றான். மனதிற்குள் இது குழந்தையாக இருக்க வேண்டும் என்ற வேண்டுதல் ஆவல் அத்தனையும் அவனுக்கு பொங்கியது.

"ம்ம்" என்றவள், அவனின் தொலைபேசியில் இருந்து அழைத்து, வீட்டில் இருந்து எப்படி டெஸ்ட் செய்வது என்று கேட்க,

அவளானாள் பதில் சொல்லாமல் "ஏன்? எதற்கு?" என்று ஆயிரம் கேள்வி கேட்டாள்.

"சொன்னா சொல்லு, சொல்லாட்டி போடி!" என்று தங்கையிடம் அப்போதும் காரணம் சொல்லாமல் சண்டையிடும் துளசியை தான் பார்த்திருந்தான்.

பின் ஒரு வழியாக அவள் மெசேஜ் செய்கிறேன் என்று சொல்லி வைத்த நிமிடம் மெசேஜ் வந்து குதிக்க, "நீ இங்கேயே இரு, கீழ இறங்காத, வந்துடறேன்!" என்று விரைந்து கீழே இறங்கினான்.

படியின் மேலேயே கண் வைத்திருந்த அகிலாண்டேஸ்வரி இவன் மட்டும் இறங்கி வரவும் "என்னடா?" என்று வந்து ரகசியம் பேசினார்.

"மா ஒன்னுமில்லை, நீ இங்க வேலையை பார், யார் கேட்டாலும் சமாளி" என்று சொல்லி பத்து நிமிடத்தில் வாங்கி மேலே ஏறி வந்தவன், அங்கிருந்த பாத்ரூமில் டெஸ்ட் செய்ய சொல்ல,

பதட்டம் பதட்டம் மட்டுமே! துளசிக்கு அல்ல திருவிற்கு!

துளசி வந்து "ஆம்" என்று சொல்லும் வரையிலுமே!

பல முறை நினைத்திருக்கிறான், ஏன் இன்னொரு குழந்தை வரவில்லை என்று, இப்போது "ஆம்" என்று துளசி சொல்லவும்,

"தேங்க் யு, தேங்க் யு வெரி மச்" என்றான் திருநீர்வண்ணன்.

இந்த மாதிரி பாவனைகளுக்கு பழக்கப் படாத துளசி "இவர் எதுக்கு நமக்கு தேங்க்ஸ் சொல்றார்" என்ற பாவனையில் பார்த்தாள். துளசியை திரு உணர்ந்த

அளவிற்கு துளசி திருவை உணர்ந்தாளா தெரியாது! ஆனால் துளசியின் காதல் அளவிற்கு திருவிற்கு இருக்குமா தெரியாது! இருவரின் உணர்வுகளுமே முன்னுக்கு பின் முரண்!

அதற்குள் அகிலாண்டேஸ்வரி தன்னுடைய கணமான சரீரத்தை தூக்கி என்னவோ ஏதோவென்று மேலே ஏறி வந்து விட்டார்.

யாரோ வரும் அரவம் கேட்க திரு விரைந்து வந்து பார்க்க, "என்னடா பண்ற? அவளை ஏதாவது அடிச்சிட்டியா?" என்று கேட்டார்.

அவரை முறைத்து பார்த்தான் திரு!

"என்னடா என்னை முறைக்கிற? நீ செய்யற வேலையெல்லாம் அப்படி தான்! என்னவோ அவளை அடிக்காத மாதிரி முறைக்கிற" என்று நொடித்தவர் துளசியை தேட,

அவள் அவரை தயங்கி தயங்கி பார்த்தாள். ஒரு கூச்சம் வந்து ஒட்டிக் கொண்டது அவளிடம்.

"என்னடா பண்ணின அவளை?" என்று மகனிடம் சண்டைக்கு கிளம்ப, திருவின் முகத்தினில் ஒரு புன்னகை.

"என்னடா மிரட்டுனா சிரிக்கிற?" என்றவர், துளசியை பார்க்க அவளின் முகத்தில் ஒரு தயக்கம், ஒரு கலக்கம்!

“இந்தம்மா வேற அடிச்சன்னுது, என்ன பண்ணுனன்னுது, முதல்ல நான் இங்க இருந்து எஸ்கேப் ஆகணும்” என்று நினைத்துக் கொண்டான்.

“என்ன துளசி?” என்று அவளின் அருகில் போக, பார்த்திருந்தவன் “நீயே சொல்லிக் கொள்” என்று சைகை காண்பித்து கீழே இறங்கி செல்ல ஆரம்பித்தான்.

அகிலாண்டேஸ்வரி அருகில் வரவும், “எனக்கு தெரியவேயில்லை அத்தை” என்றாள்.

“என்ன தெரியலை?” என்றவர் திரும்பக் கேட்க,

“அது இப்போ நாலு மாசம் இருக்கும்” என்றாள் தயங்கி தயங்கி.

புரிந்தும் புரியாமலும் மருமகளின் முகம் பார்த்தவர், “மாசமா இருக்கியா?” என,

“ம்ம்ம்” என்று தலையசைத்தவள், “இப்போ இங்கே வந்து தான் பார்த்தேன்” என்றும் அவசரமாக சொன்னாள். தான் சொல்லாமல் விட்டுவிட்டோம் என்று நினைத்துக் கொள்வாரோ என்று.

அவர் முகம் மலர்ந்து “நல்லா இரு” என்றார்.

“இப்போ யார் கிட்டயும் சொல்ல வேண்டாம்” என்றாள் கூடவே,

“ஏன்மா?” என்றவரிடம்,

“பொண்ணு வயசுக்கு வந்திருக்கா, இப்போ நான் மாசமா இருக்கேன்னு சொன்னா சிரிக்க மாட்டாங்க!”

“இதுல சிரிக்க என்ன இருக்கு, உனக்கு சின்ன வயசுல கல்யாணம் ஆகிடுச்சு, இன்னும் உனக்கு முப்பது வயசு கூட ஆகலை, இது ஒன்னும் அதிக வயசெல்லாம் கிடையாது. மனசுல இப்படி ஒரு எண்ணத்தை கொண்டு வராத, அப்புறம் நான் சும்மா கலாட்டாக்கு உன் புருஷன் அடிச்சிட்டானான்னு கேட்கறதை, அவன் நிஜம்மா பண்ணிடுவான்!” என்று மிரட்டியவர்,

“இப்போ உடனே சொல்லலை, ஆனா விஷேசம் முடியறதுக்குள்ள சொல்லிடுவேன், என் வீட்டுக்கு வாரிசு வருது, இது எவ்வளவு சந்தோஷமான விஷயம்” என்று அவருக்கு அவரே பேசிக் கொண்டு நடக்க,

“நான்கு மாதம் எப்படி கவனிக்காமல் போனோம். குழந்தை நன்றாக இருக்க வேண்டுமே” இப்படி எண்ணங்கள்! அதனையும் விட மகள் எப்படி எடுத்துக் கொள்வாள். மிகுந்த குழப்பம்.

கணவனோடான மனத் தாங்கல்கள் எல்லாம் எங்கோ மறைந்து போயின!

இதே குழப்பத்தோடே அவள் இறங்கி வந்து மகளிடம் செல்ல, “அவளை குளிக்க வச்சு இந்த

பாவாடை தாவணி போட்டு விடுங்க'' என்று துவைக்கும் அம்மா கொண்டு வந்து கொடுக்க, மகளை குளிக்க வைக்க அழைத்து சென்றவளிடம் கிடைத்த முதல் தனிமையில் ''ஏன்மா ஒரு மாதிரி இருக்க?' என்றாள் மகள் அவளிடம்.

''ஒன்னுமில்லையே''

''அப்பா திட்டினாரா? சண்டை போட்டாரா?'' என்று கேட்டாள். இந்த சில மாதங்களில் குழந்தைக்கு எப்படியான ஒரு எண்ணத்தை கொடுத்திருக்கிறோம் என்று வருத்தம் வர,

'சே, சே, இல்லைடா, காலையில ஊருல இருந்து வந்தேன் இல்லையா, அதான் லேசா தலைவலி!'' என்று பதில் கொடுத்தாள்.

''அப்போ நீ போய் படுத்துக்கோ, எல்லோரும் இருக்காங்க தானே, நான் என்னை பார்த்துக்குவேன்!'' என்று மகள் பெரிய மனுஷியாய் சொல்ல,

''அதெல்லாம் ஒன்னுமில்லை, தலைவலி தைலம் தடவினா சரியாகிடும்!''

''ம்ம் சரி'' என்று அவள் குளித்து வந்தாள்.

“பேன்ட் அளவு சரி வராது” என்பதால் திரு அவனின் புது வேஷ்டி சட்டையை பிரசன்னாவிற்கு எடுத்து கொடுத்திருக்க,

அதனை அணிந்து வந்தவன் தாய் மாமனாக அக்காள் மகளுக்கு குடிசை கட்ட, எல்லோர் பார்வையும் அவன் மீது தான். பின்பும் ஆட்கள் வந்த வண்ணம் இருந்தனர்.

துளசியின் பார்வை திருவிடம் படிந்து படிந்து மீள, அதை உணர்ந்தவனாக “என்ன?” என்றான் அவளிடம்.

“ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடறேன், டாக்டர் கிட்ட காமிச்சிடலாம், அத்தை கிட்ட சொல்லுங்க” என்றவளிடம் நேரம் பார்த்தான், மாலை ஐந்து மணி தான்.

பின் அகிலாண்டேஸ்வரியை தனியாக தள்ளி சென்று அவரை விட்டு டாக்டரிடம் பேச வைத்தான் திரு. அவர்களுக்கு எங்கோ ஒரு முறையில் தூரத்து சொந்தம், அதனையும் விட நன்கு அறிந்தவர் தான்.

துளசி மீனாவிடம் ரகசியமாக “அம்மாக்கு காய்ச்சல் வர்ற மாதிரி இருக்கு, ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடறேன். நீ என்னை தேடக் கூடாது!” என்று ரகசியம் பேசி, பிரசன்னாவை ஊருக்கு அனுப்புவது போல அந்த டேக்சியிலேயே அவளும் திருவும் வந்து ஹாஸ்பிடலில் இறங்கினர். ஆம்! அகிலாண்டேஸ்வரி வருவார் என எதிர்பார்த்திருக்க, திரு உடன் வந்தது

இன்னும் அவளால் நம்ப முடியவில்லை. இன்னும் அந்த அதிசயித்தில் இருந்தாள்.

டாக்டருக்கு காத்திருந்து பார்த்து, அவர் ஸ்கேன் சொல்ல, அதுவும் செய்து, நான்கு மாத கர்ப்பம் என உறுதி செய்தார்கள்.

“எனக்கு தெரியவேயில்லை பெரியம்மா, குழந்தை நல்லா இருக்குது தானே, நான் கவனிக்கவேயில்லை” என்று ஒரு பயத்தோடும் பதட்டத்தோடும் கேட்ட துளசியிடம்,

“குழந்தை நல்லா இருக்கு, எதுக்கு இவ்வளவு பயம். எல்லோருக்கும் ஒரே மாதிரி, வாமிட்டிங், தலைசுத்தல் இப்படி இருக்காது, சிலருக்கு ஒன்னுமே தெரியாது. சிலருக்கு ஒரு சோர்வு, பதட்டம், பயம் இப்படி இருக்கும். சிலருக்கு கோபம், எரிச்சல் இப்படி இருக்கும். எதுவும் சொல்ல முடியாது”

“என்ன திரு நீ தான் சொல்லணும், துளசி எப்படி இருக்கா”

“கொஞ்சம் நாள் அம்மா வீட்ல இருந்தா அத்தை, அதனால எனக்கு சரியாத் தெரியலை, இருந்தாலும் கோபமா, எரிச்சலா, இயல்புக்கு மாறா இருந்தான்னு இப்போ யோசிச்சா தோணுது!” என்றான்

பின்னே துளசியாவது அவனை விட்டு போவதாவது, சென்றால் என்றால் அது இயல்புக்கு மாறானது தானே! ஏன் போனால்? ஏன் போனால்? என்ற அவனின் குழப்பத்திற்கு ஒரு விடை கிடைக்க, அது தான் சரியான விடையா என்று தெரியாத போதும், அதுதான் விடை என நினைத்து ஆசுவாசப் பட்டுக் கொண்டான்.

குழந்தை நன்றாக இருக்கிறது என்று சொல்லி, பின் சத்து மாத்திரைகள், போட வேண்டிய ஊசி, அட்வைஸ் அது இதென்று முடிந்து மீண்டும் ஆட்டோவில் வீடு வரும்வரை தேவையான ஒன்றிரண்டு பேச்சுக்கள் மட்டுமே இருவரிடமும்.

ஆட்டோவில் வருவது திருவிற்கு ஒரு எரிச்சலை கொடுத்தது. பின்னே புது கார் வாங்கியதும் நாகேந்திரன் எடுத்து போனவர் இன்னும் இதுவரை கொடுக்கவில்லை. அப்பாவின் பழைய பிரிமியர் பத்மினி இவனுக்கு செட்டாகாது.

எங்கேயும் குடும்பமாக போவதில்லை என்பதால் டூ வீலர் மட்டுமே அவனிற்கு போதுமானது. இப்போது இப்படி ஆட்டோவில் அவனின் வசதி வாய்ப்பிற்கு போவது ஒரு எரிச்சலை கொடுக்க அந்த யோசனையில் இருந்தான்.

துளசியோ, முதல் குழந்தைக்கு அகிலாண்டேஸ்வரி தான் முழு நேரமும் கூட! இப்போது கணவன் உடன் போவது ஒரு புதிய உணர்வு, அவன் சகஜமாக பேச

முயல்வது, அது இன்னும் ஒரு புதிய உணர்வு! மகளிடம் எப்படி சொல்வது ஓர் கலக்கம்! இப்படியாக ஒரு வித மோன நிலையிலேயே இருந்தாள்.

வீடு வந்து போது எட்டரை மணி,

ஆட்டோவில் இருவரும் வந்து இறங்கிய போது வீடே அதிசயமாய் பார்த்தது. சாரதா, சித்ரா, ராதா என்று அந்த வீட்டின் பெண்கள் எல்லாம் வந்திருக்க, "வாங்க சித்தி, வாங்க அண்ணி" என்றாள் எதுவும் முகத்தினில் காண்பித்தது கொள்ளாமல்.

மேகநாதன் வீடு சென்று அழைக்கவில்லை என்றாலும், தொலைபேசியில் சொல்லியிருக்க, அவர்களும் உடனே வந்து விட்டனர். அத்தனை பிரச்சனைகளுக்கு பிறகும் சாரதாவும் வந்து விட்டார். என்ன சொல்ல?

"என்னம்மா, எங்க போயிட்டு வர்றாங்க?" என்று ராதா அகிலாண்டேஸ்வரியிடம் கேட்க,

"ஹாஸ்பிடல்க்கு" என்றார்.

"எதுக்கு?" என்றவளிடம்,

"தெரியலடி உங்கண்ணன் சொல்லிட்டு போனான், இனிமே தான் கேட்கணும்" என்று ஒன்றுமே தெரியாதவர் போல அகிலாண்டேஸ்வரி பேசினார்.

“இந்தம்மா இருக்கே” என்று திரு அவரை பார்க்க,

அவரோ “என்ன துளசி? எதுக்கு போனீங்க?” என்றார் எல்லோர் முன்னுமே,

“சொல்லிவிடு” என்ற த்வனி அதில் இருக்க,

“அது அத்தை செக் அப்க்கு” என்றாள்.

அவளின் சின்ன அத்தைகள் “என்ன செக் அப்” என்றனர் உடனே!

“மாசமா இருக்கேன் அத்தை” என்று விட, அங்கே அப்படியே ஒரு நிஷப்தம்!

“என்ன நிஜமாவா?” என்றவர்கள்,

“சந்தோஷம்” என்று முகத்தினில், வார்த்தைகளில், மகிழ்ச்சியை காட்டினர்.

அந்த வீட்டின் இன்னொரு பெண் பிள்ளையான சித்ரா தான் “பொண்ணு வயசுக்கு வந்துட்டா இப்போ போயா?” என்று சொல்லிவிட்டார்.

துளசியின் முகம் கூம்பி விட, அவள் அங்கேயிருந்து அடுத்த நொடி நகர்ந்து விட்டாள். சற்று தூரத்தில் இருந்த திரு அதை பார்த்திருந்தவன் அவனும் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டான். இருந்தால் ஏதாவது பேசிவிடுவோம் என்றே நகர்ந்து விட்டான்

“நான் என்ன கேட்டேன்னு துளசி இப்படி முகத்துல அடிச்சா மாதிரி போகுது?” என்று சித்ரா கோபப் பட்டார்.

“பின்ன என்ன சித்ரா? மீனாக்ஷி சீக்கிரமே பிறந்துட்டா, இப்போ என்ன வயசு துளசிக்கு, நாங்களே என்னடா ஒத்தை பிள்ளையோட நின்னுடுமோன்னு வேண்டாத தெய்வமில்லை, நீ இப்படி பேசற?” என்று அகிலாண்டேஸ்வரி சண்டைக்கு கிளம்பியவர்,

“எனக்கு அப்புறம் இங்கே துளசி தான், எத்தனை முறை சொன்னாலும் உங்களுக்கு ஏன் புரியறது இல்லை. வீணே எதுக்கு பேச்சு” என்று ஆரம்பிக்க,

“அம்மா” என்று அவரை அடக்கிய ராதா, பின்..

“நீங்க சும்மா இருங்கத்தை, அப்புறம் அம்மா மாதிரி அண்ணாக்கு கோபம் வந்துடப் போகுது! அப்புறம் என் பொண்ணுக்கு பொண்ணு வந்தா கூட நான் பெத்துக்குவேன்! உங்களுக்கு என்னன்னு சொல்லும்!” என்று அடக்கி விட்டாள்.

அவள் கிண்டல் செய்கிறாளா? இல்லை திரு பேசும் விதத்தை கொண்டு சொல்கிறாளா! என்று யாருக்கும் புரியாத போதும், அந்த இடம் அமைதியாகிவிட்டது.

ஆளாளுக்கு வீட்டிற்கு கிளம்பும் போது வந்து துளசியிடம் “உடம்பை ஜாக்கிரதையா பார்த்துக்கோ துளசி” என்று சொல்லிச் செல்லவும் மறக்கவில்லை.

ராதா கூட வந்து "உடம்பை பார்த்துக்கங்க அண்ணி, மெலிஞ்சு தெரியறீங்க" என்று சொல்லி சென்றாள். ராதா பெரிதாக உறவு பாராட்டாவிட்டாலும் சண்டை போடமாட்டாள். இப்போது மாற்றி மாற்றி வீட்டினரால் துளசிக்கு கொடுக்கப் படும் அதீத முக்கியத்துவம் துளசியின் பால் தானாக சென்று பேச வைத்திருந்தது.

சாரதா தனியாக "த பாரு, அவ கூட இத்தனை வருஷம் கழிச்சு மறுபடியும் உண்டாகிட்டா. நீ சீக்கிரம் குழந்தை பெத்துக்க பாரு!" என்று ஷோபனாவிடம் சொல்ல,

"எங்க இன்னைக்கு தான் வீட்டுக்கே வந்திருக்கேன்! நீயும் அப்பாவும் என்னை இங்க நிம்மதியா இருக்க விடுங்க, நீ என்னை சரியாவே வளர்க்கலை, நான் என்ன பண்ண?" என்று பதில் கூறினாள்.

"ஆ" என வாய்பிளந்து பார்த்தவர், "நல்லதுக்கே காலமில்லை" என்று சொல்லிச் சென்றார்.

எல்லோரும் சென்ற பிறகு, ஹாலில் தான் மீனாக்ஷி அமரவைக்கப் பட்டு இருக்க, இப்போது அவள் குடிசைக்குள் தூங்க தயார் செய்து, துளசி வெளியில் தூங்கத் தயாராக,

“என்ன பண்ற நீ, பிள்ளதாச்சி பொண்ணு நீ இங்க தூங்க வேண்டாம், உள்ள படு! நான் இங்க படுத்துக்கறேன்!” அகிலாண்டேஸ்வரி வந்தார்.

ஓய்ந்து போயிருந்தார் அவர்! வேலைகள், கூடவே மக்கள் துணைகளை விட்டு இருந்தது. இப்போது துளசி வந்ததும் ஒரு பலம் வந்திருந்தது. கூடவே ஒரு வாரிசு வரப் போவது அப்படி ஒரு மகிழ்வையும் கொடுத்திருக்க, துளசியிடம் எப்போதையும் விட கனிவுடன் நடந்து கொண்டார். அவரின் வீட்டின் மகிழ்ச்சி துளசியிடம் இருப்பது போல ஒரு தோற்றம் வந்திருந்தது. இல்லாத மூன்று மாதமாக வீடே களையிழந்து இருந்தது.

அதுவுமன்றி இப்போது பேத்தியிடம் சிநேகமாகி விட்டார் தானே! அதனால் அவளுடன் இருக்க தானாகவே ஒரு பிரியம் வந்திருந்தது.

“நீங்க எப்படி கீழ தூங்குவீங்க அத்தை?”

“கீழ எங்க தூங்கறேன், இப்போ கட்டில் எடுத்து போட்டுக்கலாம், பின்ன காலையில கொண்டு போய் போட்டுக்கலாம், மாமா தான் என்னை இங்க தூங்கச் சொன்னாங்க! உன்னை வேண்டாம் சொன்னாங்க!” என்று மேகநாதன் மேல் காரணம் சொல்ல,

அதற்கு பிறகு துளசி ஏன் பேசப் போகிறாள்!

திருவும் வெங்கடேசும் சேர்ந்து கட்டிலை தூக்கி வந்து போட, "பாட்டி எனக்கு ரெண்டு நாள் கதை சொன்னிங்க தானே, இப்பவும் சொல்லுங்க" என்று மீனாக்ஷி கேட்டாள்.

"இப்போவே கேட்டுக்கோ, இன்னும் கொஞ்சம் மாசத்துல புது ஆள் வரப் போறான் என் கதையை கேட்க!" என்று விஷயத்தை போட்டுடைத்தார்.

"யாரு? யாரு வரப் போறா?" என்று மீனாக்ஷி கேட்க, துளசி தடதடக்கும் இதயத்தோடு நின்று மகளை பார்த்திருந்தாள்.

"சொல்லு துளசி, அவளுக்கு தம்பியோ தங்கச்சியோ வரப் போறான்னு சொல்லு!" என்று அகிலாண்டேஸ்வரி சொல்ல,

முதலில் புரியாத மீனாக்ஷி புரிந்த உடன் "மா நிஜம்மாவா?" என்று துளசியை பார்த்து கேட்டாள்.

"ஆம்" என்பது போல தலையாட்டியவள், "இன்னைக்கு ஹாஸ்பிடல் போனேன் இல்லையா அப்போ தான் தெரியும்" என்று சொல்ல, மகள் குடிசையை விட்டு வெளியே அவளை அணைக்க ஓடி வந்தாள்.

"இரு, இரு, அங்கேயே இரு" என்று துளசி உள்ளே போக, அவளை அணைத்துக் கொண்டாள் மீனாக்ஷி.

அம்மாவை அணைத்தவாறே பாட்டியைப் பார்த்து, "நீங்க முதல்ல எனக்கு சொல்லுங்க, நான் அதை பாப்பாக்கு சொல்லிக்குவேன்!" என்று பேசினாள்.

இந்த பதிலில் பயந்து இருந்த துளசியும் மகளை அணைத்துக் கொள்ள, திரு அவர்களை விழி எடுக்காமல் பார்த்து நின்றான். எங்கேயும் அவன் பேச்சுக்கள் இல்லை. பார்வைகள் மட்டுமே!

அகிலாண்டேஸ்வரி "வாயை பாரு, வாயை" என்று நொடித்தவர், "பேய் கதை சொல்லப் போறேன்" என்று கண்களை உருட்டினார்.

"ஒரு பேயே பேய் கதை சொல்கிறதே" என்று மீனாக்ஷி உடனே சொல்ல,

"அடடே ஆச்சர்ய குறி!" என்று வெங்கடேஷ் சொல்ல, எல்லோருக்கும் சிரிப்பு வர சிரித்தனர்.

"அடி கழுதை, இரு, பத்து தலை பேய் கதை சொல்றேன்!"

"ராவணன் கதையா பாட்டி!" என்று மீனாக்ஷி கேட்க,

"முதல்ல உங்க அம்மாவை தூங்க அனுப்பு"

"நீ போய் தூங்கும்மா" என்று சொல்லி மீனாக்ஷி அவளின் இடத்தில் படுத்துக் கொள்ள, அவரின் இடத்தில அகிலாண்டேஸ்வரியும் படுத்துக் கொண்டு கதை சொல்ல

ஆரம்பிக்க, வெகு மாதங்களுக்கு பிறகு ஒரு நிம்மதி பெரியவர் சிறியவர் என அனைவர் மனதிலும்.

எல்லாவற்றையும் பார்த்திருந்த மேகநாதன், எல்லாம் சரியாகிவிட அவசர வேண்டுதல் கடவுளிடம் வைத்தார்.

மகளை விட்டு செல்ல மனமே இல்லாமல் துளசி ரூம் உள் செல்ல, அதனை கவனித்த மீனாக்ஷி "பாட்டி என்னை பார்த்துக்குவாங்க, நீங்க தூங்குங்க போங்க!" என்று பெரிய மனுஷியாய் மகள் சொன்னாள்.

இதனையெல்லாம் திரு பார்த்திருந்தான்.

அப்போதும் மனதே இல்லாமல் துளசி உள்ளே செல்ல, சிறிது நேரம் கழித்து உள்ளே வந்த திரு "அப்போ மீனாக்ஷிக்காக தான் இங்கே வந்த, எனக்காக இல்லைல்ல" என்று கேட்டான்.

என்ன கேள்வி இது என்று துளசிக்கு தோன்றினாலும், அதற்கு பதிலே சொல்லாமல், "எனக்கு ஒரு மாதிரி களைப்பா இருக்கு தூங்கட்டுமா" என்று கேட்க,

"தூங்கு" என்றவன்,

"ஆனா இங்கே தூங்கு" என்று அவனின் படுக்கையை காண்பித்தான்.

எதுவும் சொல்லாமல் அங்கே சென்று படுத்துக் கொண்டாள். கர்ப்பம் என்று தெரிந்ததில் மகிழ்ச்சியாகவும்

இருந்தது, இத்தனை வருடம் கழித்து என்பதில் கலக்கமாகவும் இருந்தது. எல்லாம் விட திரு தன்னை முதன் முதலில் கண்டு கொண்டது, ஒரு உவகையை கொடுக்க, அதனை அனுபவிக்க வேண்டி கண்களை மூட, அப்படியே உறங்கிவிட்டாள்.

திரு அருகில் சென்று அமர்ந்து கொண்டான் அவ்வளவே! உறங்கவேல்லாம் இல்லை. உறங்கும் துளசியை தான் கண்களில் நிரப்பிக் அப்படியே அமர்ந்திருந்தான்.

மனதில் ஒரு நிம்மதி இருந்தாலும் ஒரு கோபமும் இருந்தது, "அப்போ மீனாக்ஷி இல்லைன்னா இன்னைக்கு வந்திருக்க மாட்டாளா? அப்போ நான் யாரும் இல்லையா?" என்ற எண்ணம்.

"நான் எப்படி நடந்தேன் அவளிடம்" என்ற எண்ணம் மட்டும் அவனிடம் சிறிதும் இல்லை. அப்படி ஒரு உரிமையுணர்வு தலை தூக்கியது!

துளசி அந்த புறம், இந்த புறம், என புரண்டு புரண்டு படுக்க, திரு அவளின் தலையை கோதி, மெதுவாய் அவளை தோளில் தட்டி கொடுக்க, அசைவின்றி உறங்க ஆரம்பித்தாள்.

அத்தியாயம் பன்னிரண்டு

நன்கு உறங்கிவிட்டவளுக்கு அர்த்த ராத்திரியில் விழிப்பு வர, விழித்து பார்த்தவளுக்கு சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த திரு தான் கண்களில் பட்டான்.

வேகமாக எழுந்து அமர, "எதுக்கு இப்படி வேகமா எழற, மெதுவா பார்த்து எழணும்" என்று அதட்டினான்.

"ம்ம்" என்பது போல தலையாட்டியவள், எழுந்து வெளியே சென்று மகளை பார்த்து வந்து மீண்டும் படுக்கையில் அமர்ந்தாள்.

"நீங்க தூங்கலை" என்று திருவிடம் கேட்க, "தூக்கம் வரலை" என்று அவன் பதில் சொன்னான்.

"ஏன் வரலை?" என்றாள் பதில் கேள்வியாக,

"நீ என் கேள்விக்கு பதிலே சொல்லலை" என்று திரு சொல்ல,

"அதுக்கு எனக்கு பதில் தெரியாது, நீங்க எப்படி என்னை பார்த்து இப்படி கேட்கலாம்னு சண்டை போடணும்னு தோணுது, ஆனா போடவரலை! நீங்க ஏன் என்னை வந்து கூப்பிடலை?" என்றாள் தளர்வாக.

அதற்கு நேர் மாறாக திரு ஆத்திரப் பட்டான், "ஏன் கூப்பிடணும், எதுக்கு கூப்பிடணும், நானா உன்னை போன்னு சொன்னேன். நீதானே போறேன்னு போன!"

“சரி, நான் போனா என்னை கூப்பிட மாட்டீங்களா? உங்க பொண்ணை மட்டும் கூப்பிட்டுக்கிட்டீங்க”

“அதனால தானே, நீ திரும்ப இங்க வந்த, இல்லைன்னா வந்திருக்க மாட்ட தானே!” என்று எங்கோ பார்த்துக் கொண்டு கரகரத்த குரலில் கூற,

துளசி வாயடைத்து போய் அவனை பார்த்தாள்!

பின்பு அவனை பார்த்தவள் “முதல்ல என்னை பாருங்க” என்று சொல்ல, திரும்பி அவளை பார்த்தவுடன் “இனிமே எதுன்னாலும் என் முகம் பார்த்து தான் பேசணும். என்கிட்டே தான் பேசணும். எங்கேயோ பார்த்துட்டு, யார்கிட்டயோ பேசினா, நான் அதை காதுல வாங்க மாட்டேன், புரிஞ்சதா!” என்றாள்.

“நீ இந்த மாதிரி எப்போவுமே என்கிட்டே சொன்னதேயில்லை”

“இதெல்லாம் சொல்லணுமா? எல்லார் முகத்தையும் பார்த்து பேசத் தெரியுதில்ல”

“எல்லார் முகமும் என்னை டிஸ்டர்ப் பண்றதில்லை, உன் முகம் மட்டும் தானே என்னை டிஸ்டர்ப் பண்ணுது” இதற்கும் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்து போனாள்.

“எனக்கு உங்களை மாதிரி பேச வரலை, எனக்கு தெரிஞ்சதெல்லாம் ஒன்னு தான், நீங்க என்கிட்டே நடந்துக்கறது சரியில்லை! இன்னும் கொஞ்சம் கூட நல்லா நடந்துக்கலாம்!” என்று சொல்ல,

“ம்ம் சரி” என்றான் உடனே.

“இவர் என்ன என்னை வைத்து காமெடி பண்ணுகிறாரா” என்று தான் துளசிக்கு தோன்றியது. ஆனால் அவனின் முகம் அத்தனை சீரியசாய் இருந்தது.

“இதெல்லாம் இங்கேயே இருந்து சொல்லியிருக்க வேண்டியது தானே, அதை விட்டு நீ ஏன் என்னை விட்டு போன?” என்றான் அவளையே நேருக்கு நேராக தீவிரமாய் பார்த்து. இதற்கு என்ன பதில் சொல்லுவாள்.

“நான் எப்போவுமே இப்படி தானே, திடீர்ன்னு ஒன்னும் இப்படி நடக்கலையே. இப்போ மட்டும் உனக்கு என்னை விட்டு போக ஏன் தோணிச்சு? எப்படி மனசு வந்துச்சு? நான் உன்னை தேடுவேனா மட்டேனான்னு கூட உனக்கு தெரியாதா?”

“நீ செஞ்சதை பார்த்ததும் உன்னை கொல்லணும் போல ஆத்திரம் வருது, ஆனா உன்னை கொன்னுட்டு எனக்கு இந்த உலகத்துல என்ன வேலை, அதான் பேசாம இருக்கேன்!” என்றான் அத்தனை தீவிரமான குரலில்.

அதுவே அவன் எவ்வளவு காயப் பட்டிருக்கிறான் என்று காண்பிக்க, அவனை அமைதி படுத்தும் வகை தெரியாது விழித்தாள். அவனின் இந்த கோபம் அவர்களின் வாழ்க்கைக்கும் நல்லதல்ல என்று புரிந்து தணிந்து பேசினாள். "எதுக்கு இவ்வளவு கோபம்"

"நீதான் செத்துப் போகணும் போல இருக்குன்னு அம்மாகிட்டயும் அப்பாகிட்டயும் சொன்னியாமே! செத்துப் போகற அளவுக்கு நான் என்ன செஞ்சேன்?" என்று ஆவேசமாகப் பேசினான்.

"சாரி" என்று அவனை பார்த்து சொல்ல,

"குப்பைல போடு உன் சாரியை, என்னை நீ கொஞ்சம் கூட புரிஞ்சிக்கவேயில்லையா? உனக்கான என்னோட அன்பு உனக்கு தெரியவேயில்லையா?"

"யாராவது ஏதாவது பேசினா அதுக்கு நான் எப்படி பொறுப்பாவேன்? யார் கிட்டயாவது உன்னை விட்டு கொடுத்திருக்கேனா? இல்லை யாரோ என்னவோ பேசட்டும்ன்னு வேடிக்கை பார்த்துட்டு இருந்திருக்கேனா?"

"அப்புறம் நான் வேண்டாம்னு சொல்ல ஏன் பணம் கொடுத்தீங்க? அது ஒரு மாதிரி என்னை ரொம்ப அந்த சமயம் பாதிச்சது. நான் உங்களுக்கு முக்கியமே

இல்லைன்னு தோண வெச்சது” என்று கம்மிய குரலில் கூறினாள்.

“ஏன் இப்படி பண்ணுனீங்கன்னு என்னை கேட்கலாம், அதை விட்டு வீட்டை விட்டு போறது எந்த வகையில நியாயம்! என்னவோ போக இடமில்லை! படிக்கலை! வேலைக்கு போக முடியாது! அப்படி இப்படி சொன்னியாமே?”

“நீ படிச்சிருந்தா? உன்னால வேலைக்கு போக முடிஞ்சா? நீ என்னை விட்டு போயிடுவியா?” என்றவன் அவளை கோபமாக உறுத்து விழிக்க,

“அது சும்மா சொல்லிட்டேன்”

“சும்மா என்ன வேணா சொல்லுவியா நீ”

“எனக்கு தூக்கம் வருது”

“என்னை தூங்க வெச்சிட்டு நீ தூங்கு” என்று சட்டமாய் படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தவனை என்ன செய்வது என்று தெரியாமல் பார்த்தவள்,

“நீங்க முன்னமே என்கிட்டே இப்படி பேசியிருந்தா, பிரச்சனை இருந்திருக்காது!” என்று சொல்ல,

“உனக்கு பிரச்சனை இருந்திருக்காது, எனக்கு பிரச்சனை இருந்திருக்கும், நான் ஒரு வழியாகி இருப்பேன்!” என்றான் சோர்வான குரலில்.

பின் அவனே "நம்ம கல்யாணம் என்ன இஷ்டப் பட்டா நடந்தது, இல்லையே, ஆனாலும் நடந்த அப்புறம் இஷ்டம் வந்துடுச்சு தானே! அது உனக்கு தெரியவேயில்லையா? என்னை புரியவேயில்லையா உனக்கு?" என்று மீண்டும் ஆரம்பிக்க.. அவனை எப்படி சமாதானப் படுத்துவது என்று தெரியாமல் தவித்து தான் போனாள்!

முறுக்கி கொண்டு அமர்ந்திருந்தான்!

துளசி திருவிற்கு எதுவும் மறுத்தது கிடையாது என்றாலும், தானாக அவனை இதுவரை எப்போதும் நெருங்கியது இல்லை. அதற்கெல்லாம் இன்று தான் மொட்டை மாடியில் அவளாய் அவனை அணைத்து கொண்டது!

இப்போது தானாய் நெருங்கி உட்கார கூட அத்தனை தயக்கமாய் இருந்தது.

அவனையே பார்த்திருக்க, "எதுக்குடி என்னை விட்டு போன" என்றான் திரும்பவும், இத்தனை நாட்கள் மனதில் வைத்து மறுகிக்கொண்டிருந்தது அவனை அப்படி பேச வைத்தது.

"அச்சோ அவனிற்கு எதுவும் ஆகிவிட்டதோ?" என்று பயந்தே போனாள் துளசி.

“தெரியாம போயிட்டேன், இனிமே போகவே மாட்டேன்!” என்று சொல்ல,

“ஓஹ், இனிமே போற ஐடியா வேற வெச்சிருந்தியோ” என்று பேசினான்.

துளசி “அச்சோ, இவன் என்னிடம் பேசாமல் இருந்தாலே பரவாயில்லை” என்ற முடிவிற்கு வந்து விட்டாலும், அவனை மிகவும் வருத்திக் கொண்டு விட்டானோ என்ற கவலை இருக்க, மீனாக்ஷி, அவளின் கர்ப்பம் எல்லாம் பின்னுக்கு போய் அவனை கவலையாய் பார்த்தாள்.

அவளின் பார்வையை பார்த்தவன் “என்ன ரொம்ப டார்ச்சர் பண்றேனா?” என்று கேட்டான்.

“ஆம்” என்பது போல தலையசைத்தாள்.

“இதுவே உனக்கு டார்ச்சர்ன்னா, நான் மனசுக்குள்ள எவ்வளவு அனுபவிச்சு இருப்பேன், நான் தான் வேற ஒரு பொண்ணை விரும்பறேன்னு உன்கிட்ட வந்து சொன்னேன். ஆனாலும் கல்யாணத்தை நிறுத்தாம நீ என்னை கல்யாணம் பண்ணிகிட்ட? ஏன் பண்ணிக்கிட்ட எனக்கு பதில் சொல்லு?”

துளசி அமைதியாய் இருக்க,

“ஏன் பண்ணிக்கிட்ட சொல்லு?” என்றான் அழுத்தமான குரலில்.

“நான் மறுத்தாலும் வேற யாரையாவது மாமா உங்களுக்கு கல்யாணம் பண்ணி தான் வைக்க போறாங்க. அதை ஏன் நானே பண்ணிக்க கூடாதுன்னு தோணிச்சு. ஏன்னா எனக்கு உங்களை ரொம்ப பிடிக்கும்!” என்று சொல்லிவிட்டாள்.

“பிடிச்சு தானே கல்யாணம் பண்ணிக்கிட்ட, அப்புறம் ஏண்டி விட்டுட்டுப் போன” என்று பேச,

அதற்கு மேல தாள முடியாதவளாக துளசி அவனின் புறம் திரும்பி அவன் மேல் சாய்ந்து எப்போதும் அவன் செய்யும் வேலையை செய்தாள்.

ஆம்! சத்தமின்றி முத்தமிட்டாள்!

திருவின் மனதின் அலைபுருதல்கள் எல்லாம் மாயமாய் மறைய, அவன் ஒத்துழைப்போ எதிர்ப்போ எதுவுமின்றி இருக்க, செயல் முழுவதும் தனதாய் எடுத்தவள், வெகு நேரம் கழித்தே அவனை விடுவிக்க, அதன் பின்னே தான் கொஞ்சம் அமைதியானவன், பின்பு மெதுவாக “உனக்கு அந்த பொண்ணு பேர் தெரியுமா?” என்றான்.

“எந்த பொண்ணு?”

“ஷெரினா, நான் காலேஜ் பைனல் இயர் வரும்போது அவ ஃபர்ஸ்ட் இயர் சேர்ந்தா, பார்க்க பொம்மை மாதிரி இருப்பா, எனக்கு அவளை அவ்வளவு பிடிச்சது, எப்பவும் அவ ஞாபகம், அவ பின்ன சுத்தினேன். அவளுக்கும் பிடிச்சது, நான் கல்யாணம் பண்ண நினைச்சப்போ, எங்க அப்பா அது தெரிஞ்சு அவ மொத்த குடும்பத்தையும் தூக்கி..” என்று நடந்தது அனைத்தையும் சொல்லிக் கொண்டே வந்தவன்,

“என்னால ஒரு ஜீவன் கஷ்டப்பட்டு வீணா போச்சு, நான் எப்படி என் குடும்பத்தோட அப்படி சந்தோஷமா இருக்க முடியும். ஆனாலும் உண்மையா சந்தோஷமா தான் இருந்தேன். நீ என்னை நிம்மதியா தான் வெச்சிருந்த. சும்மா என்னோட மன திருப்திக்காக உன்னை நேரடியா பார்க்காம பேசாம சுத்திட்டு இருந்தேன்”

“அவங்க அவங்க வாழ்க்கைக்கு அவங்க அவங்க தான் பொறுப்பு. நீங்க எப்படி பொறுப்பாக முடியும்” என்று துளசி சொல்ல,

“அப்படி என்னால நினைக்க முடியலை, அவ நல்லா இருந்திருந்தா நினைச்சு இருப்பேனோ என்னவோ? ரொம்ப கஷ்டப்பட்டுட்டா, அப்புறம் இப்போ...” என்று நிறுத்தியவன்,

துளசியின் முகம் பார்த்து ‘‘போய் சேர்ந்துட்டா’’ என்றான் குரல் கமற.

‘‘என்ன?’’ என்று துளசி அதிர்ந்து பார்க்க,

‘‘ம்ம்’’ என்றவன், ‘‘செத்து போயிட்டா, சூசைட்! கிட்ட தட்ட அஞ்சு தடவைக்கு மேல காப்பாத்தி விட்டேன் அவளுக்கு தெரியாமலேயே. ஆனா இந்த தடவை முடியலை!’’

‘‘நான் ஒரு பொய்யான நம்பிக்கை கொடுத்தேன் தானே எல்லாம் என்னால முடியும்னு காதலிச்ச சமயத்துல. அது தான் அவளை வாழ விடாமா பண்ணிடுச்சு போல, அவளால அவளோட வாழ்க்கையை வாழ முடியலை அப்கோர்ஸ் நான் எங்கேயும் இப்போ அவ ஞாபகத்துல இல்லை. அவ சாகும் போதும் இல்லை. ஆனா அவளால அவ வீட்டுக்காரனோட வாழவே முடியலை, எனக்கு அமைஞ்ச மாதிரியான வாழ்க்கை அவளுக்கு அமையலை. அடி உதைன்னு நிறைய கஷ்டப்பட்டா போல. அதனால வாழற ஆசையே இல்லாம போய்டுச்சு, குழந்தைங்களும் இல்லை, வாழ்க்கைல அதனால ஒரு பிடிப்பில்லாம போயிருக்கும்’’ என்றான் எங்கோ பார்த்து.

அதன் பிறகு துளசி எதுவுமே பேசவில்லை, என்ன பேசுவது என்று கூட தெரியவில்லை! எதுவாகினும் நடந்ததற்கு இவர் எப்படி பொறுப்பாக முடியும் என்று

தான் தோன்றியது. வருத்தம் தான், ஆனால் அதனை மீறி ஒன்றுமில்லை!

இது தான் வாழ்க்கையின் நிதர்சனம்! எங்கோ எதுவோ என்பது போல தான் அவளின் மனநிலை! ஆனால் திரு?

அமைதியாய் அமர்ந்திருந்தாள். "அதுக்காக அவளோட பேசிட்டு இருந்தேன், தொடர்புள இருந்தேன் நினைக்காதே, அப்படி எதுவுமே இல்லை. அவங்கப்பா தம்பி மூலமா அவளுக்கு உதவி செஞ்சேன் அவ்வளவு தான்!"

"நீ என்னை விட்டு போயிட்ட, அதுக்கு அப்புறம் ஒரு பத்து பதினஞ்சு நாள்ல தான் அவ இறந்து போயிட்டா. எனக்கு அதுக்கு பிறகு உன்னை வந்து கூப்பிடறதை யோசிக்கக் கூட முடியலை. அதுக்காக அவ இறந்து போகாம இருந்திருந்தா வந்திருப்பேன்னு சொல்ல முடியாது! எனக்கு எந்த விளக்கமும் குடுக்க முடியாது, நான் இப்படி தான்!" என்று திடீரென்று கத்தினான்.

அவனுக்கே அதை பற்றி இப்போது பேச பிடித்தமில்லை. துளசியும் அதனை பற்றி எந்த பேச்சும் வளர்க்கவில்லை விட்டு விட்டாள்.

"நான் உங்க கிட்ட எந்த விளக்கமும் கேட்கலை, போதுமா, பேசாம தூங்குங்க!" என்றாள் கனிவாக.

பின் உடனே கறாராக "மீனாக்ஷிக்காக எல்லாம் இங்கே வரலை புரிஞ்சதா! மீனாக்ஷி மட்டும்னா அவளை அங்கே கூப்பிட்டு இருப்பேன், அதே சமயம் உங்களுக்காகவும் வரலை போதுமா, எனக்காக வந்தேன். என்னால உங்களை விட்டுட்டு இருக்க முடியலை, அதுக்காக வந்தேன்!" என்று சொல்ல,

"இதையாவது முன்னமே சொல்லியிருக்கலாம் தானே, என்னை எவ்வளவு டென்ஷன் செஞ்சு பேச வைக்கிறா" என்று அவனுக்கு அவனே பேசிக் கொண்டு படுக்க,

"ஏன் டென்ஷன் பண்றதை இவர் மட்டும் தான் குத்தகை எடுத்து இருக்குறாரா?" என்று அவளும் முனகிக் கொண்டே பக்கத்தில் படுத்தாள்.

பின் அவன் புறம் திரும்பி படுத்தவள் "எப்படி உங்களுக்கு நான் இப்படி இருக்குறது தெரிஞ்சது"

"என்னவோ எனக்கு பார்த்தவுடனே தோணிச்சு, உனக்கு ஏன் தெரியலை"

"எனக்கு எப்பவுமே ரெகுலர் இல்லை தள்ளி தள்ளி தான் போகும் ரெண்டு மூணு மாசம் கூட சில சமயம் ஆகிடும். அதுவுமில்லாம இப்படி ஆகும்னு நான் நினைக்கலை. எனக்கு எப்பவும் உங்க ஞாபகம் மட்டும் தான். அதனால் சுத்தமா இதை கவனிக்கலை!" என்று சிறு வெட்கத்தோடு சொல்ல,

அந்த முகத்தையே ஆசை தீர பார்த்திருந்தான். ஆனாலும் மனதில் இருந்த கோபம் முழுவதுமாக மறையவில்லை.

அவனின் பார்வையில் லஜ்ஜையுற்று "கண்ணை மூடுங்க" என்றவளிடம்,

"நீதானே நான் உன் முகம் பார்க்கறதில்லைன்னு சொன்ன, இனி எப்படி பார்க்கிறேன்னு பாரு!" என்று அவளையே விடாது பார்க்க,

முகம் முழுக்க ஒரு வெட்கம் பரவ, கண்களை மூடிக் கொண்டாள்.

படுத்தவுடனே துளசி உறங்கிவிட, மீண்டும் அவளின் முகம் பார்த்து சில மணித்துளிகள் இருந்தான். துளசி விட்டு சென்றது அவனுக்குள் அப்படி ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. "நான் எப்படி இருந்தாலும் என் மனைவி என்னோடு" என்ற கர்வம் முழுவதுமாக அடிவாங்கியது.

என்னென்னவோ யோசனைகள், தனக்கு வாழ்க்கையை சரியாக நடத்த தெரியவில்லையோ என்ற எண்ணம். அதன் பிறகு சில மணித்துளிகள் யோசனைகள் ஓடிய போதும்,

அவனின் கண்களை தானாக உறக்கம் தழுவியது.

எல்லாம் சரியாகிவிட்டதா என்று கேட்டால் அவர்களுக்கே தெரியாது. ஆனால் எல்லாம் சரியாக தான் இருந்தது.

காலை விழித்தவுடனே திரும்ப வீட்டில் உறவுகள் வந்து விட, துளசியின் அப்பாவும் அம்மாவும் வர,

“ஒழுங்கா அவங்களை வான்னு கூப்பிடற, சும்மா வாசல் படியை மிதிக்க கூடாது அது இதுன்னு சொன்ன பிச்சிடுவேன்” என்று திரு மிரட்டினான் சன்னக் குரலில்.

லேசாக அவனை முறைத்தவள் “எதை பிச்சுடுவீங்கலாம்” என்று வாய் கொடுக்க,

“ம்ம், உன் டிரெஸ்ஸை” என்று அவன் ஒரு பார்வை பார்த்துக் கொண்டே சொல்ல, துளசியின் உடலில் தானாக ஒரு சிலிர்ப்பு ஓட, “ஆங்” என்று வாயை பிளந்தவள், என்ன இது என்பது போல தன்னையே நொந்து கொண்டு, நேற்று இரவு இதற்கு இவன் பேசாமலே இருந்திருக்கலாம் என்று தோன்றியது போல, இன்று பார்க்கமலே இருக்கலாம் என்று தோன்றியது.

அவசரமாக அவனின் அருகில் இருந்து விலகி “வாங்கம்மா, வாங்கப்பா” என்று அவர்களை வரவேற்றாலும், முகத்தின் மலர்ச்சியையோ வெட்கத்தையோ மறைக்க முடியவில்லை. அது அவளை பேரழகியாக காட்டியது.

திருவின் முகத்தினில் யாருக்கு எதுவும் தெரியவில்லை. அவனின் முகம் எப்போதும் போல தான் உணர்வுகளற்று.

“என்ன அண்ணி உங்க முகம் இப்படி ஜொலிக்குது?” என்று நிருபமா கேட்டே விட,

“தெரியலையே” என்று முணுமுணுத்து பதில் சொல்ல,

“மாசமா இருக்கால்ல அதுதான்!” என்று அகிலாண்டேஸ்வரி பதில் கொடுத்தார்.

“வா வேலா” என்று மேகநாதன் வந்து வரவேற்க,

“வாங்க” என்று எப்போதும் போல திரு சொல்லியவன், மில்லிற்கு கிளம்ப, துளசியின் முகம் மலர்ந்து விகசித்தது.

ரத்னா அவளிடம் “அங்கே தானே இருந்த சொல்லவேயில்ல” என்று குறைபட்டார்.

அங்கே அவளின் சின்ன அத்தைகள் இருப்பதை கவனிக்காமல் “அது எனக்கே தெரியலைம்மா நேத்து வந்த பிறகு இவர் தான் என்னை கவனிச்சு சொன்னார்” என்று சொல்லிவிட, அங்கே கொல்லென்ற சிரிப்பலை.

“இப்படியா இருப்ப? எதோ எங்க பையன் விவரமா இருக்கவும் பொழைக்கறோம்” என்று கிண்டல் செய்ய,

தன் வெட்கத்தை மறைக்க முடியாமல் சமையல் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

“அய்யே, என்ன அக்கா இது உங்க முகம் இப்படி பளபளன்னு இருக்கு” என்று தனம் வேறு கேட்க,

“போடி நீ” என்று அவளிடம் செல்லமாய் கோபித்துக் கொள்ள,

அதற்குள் “மா” என்று மகளின் சத்தம் கேட்க,

“என்ன?” என்று விரைந்து வந்தவளிடம்,

“இவ்வளவு பூ எனக்கு வேண்டாம்”, ராதா அதை வைத்து விட அதை வேண்டாம் என்று சொல்லி கொண்டிருந்தாள்.

“ஷ், அத்தை, என்ன சொல்றாங்களோ அதை வெச்சிக்கோ!” என்று மகளிடம் சொன்னாள்.

“மா, ரொம்ப வெயிட்டா இருக்கு” என்று சொல்லிக் கொண்டே,

“மா முகத்துக்கு என்ன போட்டீங்க இட் லுக்ஸ் வெரி ஷைனி” என்றாள் மகள்.

“அதுவா உங்கப்பா ஸ்பெஷல்லா ஒரு பௌடர் போட்டான்” என்று ராதா மீனாக்ஷியிடம் கிண்டல் செய்ய,

“ஆமாம்” என்ற ஷோபனா, “உங்கப்பாக்கு ஃபோன் செஞ்சு கேளு” என்றும் சொன்னாள்.

மீனாக்ஷி கையில் இருந்த அகிலாண்டேஸ்வரியின் ஃபோன் எடுக்க, “ஆத்தாடி ஆத்தா, எவடி அவ, பேசாம உட்காருடி!” என்று ராதா ஷோபனாவை அதட்ட அங்கே இன்னும் இன்னும் சிரிப்பலை கிளம்பியது.

“என்னவோ சிவப்பா இருந்தா அப்படி தான் இருக்கும். இது ஒரு அதிசயமா?” என்று சாரதா நொடிக்க, அதனை கவனிப்பவர் யாருமில்லை. துளசி கவனித்தாலும் புன்னகை மாறாமல் மகளை தான் பார்த்திருந்தாள்.

“யாரும் எது பேசினாலும், காதில் போட்டுக் கொள்ள கூடாது” என்று தான் இருப்பாள். இன்று இன்னும் ஸ்திரமாய் அதனை மனதில் நினைத்துக் கொண்டாள்.

என்னவோ திருவின் மனதும் அவ்வளவு நிறைவாய் இருக்க, வெகு வருடங்களுக்கு பிறகு ஒரு பாட்டினை முணுமுணுத்து கொண்டே பைக்கினை ஓட்டிக் கொண்டிருந்தான்.

என்றென்றும் புன்னகை
முடிவில்லா புன்னகை
இன்று நான் மீண்டும் மீண்டும் பிறந்தேன்
உன் முதல் பார்வையிலே

இது பெண்களின் வரமா சாபமா யாரும் அறியாதது! என்ன தான் அடி உதை வாங்கினாலும், அவமானங்கள் சந்தித்தாலும், கணவன் என்று வரும் போது அவனின் ஒற்றை காதல் பார்வையில் எல்லாம் மறந்து தான் போகிறது!

அத்தியாயம் 13

“மா மா” என்று மீனாக்ஷி எதற்கெடுத்தாலும் அம்மாவை அழைக்க,

“என்ன மீனா, இத்தனை பேர் இருக்காங்க நான் அவங்களை கவனிக்க வேண்டாமா, நீ எதுன்னாலும் உன் அத்தைங்களை கூப்பிடு” என்று மகளை உறவோடு ஒட்டி வைக்க முயற்சி எடுத்தாள்.

திரு மில்லிற்கு சென்றவன் மதிய உணவிற்கு இன்னும் வரவில்லை. அப்படியே மாறிவிடுவான் என்று துளசிக்கு தோன்றவில்லை. ஆனாலும் மாற நினைத்திருப்பது, மாற ஆரம்பித்து இருப்பது மனதிற்கு ஒரு இதத்தை கொடுத்திருந்தது.

எல்லாம் விட வீட்டை விட்டு சென்றதை அவ்வளவு சுலபத்தில் மறந்து விடுவான் என்றும் தோன்றவில்லை. புதிய வரவொன்று வயிற்றினில் இருக்க, கோபத்தை அதிகம் காண்பிக்க வில்லையோ என்று தான் தோன்றியது.

என்னவோ இதை அவன் மறந்து விட வேண்டும் என்று மனது அவசர வேண்டுதல் வைத்தது. ஆனால் அவன் மறக்க முடியாதபடி படி பல சிக்கல்கள் மீண்டும் அவனை சூழ்ந்து இருந்தன என்பது துளசிக்கு தெரியாது.

“துளசி” என்று அதற்குள் பலமுறை அழைத்து விட்ட ரத்னா, அருகில் வந்து அசைக்கவும் தான், நிகழ்விற்கு வந்தாள் துளசி, “என்னமா” என்க,

“நாள் பார்த்தாச்சா? எப்போ? என்ன? நாங்க என்ன பண்ணனும்? அழைக்க நாங்களும் கூட வரணுமா? வீட்லயா? மண்டபத்துலையா?” என்று கேள்விகளை அடுக்கினார்.

“எனக்கு எதுவும் தெரியாது, அத்தை சொல்லுவாங்க! இப்போ தானே வந்த, கொஞ்சம் நேரம் பொறு!” என்றவள் சமையல் கட்டுக்கு விரைந்தாள். என்ன நடக்கிறது அங்கே என்று பார்க்க,

பின்னே மூன்று வீட்டிற்கும் அங்கே தான் உணவு. பின் சாரதாவும் சித்ராவும் இங்கே, ராதாவும் இங்கே, மேகநாதனின் தம்பி வீடுகள் இங்கே, வீடு ஆட்களால் நிரம்பி வழிந்தது.

இத்தனை நாட்களாக துளசிக்கும் செய்ய வேலையில்லை, வீட்டையும் கவனிக்க ஆள் இல்லை. அதனால் வேலைகள் அவளை பம்பரமாய் இழுத்துக் கொள்ள, அங்கேயும் இங்கேயும் நடந்தாள்.

“மெதுவா நட துளசி, இப்போ நீ பிள்ளைத்தாச்சி, வேலை சொல்ல மட்டும் செய். இழுத்து போட்டுக்காதே

கண்ணு படும்” என்று ரத்னா அவளிடம் ரகசியம் பேச, அவள் “சரிம்மா” என்று தலையாட்டி வந்தாள்.

அகிலாண்டேஸ்வரியும் “நீ கொஞ்சம் அசையாம உட்காரு, எதுன்னாலும் ராதா கிட்ட சொல்லு. அவ செய்வா” என்று சொன்னவர், மகளையும் இதில் இழுத்து விட்டார்.

“சரி” என்று துளசியும் ஒரு அரைமணி நேரம் அமர்ந்தாள்.

ஆனாலும் உண்மையில் துளசி அன்றி அணுவும் அசையாது, யாருக்கும் எந்த பொருட்களும் எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியாது.

அகிலாண்டேஸ்வரி ஒன்றோன்றிற்கும் துளசியை தேடினார். அவள் சொன்னாலும் எங்கே என்று தெரியாமல் தடுமாற, “நான் பார்த்துக்கறேன், நீங்க உட்காருங்க” என்று அவளே எழுந்து கொள்ள,

“என்னம்மா இது? உன் வீடு தானே, வேலை செய்யற இடம் மாதிரி ரிடயர்மென்ட் வாங்கிட்டியா?” என்று ராதா கிண்டல் செய்ய,

“போடி” என்று சலித்து அமர்ந்து அரட்டையில் ஆழ்ந்து விட்டார். இப்படியாக துளசியை வேலைகள் இழுத்துக் கொண்டது. வேலை விஷயத்தில் அவள் பிள்ளை தாச்சி என்பதும் பின்னுக்கு போனது.

அத்தனை பேருக்கும் நேரத்திற்கு நேரம் சாப்பிட கொடுக்க சொல்லவே சரியாக இருந்தது. ரத்னா மகளை கவலையாக பார்த்திருந்தார். பெரிய வீட்டில் வாழ்க்கை பட்டால் இப்படியோ என்று தோன்ற அவருக்கு தெரியவில்லை, பெரிய வீடோ சிறிய வீடோ வேலை செய்பவர் தான் செய்வர் என்று.

வீடு கலகலவென்று இருந்தது, யாராவது வீட்டிற்கு வந்த வண்ணம் இருக்க, எல்லோரிடமும் அகிலாண்டேஸ்வரி துளசி உண்டாகியிருப்பதையும் சொல்ல, "அச்சோ" என்று சங்கடமாகிவிட்டது துளசிக்கு.

திரு இரவு வரையிலும் வரவில்லை, மதியம் அழைத்த போது வேலை என்று விட்டான். இந்த அழைப்பே துளசிக்கு புதிது.

"குடுத்து விடவா" என்று துளசி ஆரம்பிக்கும் போதே வைத்திருந்தான். மூன்று மாதமாக எதுவும் செய்யாமல் இருந்தான். வருவான், போவான் அவ்வளவே! என்ன நடந்தது என்று கேட்டால் ஞாபகம் கூட இருக்காது. துளசி சென்றதில் இருந்து துளசியின் ஞாபகம் மட்டுமே! வந்து விட்ட பிறகு தான் மற்ற எல்லா ஞாபகமும்.

தொழில் மேனேஜரின் மேற்பார்வையில் நடந்து கொண்டிருந்தது. உற்பத்தி வெகுவாக குறைந்து இருக்க, விற்பனையும் சற்று மந்தமாக தோன்ற, ஏன் என்று

பார்க்க, தொழிலின் பிரச்சனைகள் எல்லாம் அப்போது தான் கண்களுக்கு தெரிய அதனை சரி செய்ய அமர்ந்து கொண்டான். துளசியையும் மறந்து விட்டான், மீனாக்ஷியையும் மறந்து விட்டான்.

இரவு பத்தரை மணிக்கு வர வீடே அடங்கியிருந்தது. ரத்னாவும் வேலவனும் உறவினர் ஒருவர் வீட்டிற்கு உறங்க சென்றிருந்தனர். துளசியும் அகிலாண்டேஸ்வரியும் தான் இருந்தனர். மீனாக்ஷி கூட உறங்கியிருந்தாள். அகிலாண்டேஸ்வரி படுத்து இருந்தார், ஆனால் உறங்க வில்லை.

“என்னடா இப்போ போய் இவ்வளவு லேட்டா வர்ற, எவ்வளவு வேலை இருக்கு, அப்போ அப்போ வீட்டுக்கு வர வேண்டாமா?” என்று அகிலாண்டேஸ்வரி, திரு உள்ளே நுழைந்த நிமிடம் பேசினார்.

“ஏன் நீங்க பார்க்க மாட்டீங்களா?” என்று வள்ளென்று விழுந்தான்

அதிலேயே அவனின் மூட் சரியில்லை என்று துளசிக்கு புரிந்து விட , “என்ன?” என்பது மாதிரி அவனின் முகத்தை விடாமல் பார்க்க,

“நான் பார்க்கற வேலையை தான் நான் பார்க்க முடியும். பாக்கி எல்லாம் நீதான் பார்க்கணும்” என்று அகிலாண்டேஸ்வரி சண்டைக்கு கிளம்பினார்.

“அத்தை அவர் முதல்ல சாப்பிடட்டும், பசியா இருப்பார், அப்புறம் பேசுங்க” என்றாள் மெதுவான குரலில் துளசி.

“இவன் சாப்பிட்டு முடிக்கறதுக்குள்ள நான் தூங்கிடுவேனே” என்று அவர் சொல்ல,

“ம்ம்ம்! எழுதிக் குடு, இவ என் கூட சண்டை போடட்டும்!” என்று சொல்லி ரூமின் உள் உடை மாற்றக் கிளம்பினான்.

நிஜமாகவே திருவிடம் என்ன என்ன கேட்கவேண்டும் என்று அகிலாண்டேஸ்வரி சொல்லி, உறங்க கண்மூடி கொண்டார்.

திரு வந்ததும் அவனுக்கு உணவு எடுத்து வைக்க, “நீ சாப்பிட்டிட்டியா?” என்றான்.

“இல்லை” என்பது போல தலையசைக்க,

“இனிமே மீனாக்ஷி சாப்பிடும் போதே சாப்பிட்டிடணும்” என்றான் அதிகாரமாக.

“அதை கொஞ்சம் தன்மையா சொன்னா தான் என்ன?” என்று துளசிக்கு தோன்றிய போதும், தலை “சரி” என்று தானாக ஆடியது.

பின்பு உண்ண ஆரம்பிக்க, அருகில் இருந்த சேரில் அமர்ந்தவளிடம், "சாப்பிடுன்னு தனியா சொல்லணுமா?" என்றும் அதட்டினான். அவளுக்கும் ப்ளேட் வைத்து உணவை உண்ண ஆரம்பித்தவள் பின்பு மெதுவாக "என்ன பிரச்சனை?" என்று கேட்க,

"நீதான் என் பிரச்சனை? வேற என்ன இருக்க முடியும்?" என்றான் கடுப்பாக.

"நான் என்ன பண்ணினேன்?" என்று லேசாக துளசி முனக,

"என்ன பண்ணுனியா? ம்ம், என்னை விட்டுட்டு போன, போனியா..... நான் எதுவும் சரியா கவனிக்கலை. பிசினெஸ் டல் அடிக்குது" என்றான் நேரடியாக. பின்பு மேலே பேசாமல் வாயை மூடிக் கொள்ள, இன்னும் என்ன வரப் போகிறதோ என்று பயந்து இருந்தவள் ஆசுவாசமானாள்.

"நானா இவரை பார்க்க வேண்டாம்னு சொன்னேன்" என்று மனதிற்குள் நினைத்தாலும் வெளியில் சொல்லவில்லை அமைதியாக உண்டாள்.

ஆனாலும் பார்த்தும் பாராமல் திருவின் முகத்தினை ஆராய அது உம்மென்று இருந்தது. அவன் உண்டு

முடித்து எழுந்து சென்று விட, துளசிக்கு வேகமாக உண்ண முடியாமல் மெதுவாக உண்டு எழுந்து சென்றாள்.

அவனோடு இருக்கும் பொழுதுகளை மனது எதிர்பார்க்க, அவன் உள்ளே சென்றதும் மனது சப்பென்று உணர்ந்தது.

இத்தனை நாட்கள் அவன் பிடிக்காமல் அருகில் இருக்க மாட்டேன் என்கிறான் என்று நினைத்திருக்க, இப்போது அவனுக்கு பிடித்திருக்கிறது என்பது நிச்சயம்.

சிறிது அவனின் குணமும் பிடிபட்டது, அவனுக்கு இதெல்லாம் வராதென்று! ஆனாலும் புதிதாய் இத்தனை வருடங்கள் இல்லாமல் ஒரு எதிர்பார்ப்பு! "நீயென்ன புதிதாய் திருமணமானவள் போல அதையும் இதையும் எதிர்பார்க்கிறாய்" என்று மனது குட்டு வைக்க,

"ஏன்? அப்போது தான் எதிர்பார்ப்பு இருக்க வேண்டுமா, இப்போது இருக்கக் கூடாதா என்று மனது நினைத்தது.

இப்படி பலதும் மனதில் ஓடினாலும் கைகள் பாட்டிற்கு கணவனுக்கு பால் கலந்து எடுத்துப் போனது.

வாங்கி அருந்த ஆரபித்தான், திடீரென்று துளசி "பால் உங்களுக்கு மட்டும் தான் இருந்தது" என்று பேச,

புரியாமல் திரு பார்க்க "இந்த மாதிரி டைம்ல நான் நிறைய பால் குடிக்கணும்" என்றாள்.

உடனே நேரம் பார்த்தான், கடை இருக்குமா? போய் வாங்கி வரலாமா?" என்பது போல.

அவனின் எண்ணம் புரிந்தவள் — "கடை எல்லாம் இருக்காது!"

"அப்போ ஏன் எனக்கு குடுத்த, நீ குடிக்க வேண்டியது தானே!" என்று ஸ்ட்ரிக்ட் ஆஃபிசராய் பேசினான்.

"எனக்கு இதுதான் வேணும்" என இல்லாத தூசியை படுக்கையில் தட்டிக் கொண்டு துளசி பேச,

திருவின் முகம் அதுவரையில் இருந்த ஒரு கடுமையை விட்டு, ஒரு மென்மையை தத்தெடுத்தது.

"பிடி" என்று அவளிடம் கிளாசை நீட்டினான், ஒரு இரண்டு வாய் தான் குடித்திருந்தான்.

கையில் வாங்கியவள் மெதுவாய் சிப் சிப்பாக குடித்தாள். மறந்தும் திருவை பார்க்கவில்லை எதிரில் இருந்த சுவரை பார்த்து குடித்தாள்.

"எதுக்குடி என்னை விட்டு போன?" என்றான் திரும்பவும்.

"அச்சோ" என்றானது அவளுக்கு, "ஒரு வேளை நேற்று மாதிரி எதுவுமோ இல்லை எதிர்பார்ப்போ" என்று

எதிர்பார்போடு அவள் திரும்ப, ‘‘இல்லை’’ என்று காண்பித்து கொடுத்தது அவனின் முகம்.

கவலையான ஒரு முகம்!

‘‘என்ன? என்னாச்சு? நிறைய பிரச்சனையா?’’ என்றாள்.

‘‘நிறைய பிரச்சனை எல்லாம் இல்லை, ஆனா கைல காசில்லை!’’ என்றான்.

‘‘காசில்லைன்னா’’ என்றவளிடம்,

‘‘நேத்து உன்னை ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போகும் போது ஒரு கார் வாங்கலாம்னு யோசிச்சேன், இன்னைக்கு காலையில மில்லுக்கு போன பிறகு கைல எவ்வளவு இருக்குன்னு பார்த்தப்போ தான் சுத்தமா எதுவுமே இல்லைன்னு புரிஞ்சது. எல்லா பணமும் வெளில இருக்கு, கிட்ட தட்ட ஒரு ரூபா வெளில நிக்குது’’ என்று சொல்ல,

அவர்களே பேசினதில்லை? இதில் தொழில் பற்றி எங்கே பேச! அவனையே பார்த்திருந்தாள்.

‘‘தப்பு என்பேர்ல தான். கைல எவ்வளவு பணம் இருக்குன்னு பார்க்காம நிறைய பணத்தை வெளில சுத்த விட்டுடேன், இப்போ கொஞ்சம் சிரமம்!’’ கைல இருக்குறது இந்த மாசம் எல்லோருக்கும் சம்பளம் குடுக்க தான் வரும் , இனிமே வர்ற வசூல் கூட ஒரு ரெண்டு

மூணு மாசத்துக்கு எடுக்காம நிறுத்தினா தான் கொஞ்சம் மாசத்துக்கு வொர்கர்ஸ்க்கு சம்பளம் குடுக்க சிரமமில்லாம இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே வந்தவன்,

''எல்லாம் உன்னால தான்'' என்றான் கடுமையாக திரும்பவும்

துளசி பரிதாபமாக பார்த்திருக்க,

அவளின் முகம் பார்க்காமல் ''நீ என்கூட இல்லை, அதனால தான் எனக்கு இப்படி'' என்று சுவரை பார்த்து முறைத்தான்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் துளசி விழித்தவளுக்கு ஒரு சோர்வும் மனதினுள் வந்து உட்கார்ந்து கொண்டது.

''நம்ம வீட்ல ஒரு விஷேஷம். நான் ஊருக்கெல்லாம் பணம் குடுக்கறேன், ஆனா எனக்கு செலவு செய்ய இப்போ பணமில்லை. இதுவரை ஒரு ஒத்தை பைசா நான் யார் கிட்டயும் வாங்கினது கிடையாது. இப்போ எனக்கு புதுசா யார் கிட்டயும் கேட்கவும் முடியாது''

''நம்ம என்ன அப்படி ஒத்துமையாவா வாழ்ந்துட்டு இருந்தோம். ஒரு சின்ன விஷயம், நீ போன, இப்போ என்னோட நிலைமை...'' என்று சலித்தவன் படுத்துக் கொண்டான்.

''நாம பணம் குடுத்தவங்க கிட்ட கேட்க முடியாதா?''

“யார் கிட்ட கேட்ப, நாகேந்திரன் மாமாக்கு இருபது லட்சம், ராதா வீட்டுக்காரனுக்கு முப்பது லட்சம், இப்படியே அம்பது லட்சம் போச்சு!”

“இன்னும் அம்பது லட்சம் ஒரு இடம் வாங்க அட்வான்ஸ் கொடுத்தேன், நாலு மாசம் ஆச்சு. நீ போகும்முன்ன. பாக்கி குடுக்காததுனால அந்த டீல் அப்படியே நிக்குது. எனக்கு எந்த யோசனையும் இதுவரை ஓடவேயில்லை!”

“இப்போ ஓடுது, ஆனா உடனே பணம் பிரட்ட முடியாது!” என்றவன், கண்களை மூடி தலைக்கு கைகளை முட்டுக் கொடுத்து படுத்துக் கொண்டான்.

துளசிக்கு அங்கேயே படுப்பதா, இல்லை முன்பு போல அவளின் ரூம் போவதா என்று தெரியவில்லை, அவன் பேசாவிட்டால் போகிறது என்று அவளாக இன்று பால் குடிக்கும் சாக்கில் பேச்சை வளர்த்திருக்க,

இந்த பிரச்சனைகளை எதிர்பார்த்திருக்கவில்லை.

திருவை திருமணம் செய்த நாளாக திருவின் பாராமுகம், மற்ற சொந்தங்கள் செய்யும் அலட்சியங்கள், இது மட்டும் தான் அவளின் பிரச்சனை! வேறு எதுவுமில்லை! பணமென்பது பிரச்சனை என்று என்றுமே இருந்தது இல்லை. இப்போதும் இல்லை தான், ஆனால் திருவின் கவலை அவளை கவலை கொள்ளச் செய்தது.

மெதுவாக அவளின் ரூம் நோக்கி நடக்க,

“என்னை கொன்னுட்டு தான் விடுவியா நீ” என்று திரு கத்தினான்.

அப்படியே விதிர்த்து நின்று விட்டாள், “ஏன் இப்படி பேசறீங்க?” என்று கனத்த குரலில் கேட்க,

“பின்ன எதுக்குடி போற, தினமும் சொல்வாங்களா? இல்லை நான் உன் பின்னாடி சுத்தணுமா?” என்று சுள்ளென்று விழுந்தான். காலையில் இருந்து பணப் பிரச்சனை அவனின் மண்டைக்குள் மிக அதிகமாய் குடைய அதையெல்லாம் துளசியிடம் காட்டினான்.

ஆம்! நிலத்தை விரைவில் மீத பணம் கொடுத்து கிரையம் செய்யாவிட்டால், அந்த ஐம்பது லட்சமும் ஸ்வாஹா! கூடவே இவர்கள் இருவரும் பணம் திரும்பக் கொடுப்பர் என்ற நம்பிக்கை இல்லை. ஒரு கோடி அவனின் மூளையில், மனதில் எல்லாம் பதிந்து “நஷ்டமா” என்ற எண்ணத்தை கொடுத்திருக்க தளர்ந்திருந்தான்.

துளசி பதில் எதுவும் பேசாமல் வந்து படுத்துக் கொண்டவள் சிறிது நேர அமைதிக்கு பின் அவன் புறம் திரும்பி படுத்து , மெதுவாக “என்னை எவ்வளவு வேணா திட்டிக்கங்க, ஆனா இப்படி கொல்றேன்னு எல்லாம் பேசாதீங்க” என்று சொல்ல,

“ப்ச்” என்று சலித்தவன், அன்றைக்கு அது போதும் என்று நினைத்தானோ என்னவோ “நானா பேசலை! தானா வந்தா ஒன்னும் பண்ண முடியாது!” என்றான்.

என்ன பதில் இதுவோ என்று தோன்றிய போதும் கண்களை மூடிக் கொண்டாள். அவனின் அணைப்பிற்காய் மனம் ஏங்கியது. அவனோ பணத்தின் கவலையில் உறக்கமும் வராமல், எப்படி இந்த நஷ்டத்தில் இருந்து வருவது என்ற யோசனை மட்டுமே மனதிலும் மூளையிலும் உலாவர படுத்திருந்தான்.

நேற்று வரை துளசியின் யோசனை! அவள் வந்த பிறகு இப்போது அவளின் யோசனை இல்லவே இல்லை!

அவளாய் சென்று அணைக்கும் அளவிற்கு தைரியம் வரவில்லை. மனதிற்கும் எதோ செய்த போதும் நாள் முழுவதும் ஓயாது செய்த வேலையில் உடல் ஓய்ந்து இருக்க உறக்கம் வந்து விட்டது.

அவள் உறங்கிவிட்டாள் திரு உறங்கவேயில்லை நேற்று வேறு கோபம்! இன்று வேறு கவலை!

வெகு நேரம் கழித்து துளசியின் புறம் திரும்பி படுத்தான், அவளின் முகம் பார்த்ததும் மனதில் ஒரு அமைதி, அத்தனை நேரம் இருந்த கவலை குறைந்தது.

“ரொம்ப டார்ச்சர் பண்றேன் இவளை, முதல்ல பேசாம! இப்போ பேசி!” என்று தோன்ற, “சாரி” என்று உதடுகள் முணுமுணுத்தது.

கூடவே “அவளுக்கு இப்போ டென்ஷன் குடுக்கவே கூடாது, நீ என்ன பண்ற?” என்று அவனுக்கு அவனே திட்டிக் கொண்டு படுத்திருந்த போதும், கொஞ்சமும் தெரியாத சேலை மறைந்திருந்த அவளின் இடையை பார்த்தான். மெதுவாக சேலையை விலக்கியவன், அவளின் வயிற்றை கரிசனமாக தடவிக் கொடுத்தான்.

அவள் விழிந்திருந்த போது இதனை செய்திருந்தால் துளசியின் மனதின் ஏக்கங்கள் எல்லாம் எங்கோ பறந்திருக்கும், ஆனால் அவனுக்கு தான் தெரியவில்லையே!

அத்தியாயம் பதினான்கு

காலையில் துளசி எழுந்த போது திரு ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, சில நொடிகள் பார்த்திருந்ததவள் மகளை தேடிச் சென்றாள்.

பின்பு மகளுக்கு தேவையானதை எல்லாம் கவனித்து அவளும் குளித்து வந்த போது நேரம் ஒன்பதை நெருங்கியிருந்தது.

அகிலாண்டேஸ்வரி துளசியிடம், "நான் சொன்னதை கேட்டியா?" என்றார்.

விழித்தாள், அது அவளின் ஞாபகத்திலேயே இல்லை, அவளின் முகத்தை பார்த்தே கேட்கவில்லை என்று கண்டு கொண்டவர், "என்ன துளசி மூணு நாள் ஆச்சு, நாம இன்னும் விஷேஷதுக்கு நாள் குறிக்கலை, எங்கே அவன்?"

"தூங்கறாங்க"

"என்ன இன்னுமா தூங்கறான்? எழுப்பு அவனை, கொஞ்சம் கூட பொறுப்பே இல்லை" என்று ஏகத்திற்கும் சத்தமிட,

"உங்களுக்கு இப்போ என்ன வேணும்?" என்று எழுந்து வந்திருந்தான் திரு.

“அது இன்னும் நாள் குறிக்கலை, எங்கே பண்ண போறோம்? வீட்லையா? மண்டபத்துலையா? எதுவும் பேசலை!”

“ராதாக்கு பண்ணும் போது யார்கிட்ட கேட்டீங்க? நீங்க தானே பண்ணியிருப்பீங்க, இப்போ எதுக்கு என்னை தொந்தரவு பண்றீங்க. நான் முன்னமே உங்களுக்கு என்ன தோணுதோ செய்ங்கன்னு சொல்லிட்டேன்!”

“டேய், நீங்க அப்பா அம்மாடா உங்களுக்கு ஆசை இருக்காதா?”

“எனக்கில்லை, உனக்கு இருக்கா?” என்று துளசியைப் பார்த்து அதிகாரமாகக் கேட்டான்.

இரு கைகளையும் ஆட்டி சிறு குழந்தை போல அவசரமாக “இல்லையில்லை” என்றாள். அவள் சொன்ன விதம் திருவிற்குள் கடுப்பை கிளப்பியது. என்ன பண்றேன் நான் இவளை இப்படி பதில் சொல்றா என்று! அவ்வளவு கொடுமை படுத்தறேனா? இவ தான் என்னை படுத்தி எடுக்கறா? அவளை முறைத்தவன் பின்பு அம்மாவின் புறம் திரும்பி,

“ம்ம், கேட்டுக்கிட்டீங்க தானே செய்ங்க, அதை விட்டு சும்மா அதட்டி உருட்டி எப்போ பார்த்தாலும் சண்டை இழுத்துட்டே இருந்தீங்க..” என்றவன்,

“வீட்டுக்கு வரவே எரிச்சலா இருக்கு” என்று கத்திச் சென்றான்.

மேகநாதனும் அங்கே தான் இருந்தார், வெங்கடேஷ் ஷோபனா என அனைவரும்!

அவனின் வார்த்தைகளில் துளசியின் முகம் சுருங்கிவிட, சமையலைறைக்கு மகளுக்கு உணவு எடுப்பதற்காகச் சென்றாள்.

“சும்மா அவனை ஏன் தொந்தரவு பண்ற? நம்மை தான் செய்ய சொல்லிட்டானே விடு!” என்று மேகநாதன் அதட்ட,

“பாட்டி, அப்பா கோபமா இருக்கும் போது பேசாதீங்க!” என்று மீனாக்ஷி பெரிய மனுஷியாய் சொன்னாள்.

“ஆனாலும் ரொம்ப தாண்டி உங்கப்பன் கத்துறான்” என நொடித்தார் அகிலாண்டேஸ்வரி.

உணவை எடுத்துக் கொண்டு போய் மகளுக்கு உணவை ஊட்ட ஆரம்பித்தாள்.

துளசி இல்லாத போதும் அகிலாண்டேச்வரி எதற்காவது சண்டை பிடித்துக் கொண்டே இருப்பார், இன்று அப்படி பேசவும் கத்திவிட்டான். “வீட்டுக்கு வரவே எரிச்சலா இருக்கு” என்ற வார்த்தை அது

அகிலாண்டேஸ்வரியை கொண்டு, துளசியை கொண்டு இல்லை, துளசி இல்லாத வீட்டை கொண்டு!

ஆனால் திருவின் வார்த்தைகள் துளசியை காயப்படுத்த அதில் உழன்றவள், கணவன் எழுந்து விட்டான், அவனுக்கு காஃபி கொடுக்க வேண்டும் என்பதை மறந்து விட்டாள்.

நேரமாகி விட்டதால் விரைவாக குளித்து தயாராகி உணவு மேஜைக்கு வந்தவன், துளசி மகளுக்கு உணவை ஊட்டிக் கொண்டிருப்பதை பார்த்தான். அவனுக்கு அன்று அந்த ப்ரோகர்களை சந்திக்க வேண்டி இருந்தது, இன்னும் ஒரு மாதம் டைம் கேட்கச் சொல்ல, அதனால் துளசி வேலையாய் இருப்பதை பார்த்ததும் அவன் வெளியில் கிளம்பிவிட்டான்.

எப்போதும் யாரிடமும் சொல்லிக் கொள்ளும் வழக்கமில்லை, ஆனால் துளசி பார்க்கும் போது தான் வெளியில் கிளம்புவான், இன்று எதுவும் ஞாபகமில்லை, துளசி இதனை கவனிக்கவில்லை!

மகளுக்கு ஊட்டி முடித்து வந்து கணவனை தேட, அவனை காணவில்லை!

வெளியில் வந்து அவனின் பைக்கை பார்க்க அதுவுமில்லை, மனதிற்கு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது! ஆனால் சற்று நேரத்தில் எல்லோரும்

வந்து விடுவர் என்று புரிந்து, அதற்கு ஏதுவாக வேலைகள் செய்ய ஆரம்பித்து விட்டாள்.

ஆனாலும் மனதில் ஒரு வெறுமை சூழ்ந்து விட்டது. வேலைகள் இயந்தர கதியில் நடக்க, அவளின் முகத்திலும் ஒரு புன்னகை ஒட்டிக் கொண்டது. எல்லோரும் இருக்கும் போது அகத்தின் அழகை முகத்தில் காட்டவிடவில்லை அவளின் முகம்!

அன்று மீனாக்ஷியை அலங்கரித்து புகைப்படம் வேறு எடுத்தனர். ரத்னா வந்தவர் மீனாக்ஷியுடன் இருக்க, அவளின் அத்தைகள் அவளை ஒரு வழியாக்கி கொண்டிருக்க, எல்லாவற்றையும் ஒரு சிறு புன்னகையுடன் பார்த்திருந்தாள். அதிகம் துளசி யாரிடமும் பேசியதில்லை, அவளிடமும் யாரும் பேசியதில்லை என்பதால், என்ன ஏதென்ற பேச்சுக்கள் எப்போதும் போல!

மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் மற்ற இரு வீட்டினருடனும் கலந்து பேசி, மண்டபம் நாள் என குறித்தனர். வெங்கடேஷிடம் விருந்தின் பொறுப்பை ஒப்படைத்து, அழைப்பை அவர்கள் பார்க்க முடிவெடுத்தனர்.

நாள் முழுவதும் அதில் ஓட, என்ன தான் வேலைகள் நடந்து கொண்டிருந்தாலும் துளசியின் மனதில் திரு திரு திரு மட்டுமே!

அன்றும் மதியம் உணவிற்கு வரவில்லை, காலையில் உண்ணாமல் சென்று விட்டான் என்பதை ஞாபகத்தில் கொண்டு மதியம் வருகிறானா என்று சிறிது நேரம் பார்த்தவள், அவனை கேட்காமலேயே உணவை ஆட்களிடம் கொடுத்து விட்டாள்.

உண்டானா, இல்லையா என்ற ஞாபகம் தான்!

மேகநாதன் "வேலா நீயும் ரத்னாவும் இங்க இருக்கீங்க, நாங்க சென்னை போய் எப்படி அழைக்க?"

"தேவையில்லைங்கய்யா பிரசன்னாக்கு ஃபோன்ல சொல்லிடுங்க, இங்க நாங்க என்ன பண்ணனும் சொல்லுங்க?" என்றார் அவர்.

வீட்டுக்குள் எல்லாம் சகஜமாக வரமாட்டார் ரத்னாவை போல. உள்ளே வந்து ஓரிரு வார்த்தைகள் பேசியபின், அங்கே வீட்டின் முன் இருந்த வராண்டாவில் தான் ஒரு சேர் போட்டு அமர்ந்தே இருப்பார். எப்போது இங்க வந்தாலும் அப்படி தான்!

எப்போதுமே வேலைக்காரன் என்ற எல்லைக்குள் தான் நிற்பார். ஆனால் ரத்னா அப்படி கிடையாது. அவர் யாரும் பேசினால் பேசுவார், பேசாவிட்டாலும்

முறுவலுடன் கடந்து விடுவார். மொத்தத்தில் இருவரிடமும் எந்த குறையும் தெரியாது.

இப்படியாக தொலைபேசியில் சொல்லி, இங்கே பெரியவர்கள் ஜரூராக வேலையை ஆரம்பித்து விட, துளசிக்காவது நடப்பது தெரியும், திருவிற்கு அது கூட தெரியாது!

இரவு தான் வீடு வந்தான், அவனை பார்த்ததுமே களைப்பாக இருப்பது தெரிய, "மதியம் சாப்பிட்டீங்களா?" எனக் கேட்டாள்.

அதற்கு பதில் சொல்லாமல் படியிறங்கி சென்று, அவனின் பைக்கில் மாட்டி இருந்த பையை எடுத்து வந்து அவளிடம் நீட்டி ரூமின் உள் போய்விட....

அவள் அதனை எடுத்து வைத்து பார்க்க உண்டிருந்தான். பின்பு அதனை கழுவ போட்டுவிட்டு வர, உறங்கும் மகளை நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் மீனாட்சியை நேற்று இரவும் பார்க்கவில்லை. இன்று காலையில் அவள் விழித்து இருந்த போதும் கவனித்து பார்க்கவில்லை. இப்போதும் உறங்கி விட்டாள், இன்று அகிலாண்டேஸ்வரி கூட உறங்கி விட்டார்.

அவன் நின்று பார்ப்பதை துளசி நின்று பார்த்தாள். பின்பு உணவு மேஜைக்கு வந்து அமர்ந்தவனிடம்

உணவை வைக்க, "எதுவும் வேண்டாம் இட்லி மட்டும் போதும்" என்றான்.

ஆம்! நிறைய பதார்த்தங்கள் இருக்க, அதனை வைக்க போனவளிடம் இதனை சொல்ல,

"இவ்வளவு இருக்கு, எல்லாம் இல்லைனாலும் கொஞ்சம் ருசி பார்க்கலாம்" என்றாள்.

"வேண்டாம், ருசியா சாபிடற அளவுக்கு எனக்கு மூடில்லை!" என்றுவிட,

அவன் கேட்டதை வைத்தவள் அவளும் இட்லி வைத்து கொண்டு அமர்ந்தாள்.

அதனை பார்த்தவன் முறைத்தான், "என்னை நீ நிம்மதியாவே இருக்க விடமாட்டியா?" என்று அடிக் குரலில் சீற,

"இப்போது என்ன?" என்று புரியாமல் பார்த்தவளிடம்,

"உனக்கு சாப்பிடறதுக்கு என்ன? ஒழுங்கா எல்லாத்துலையும் டேஸ்ட் பாரு!" என்று அதட்டினான்.

"இல்லை, எனக்கும் வேண்டாம்"

“என்னை டென்ஷன் பண்ணாத துளசி” என்று விருட்டென்று நாற்க்காலியில் இருந்து எழுந்து விட,

அவன் எழுந்த வேகத்திற்கு பயந்து விட்டவள், “இல்லையில்லை சாப்பிடறேன்” என்று ஒவ்வொன்றாக எடுத்து அவளின் ப்ளேட்டில் வைத்துக் கொள்ள, நிச்சயம் அவளால் அதனை உண்ண முடியாது என்று திருவிற்கு தெரிந்து போனது.

அவளையே பார்த்திருக்க, வேகமாக அதனை உண்ண ஆரம்பித்தாள். நான்கு வாய் உள்ளே போனதும் வேகம் குறைய, அதற்கு பிறகு இரண்டு வாய் உள்ளே போனதும், அதுவும் நின்று போக உணவை அளக்க ஆரம்பித்தாள்.

எதுவும் பேசாமல் என்ன தான் செய்கிறாள் பார்ப்போம் என்று பார்த்துக் கொண்டிருந்தான் அவனும் உண்ணவில்லை.

சிறிது நேரம் கழித்து தலையை தூக்கி பார்க்க, திரு சாப்பிடாமல் இருப்பது புரிய,

மீண்டும் அவளின் உணவை எடுத்து வேகமாக வாயினில் வைக்க போக, அவளின் கை பிடித்து தடுத்தவன், அவளின் தட்டை தன் புறம் நகர்த்தி உண்ண ஆரம்பித்தான்.

அவனின் செய்கையை விழி விரித்து துளசி பார்க்க, அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே உணவை காலி செய்து விட்டான்.

“இன்னும் கொஞ்சம் வைக்கவா” என துளசி கேட்க,

“நீ இன்னும் சாப்பிடலை”

“இப்போதானே சாப்பிட்டேன்”

பதில் பேசாமல் திரு பார்க்க,

“என்னவோ சாப்பிட முடியலை” என்று துளசி சொல்ல,

“சரி, இந்த இட்லி மட்டும் சாப்பிடு” என்று அவனின் தட்டில் இருந்த இட்லியைக் காட்ட, “அதுல ரெண்டு மட்டும் போதும்” என்று சொல்லி உண்டாள்.

“இவ்வளவு லேட் நைட் சாப்பிடாதே, மீனாக்ஷி சாப்பிடும் போதே சாப்பிட்டிட்டிடு”

“நீங்க சீக்கிரம் வர முடியாதா?”

திரு அமைதியாக இருக்க, முயன்று “ப்ளீஸ் வாங்களேன்” என்றாள் கெஞ்சல் குரலில்.

அந்த குரல் திருவை எதோ செய்ய, காலையில் பயம் கொள்கிறாள், இப்போது கெஞ்சுகின்றாள், “துளசி என்ன பேசற?” என்றான் இறுகிய குரலில்.

அவனின் அந்த குரலில் துளசி அமைதியாகிவிட, எழுந்து சென்று விட்டான்.

படுக்கையறையில் கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்தவனிடம் சென்று பாலை நீட்ட,

“நீ குடிச்சியா?” என்றான்.

“குடிச்சிட்டேன்” என்பது போல தலையை அசைத்தாள்.

“இனிமே இங்கே எடுத்து வந்து என் முன்னே குடி, இப்போ இதை குடி!”

“வேண்டாம்” என்று மறுக்க,

“குடின்னு சொன்னேன்!” என்று அதட்டினான்.

வாங்கி குடித்து, உடனே படுத்துக் கொண்டாள். அவளின் முகம் மிகவும் சோர்ந்து இருந்தது, உடல் அசதியோ, மன அசதியோ, படுத்த சில நிமிடங்களில் உறங்கியும் விட்டாள்.

என்ன செய்தாலும் பொறுத்துப் போகும் துளசி என்பதனையும் விட, என்ன செய்தாலும் எந்த எதிர்பார்ப்பும் வைத்துக் கொள்ளாத துளசி, இது தான் திரு அறிந்த துளசி!

பேசாத போது, முகம் பாராத போது எல்லாம் அதனை அமைதியாக கடந்து விட்டவள், இப்போது ஏன் இப்படி என்று திருவிற்கு புரியவில்லை.

ஆம், திருவிற்கு புரியவில்லை! துளசி அவன் பிடிக்காமல் இப்படி நடக்கிறான் என்று நினைத்திருக்க, இல்லையில்லை பிடித்தும் இப்படி நடக்கிறான் என்று தெரிந்த உடனேயே அவளின் மனதில் எங்கோ ஓர் இடத்தில் அமிழ்ந்து கிடந்த எதிர்பார்ப்புகள் கடல் அலையாக பொங்க ஆரம்பித்து விட்டது.

அவனின் அருகாமைக்கும், அவனின் பேச்சிற்கும் அவனின் மூச்சு காற்று முகத்தில் மோதுவதற்கும் மனம் வெகுவாக ஏங்க ஆரம்பித்து விட்டது.

உறங்கும் அவளை எப்போதும் போல சிறிது நேரம் பார்த்து இருந்தவன், பின்பு உறங்கி விட்டான்.

காலையில் அன்று விரைவில் விழித்து விட, அன்று பார்த்து துளசி இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள். எழுந்து வெளியில் வந்த போது ஹாலில் அகிலாண்டேஸ்வரியும் மேகநாதனும் தான் அமர்ந்து இருந்தனர்.

“திரு” என்று அம்மா அழைக்க, மீனாட்சியை பார்த்து நின்றிருந்தான் அவளும் உறக்கத்தில்!

“திரு” என்று சத்தமாக அகிலாண்டேஸ்வரி அழைக்க,

“கத்தாதீங்க, மீனாக்ஷி எழுந்துக்க போறா!”

“அடேய், எழாம பின்ன தூங்கிட்டேவா இருப்பா! நீ வா!” என்று அதட்டினார்.

“என்ன இப்போ?” என்றபடி அவனும் முறுக்கி கொண்டு அமர்ந்தான்.

என்றைக்கு விஷேஷம் வைத்திருக்கிறது, எந்த இடத்தில், அதற்கு முன்தினம் வீட்டினில் புண்ணியாதானம் என்று அவர் விவரம் சொல்ல, எல்லாம் கேட்டு அமர்ந்திருந்தான்.

“உனக்கு உன்னோட ஆளுங்கல்ல யாரையாவது கூப்பிடணுமா?”

“இல்லை, வேண்டாம்! அது ரொம்ப பெரிய கூட்டம். அப்புறம் ஆளுங்க அதிகமாகிடுவாங்க. எனக்கு யாரையும் கூப்பிடறதுல விருப்பமும் இல்லை. சொந்தம்னா அது வேற, என்னைக் கேட்டா இந்த மாதிரி விஷேஷமே தேவையில்லை சொல்லுவேன்” என்று ஆரம்பித்தான்.

“ஷ்” என்றவர், “நீ யாரையும் கூப்பிடலைல்ல அதோட விடு!” என்றார்.

“ஆனாலும் நீ ரொம்ப தான் பண்றம்மா” என்று முறைத்தான் திரு.

“பின்ன ஒத்த பேத்தியை வெச்சிருக்கோம், விட்டுடுவோமா, போடா டேய், போடா!”

“என்னவோ பண்ணு, நான் என்ன வேலை பண்ணனும்?”

“ஒன்னும் வேண்டாம், எல்லாம் நாங்க பார்த்துக்கறோம்! தயவு செஞ்சு நீ வீட்டுக்கு விஷேஷதுக்கு எல்லாம் நேரத்தோட வந்துடு. என்னால கேட்கறவங்களுக்கு பதில் சொல்ல முடியலை, உன் பொண்டாட்டி சோர்ந்து தெரியறா? உன் பொண்ணு நிமிஷத்துக்கு ஒரு தரம் அம்மாவை தேடுறா? பின்ன அம்மா முகம் வாடி இருந்தா பொண்ணு முறுக்கிக்கறா. நீ எதுவுமே பண்ணாதே, இங்க இரு, அப்போ தான் எல்லாம் நல்லா நடக்கும்” என்று தணிவாக சொல்ல,

“பார்க்கறேன் மா” என்று சொல்லி எழுந்து விட்டான்.

அப்போது தான் எழுந்த மீனாக்ஷி “ப்பா, அம்மா எங்கே?” என,

“தூங்கறா” என்றவனிடம்,

“எழுப்பி விடுங்க” என்று சொல்ல,

“தூங்கட்டுமே” என்று திரு சொல்லிக் கூட முடிக்கவில்லை.

“அம்மா” என்று மீனாக்ஷி அப்படி ஒரு கத்து கத்த,

துளசியை அந்த சத்தம் எழுப்பி விட்டது.

இங்கே திரு மீனாக்ஷிய “எதுக்கு இப்படி கத்தற?” என்று கோபமாய் ஒரு அதட்டு அதட்டினான்.

மீனாக்ஷிக்கு கண்களில் நீர் தளும்பி விட்டது.

எழுந்து வந்த துளசியின் கண்களில் பட்டது அதுதான்.

“என்ன?” என்று பதறி மகளின் அருகினில் வர,

“ஒரு வார்த்தை சொல்லக் கூடாது, அம்மாவும் மகளும் அழ ஆரம்பிச்சிடுவாங்க, சே” என்று சொல்லி திரு உள்ளே போய் விட்டான்.

“நான் உன்னை எழுப்பச் சொன்னேன், எழுப்ப வேண்டாம் சொன்னாங்க, அதுதான் கத்தி கூப்பிட்டேன், திட்டுறாங்க” என்று அம்மாவை அணைத்து கொண்டாள்.

“அப்பாக்கு கத்தினா, சண்டை பிடிச்சா பிடிக்காது தானே! மீனாக்ஷிக்கு தெரியாதா என்ன?” என்று பேசிக் கொண்டே அவளுக்கு தேவையானதை கவனித்தாள்.

அப்பா மட்டும் கத்தறார் என்று மீனாக்ஷி சொல்ல

அதனால தான் நம்மை விடறதில்லை என்று துளசி சொல்ல

இந்த பதிலை மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் பார்த்து இருக்க, அப்போது தான் எழுந்து வந்த ஷோபனாவும் வெங்கடேஷும் அம்மா மகளின் கொஞ்சலை பார்த்து நின்றனர்.

“அப்பா என்னை எப்பவும் தான் திட்டுவாங்க, அப்புறம் அடிப்பாங்க!” என்று மீனாக்ஷி பெரிய பட்டியலாய் வாசித்தாள்

“அடிப்பாங்களா, என்ன உளர்ற?” என்றாள் துளசி.

ஆம்! திரு அடித்தது தெரியாது! அகிலாண்டேஸ்வரி தான் “அம்மா ரொம்ப கவலைப்படுவா சொல்லாதே” என்றிருந்தார், இப்போது சொல்லி விடவும்,

“அடிச்சாங்களா?” என்று திரும்பவும் கம்மி போன குரலில் துளசி மகளிடம் கேட்டாள்.

“ம்ம்ம், அப்புறம் பாட்டி அப்பாவை பிடிச்சு தள்ளி விட்டுட்டாங்க, விட்டா அடிச்சிருப்பாங்க!” என்று அகிலாண்டேஸ்வரியின் மேலும் குற்ற பத்திரிக்கை வாசிக்க,

“என்ன?” என்று அதிர்ந்து அவள் கேட்டது அவ்வளவு சப்தமாய் ஒலித்தது.

“போச்சுடா, இந்த குட்டி பிசாசு போட்டுக் குடுத்துட்டா” என்று அகிலாண்டேஸ்வரி ஒரு பார்வை பார்த்தவாறே, “பின்ன உங்கப்பன் செய்யறதுக்கு அடிக்காம கொஞ்சுவாங்களா?” என்றார்.

“நீங்க எதுக்கு கொஞ்சறீங்க? ஒன்னும் வேண்டாம்! எங்கம்மா கொஞ்சிப்பாங்க!” என்று துளசியை அணைத்தவாறே சொல்ல,

கேட்டுக் கொண்டிருந்த வெங்கடேஷ் சப்தமாய் சிரித்தே விட்டான். ஷோபனாவிற்கு விரைவில் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அதிகமாகியது.

திருவின் முகத்திலும் புன்னகை! கூடவே ஒரு கோபம்! “இவங்கம்மா என்னை கொஞ்சுவாலா, என் பொண்ணு அவ்வளவு புத்திசாலி போல” என்று நினைத்து இருந்தான்.

துளசி “தான் வீட்டில் இல்லை என்றால் இவ்வளவு கலாட்டாவா?” என்று நினைத்துக் கொண்டே மாமியாரை பார்த்தாள்.

“த பாரு, வீட்ல விஷேஷம் சரியா, உன் புருஷனை தள்ளி விடப் போனேன்னு என்னை முறைச்சிட்டே இருக்கக் கூடாது! அவனை என்னால சமாளிக்க

முடியலை, புள்ளைய அடிச்சான் எனக்கு கோபம் வந்துடுச்சு" என்று சொல்லிவிட,

அதற்கும் வெங்கடேஷ் சப்தமாய் சிரிக்க,

"ஆமா, இவ முறைச்சிட்டாலும்" என்று அதற்கும் திரு மனதினில் சண்டையிட்டுக் கொண்டே அமர்ந்திருந்தான்.

ஆம்! மனதினில் கோபம் கனன்ற ஆரம்பித்தது, "எப்போது இவள் என்னை கொஞ்சினாள்" என்று.

அத்தியாயம் பதினைந்து

துளசி உள்ளே வந்து அவனுக்கு காஃபி கொடுக்கும் வரை கிட்ட தட்ட கால் மணிநேரம் அப்படியே அமர்ந்திருந்தான்.

அம்மா சொன்ன "கொஞ்சுவாங்களா" என்ற வார்த்தையை மனதிற்குள் அசை போட்டபடி, பல சமயம் தோன்றியிருந்த ஏக்கம் அவனுள் அப்போது ஞாபகம் வந்து அவனை அசைத்து இருந்தது.

அவள் வந்து காஃபி கொடுக்கவும் ஒரு முறைப்புடன் வாங்கினான்.

"இப்போ என்ன தெரியலையே?" என்று நினைத்த போதும் "எதுக்கு அவளை அடிச்சீங்க?" என்றாள் அவனை நேர் பார்வை பார்த்து.

"உன்கிட்ட வர்றேன்னு ரொம்ப ரகளை பண்ணினா அதுதான் அடிச்சிட்டேன்" என்றான் அதே முறைப்புடன்.

"என்கிட்டே வரணும்னு கேட்டா அடிப்பீங்களா?" என்று ஆதங்கமாகக் கேட்க,

"ஆமாம் அடிப்பேன்! உன்னை இங்க கூட்டிட்டு வர கேட்காம நான் அங்க போறேன்னு சொன்னா, அடிக்காம என்ன பண்ணுவாங்க?" என்ற அவனின் பதிலில், "ஷப்பா, என்ன பதில் இது! அத்தை உங்களை அடிக்க

வந்ததுல தப்பே இல்லை!" என மனதிற்குள் நினைத்து, அதனை கண்களில் காண்பித்தாள்.

"ஏய் சும்மா பார்க்காத போடி, இவ என்னை கொஞ்சுவாலாம் என் பொண்ணு சொல்றா, அவங்கம்மாவை பத்தி தெரியாம! என் முன்ன நிக்காத போடி, அவ்வளவு கோபம் வருது எனக்கு!" என்று சொல்லி திரு எழுந்து போய் விட்டான்.

"அய்யோடா, இவனை என்ன செய்ய?" என்று புரியாமல் குழம்பியவள், "இவனை நான் கொஞ்சனுமா, எப்படி கொஞ்ச?" என்று முகத்தை சுருக்கி பார்த்திருந்தாள்.

"இவன் என் முகத்தை கூடப் பார்க்க மாட்டானாம், கேட்டா, பார்த்துட்டே இருக்க முடியாதாம்! இதுல நான் கொஞ்சனுமாம், என்னை என்ன பைத்தியம் நினைச்சானா?"

அதற்குள் அம்மா என்று மகள் அழைக்க "தோ வர்றேன்" என்று குரல் கொடுத்தவள் சென்று விட, பின்பு வேலைகள் இழுத்துக் கொள்ள, நேற்றைய சோர்வு துளசியிடம் குறைந்திருக்க, வேலைகள் துரிதமாக நடந்தது.

குளித்து முடித்து திரு வந்து பேப்பர் படித்துக் கொண்டிருக்க, சமையல் அறையில் இருந்து வந்தவள்,

அவனிடம் வந்து "நான் குளிக்க போறேன், நான் வர்றதுக்குள்ள ஓடிடக் கூடாது, சாப்பிடாம போகக் கூடாது!" என்று மெல்லிய குரலில் சொல்லிச் சென்றாள்.

"என்ன நான் ஓடறேனா? இருடி உன்னை!" என்று எழுந்து ரூமிற்குள் அவளிடம் சண்டை பிடிக்க சென்றான்.

அதற்குள் துளசி குளிக்க சென்றிருக்க, "ப்ச்" என்று சலித்து அங்கேயே அமர்ந்தான்.

குளித்து முடித்து வந்தவள் பார்க்க, அவன் அங்கேயே அமர்ந்திருப்பதை பார்த்து, அரை குறையாய் கட்டிய புடவையை சரியாய் கட்ட நினைத்து "கொஞ்சம் வெளிய இருக்கீங்களா, நான் புடவையை நல்லா கட்டிக்கறேன்" என

அவளை இன்னும் முறைத்து பார்த்தான்! பின் அவளிடம் "என் முன்னாடி புடவை கட்ட மாட்டியோ? இங்கேயே கட்டு!" என்று பேச,

இப்போது துளசி அவனை முறைத்து பார்த்தவள், திரும்ப நின்று புடவை கட்ட,

"எதுக்குடி இப்ப என்ன முறைச்ச?" என்று அவளின் முன் வந்து நின்றான்.

அவசரமாக முந்தியை எடுத்து மேலே போட்டுக் கொண்டவள் "ஏன் இந்த கலாட்டா பண்றீங்க?" என்று கேட்டே விட,

"அப்படி தான் பண்ணுவேன், அப்படி ஒரு கலாட்டா பண்ணின ஒரே ஒரு நாள் தான் நீ எனக்கு போனாப் போகுதுன்னு ஒரு முத்தம் குடுத்த"

"எப்போவாவது என்னை இப்படி நீ முறைச்சு பார்த்திருக்கியா? இல்லை நான் பேசணும்னு சண்டை போட்டிருக்கியா? எதுவுமே கிடையாது!"

"நான் என்ன பண்ணினாலும் பொருத்து போயிடுவ, ஏதாவது என்கிட்டே பேசினா மீனாக்ஷிக்காக மட்டுமா தான் அது இருக்கும்"

"இதுல நீ என்னை கொஞ்சறியாம்!" என்றவன் குரலை சிறியதாக்கி அருகில் வந்து "உண்மையா சொல்லு, நான் பக்கத்துல வராம நீ எப்போவாவது வந்திருக்கியா, அதை விடு நாம சேர்ந்து இருக்கும் போது, ஏதாவது ஒரு செயல் உன்னோடதா இருந்திருக்கா?" என ஆழ்ந்த குரலில் கேட்க,

"ஷப்பா" துளசி வாயடைத்து போனாள்!

"எனக்கு ஆசை இருக்காதா? வேளாவேளைக்கு எனக்கு சமைச்சு சாப்பாடு போடறது தான் உன்

வேலையா? இல்லை எனக்கு எப்போ தேவைன்னாலும் வர்றதா?'' என,

''அம்மாடி, என்ன குற்றச்சாட்டு இது?'' என்று துளசி அதிர்ந்து பார்க்க,

''ஏன் பொண்ணுங்கன்னா புருஷன் பக்கத்துல வரக் கூடாதா? வந்தா நல்ல பொண்ணுங்க இல்லையா? எனக்கு பதில் சொல்லு!'' என்றான் பிடிவாதமாக.

''இல்லையே, அப்படி இல்லையே!'' என்று அவசரமாக துளசி பதில் என்ற பெயரில் உளறினாள்.

''இல்லை, எப்போவாவது உன்னை நான் ஹர்ட் பண்ணியிருக்கேனா? ஆண்ன்ற கோபத்தையோ திமிரையோ படுக்கையில காட்டி இருக்கேனா? அதை விட உலகத்துல மோசமான பாவம் எதுவும் கிடையாது, சொல்லுடி செஞ்சிருக்கேனா?'' என்று ஆத்திரமாகப் பேசினான்.

''இல்லையே'' என்று அவள் குரல் கமற சொல்ல,

''ஒரே ஒரு தடவை எல்லார் முன்னும் நீ கலங்கி நின்னப்போ அந்த கோபத்துல அடிச்சேன், நீ நிமிர்வா இருக்க வேண்டாமான்னு, அப்புறம் போடி சொன்னேன், அவ்வளவு தான் எனக்கு தெரிஞ்சு! வேற இருக்கா சொல்லு, சொல்லுடி?''

“இல்லை” எனக் கலக்கமாகச் சொல்ல,

“அப்போ ஏண்டி என் பக்கத்துல வரலை? சும்மா பேசலை முகத்தை பார்க்கலைன்னு கதை விடக் கூடாது! அதையும் மீறி நமக்குள்ள எதுவும் உன்னால உணர முடியலையா? இல்லைன்னு பொய் மட்டும் சொல்லாத, கொன்னுடுவேன்!” என்று அவ்வளவு கோபமாக பேசினான்.

கண்களில் நீர் தளும்பி விட்டது துளசிக்கு!

“சொல்லு, எப்போவாவது உன்னை ஹர்ராஸ் பண்ணியிருக்கேனா? ஆனா ஒரு தடவை கூட நீ என்னை தேடலை!”

அப்படியே ஒரு கேவல் வெடித்தது துளசியிடம்!

பின்னே ஒவ்வொரு அணுவும் அவனைத் தேட, தேடவில்லை என்கிறான்.

அந்த கேவல் அவனை அசைக்க,

“சொல்லு, எப்போவாவது நீயா என் பக்கத்துல வந்திருக்கியா?” என்றான் கோபத்தை எல்லாம் விட்டு ஆற்றாமையோடு.

அப்போதும் துளசி அழ,

அதை பார்த்ததும் சற்று மட்டுப் பட்டவன் "ரொம்ப நாள் நான் மனசுல நினைச்சது, என்னவோ இன்னைக்கு மீனாக்ஷி சொல்லவும் வந்துடுச்சி!" என்றவன்,

"சாரி" எனக் கேட்டு, "புடவை கட்டிட்டு வா, அழாத ப்ளீஸ்!" என்று சொல்லி வெளியில் சென்று விட்டான்.

அப்படி ஒரு அழுகை துளசிக்கு வந்தது, சில மணித்துளிகள் அப்படியே அமர்ந்து அழுது விட்டவள் நேரம் கடப்பதை உணர்ந்து புடவை கட்டி முடித்து வெளியில் வர,

திருவை காணவில்லை, "மா அப்பாக்கு வேலையாம், கிளம்பிட்டாங்க, உன் கிட்ட சொல்ல சொன்னாங்க!" என்று மீனாக்ஷி சொன்னாள்.

மனதே விட்டது! உண்மையில் துளசியிடம் அப்படி பேசி அழ வைத்து விட்ட குற்ற உணர்ச்சியில் அவளை காண தைரியம் அற்றவனாக சென்று விட்டான்.

மகள் அம்மாவின் முகத்தை பார்த்ததும் "என்னம்மா, உன் முகம் ஒரு மாதிரி இருக்கு"

"தலைவலி மீனா"

அப்போதுதான் ரத்னா வந்தவர், மகளின் முகத்தை பார்த்து "என்ன?" என்று வர, அவருக்கும் அதே பதில் தான் துளசியிடமிருந்து.

உடனே அவர் மீராவை அழைத்து விட்டவர் "அக்கா தலைவலி சொல்றாடி, முகவும் வீங்கி இருக்கு, என்ன பண்ணலாம்" என்றார் கவலையாக.

"ஒன்னும் பண்ணக் கூடாது. ஏதாவது மாத்திரை எல்லாம் சாப்பிடப் போறா மா, அவ கிட்ட குடுங்க"

கொடுத்ததும் "அக்கா கர்ப்பமா இருக்கும் போது எந்த மாத்திரையும் சாப்பிடக் கூடாது. டாக்டர் கிட்ட கேட்டு ரொம்ப அவசியம்னா தான் சாப்பிடணும். டாக்டர் அட்வைஸ் இல்லாம சாப்பிடக் கூடாது. ஏதாவது மாத்திரை சாப்பிட்டா அது குழந்தையை பாதிக்கும், தலைவலின்னா கொஞ்சம் நேரம் படு!" என்றாள் மீரா.

"ம்ம் சரி" என்றாள், அவளுக்கும் தனிமை தேவையாய் இருக்க "அத்தை" என ஆரம்பிக்கும் போதே,

"பிள்ளைதாச்சி ஓடியாடாதேன்னு சொன்னா கேட்கறியா?" என்று அவளை திட்டியவர், "ஒழுங்கா போய் படு, நாங்க என்னவோ பண்றோம். காலையில டிஃபன் நான் கொடுத்து விடறேன்" எனும் போதே துளசி அவளின் அம்மாவைப் பார்த்தாள்.

"உங்கம்மாவை நான் பத்திரமா பார்த்துக்கறேன் போ" என்று துளசியின் முகம் பார்த்தே பயந்த அகிலாண்டேஸ்வரி விரட்ட,

“மா, நீ போ நான் பார்த்துக்குவேன்” என மீனாக்ஷி சொல்ல,

ரத்னா “நான் இருக்கேன் தானே” என்று சொல்ல,

இத்தனை பேரின் பேச்சுக்கு பிறகு அமைதியாய் சென்று படுத்து கொண்டாள்.

அவனின் குற்றச்சாட்டில் மனம் ஆறவே இல்லை. கூடவே மனதில் குற்ற உணர்ச்சியும் , உண்மையாய் அவனின் குற்றச்சாட்டு உண்மையும் கூட!

மீண்டும் அழுகை வர , யாரும் வந்துவிட்டால் என்ன செய்வது என்று அழுகையை அடக்கினாள். நினைத்தது போல அம்மா உணவுடன் வந்தவர் “சாப்பிட்டிட்டு தூங்கி எழு, தலைவலி போய்டும்!”

முயன்று இரண்டு தோசைகளை உள்ளே தள்ளினாள், அவளுள் ஒரு ஜீவன் இருக்கிறதே!

உண்டு படுக்க உறக்கம் தழுவிக் கொண்டது.

பதினோரு மணிவாக்கில் திரு வீட்டிற்கு அழைத்தான். அதுவரையிலும் அவனை அவனே அவனின் அலுவலக அறையில் அமர்ந்து திட்டிக் கொண்டிருந்தான்.

“ஒரு பொண்ணை இவ்வளவு டார்ச்சர் பண்ணுவியா நீ, அவளா இருக்கவும் இருக்குறா! வேறா யாரா இருந்தாலும் உன்னோட குப்பை கொட்ட முடியாது!”

என்று. உறங்குகிறாள் என்று சொல்லப் பட, அவனால் அங்கே இருக்க முடியவில்லை. என்னவோ ஏதோவென்று பதறி மதிய உணவிற்கு வீட்டிற்கு வீட்டிற்கு வருவது போல வந்தான்.

“என்னடா திரு உன்னை பார்க்க முடியலை! அண்ணா, எங்கே உன்னைக் காணோம்” இப்படி பல விசாரிப்புகள்! அவர்களுக்கு பதில் சொல்லிக் கொண்டே மனைவியைக் கண்கள் தேட,

துளசி ஓரிடத்தில் அமர்ந்திருந்தாள். ஆம்! அமர்ந்து தானிருந்தாள். அகிலாண்டேஸ்வரி அவளை எழுந்திருக்க விடவில்லை.

கிட்ட தட்ட பதிமூன்று வருடங்களாக துளசியைப் பார்க்கிறார். இப்படி சோர்ந்து பார்த்ததில்லை. கர்ப்பமாக இருக்கும் இந்த நேரத்தில் ஏதாவது உடம்பிற்கு இழுத்து வைத்து விட்டால் என்ன செய்வது என்று பயந்து அவளை சேர் அர்ரஸ்ட் செய்து வைத்திருந்தார்.

திரு நேராக உணவு மேஜையில் அமர, துளசி எழப் போக,

“அவன் எனக்கும் பையன் தான், நான் போடமாட்டேனா” என்று அகிலாண்டேஸ்வரி சொல்ல, துளசி அப்படியே அமர்ந்து கொண்டாள்.

அகிலாண்டேஸ்வரி பரிமாற வர, "மா, துளசி வைக்கட்டும்" என்றான் திரு.

"ஏன்டா, நான் போட்டா சாப்பிட மாட்டியா? அவ சோர்ந்து தெரியறா, அவ அமைதியா உட்காரட்டும்!" என்று திருவை அதட்டினார்.

ஏதும் பதில் பேச இயலாதவனாக உண்டு விட்டு எழுந்தான். பின்பு உறவுகள் எல்லோரும் இருப்பதால் அவன் மீண்டும் மில்லுக்கு சென்று விட்டவன், அன்று ஆறு மணிக்கே வீடு திரும்பிவிட்டான்.

அன்றைக்கும் மீனாட்சியை வித விதமாய் அலங்கரித்து ஃபோட்டோ எடுத்துக் கொண்டிருக்க,

துளசிக்கு அவளை பார்ப்பதற்கே சரியாய் இருந்தது. எத்தனை பேர் இருந்தாலும் "மா" என்று மீனாக்ஷி அவளை தான் தேடினாள்.

திரு துளசியின் முகம் தான் பார்த்தும் பாராமல் பார்த்து இருந்தான். மதியம் இருந்ததற்கு சற்று தெளிவாக இருந்தது.

அப்போது தான் மனம் சற்று திருவிற்கு சமன் பட்டது. அதுவரை அப்படி ஒரு உளைச்சலில் இருந்தான். அதனால் ஒரு புதிய முடிவிற்கே வந்து விட்டான். இனி அதிகம் துளசியிடம் பேசுவதில்லை என. இந்த மூன்று

நாட்களிலேயே அவளை ஒரு வழியாக்கி விட்டான் என்று அவனிற்கே புரிந்தது.

இரவு உணவு எல்லோரும் உண்ண ஆரம்பிக்க, ராதாவின் கணவன் தருண் வந்திருந்தான். அவனோடு அமர்ந்து உண்ணும்படி அகிலாண்டேஸ்வரி அழைத்தார்.

வீட்டின் மாப்பிள்ளை, வேறு வழியில்லாமல் அமர்ந்தான். தருணும் அப்படி அதிகம் வரமாட்டான். வந்தால் செலவு வைக்காமல் செல்ல மாட்டான். திருவை ஏதாவது எப்போதும் குடைவான். திருவின் சமீப கால வளர்ச்சி அவனின் கண்களை உறுத்தியது.

ராதாவும் அவளின் மகன் விஷாலுடன் உணவு உண்ண அமர, கூடவே சாரதாவும் சித்ராவும் அமர அதற்கு மேல் உணவு மேஜையில் இடமில்லை.

திருவிற்கு இத்தனை பேர் இருக்கும் போது என்னை எதற்கு கூப்பிட வேண்டும் என்று அம்மாவை பார்த்து முறைத்தான். அகிலாண்டேஸ்வரி கண்களால் கெஞ்சினார்.

துளசிக்கோ வேறு கவலை! இத்தனை பேர் இருக்கும் போது அவன் சரியாக உணவு உண்ண மாட்டானே என்று. காலையில் அவன் சாடியது எல்லாம் அந்த நிமிடம் நினைவில் இல்லை.

திருவிற்கு தருண் மேல் வேறு ஒரு கோபமும் இருந்தது. அவசரத்திற்கு என முப்பது லட்சம் ஒரு ஐந்தாறு மாதம் முன்னால் வாங்கியிருந்தான். சில

நாட்களுக்கு முன் தான் தருண் அந்த பணத்தை வட்டிக்கு விட்டிருப்பது தெரிந்தது.

திருவிடம் பணமிருந்தாலோ, இல்லை அதற்கான தேவை இல்லாமல் இருந்தாலோ, எப்படியோ தொலையட்டும், கொடுக்கும் போது கொடுக்கட்டும் என விட்டிருப்பான்.

ஆனால் இப்போது தேவை இருக்கவும் "என்னுடைய பணத்தை வாங்கி இவன் வட்டிக்கு விடுவானா?" என்ற கடுப்பு இருந்தது. ராதாவிடம் அழைத்து இப்படி விஷயம் என ஒரு கோடி காண்பித்து இருந்தான். திரு சொல்லவும் தான் தெரியும் அதற்கு முன் ராதாவிற்கு தெரியாது.

அமர்ந்து உணவு உண்ண ஆரம்பிக்க, அகிலாண்டேஸ்வரியும் ஷோபனாவும் பரிமாறினார். "அப்புறம் மச்சான் இடமெல்லாம் வாங்கறீங்க போல" என்று தருண் பேச்சினை எடுத்தான்.

திருவை விட தருண் ஒரு வயது இளையவன், அதனால் பேர் சொல்லியே கூப்பிடுவான் திரு.

"அப்படியா தருண்" என்றான் திரு எதோ புதிய விஷயம் கேட்பது போல.

இன்னும் திரு வீட்டினில் யாரிடமும் சொல்லியிருக்கவில்லை. துளசியிடம் மட்டுமே இரண்டு தினம் முன் சொல்லியிருந்தான்.

“அப்படியா?” என்றார் சித்ரா உடனே, “எங்கே?” என்று அவர் ஆரம்பிக்க,

“அதையும் தருணே சொல்லுவான் அத்தை” என்று திரு முடித்தான்.

அகிலாண்டேஸ்வரி “இது என்ன புது பேச்சு?” என்று பார்க்க, மேகநாதன் அங்கே இருந்தவரும் இவர்களின் பேச்சினை கவனித்தார்.

“என்ன மச்சான் நீங்க சொன்னா தானே சரியா இருக்கும்!” என்று தருண் பேசினான்.

ராதாவை பார்த்தான் திரு, அந்த பார்வை சொன்னது “உன் புருஷன் இப்போ வாயை மூடணும்” என்று.

“மா, சமையல் நல்லாவே இல்லை போல” என்றாள் ராதா திடீரென்று.

“தனம் நல்லா சமைக்குமே” என்று அகிலாண்டேஸ்வரி சொல்ல, அவரின் கணீர் குரல் சத்தமாய் இதனை சொல்ல என்னவோ ஏதோவென்று துளசி அவர்களின் அருகினில் வந்தாள்.

“சமையல் நல்லா இருந்தா, என் வீட்டுக்காரர் சாப்பிடறதை விட்டு அதையும் இதையும் ஏன் பேசப் போறாரு. ஒரு விருந்துன்னா இதெல்லாம் பார்க்க

வேண்டாமா" என்று சண்டைக்கு போவது போல பேசிக் கொண்டே தருணை ஒரு பார்வை பார்த்தாள்.

"அதில் நீ பேசக் கூடாது" என்ற செய்தி இருந்தது.

சில நாட்களுக்கு முன்பே "எங்கண்ணன் கிட்ட பணம் வாங்கி நீங்க வட்டிக்கு விடறீங்களா?" என்று சண்டை பிடித்து இருந்தாள், இன்னம் அவ்வப் போது பிடித்துக் கொண்டு தான் இருந்தாள்.

அதனால் தருண் வாயை மூட,

"எங்கே? எவ்வளவு இடம்? என்ன விலை?" என்று சித்ரா விட்டேனா என்று கேட்டார்.

"அதுதான் உங்க பையன் சொல்வாருன்னு அண்ணா சொல்றான் தானே, வீட்டுக்கு போய் சாவகாசமா பேசுங்க. இப்போ சாப்பிடுங்க நேரம் ஆச்சு" என்று ராதா அதட்ட, சித்ராவும் அடங்கி உண்ண ஆரம்பித்தார்.

காலையில் இருந்து அகிலாண்டேஸ்வரி துளசியை தாங்குவதை பார்த்து இருந்த சாரதா, இப்போது திரு இடம் வாங்குவது பற்றி எல்லாம் எல்லோரும் பேச, ஒரு கடுப்பில் வேண்டுமென்றே, "ஏய் தண்ணி கொண்டு வா" என்று துளசியை பார்த்துச் சொல்ல,

ஏற்கனவே கனமாக ஆரம்பித்த சூழல் இன்னும் இறுகியது.

அதற்குள் தள்ளி அமர்ந்திருந்த வசுமதியும் மேகலாவும் தண்ணீர் கொண்டு வர எழ, ‘‘ஐயோ இந்த அம்மா’’ என மனதினில் திட்டிக் கொண்டே ஷோபனா ஒரு பக்கம் போக,

ராதா அவளின் அருகினில் இருந்த தண்ணீரை சாரதாவிடம் ‘‘குடிங்க’’ என்று எடுத்து கொடுக்க.

எல்லோருக்கும் முன் துளசி சமையல் அறை நோக்கி நடக்க ஆரம்பித்து இருந்தாள்.

அது அப்படி ஒரு கோபத்தை திருவிற்கு கொடுத்து இருந்தது. சாதாரண நாளாக இருந்தால் துளசி செல்லாமல் கூட இருப்பாள். இப்போது அவர்களின் மகளின் விகேஷதிர்க்கு வந்தவரை எப்படி அவமதிப்பது என நினைத்து மனம் நொந்தபடி போக,

‘‘துளசி’’ என்று அழைத்தான் திரு.

துளசி திரும்பவும் ‘‘உனக்கு சூடு சொரணையே கிடையாதா? எவ்வளவு சொன்னாலும் புரியாதா! போய் உட்காருடி முதல்ல! கொஞ்சம் கூட அறிவே கிடையாது! யாரு ஏய்ன்னு கூப்பிட்டு வேலை சொன்னாலும் போயிடுவியா. உன் மரியாதை தான் நீ பார்க்கறது இல்லைன்னாலும், என் மரியாதை கூட பார்க்க மாட்டியா நீ’’ என்று வார்த்தைகளை ஆங்காரமாய் கடித்து துப்பினான்.

மீண்டுமா என்று அங்கிருந்த அத்தனை பேரும் ஸ்தம்பித்தனர்.

துளசிக்கு கடகடவென்று கண்களில் நீர் இறங்கியது.

அதை பார்த்ததும் இன்னும் அவனுக்கு எரிச்சலாக, அதையும் விட அகிலாண்டேஸ்வரி "என்னடா எதுக்குடா அவளை திட்டுற?" என்று சண்டைக்கு கிளம்பினார்.

அம்மா அழுவதை தூரமாக இருந்து என்றாலும் பார்த்திருந்த மீனாக்ஷியும் அழ, ரத்னா அப்படியே நின்றிருந்தார்.

"வேற என்னை என்ன தான் பண்ண சொல்றீங்க, இவளை மட்டும் தானே என்னால திட்ட முடியும், எத்தனை தடவை எல்லோருக்கும் சொல்றது. ஆனா இனிமே அதுக்கு கூட எனக்கு தெம்பில்லை, இந்த விஷேஷம் முடியட்டும் நாங்க தனியா போயிடறோம். உங்களுக்கு யாரை வேணுமோ வெச்சிக்கங்க. இப்படி எப்பவும் அவளை மரியாதை இல்லாம பேசறதை என்னால பொறுத்து போக முடியாது" என்றவன்,

"சும்மா எல்லோர் முன்னாடியும் எப்பவும் அழுதுட்டு நிற்பியா, போடி உள்ள!" என்று துளசியை பார்த்து மீண்டும் கர்ஜிக்க,

மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் எதையும் கவனிக்கு நினைப்பில் இல்லவே இல்லை,

என்ன திரு வீட்டினை விட்டு போவதா?

மற்ற எல்லோரும் சாரதாவை தான் முறைத்து பார்த்தனர் ‘‘சே, நீயெல்லாம் ஒரு மனுஷியா’’ என்பது போல,

வெங்கடேஷ் தன் மாமியாரை பேச வாயெடுக்க, ‘‘நாம எவ்வளவு வேணா அழுதுக்கலாம், நம்ம வீட்டை விட்டு இவங்க அழுதுட்டு போகக் கூடாது’’ என்று சாரதாவையும் சித்ராவையும் கைகாட்டினான் திரு.

துளசிக்கு அழுகையோடு கூட கால்கள் வேரோடியது. அந்த இடத்தில் இருந்து அசையக் கூட முடியவில்லை.

சில நொடிகள் துளசியை பார்த்த திரு எழுந்து வந்தவன், ‘‘வா’’ என்று அவளின் கை பிடித்து நகர்த்தினான்.

அத்தியாயம் பதினாறு

திரு அவளின் கை பிடித்து சில அடிகள் நடக்க வைக்க, தெளிந்தவள் அவனிடமிருந்து கைகளை விலக்கிக் கொண்டு அவளாக நடக்க ஆரம்பிக்க, பார்வை மகளின் புறம் தானாத் திரும்பியது.

அடுத்த நிமிடம் உணர்வுக்கு வந்து விட்டாள். ஆம்! மகள் தான் அப்படி அழுது கொண்டிருந்தாளே, மகளை நோக்கி அப்படி வேகமாகச் செல்ல,

எதற்கு இப்படி செல்கிறாள் என்று திருவும் பின்னோடு சென்றான்.

துளசி அருகில் சென்றதும் மீனாக்ஷி அம்மாவை அணைத்துக் கொண்டு அப்படி ஒரு அழுகை!

திரு அருகில் வரவும், அங்கே இருந்த ரத்னா சற்று தள்ளி சென்றார்.

“ஒன்னுமில்லை மீனா, அம்மா அழலை பாறேன்! நீ இப்படி அழக் கூடாது” என துளசி மெல்லிய குரலில் மகளை சமாதானம் செய்ய,

அதே குரலில் மகள் சொன்ன வார்த்தை, திரு அப்படியே நின்று விட்டான்!

ஆம்! மீனாக்ஷி துளசியிடம் "மா, நாம ரெண்டு பேரும் எங்கேயாவது போயிடலாமா" என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்.

திருவின் இதயம் நின்று பின் துடித்தது. துளசி சுற்றும் முற்றும் பார்த்தாள், யார் காதிலாவது விழுந்து விட்டதா என்று.

எல்லோரும் இவர்களை தான் பார்த்து இருந்தனர். ஆனால் மீனாக்ஷி அதை மிகவும் மெல்லிய குரலில் சொல்லியதால் யார் காதிலும் விழுந்து இருக்காது என்று புரிந்து ஆசுவாசமானவள்,

அங்கே இருந்தே ராதாவிற்கு "அண்ணி எல்லோருக்கும் என்ன வேணும்னு பாருங்க, நீங்களும் சாப்பிடுங்க, நடந்ததை பெருசு பண்ண வேண்டாம். இவருக்கு எப்பவுமே ரொம்ப டென்ஷன் ஆகிடும். நடந்ததை விடுங்க!" என்று மகளை அணைத்தவாறே சொல்ல,

சூழலை இலகுவாக்க "சாப்பிடுங்க" என்று தருணிடம் ராதாவும் சொன்னாள்.

தருண் உணவினை வாயினில் வைக்க அரைகுறையாக என்றாலும் உண்ண ஆரம்பித்தனர். திரு இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. மகளையும் மனைவியையும் வெறித்து பார்த்து இருந்தான்.

யாரின் கவனமும் கவராத வகையில் மெல்லிய குரலில் "அப்பாவை விட்டு அம்மா எப்போவும் எங்கேயும் போகமாட்டேன் சரியா. நான் மட்டுமில்லை மீனாக்ஷியும் போக மாட்டா" என்று சொல்லிக் கொண்டே பார்வையை சுழல விட,

அங்கே அகிலாண்டேஸ்வரியும் மேகநாதனும் பார்க்க இன்னும் பரிதாபமாக இருந்தனர்.

"அத்தை ஏன் இப்படி நிக்கறீங்க, நான் எங்கேயும் போக மாட்டேன் இந்த வீட்டை விட்டு. நான் போகலைன்னா இவரும் போக மாட்டார்" என்று அவரையும் உணர்வுக்கு கொண்டு வர பேசினாள்.

சற்று தெளிந்தாலும் இந்த சச்சரவுகளில் ஓய்ந்து போனர் பெரியவர்கள். ராதாவின் பார்வை முழுக்க அப்பா அம்மாவின் மீது தான்.

ராதா உண்டது போதும் என்று எழுந்து விட்டவள், "மா, கொஞ்சம் நேரம் உட்காரு" என்று அகிலாண்டேஸ்வரியை உட்கார வைத்தவள், தருணிடம் "நான் இங்கேயே இருக்கேன், நீங்க உங்க அம்மாவையும் பெரியம்மாவையும் கூப்பிட்டிட்டு போங்க" என்று சொல்லிக் கொண்டே மகனிடம் அதட்டினாள், "போடா, போய் தாத்தா பக்கத்துல உட்காரு" என்றாள்.

இப்போது பார்வை எல்லாம் அண்ணன் மீது, அதன் வட்டத்தில் தான் துளசியும் மீனாக்ஷியும் இருந்தனர். அவள் வளர்ந்த விதம் அந்த வீட்டினில் ஞாபகத்திற்கு வந்தது. சிறு சண்டையோ சச்சரவோ எதுவுமே கிடையாது. இளவரசியாய் வளர்ந்தால். இப்போது திருமணதிற்கு பின் தான் ஆட்களை உணர, பழக ஆரம்பித்து இருந்தாள். அவளுக்கெல்லாம் எதற்கும் அழுத மாதிரி கூட ஞாபகத்தில் இல்லை.

இப்போது தன் அப்பாவின் வீடு எப்போதும் சண்டையாக இருப்பது, அதுவும் தன் பெரியத்தை சின்ன அத்தையினால் அவளுக்கு ஒரு எரிச்சலை கொடுத்தது. என்னை அருமை பெருமையாய் வளர்த்த என் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் நான் கொடுக்கும் நிம்மதி இதுதானா என்று தோன்ற இனி அந்த இடத்தினில் ஒரு பிரச்னையும் வரக் விடக் கூடவே கூடாது என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

மெதுவான குரலில் வெகுவாக துளசி மகளுக்கு சமாதானம் சொல்லிக் கொண்டிருக்க "திரு" என்ற மனிதன் மொத்தமாக ஓய்ந்து போயிருந்தான்.

என்ன வாழ்க்கை என்னது என்ற எண்ணம் தான்

அப்பா அம்மாவிற்கும் நல்லவனாக முடியவில்லை, காதலித்த பெண்ணுக்கும் இல்லை, கட்டிய மனைவிக்கும் இல்லை இப்போது மகளுக்கும் இல்லை.

அமைதியாக ரூமின் உள் சென்று விட்டான்!

துளசி அவனை தான் பார்த்து இருந்தாள், அவனின் முகமே அவளை எதோ செய்தது. ஆனால் மகளை விட்டு விலக முடியவில்லை. மீனாக்ஷியுடனே இருந்து அவளை உண்ண வைத்து உறங்க வைத்தாள்.

ராதா அவர்களை வீட்டிற்கு அனுப்புவது போல ஏறக் குறைய துரத்தி விட்டவள், சாராதவிடம் சொல்ல முடியாது சித்ராவிடம், "அத்தை நீங்க விஷேஷம் அன்னைக்கு வந்தா போதும். வீட்ல இருங்க!" என்று பளிச்சென்று கூறினாள்.

சித்ரா மகனை முறைக்க, தருணை பார்த்த ராதா, "அப்புறம் அண்ணா கிட்ட வாங்கின பணத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ கொடுத்திடுங்க! அப்போ தான் என்னை வீட்டுக்கு விடுவானாம் இல்லை விட மாட்டானாம், மதியமே அண்ணா என்கிட்டே சொன்னான்!" என்று மின்னாமல் முழங்காமல் தலையில் இடியை இறக்கியவள், "அதுக்காக தான் உங்களை இங்கே வரச் சொன்னான், ஆனா அவன் சொல்லும்முன்ன பிரச்சனையை நீங்க பெருசாக்கிட்டீங்க" என்று முடித்துக் கொண்டாள்.

உண்மையில் திரு அப்படி சொல்லியிருக்கவேயில்லை.

“திரு அப்படி சொன்னானா?” என்று நம்பாமல் தருண் கேட்க,

“வேணும்னா அண்ணாவை கூப்பிட்டு விடறேன் கேளுங்க” என்று சொல்லிவிட்டாள்.

“வேண்டாம்” என்று எரிச்சலாக அவளிடம் சொன்னவன்.

“ஆமாம், குடுக்கலைன்னா உன்னை இங்கேயே வெச்சிக்குவாங்களா” என்று கேட்டான்.

“அப்போ குடுக்கற ஐடியா இல்லை, என்னை இப்படியே தொலைச்சு தலைமுழிகிடலாம்னு பார்க்கறீங்க” என்று ராதா பேச்சினை மாற்றி அவனுடன் சண்டை பிடித்து உள்ளே சென்று விட்டாள்.

இனி இந்த சண்டையை திருவிற்கு தருண் பணம் கொடுக்கும் வரை கடை பிடிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள். “என்னுடைய அப்பா வீட்டில் இருந்து எனக்கு தெரியாமல் நீ பணம் வாங்குவாயா” என்ற கடுப்பு ராதாவிற்கு இருந்தது. கூடவே திருவிடமும் சண்டை பிடித்து இருந்தாள். “எதுக்கு அவருக்கு பணம் கொடுத்தே, என் வீட்டுக்காரன்னு தானே, அப்போ ஏன் என்கிட்டே சொல்லலை” என்று.

“எனக்கு என்ன தெரியும், உனக்கு தெரியாம என்கிட்டே பணம் வாங்குவார்ன்னு” என்று திரு சொல்லியிருந்தான்.

வீடே கனமாகி விட்டது. ஆனாலும் வேலைகள் அது பாட்டிற்கு நடந்தது. வசுமதியும் மேகலாவும் தங்கள் கணவரிடம் இதனை மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டே உண்ண,

“அக்காங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப ஆகிடுச்சு, என்னன்னு நாங்க கேட்கறோம்” என்று பேசினர்.

“வேண்டாம்” என்று மேகநாதன் ஒற்றை வார்த்தையில் முடித்து உறங்க சென்று விட்டார். பின்பு அவர்களும் உண்டு போக, ரத்னாவும் உண்டு சென்று விட்டார்.

கடைசியாக அங்கே இருந்தது அகிலாண்டேஸ்வரி, வெங்கடேஷ், ஷோபனா, ராதா மட்டுமே, மீனாக்ஷி உறங்க ஆரம்பிக்க துளசி அவளின் பக்கத்தில் அமர்ந்து இருந்தாள்.

திரு உள்ளே சென்றவன் வரவே இல்லை.

“துளசி அவ தூங்கிட்டான்னா வா சாப்பிடு” என்று அகிலாண்டேஸ்வரி அழைக்க,

“இன்னும் சரியா தூங்கலை அத்தை, நீங்க சாப்பிடுங்க” என்று துளசி சொல்ல, அதற்கு தக்கார்

போல மீனாக்ஷி கண்விழித்து அவளின் அம்மா பக்கத்தில் இருக்கிறாளா என்று பார்த்தாள்.

“தூங்கு, தூங்கு, அம்மா இங்கேயே தான் இருப்பேன்” என்று மீனாட்சியிடம் சொல்ல பின் தான் கண்ணை மூடினாள்.

ராதா அங்கேயே அவளுக்கு கொண்டு போய் சாப்பிடக் கொடு என்று சொல்ல, துளசிக்கு ஒரு ப்ளேட்டில் வைத்துக் கொடுத்தாள்.

“உங்கண்ணா இன்னும் சாப்பிடலை அண்ணி” என்று திருவைச் சொல்ல,

“அம்மாடி நான் எல்லாம் அவனைக் கூப்பிட மாட்டேன், கோபப் படுவான்!” என்று ராதா சொல்லிவிட்டாள்.

“அத்தை நீங்க கூப்பிடுங்க அத்தை”

“நான் கூப்பிட மாட்டேன், என்னை விட்டுட்டு போறேன்னு சொல்லிட்டான்” என்று அகிலாண்டேஸ்வரி ஆதங்கப்பட்டார்.

“அப்போ மீனாக்ஷி நல்லா தூங்கின பிறகு நான் போறேன், இதை மூடி வெச்சிடுங்க” என்று துளசி சொல்ல,

“துளசி” என்று ஒரு அதட்டலிட்ட அகிலாண்டேஸ்வரி, “சாப்பிடு முதல்ல, உனக்காக இல்லை. உன் பிள்ளைக்காக. அவன் சரியா சாப்பிடலை அவ்வளவு தான். ஆனா சாப்பிட்டான். ஒரு நாள் சாப்பிடலைன்னா ஒன்னும் ஆகிட மாட்டான். நீ சாப்பிடு!” என்று கோபமாய் பேசினார்.

அதற்கு பணிந்து மூன்று இட்லிகளை உள்ளே தள்ள, இன்னும் ஒரு இட்லியை அவளை கேட்காமலேயே ராதா வைத்தாள். அவர்களுக்குள் அப்படி பெரிய சிநேகிதம் இல்லாவிட்டாலும் பெரிதாக சண்டைகள் இருந்ததில்லை. அதுவும் ராதா பிள்ளை பெறுவதற்காக இங்கே வந்த போது துளசி அவளை அப்படி கவனித்து கொள்வாள் அகிலாண்டேஸ்வரியை விட.

“சாப்பிடுங்க” என்று ராதாவும் அதட்ட, எப்படியோ உண்டு முடித்தாள்.

ஷோபனா துளசியை தான் பார்த்து இருந்தாள். வீட்டில் உள்ள அத்தனை பேரும் அதட்டுகிறார்கள், ஆனாலும் சற்றும் முகம் சுளிக்காமல் எப்படி இருக்க முடிகிறது என்று.

மீனாக்ஷியும் ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்றிருந்தாள். துளசி எழுந்து கை கழுவியவள் , “அத்தை, இன்னைக்கு இங்கே நான் படுத்துக்கறேன். மீனாக்ஷி என்னை தேடுவா.

இங்க கொஞ்சம் தள்ளி பெட் போட்டு படுத்துக்கறேன்'' என்று சொல்லி ரூமின் உள் சென்றாள்.

திரு ரூமில் கவிழ்ந்து படுத்துக் கொண்டிருந்தான் , முகம் தலையணையில் முழுதாய் புதைந்து இருந்தது.

துளசி மெதுவாய் அவனை தொட அவனிடம் அசைவில்லை. விழித்து தான் இருக்கிறான் என்று தெரியும்.

''எழுந்துருங்க''

''என்னை கொஞ்சம் தனியா விடு, தூரப் போ, தொந்தரவு பண்ணாதே!'' என்ற குரல் மட்டும் கேட்டது , சிறிது தலையை உயர்த்தி அதனை சொன்னவன் அவளின் முகத்தையும் பார்க்கவில்லை, அவளுக்கும் முகத்தினை காண்பிக்கவில்லை. மீண்டும் தலையணையினுள் முகத்தினை புதைத்து கொண்டான்

அவனின் குரலில் இருந்தது கலக்கமா, கோபமா, துளசியால் இனம் காண முடியவில்லை.

''சின்ன பொண்ணு தெரியாம பேசிட்டா, நீங்க அதுக்கு கவலைப்பட வேண்டாம்'' என்று சொல்ல, திருவிடம் எந்த பதிலும் இல்லை.

''ப்ளீஸ் கோபப்படாதீங்க'' என்றாள் மீண்டும்.

அவ்வளவு தான் படுத்து இருந்தவன் அப்படியே எழுந்த வேகத்தில் தன்னை அடிக்கப் போகிறானோ என்று துளசி பயந்தே விட்டாள்.

“என்ன தாண்டி நினைச்சிட்டு இருக்க நீ. அவ உனக்கு மட்டும் தான் பொண்ணா? எனக்கு இல்லையா? என் பொண்ணை கோபப்பட வேண்டாம்னு என்கிட்ட சொல்வியா. அவ பேசினது என்னால இல்லை. உன்னால!”

“நீ வீட்டை விட்டு போய் அவளுக்கு ஒரு மோசமான எக்சாம்பிள்லா இருந்திருக்க. உனக்கு கோபமா இருந்த போது என்கிட்டே சண்டை போட்டிருந்தா என் பொண்ணும் என் கிட்ட சண்டை போடுவா. அப்படி தான் கோபத்தை காட்டுவா. இப்படி வீட்டை விட்டு போகலாம்னு இல்லை”

“போய்டு, என் கண்முன்னாடி நிக்காத போய்டு” என்று அவன் அவ்வளவு கோபமாகப் பேச,

“அம்மா திரும்பவும் நானா? என்மீது குற்றச்சாட்டா!” மனது மிகவும் தளர்ந்து போனது. அந்த நிமிடம் உயிரோடு இருக்கவே பிடிக்கவில்லை!

கண்களில் நீர் நிறைய அவனை பார்க்க,

“என் முன்னாடி அழுது எனக்கு எரிச்சல் கிளப்பாதே! அப்புறம் இன்னொரு தடவை என்னை சாப்பிடு சொன்ன,

என்ன பண்ணுவேன்னு எனக்கு தெரியாது. நீ இனிமே எனக்கு சாப்பாடு போடவே கூடாது. என்னவோ என்னை கல்யாணம் பண்ணினதே அதுக்கு தான்ற மாதிரி நீ அதை செஞ்சிட்டே இருக்க. வேண்டாம் போடி. என் முன்னாடி நிக்காத போடி" என்று கத்தினான்.

கதவு லேசாக திறந்திருக்க வெளியில் இருப்பவர்களுக்கு கேட்டு விடும் என்று அவன் முன் நிற்காமல் அவசரமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்து உள்ளிருத்த ரூமின் உள் புகுந்து கொண்டாள்.

அப்படி ஒரு அழுகை, உயிர்வாழும் ஆசையே விட்டது, எப்படி அவனிடம் நடந்து கொள்வது என்று தெரியவேயில்லை.

திருவிற்கோ "எனக்கு யாரும் தேவையில்லை, நான் இருந்து கொள்வேன், மனைவியும் தேவையில்லை மகளும் தேவையில்லை, இவர்கள் எல்லாம் ஒன்று! நான் வேறா? அப்படி தான் என் மகளின் மனதினில் இருக்கிறதா? எனக்கு அப்படி யாரும் வேண்டாம்!" என்ற மனப்பான்மை தான் இடைவிடாது மனதினில் ஓடியது. நடப்பது அனைத்திற்கு மனது துளசியை தான் குற்றம் சொன்னது.

மூன்றே நாட்கள் விஷேஷதிற்கு இருக்க, அடுத்த நாள் காலையில் அப்பாவிடம் சொல்லிவிட்டான் "விஷேஷம் நடக்கட்டும், ஆனா சீர்ன்னு யாரும் செய்யக்

கூடாது. அது துளசியோட அப்பா வீடா இருந்தாலும் சரி. உங்க கூட பொறந்தவங்களா இருந்தாலும் சரி சொல்லிடுங்க. செலவெல்லாம் என்னோடது மட்டும் தான். நமக்கு யார் சீர் செய்யற முறைன்னாலும் சொல்லிடுங்க, சீர் செஞ்சா தான் வருவோம்னு சொன்னா யாரும் வரவே வேண்டாம்!'' என்று விட்டான் முடிவாக.

''திரு இது மரியாதையை இல்லை, அதுவும் துளசியோட அப்பா வீடு சீர் செய்யறது முறை. அதை நாம வேண்டாம்னு சொல்லக் கூடாது''

''எனக்கு எந்த மரியாதையும் தெரிய வேண்டாம், நான் யாருக்கும் இனி மரியாதை குடுக்கற மாதிரி இல்லை'' என்று சொல்லி உணவு மேஜை முன் அமர்ந்தான்.

துளசி பரிமாற வர அவனின் ஒற்றை பார்வையில் தள்ளி போய்விட்டாள். அவனாகவே போட்டு சாப்பிட்டு விட்டு கிளம்பிவிட்டான். யார் பேசியும் சீர் செய்வதற்கு ஒத்துக் கொள்ளவில்லை

வேலவனும் ரத்னாவும் அவனை மில்லிற்கே சென்று பார்த்தனர், ''ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள்? தாங்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னிப்பு கூட கேட்டுக் கொள்கிறோம்'' என்று கேட்டனர்.

“இல்லை அப்படி எதுவுமில்லை, நீங்கள் ஒருவர் செய்தால் அது தொடரும், என் அத்தைகள் செய்வார்கள், பின் எல்லோரும். நீங்கள் என்னை கொஞ்சமாவது மாப்பிள்ளை என்று நினைத்தீர்களானால் இதற்கு கட்டு பட்டு தான் ஆக வேண்டும். நான் வேண்டாம் என்று நினைத்தால் நீங்கள் விஷேஷதிற்கு வரமால் இருந்து கொள்ளுங்கள்” என்று சொல்ல விட்டான்.

என்ன செய்வார்கள் அவர்கள், மௌனமாக திரும்பிவிட்டனர். பிரசன்னாவிடமும் மீராவிடமும் சொல்ல, “எப்படி சொல்றாங்களோ அப்படி செய்ங்கம்மா” என்று மீரா சொல்ல,

“இப்போ தான் செய்யணும்னு இல்லைம்மா, வேற ஏதாவது சந்தர்பத்துல மீனாக்கு செஞ்சிக்கலாம் விட்டுடுங்க!” என்று அவனும் சொல்லி விட்டான்.

துளசியால் எதுவுமே செய்ய முடியவில்லை. வெறும் பார்வையாளர் மட்டுமே!

ஆம், திரு திரும்பவும் அவளிடம் பேசுவதே இல்லை!

மூன்று நாட்களாக வீட்டில் என்ன நடக்கிறது என்று கூட அவளுக்கு தெரியாது. ஒரு மோன நிலையிலேயே இருந்தாள். என்னவோ சரியில்லை என்று எல்லோருக்கும் புரிய அவளை யாரும் அதிகம் தொந்தரவு செய்யவில்லை.

ராதா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டாள் உடன் ஷோபானவையும் வேலை வாங்க , எல்லாம் அதன்படி நடந்தது. ராதா அவளின் வீடிற்கு போகவில்லை.

விசேஷ நாள் காலையில் புண்ணியாதானம் செய்யப்பட்டது. வீட்டு ஆட்கள் சத்தியநாதன் கமலநாதன் குடும்பத்தினர் கூட வேலவன் வீட்டினர். வேறு யாரையும் வாருங்கள் என்று சொல்லப் படவில்லை. முதல் முறையாக தங்கை வீட்டினர் இல்லாமல் மேகநாதன் வீட்டினில் நடக்கும் விஷேஷம்.

மதியமாக மண்டபத்தில் விஷேஷம், பார்லரில் இருந்து வந்து மீனாக்ஷியை அலங்கரித்து கொண்டிருக்க, மீரா அவளுடன் துணையிருந்தாள். வெகு மாதங்களுக்கு பிறகு பார்க்கும் சித்தியுடன் “சித்தி” என்று மீனாக்ஷி வாய் பேசிக் கொண்டிருக்க, துளசிக்கு மகள் தன்னை தேடாதிருப்பது அப்படி ஒரு ஆசுவாசத்தை கொடுத்தது .

மூன்று நாட்களாக அப்படி படுத்தி எடுத்து விட்டிருந்தாள். திருவின் புறம் பார்க்கவேயில்லை. திரு காலையில் சென்றால் அவன் இரவு தான் வருகிறான், அதற்குள் மீனாக்ஷி உறங்கி விடுகிறாள்.

காலையில் திரு அவளின் அருகில் இரண்டு நாட்களாக நிற்க, அப்போது துளசியும் அங்கே தான் இருந்தால், மீனா “அப்பா” என்று அவள் சொல்ல, மீனா திரும்பவேயில்லை.

“மீனா” என்று துளசி அதட்ட திரு சென்றிருந்தான்.

மூன்று நாட்களாக அப்பாவிடம் இப்படி நடந்து கொள்ளக் கூடாது என்று தனிமை கிடைக்கும் போதெல்லாம் துளசி மகளுக்கு சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். எந்நேரமும் யாராவது இருப்பதால் அவளால் அதிகம் இதனைப் பற்றி பேச முடியவில்லை.

இப்போது அப்பாவிற்கும் மகளிற்கும் இடையில் எப்படி சரி செய்வது என்ற தலை வேதனை தான் துளசிக்கு.

திரு அவள் மீது சுமத்திய குற்றங்களை ஞாபகப் படுத்தக் கூட நேரமில்லை.

எல்லோரும் மண்டபத்திற்கு சென்று விட, மீனாக்ஷிய பிரசன்னாவும் மீராவும் அவன் வந்திருந்த காரில் அழைத்துச் கூட வேலவனும் ரத்னாவும். அவர்கள் ஐந்து பேருக்கு அந்த கார் சரியாக இருந்தது.

எல்லாம் சென்று சேர்ந்த பிறகு பார்த்தால் துளசி இன்னும் வந்திருக்கவில்லை.

அகிலாண்டேஸ்வரி திருவை கேட்க, திரு “நீங்க கூட்டிட்டு வரலையா” என்றான்.

இல்லையே அவ மீனாக்ஷி கூட வருவா இங்க மண்டபத்துல அழைக்க ஆள் வேணும்னு நான் அப்பா

வெங்கடேஷ் ஷோபனா ராதா அப்பாவோட அம்பாசிடர் ல வந்துட்டோம்.

சித்தப்பா வீடு எல்லாம் அவங்க அவங்க வந்துட்டாங்க என்று அகிலாண்டேஸ்வரி சொல்ல

“எங்க ப்ரசன்னா துளசி?” என்றான் திரு.

“அவ உங்க கூட வருவான்னு நினைச்சேன்” என்றான் அவன்.

“அக்கா வந்தா நான் தான் இடம் பத்தாது நீ மாமாவோட வான்னு சொன்னேன். நீங்க கூட்டிட்டு வரலையா” என்று மீரா கேட்கவும்,

“அச்சோ” என்றானது அகிலாண்டேஸ்வரிக்கும் திருவிற்கும். “நான் மண்டபத்திற்கு செல்கிறேன்” என்று திரு சொல்லியிருந்தால், “நானும் வருகிறேன்” என்று துளசி சொல்லியிருப்பாள் ஆனால் திரு தான் சொல்லவேயில்லையே!

அகிலாண்டேஸ்வரி அவனை பார்த்த பார்வையில் திரு பஸ்பமாகாமல் தப்பித்து கொண்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

“போடா போய் கூட்டிட்டு வா” என, திருவும் உடனே கிளம்பினான். மண்டபம் வீட்டிலிருந்து சற்று தூரம்.

பாதி வழி வரும் போதே துளசி நடந்து வந்து கொண்டிருப்பது தெரிய, அப்படி ஒரு கோபம் வந்தது திருவிற்கு. துளசி மேல், கூடவே அவன் மேலும்.

ஆம்! ஒரு நிராதரவான தோற்றத்தில் துளசி வந்து கொண்டிருந்தாள். எதிரில் வரும் இவனை கவனிக்கக் கூட இல்லை.

அருகில் சென்று இவன் பைக்கை நிறுத்த யாரோ என்று பதறி விலகினாள்.

பின் இவனை பார்த்ததும் ஆசுவாசமாகி நிற்க,

“ஏன் ஏறுன்னு சொன்னா தான் ஏறுவியோ?” என்று திரு வார்த்தைகளை கடித்து துப்ப, பதில் பேசாமல் ஏறி அமர்ந்தாள்.

அத்தியாயம் பதினேழு

சீரும் சிறப்புமாய், யாரும் சீர் செய்யாமலேயே மீனாக்ஷியின் விஷேஷம் எந்த வித பிரச்சனைகளுமின்றி சௌக்கியமாய் நடந்து முடிந்தது. கணவனும் மனைவியும் அகத்தின் அழகை முகத்தினில் காண்பிக்காமல் இருப்பதில் கை தேர்ந்தவர்கள் என்பதால் விஷேஷம் நன்றாகவே நடந்தது.

விருந்தினர்களை உபசரிப்பதிலேயே நேரம் சென்று விட்டது. வேறு எதுவும் ஞாபகத்திலேயே இல்லை. அதுவும் ஏன் சீர் வேண்டாம் என்று வந்தவர்களிடையே ஆயிரம் கேள்விகள்.

வீட்டினர் எல்லோரும் திருவை தான் காண்பித்தனர் அவனின் முடிவு என்பது போல. அவனோ வேண்டுதல் என்று ஒற்றை வார்த்தையில் அனைவரின் வாயினையும் அடைத்தான்.

மீரா முழுநேரமும் மீனாட்சியிடம் இருந்ததினால் துளசியை அவள் அதிகம் தேடவில்லை.

எல்லாவற்றிற்கும் உச்சமாக நிருபமா அவளின் அப்பா சத்தியநாதனிடம் “அப்பா எனக்கு அவரை பிடிச்சு இருக்கு, கல்யாணம் செஞ்சு வைக்கறீங்களா” என்று பிரசன்னாவை காண்பித்து கேட்க,

மகளின் இந்த பரிமாணத்தில் அசந்து நின்று விட்டார். அவசரமாய் சுற்றும் முற்றும் பார்த்தவர், "இங்க எதுவும் பேசக் கூடாது" என்று அதட்டினார்.

"சரி, பேசலை, நீங்க அவரை நல்லா பார்த்துக்கங்க" என்று சொல்லி விட்டு தூர நகர்ந்து விட நொந்து விட்டார். நிருபமா அப்பாவிடம் அதிக செல்லம், எந்த தயக்கமும் இன்றி எப்போதும் பேசுவாள். அதனால் இதனை அப்படியே சொல்லி விட்டாள்.

பின்னே பிரசன்னா இங்கே வருவது கிடையாதே, அதனால் இப்போது தானே காண்பிக்க முடியும்.

இது எதுவும் பிரசன்னாவிற்கு தெரியாது! நிருபமாவிற்கு அவன் மீது விருப்பம் இருப்பதும் தெரியாது.

அப்போதிருந்தே ஒரு உச்சபட்ச பதட்டத்தில் இருந்தார் சத்தியநாதன்.

இந்த விஷயம் யாருக்கும் தெரியாமல் விஷேஷம் இனிதாய் நடந்து முடிந்தது. சித்ரா வீட்டினில் எல்லோரும் வந்திருக்க, சாரதாவின் வீட்டினில் சாரதாவும் அவரின் மகனும் மட்டும் வந்திருக்க நாகேந்திரன் வரவில்லை.

ஆனாலும் பெண் மக்கள் இருவரும் அமைதியாக இருந்தனர். ஏனென்றால் இது அண்ணன் வீடல்ல உறவுகள் கூடியிருக்கும் இடம், இங்கே ஏதாவது பேசினால் அவர்களை பெயர் தானே கெட்டு போகும்.

மீனாட்சியின் சடங்குகள் செவ்வனே முடிய, பின்பு பந்தி ஆரம்பிக்க, "இங்க இத்தனை பேர் இருக்காங்க, பார்த்துக்குவாங்க, நீ உட்கார்" என்றான் திரு துளசியிடம். ஆம் வந்திருந்த ஜனக்கட்டு குறைய ஆரம்பித்து இருந்தது.

துளசியும் வார்த்தையாடாமல் ஒரு சேரில் அமர்ந்து கொண்டாள். காலையில் இருந்து அமராமல் அலைந்து திரிவதில் உடல் அசரிக்கையாய் இருந்தது.

வெகுவாக எந்த பிரச்னையும் வராமல் விஷேஷம் நடந்து கொண்டிருப்பதில் மனதும் மிகவும் ஆசுவாசமாக உணர, அமர்ந்து விட்டாள். அதுவும் அவள் நடந்து வந்துகொண்டிருக்கும் போது திரு பைக்கில் வந்து பார்த்த பார்வை "அய்யோடா, இன்றைக்கு ஒரு வழியானோம்" என்று நினைக்க, அப்போது அரட்டியவன் தான். பின்னே மண்டபம் வந்த பிறகு எதுவுமில்லை. வீட்டிற்கு சென்ற பிறகு எப்படியும் எதாவது வரும் என்று தெரியும். ஆனால் இப்போது ஒன்றுமில்லை தானே, அதுவே அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

ரத்னா சொல்லியிருக்க பிரசன்னா பந்தி நடக்கும் இடம் சென்று துளசிக்கு குடிக்க மோர் எடுத்துக் கொண்டு வந்தவன், அவளுக்கு கொடுத்து விட்டு அருகில் அமர்ந்து கொண்டான்.

அக்காவும் தம்பியும் அமைதியாக தான் அமர்ந்து இருந்தனர். பேசிக் கொள்வர் தான், ஆனாலும் அவசியமான பேச்சுக்கள் மட்டுமே. துளசிக்கும் அதிக பேச்சுக்கள் வராது, பிரசன்னாவிற்குமே!

அதற்கு நேர்மாற் மீரா! டாக்டர் என்பதையும் மீறி சல சலவென்று வாய் ஓயாமல் பேசும் ஜீவன்.

ஆராத்தி எடுத்திருக்க மீரா மீனாக்ஷியை அவள் அமர்ந்திருந்த மேடையில் இருந்து கீழே இறக்கி கூட்டி வர, மீனாக்ஷி வந்து அம்மாவின் அருகில் அமர்ந்து தோளில் சாய்ந்து கொண்டாள்.

“அம்மா, ரொம்ப டையர்டா தெரியறா மீனா, சாயாத, தள்ளி உட்கார்!” என்று பிரசன்னா சொல்லவும்,

“நான் சாஞ்சு உட்கார்ந்திருக்கேன். ஆனா ரொம்ப சாயலை” என்று மீனாக்ஷி வாய் பேசினாள்.

துளசி தன் உடன் பிறந்தவர்கள் மற்றும் மகளுடன் அமர்ந்திருப்பது எல்லோர் கண்ணையும் பறித்தது என்று தான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் அங்கிருந்த அத்துணை பேரிலும் மூவருமே தனித்து தெரிவர் தோற்றத்தில். துளசி அழகு, அவளையும் விட மீரா அழகு! இவர்களுக்கு சற்று குறையாமல் இருப்பான் பிரசன்னா. சற்று கவர்ச்சியான கம்பீரமான ஆண்மகன்.

இவர்கள் அமர்ந்திருப்பதை பார்த்த ஷோபனா வெங்கடேஷிடம், "உங்க அண்ணியோட தங்கை டாக்டர், அவ்வளவு அழகா இருக்கா, நீங்க சைட் அடிக்கலையா? கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப் படலையா?" என்று கேட்டு, அப்படி ஒரு முறைப்பை வெங்கடேஷிடம் இருந்து பெற்றுக் கொண்டாள்.

"ஏன்? அழகான பொண்ணுங்களை பார்த்தா எல்லா ஆம்பிள்ளை பசங்களும் கல்யாணம் பண்ண ஆசைப்படுவாங்களா, இல்லை சைட் அடிப்பாங்களா! ஒரு சிலர் செய்யறதால எல்லோரும் அப்படின்னு நினைக்க கூடாது"

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுன்னு சொல்லுவாங்க. அது அம்மா பிள்ளைகளுக்கு மட்டுமில்லை, கணவன் மனைவிக்கும் பொருந்தும். எங்கப்பா எங்கிட்டா நான் காலேஜ் போகும் போதே உனக்கு ஷோபனாவை தான் கல்யாணம் பண்ணப் போறேன் சொன்னார். அதுக்கு பின்ன இதுவரை நான் யாரையும் அந்த இடத்துல வெச்சு பார்த்ததில்லை. ஆனா நீ மரியாதையில்லாம, இடம் பொருள் தெரியாம நடந்துக்கும் போது இப்படி ஒரு பொண்ணை எங்கப்பா பார்த்துட்டாறேன்னு கோபம் வரும். ஆனா இப்போ நீ கொஞ்சம் பரவாயில்லை" எனப் பேசிக்கொண்டிருக்க,

“ஷோபனா” என்ற அகிலாண்டேஸ்வரியின் குரலுக்கு “அத்தை கூப்பிடறாங்க” என்று க்ஷணமும் தாமதியாமல் பொறுப்பாய் சொல்லி சென்றாள். எப்போதும் எங்கேயும் அவள் சரியாக நடந்து கொள்ளாமல் சோம்பியிருக்கும் போதே விட்டுக் கொடுக்காதவன் வெங்கடேஷ், மனைவியின் இந்த பரிமாணத்தில் அவ்வளவு திருப்தியை உணர்ந்தவன் பந்தியை கவனிக்க சென்றான்.

எல்லோரும் விடை பெற ஆரம்பிக்க, திரு அவர்களை வழியனுப்பி கொண்டிருந்தவன், பார்வை கூட துளசியையும் அவளின் உடன்பிறப்புகளையும் தொட்டுத் தொட்டு மீள, எல்லோரையும் கவனித்தாலும் பார்வை முழுவதும் துளசியின் மேல்.

அவள் ரோடில் நடந்து வந்து கொண்டிருந்த தோற்றம் தான் நினைவிற்கு வந்தது. அதனை இப்போது நினைத்தாலும் சட்டென்று கோபம் மனதினில் பொங்கியது. “ஏன் ஒரு ஃபோன் செய்து என்னை அழைக்க மாட்டாலாமா” என்று!

இப்போது அவளை ஊன்றி கவனித்தான், புடவை மட்டுமே ஒரு மெல்லிய கரையிட்ட பட்டு, கூட ஒரு நெக்லஸ் மட்டுமே. வேறு பெரிதாக அலங்காரங்களும் இல்லை நகைகளும் இல்லை, எப்போதும் துளசியின் மையிட்ட விழிகள் அவனை ஈர்க்கும், இன்று அது கூட இல்லை. ஆனாலும் ஒரு தேஜஸ் அவளின் தோற்றத்தில், அவளை விழிஎடுக்காமல் பார்க்க வைத்தது.

திரு அவளிடம் பேசாமல் பாராமுகம் காண்பித்த போது கூட அமைதியாய் இருந்த அவளின் முகத்தினில், இந்த சில நாட்களாக சஞ்சலம் மட்டுமே. தான் அவளை மிகவும் வதைக்கிறோம் எனப் புரிந்தது. "உனக்கு ஏன்டா இவ்வளவு கோபம்" என்று அவனுக்கு அவனே கேட்டுக் கொண்டவன்,

எல்லோரும் சொல்லி கொள்ள ஏதுவாக துளசி என்று அவளை கூப்பிட்டான்.

திரும்பியவளிடம் "வா" என்று அழைத்து அருகில் நிறுத்தி கொண்டான். அதுவரை சோர்ந்திருந்த துளசியின் முகத்தினில் சோர்வையும் மீறி ஒரு பொலிவு கணவன் அருகில் நின்ற போது. பார்த்தும் பாராமல் பார்த்த திரு பின் உறவுகளிடம் கவனத்தை திருப்பினான்.

வந்தவர்கள் பேசினாலும் சரி, போகிறேன் என்று சொல்லிக் கொண்டாலும் சரி, ஒரு புன்னகை ஒரு தலையசைப்பு மட்டுமே துளசியிடம். அதை ஈடு கட்டும் விதமாக திருவே பேசி எல்லோரையும் கவனித்தான்.

துளசி அப்படிதான் பேசினால், பேசுவாள். அவளாக பேசுவது என்பது மிகவும் குறைவு. எப்போதும் எல்லோரிடமும் வஞ்சனையின்றி புரிவது புன்னகை மட்டுமே! இன்றும் அதனையே செய்தாள்.

மனைவி அருகில் இருக்க, இப்போது பார்வை மகளிடம் என்ன செய்கிறாள் என்பது போல, மீராவும்

அவளும் பேசி இருப்பது பார்த்துக் கொண்டே இருந்தான்.

மீனாக்ஷி மீராவிற்கு சளைக்காமல் பேசிக் கொண்டிருக்க, திரு பார்வையை அங்கே வைத்திருப்பது புரிந்து துளசியும் அங்கே பார்க்க, "ரொம்ப பேசறா இவ" என்று மகளைப் பற்றி முணுமுணுத்தான்.

"அப்படியே உங்களை மாதிரியே எல்லா விஷயத்துலையும்" என்று துளசியும் பதில் கொடுத்தாள். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளாமல் மகளை பார்த்தபடியே இந்த பேச்சு.

பிறகு உறவுகள் வர இவர்களின் பேச்சு நின்று போனது.

மேகலா தன் கணவர் கமலநாதனிடம் "துளசி தங்கை ரொம்ப அழகா இருக்காள்ல, டாக்டர் வேற! நம்ம விஷ்ணுக்கு பார்க்கலாமா, நல்லா பழகவும் செய்யறா! துளசி மாதிரி பேசாம எல்லாம் இல்லை! நல்லா பேசறா! எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு! இவ்வளவு அழகா பொண்ணு கிடைக்கறது கஷ்டம்!" என அடுக்க,

"ஆங்" என வாய்பிளந்து தான் கமலநாதன் பார்த்திருந்தார்.

இப்படி துளசியின் பிறந்த வீட்டினருக்கும் தெரியாமல், அவள் வாழும் வீட்டினருக்கும் தெரியாமல்,

அவளின் சின்ன மாமனார்கள் வீட்டினில் பலதும் ஓடியது, பிரசன்னாவையும் மீராவையும் கொண்டு.

பிரசன்னா துளசியின் அருகில் வந்தவன் "மீனாக்ஷிக்கு பசிக்குதாம் அக்கா. என்ன பண்ண?" என்றான்.

"இரு, அத்தைக் கிட்ட அவளை சாப்பிட கூட்டிட்டு போகலாமான்னு கேட்கிறேன்" என்று துளசி அந்த இடம் விட்டு நகரப் போக,

"எங்க போற? இரு!" என்ற திரு,

"நீயே கேட்டுக்கோ பிரசன்னா" என்று விட்டான்.

பிரசன்னா ஒரு தயக்கத்தோடு செல்லவும், துளசி திருவின் முகம் பார்த்தாள். "அம்மா பார்த்துக்குவாங்க. பிரசன்னா என்ன வேற ஆளா, கேட்டுக்கட்டும், நீ எங்கயும் அலையக் கூடாது பேசாம உட்காரு!" என்றான் அதட்டலாக.

எதற்கு துளசி திருவை மறுத்து பேசியிருக்கிறாள், அப்படியே அமர்ந்து கொள்ள, பிரசன்னா சென்றவன் என்ன ஆனான் என்று தெரியவில்லை.

மீனாட்சியின் மேல் திரு ஒரு கண் வைத்திருக்க, மீனாக்ஷி இடத்தை விட்டு எழுந்து அம்மாவை நோக்கி வருவது புரிய, "அங்கேயே இரு" என்று அவளை நோக்கி சைகை செய்தான்.

“நான் அங்க வரணும்” என்று மகள் பதில் சைகை காண்பித்தாள்.

அங்கேயே இருன்னா இரு என்பது போல திரு காண்பித்து, மீராவிடம் அவளை உட்கார வை என்றும் காண்பிக்க,

“உட்காரு மீனா” என்று மீரா அவளை இழுத்து பிடித்து அமர வைத்தாள். துளசியும் இதனை பார்த்து தான் இருந்தாள்.

துளசியிடம் திரும்பியவன், “அங்க போ, நான் வர்ற வரை அவ இடத்தை விட்டு அசையக் கூடாது” என்றான் இறுக்கமாக.

“ம்ம்” என்று தலையாட்டி துளசி மகளின் அருகில் செல்ல, “மா பசிக்குது” என்றாள்.

“ப்ச்” என்று சலித்த துளசி, “ஒரு நேரம் லேட்டா சாப்பிட்டா என்ன ஆகிடுவ நீ, இது உன்னோட விஷேஷம் ஒரு இடத்துல உட்காராம அங்கேயும் இங்கேயும் அலையுவியா? அப்பா உட்கார சொன்னா நீ வர்ற!” என்று அவளை அதட்ட,

உதடு பிதுக்கி முகத்தினை சுருக்கி அம்மாவை செல்லமாய் முறைத்து மீனாக்ஷி அமைதியாய் அமர்ந்தாள்.

“அப்பா சொன்னதையும் மீறி நீ வர்ற, இப்படி பண்ணக் கூடாது!” என்று துளசி மீண்டும் சொல்ல,

“அப்படி தான் பண்ணுவேன்” என்று மீனாக்ஷி தெளிவாய் பதில் சொன்னாள்.

“மீனாக்ஷி” என்று துளசி கோபமாய் அதட்டி முறைக்க,

“என்ன பண்ணுவார்? திட்டுவார்! அடிப்பார்! செஞ்சிக்கட்டும்!” என்று மகள் தோளை குலுக்க, அவள் சொன்னதையும் விட மீரா முன் சொன்னது துளசிக்கு அப்படி ஒரு கோபத்தை கொடுத்தது.

“இந்த மாதிரி பேசறதுன்னா என்கிட்டே இனிமே நீ பேசாதே” என்றாள் உடனே.

மீரா தான் “அக்கா! என்ன பேசற? அவ சின்ன பொண்ணு, பொறுமையா சொல்லு!” என்று சொல்ல,

அப்போதும் துளசி மகளை முறைத்த படி இருந்தாள்.

தூரமாய் இருந்து திரு பார்த்திருந்தான், என்னவென்று தெரியாத போதும் மனைவியின் முகத்தினில் கோபத்தை பார்க்க, மீனாக்ஷியின் முகத்தினில் அலட்சியம் தெரிந்தது.

அவர்களையே பார்த்திருந்தான்.

அத்தியாயம் பதினெட்டு

அருகில் வந்தவன் "என்ன" என்றான்.

துளசி என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் "ஒன்னுமில்லையே" என்றாள் அவசரமாக.

சில நொடிகள் அவளை உற்று பார்க்க, துளசியின் தலை தானாகக் கவிழ்ந்தது.

பின்பு மீனாவின் புறம் திரும்பியவன் "சாப்பிட போகலாமா" என்றான்.

"மா வா" என்று துளசியின் கைபிடித்தாள் மீனா.

துளசி திருவின் முகம் பார்க்க, "போ" என்பது போல தலையசைதவன், "நீயும் போ மீரா" என்று அவளையும் அனுப்பியவன், அவர்களோடு அவனும் வந்தான்.

பந்தி நடக்கும் இடம் வந்த போது இவர்களின் நெருங்கிய சொந்தம் மட்டுமே அங்கே, வெங்கடேஷும் ராதாவும் தான் மேற்பார்வை பார்த்து இருந்தனர்.

தருணும் அங்கே தன் மகனோடு இருந்தான்.

மேகநாதன் அங்கேயே அமர்ந்து எல்லாம் சரியாக நடக்கிறதா என்று பார்த்திருந்தார். அவரின் உடன் பிறப்புகள் அவரோட அமர்ந்திருந்தனர். வேலவனும் ரத்னாவும் கூட அங்கே தான் பார்த்து இருந்தனர்.

மீரா பிரசன்னா எங்கே என்பது போல பார்க்க, ஓரிடத்தில் பிரசன்னா யாரிடமோ பேசி நிற்பது போல தெரிந்தது.

“இந்த பிரசன்னாவை கேட்டுட்டு வான்னு சொன்னா அரட்டை அடிச்சு நிக்கறான்” என சொல்ல,

துளசியும் திருவும் அங்கே பார்த்தனர்.

சத்தியநாதன் தான் பிரசன்னாவிடம் பேசிக் கொண்டிருந்தார். சித்தப்பாவாக யாரிடமும் பேச மாட்டாரே என்ற யோசனையோடு திரு பார்த்திருந்தான்.

“மீரா நீ மீனாக்ஷியோட சாப்பிட உட்காரு, நான் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்துட்டாங்களான்னு பார்த்துட்டு வந்த பிறகு துளசி உட்காரட்டும். யாராவது வந்து கூப்பிட்டாலும் அவர் வரட்டும்ன்னு சொல்லு” என்று சொல்லிப் போனான்.

பின்னே இது அவர்களின் விஷேசம். எல்லோருக்கும் முன்னே துளசி அமர்ந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான். அது அவளிற்கே தெரியும். ஆனாலும் துளசி சற்று கவனமற்று இருப்பாதாக தான் அவனுக்கு தோன்றியது.

பிரசன்னா இருக்கும் இடம் போக, அவன் ஒரு கட்டாயத்தில் தான் நின்று கொண்டிருப்பதாக அவன் முகம் பார்த்தே தோன்றியது.

“சித்தப்பா” என்று அழைத்து அவரின் அருகில் போக, பிரசன்னாவிற்கு திருவை பார்த்ததும் ஆசுவாசம்.

அவனின் முகம் பார்த்தே உணர்ந்த திரு, அப்புறம் சித்தப்பா, “பிரசன்னா என்ன சொல்றான்?” என்று அவனின் தோள் மேல் கை போட, தனது அக்காள் கணவனின் இந்த பரிமாணத்தில் நெளிந்தான் பிரசன்னா.

“தம்பி எங்க வேலை பார்க்கறார், என்ன சம்பளம்ன்னு பேசிட்டு இருந்தேன்?”

“என்ன இவர் பொண்ணா குடுக்கப் போறார், இவனை வேலை சம்பளம் எல்லாம் கேட்டுட்டு இருக்கார்” என்று நினைத்தவன், நொடியில் யோசித்து பார்வையை சுற்ற விட, நிருபமா நகத்தை கடித்தபடி பார்வையை இவர்களிடம் வைத்திருப்பது புரிய, அப்படியோ நினைத்தான்.

பின்பு எதுவும் அனுமானிக்காதவன் போல சகஜமாக “என்ன பிரசன்னா சொல்லிட்டியா?” என,

திருவை ஒரு பார்வை பார்த்தவன், “சம்பளம் எல்லாம் சொல்லுவாங்களா மாமா” என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தான், இருவர் காதிலும் தெளிவாக விழுந்தது. பிரசன்னா அலட்சியமாக சொல்லவில்லை ஒரு தயக்கத்தோடு தான் சொன்னான்.

“சொல்லணும் பிரசன்னா சொல்லணும். பொண்ணு பார்க்கறப்போ கேட்டா சொல்லணும் தானே”

“அது பார்க்கறப்போ பார்த்துக்கலாம் மாமா” என்று அதற்கும் முணுமுணுப்பாய் சொன்னான்.

“அதை தான் எங்க சித்தப்பா செய்யறார் போல” என்று மனதிற்குள் நினைத்தாலும் எதையும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. பார்வை நிருபமாவிடம் சென்று சென்று மீள அவளோ பதட்டமாய் இங்கே பார்த்திருப்பது புரிந்தது.

திருவிற்கு சிரிப்பு வந்தது, “சாப்பிட்டீங்களா சித்தப்பா வாங்க” என்று கூப்பிட,

“நீ போ திரு நான் வர்றேன்” என்றார் அவர். முகம் சரியில்லாதது போலத் தோன்ற,

“அட வாங்க சித்தப்பா” என்று பிரசன்னாவை விட்டு அவரை அழைத்து போனவன்,

எல்லாரையும் அமர வைத்து, பின் பிரசன்னா மீராவுடன் மாமியார் மாமானாரை அமர வைத்து, என பம்பரமாய் பார்த்து பார்த்து செய்து கொண்டிருந்தான். வீட்டினில் எல்லோரையும் பார்த்து பார்த்து கவனிக்கும் துளசி எதுவும் செய்யாமல் இங்கே அமைதியாக அமர்ந்திருந்தாள்.

பின்பு அவனின் வீட்டினர் எல்லோரையும், கூட அவனின் அத்தை வீட்டினரையும் அமர வைக்க, அகிலாண்டேஸ்வரி அமரும் போது துளசியை கூப்பிட்டார். சாதாரணமாய் மருமகள் எனும் போது இப்படி கவனிப்பு இருக்காது.

இப்போது பிள்ளைதாச்சி அல்லவா. அதனால் எப்போதும் துளசியின் மேல் ஒரு கண் வைத்திருந்தார் என்பது மிகையல்ல.

“என்னோட சாப்பிடட்டும் மா” என்று விட்டான்.

“ஏன் உன் பொண்டாட்டியோட மட்டும் தான் சாப்பிடுவியா?” என்று ராதா அமர்ந்திருந்தவள் எழுந்து கொள்ள, “அதுதானே” என்று வெங்கடேஷும் எழுந்தான்.

சண்டையோ என்பது போல எல்லோரும் பார்த்தனர். தம்பியும் தங்கையும் தன்னை வம்புக்கு இழுக்கிறார்கள் என்பது புரிய திருவின் முகத்தினில் ஒரு மென்னகை கூடவே “ராதா நமக்குள்ள சண்டைன்னு உன் வீட்ல பார்ப்பாங்க” என்று எடுத்துக் கொடுத்தான் திரு.

“சண்டையா? யார் போடுவா? நீ போட்டாலும் நான் போடமாட்டேன் ஒழுங்கா என்னோட உட்காரு” என வார்த்தை வளர்க்க, பிரசன்னாவும் மீராவும் எல்லாவற்றையும் “ஆங்” என பார்த்திருந்தனர்.

இவ்வளவு கூட்டம் அவர்களுக்கு புதிது!

ஒரு வழியாக விஷேஷம் முடிந்து வீடு வந்தனர். ஆய்ந்து ஓய்ந்து தெரிந்தால் துளசி, இவ்வளவு பேச்சு வார்த்தைகள் நடந்த போதும் எந்த பேச்சும் துளசியிடம் இல்லை. எல்லாவற்றிற்கும் திருவே ஈடு செய்தான்.

வந்தவுடன் துளசி தன் அம்மா வீட்டினர் இருப்பதை பார்த்து உறங்க யோசிக்க, ‘‘போய் தூங்கு துளசி, நான் இருக்கேன், மீனா இருக்கா பார்த்துக்குவா!’’ என்றவன் திரு.

‘‘பார்த்துக்குவ தானே!’’ என மகளிடம் கேட்க,

‘‘ம்ம்’’ என்று மீனா தலையசைத்தாள்.

மகளை அழைத்து போய் அவளுக்கு உடை மாற்ற உதவி பின்பு ஹால் அழைத்து வந்த துளசி, மீராவிடம் ‘‘பார்த்துக்கொள்’’ என்று சொல்லி, அப்பாவும் மகளும் என்னவோ செய்யட்டும் என்று இதுதான் சாக்கென்று என்று உள்ளே சென்று படுத்துக் கொண்டாள். ஒரு உற்சாகமற்ற தன்மை அவளிடம் தானே தங்கியது.

திரு அங்கே இருந்த ஒரு அறையை காண்பிக்க, அவர்கள் நால்வரும் கூட உறங்க சென்று விட, மற்ற வீட்டினரும் உறங்க சென்று விட, மீதம் இருந்ததது திருவும் மீனாவும்.

அவர்கள் எல்லோரும் சென்ற உடன் மீனா அம்மாவிடம் செல்லப் போக, ‘‘மீனா’’ என்று அழைத்தவன், ‘‘உட்காரு’’ என்றான்.

‘‘என்ன?’’ என்ற பார்வையோடு மகள் அமர்ந்தாள்.

‘‘அம்மாக்கிட்ட மண்டபத்துல என்ன சொன்ன?’’ என்றான்.

மீனா அமைதியாக இருக்க, ‘‘என்னவோ நீ சொல்லியிருக்க, என்ன?’’ என்றான் மீண்டும் சற்று அழுத்தமான குரலில்.

அப்போதும் சற்றும் பயமின்றி அப்படியே அமர்ந்திருந்தாள்.

‘‘நாம ஏதாவது செஞ்சா அதை ஒத்துக்குற தைரியம் வேணும். அது சரியா இருந்தாலும் சரி, தப்பா இருந்தாலும் சரி’’ என்று மகளை கூர்மையாக பார்த்தான்.

அந்த பார்வை சற்று அசைக்க, ‘‘அம்மா சொன்னாங்க அப்பா சொன்னா கேட்கனும்னு, நான் சொன்னேன் கேட்க மாட்டேன்னு’’ என்று சொல்ல,

‘‘ம்ம், அப்புறம்’’ என்றான்.

‘‘இதுதான் சொன்னேன்’’ என்று அலட்சியமாய் தோள் குலுக்கினாள்.

“இதை சொன்னா எல்லாம் உன்னோட அம்மா முகத்துல அவ்வளவு கோபம் தெரியாது” என்று ஆழ்ந்த அமைதியான குரலில் கேட்கவும்,

“கேட்கலைன்னா என்ன பண்ணுவார்? திட்டுவார்! அடிப்பார்! திட்டட்டும், அடிச்சிக்கட்டும்ன்னு சொன்னேன்!” என சொல்லி, இவ்வளவு தான் சொன்னேன் என்றாள் முறுக்கிய முகத்தோடு.

ஆனால் அப்பாவின் முகத்தை பார்க்கவில்லை.

“என்னை பாரு” என்றான் அமைதியான ஆழ்ந்த குரலில். அந்த குரலில் அப்பாவை நோக்கி திரும்பவும்,

“எத்தனை தடவை உன்னை திட்டியிருக்கேன், அடிச்சிருக்கேன், சொல்லு!” என்றான் மகளை நேருக்கு நேர் பார்த்து.

மீனாக்ஷி இப்போது அப்படியே வாயை மூடிக் கொண்டாள். பார்வை அப்பாவை பார்க்காமல் தாழ்ந்தது.

“ஒரு தடவை அடிச்சிருக்கேன் , திட்டின மாதிரி எனக்கு ஞாபகமே இல்லை!”

“அம்மாவை எப்பவும் திட்டுறீங்க அடிக்கறீங்க” என்றாள் குறைபட்ட குரலோடு.

“இது அதைவிட பெரிய பொய். ஒரே ஒரு தடவை அடிச்சிருக்கேன், ஒரு ரெண்டு மூணு சண்டை

வந்திருக்கு. இப்போ ஒரு சில மாசமா தான் அது கூட. ஆனா அதுக்கு நீ இவ்வளவு ரியாக்ட் பண்ண வேண்டிய அவசியமில்லை, வீட்டை விட்டு போக நினைக்கறது, போறது, எல்லாம் ரொம்ப தப்பு. அப்போ அப்படி தான் நான் ரியாக்ட் பண்ணுவேன்!''

''அண்ட் உனக்கு அம்மா எவ்வளவு முக்கியமோ எனக்கும் அப்படி தான். அம்மா மட்டுமில்லை நீயும் தான்''

''இப்படி பேசாதே, அப்படி பேசாதேன்னு, எதுவும் அப்பா சொல்ல மாட்டேன். உனக்கு எது சரின்னு தோணுதோ செய்!'' என்று அதுவரை அமைதியாய் பேசிக் கொண்டிருந்தவன்,

''ஆனா வீட்டை விட்டு போகணும்ன்ற நினைப்பு கூட வரக் கூடாது!'' என்று கோபமாய் பேசியவன்,

''அப்பா கிட்ட கோபம்னா சண்டை போடு, அம்மா கிட்ட அதை தானே செய்வ, அம்மாவை விட்டுட்டு போகலாம்னு சொல்வியா, இந்த மாதிரி ஒரு ஆட்டிடுயுட் வளர்க்காதே!'' என தீர்க்கமாய் பார்த்தான்.

அப்படியே அசையாமல் அமர்ந்திருந்தாள் மீனாக்ஷி, ஆனால் அப்பாவின் பார்வையில் வார்த்தைகளில் மனதில் ஒரு பயம் எழ அதை முகம் காண்பித்து கொடுத்தது.

“நாளைக்கு ஸ்கூல் போகணும், ஸ்கூல்ல போய் எந்த கலாட்டாவும் இருக்கக் கூடாது. எதுன்னாலும் வீட்ல அம்மாக்கிட்ட இல்லை, என்கிட்டே மட்டும் தான் பண்ணனும். வெளில போய் நீ ஒரு கெட்ட பேர் வாங்கறதை பொறுத்துக்க முடியாது. புரியுதா! எந்த கலாட்டாவும் இருக்கக் கூடாது!”

மகள் “செய்யாவிட்டால் என்ன செய்வாய்?” என்ற பார்வை பார்க்காத போதும்,

“மனசுக்குள்ள செய்யலைன்னா என்ன பண்ணுவேன்னு எல்லாம் யோசிக்கக் கூடாது. ஏன்னா என்ன செய்யன்னு நான் யோசிக்க போறதே இல்லை. ஏன்னா நீ அப்படி பண்ண போறதில்லை!” என்று நீளமாய் பேசி மகளை பார்க்க, மீனாக்ஷி இப்போது அப்பாவை பார்த்திருந்தாள்.

“சொல்றது எல்லாம் சொல்லிட்டேன், திரும்பவும் நான் சொல்றது ஒன்னு தான். உனக்கு எது சரின்னு படுதோ செய்!” என்றவன் அந்த சோபாவிலேயே நன்றாக சாய்ந்து அமர்ந்து கைகளை கட்டிக் கொண்டவன் கண்மூடிக் கொள்ள,

சிறிது நேரம் அப்பாவை பார்த்திருந்த மீனாக்ஷி தோளை குலுக்கியவள் அப்பாவை போலவே கைகளை கட்டி, நன்றாக சோபாவில் சாய்ந்து கண்களை மூடி கொண்டாள்.

அப்பாவும் மகளும் என்னவோ செய்து கொள்ளட்டும் என்று விட்டு போனாலும் துளசிக்கு உறக்கம் பிடிபடவில்லை. எழுந்து வந்து பார்த்தால் அப்பாவும் மகளும் ஒன்று போலவே கை கட்டி சாய்ந்து கண் மூடி இருக்க, பார்த்தவுடனே சோர்வையும் மீறி ஒரு உற்சாகம், வேகமாக மொபைல் எடுத்து வந்து ஒரு ஃபோட்டோ எடுத்தவள் பின்பு சென்று படுத்துக் கொண்டாள்.

மீனாக்ஷி சில நிமிடங்கள் கூட இருக்காது உறங்கியும் விட்டாள். சிறிது நேரம் கழித்து கண் திறந்து திரு பார்க்க, மகள் அவனை போலவே அமர்ந்து இருப்பதை பார்த்து தானாக முறுவல் தோன்ற ஊன்றி பார்த்தால் உறங்கி இருந்தாள்.

அவளை தொந்தரவு செய்யாமல் எழுந்து மனைவி என்ன செய்கிறாள் என்று பார்க்கச் சென்றான். படுத்திருந்தால் ஆனால் கண்களை மூடியிருக்கவில்லை, திரு உள்ளே வந்ததும் அவனைப் பார்க்க, பட்டு வேஷ்டி, வெண்பட்டு சட்டையில் இருந்தான் அவன். அப்போது தான் அவனை அவனின் உடையை கவனித்து பார்த்தாள். அது அவனிற்கு பொருந்தியிருக்க அவனையே பார்த்திருந்தாள்.

துளசி என்ன செய்கிறாள் என்று பார்க்க வந்த திரு, அவள் விழித்திருப்பதை பார்த்ததும் அவளை கவனிக்காதவன் போல, உடை மாற்றுவதற்காக சட்டையை கழற்ற அவனையே தான் பார்த்திருந்தாள்.

திருவை ரசித்தபடியே "ஷப்பா, எப்படியோ விஷேஷத்தை நல்ல படியாக நடத்தி முடித்து விட்டான்" என்பதாக.

திரு உடைமாற்றுகிறான் என்பதே இல்லாமல் அவள் பார்த்துக் கொண்டே இருந்தாள், அவன் இவளுக்கு திரும்பி தான் நின்றிருந்தான். ஆனால் திரு மாற்றிய இடத்தினில் பெரிய வுட்டன் கபோர்ட் இருக்க அதில் ஆளுயர கண்ணாடியும் இருக்க, துளசி அவனை பார்த்துக் கொண்டு இருப்பது அவனின் பார்வைக்கு தப்பவில்லை.

துளசிக்கு அது கவனத்தில் பதியவில்லை.

விடாமல் தன்னை பார்க்கும் மனைவியை தான் அவனும் விடாமல் பார்த்து இருந்தான். விஷேஷம் எந்த பிரச்சனையுமின்றி நன்றாக நடந்தது அவனுக்குள் ஒரு அமைதியை கொடுத்திருக்க, மகளோடு பேசியது அவள் சரியாக எடுத்தாளா இல்லையா என்று தெரியாத போதும் ஒரு நிம்மதியை கொடுத்திருக்க, மனைவியின் பார்வை ஒரு உற்சாகத்தை கொடுத்தது.

"இவ என் முன்னாடி டிரஸ் மாத்த மாட்டா திரும்பி நின்னு மாத்துவா, நான் முன்ன போய் நின்னாலும் புடவையை எடுத்து மேல போர்த்துவா. ஆனா இவ மட்டும் என்னை பார்ப்பளாமா" என்ற எண்ணம் ஓட கண்ணாடியில் அவளை பார்த்திருந்தான்.

திரு உடை மாற்றுகிறான் என்பது துளசியின் கவனத்தில் கிஞ்சித்தும் இல்லை. ஆனாலும் பார்வை எல்லாம் அவன் மீதுதான்.

“சைட் அடிக்கறா, ஆனா கொஞ்ச மாட்டா இவ, இவ கொஞ்சாம நான் இனி இவ பக்கத்துல போகவே மாட்டேன், சன்னியாசம் வாங்கற நிலைமை வந்தாலும் சரி! பார்ப்போம், இவளா நானான்னு! ஸ்டெடியா இருக்கணும் திரு. அவ பக்கத்துல நீ போயே நாலு மாசம் ஆச்சு, தடுமாறிடாதே! சொல்லியும் அவ உன் பக்கத்துல கூட வரலை!” என்ற யோசனையோடும் ஏக்கத்தோடும் திரு கண்ணாடி வழியாக பார்த்திருக்க,

இதனை சற்றும் அறியாத துளசியின் பார்வை கணவனை மட்டுமே பார்த்திருந்தது.

அத்தியாயம் பத்தொன்பது

துளசியின் பிறந்த வீட்டினர் அன்று மாலை கிளம்பிவிட, இப்போது யாருமில்லை எப்போதும் போல வீட்டினர் மட்டுமே!

திரு அவர்கள் கிளம்பியதும் மில்லுக்கு சென்று விட்டான். புது உத்வேகமே அவனிடம்! அங்கு சென்று வேலைகளை பார்த்து அவன் வீடு வந்த போது, இரவு வெகு நேரமாகிவிட்டது.

துளசியை தவிர ஹாலில் யாருமில்லை.

திரு வந்ததும் உணவு எடுத்து வைப்பதா இல்லை அவனே உண்பானா என்று துளசி தடுமாறினாள். பின்னே அந்த சண்டை வந்ததில் இருந்து துளசி பரிமாறவில்லை வேண்டாம் என்று விட்டிருந்தான்.

இன்று அவனையே பார்த்தபடி சோஃபாவில் அமர்ந்திருக்க, "இவ திருந்தமாட்டா" என்று நினைத்தவனாக,

அவளைப் பார்த்தவன் "சாப்பாடு போடற வேலை ஒன்னு தான் நீயா செய்வ, இப்போ அதுல இருந்தும் நான் சண்டை போட்டவுடனே விட்டது தொல்லைன்னு எஸ்கேப் ஆகிட்டியா" என்று முறைத்தான்.

அவன் பேசியது எல்லாம் துளசியின் கருத்தில் இல்லவே இல்லை பரிமாறுவதா வேண்டாமா என்பது மட்டும் தான் அவளின் சிந்தனை.

அப்படியே பார்த்திருக்க, திருவிற்கு கோபமா வந்தது. "கொஞ்சத்தான் மாட்டா, சண்டையாவது போடறாளா, இவளை.." என்று முறைத்து பார்த்தவன்,

"வாடி இங்க" என்றான் அதே கோபத்தோடு.

இப்போது என்னவோ என்ற பாவனையோடு அருகில் வரவும்,

"கொஞ்சமாவது சூடு சொரணை வேணும், திட்டுனா கோபம் வரணும், சண்டை போடணும், ஏதாவது பண்ணனும். இப்படி நீ எனவோ பேசிக்கோன்னு பார்த்துட்டே நிற்பியா" எனப் பேசினான்.

அவனுக்கு உடனே ப்ளேட் எடுத்து வந்து சாப்பிட எடுத்து வைக்க,

"நீ என்கூட சண்டை போட்டா தான் சாப்பிடுவேன்" என்று சொல்லி எரிச்சலில் கைகளை கட்டி அமர்ந்து கொண்டான்.

"சண்டையா? என்ன போட? எனக்கு போட வரலையே" என்று பரிதாபமாக துளசி சொல்ல,

“சண்டை போட வரலையா? அப்போ அந்த சாப்பாடை தூக்கி என் தலைமேல போடு!” என்று கோபமாக அவன் எழ,

அவனின் கை பிடித்தவள் “ஏன் இவ்வளவு கலாட்டா பண்றீங்க, உட்காருங்க, பசிக்குது!” என்றாள்.

“நீ இன்னும் சாப்பிடலையா?”

“இல்லை” என்பது போல அவள் தலையசைக்க,

“ஒரு பேச்சு கூட நான் சொன்னா கேட்க கூடாதுன்னு நினைச்சு இருக்கியா?. நான் முன்னமே சொன்னேன் தான் மீனா சாப்பிடும் போதே சாப்பிட சொல்லி”

“அப்போ பசிக்கலை இப்போ உங்களை பார்த்த பிறகு தான் பசிக்குது”

“எப்படி எல்லாம் என் உயிரை எடுக்கறதுன்னு டிசைன் டிசைன்னா யோசிப்பியா நீ”

துளசி சற்றும் அசராமல் “பசிக்குது, உட்காருங்க” என்றாள்.

“நீயும் உட்காரு” என்று சொல்லிக் கொண்டே இருவரும் உணவருந்தினர். அதன் பிறகு அவர்களிடம் எந்த பேச்சுமில்லை.

திரு உறங்கப் போக, எல்லாம் ஒதுங்க வைத்து முன்பு போல மீனாவுடன் துளசி உறங்க சென்று விட, திரு கடுப்பின் உச்சிக்கே போய்விட்டான்.

“போடி, இனி நீயா வராம நானா வந்தா ஏன்னு கேளு” என்று மனசுக்குள் புலம்பிக் கொண்டவன், படுத்து உறங்கி காலையில் எழும் போதே,

நிறைய நாட்களுக்கு பிறகு பள்ளி போவதால் மீனாக்ஷி எழுந்து தயாராகி இருந்தாள்.

திருவும் வேகமாக குளித்து தயாராகி வந்தான்.

“சீக்கிரம் சாப்பிடு மீனா பஸ் போய்டும்” என்று துளசி அவளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருக்க, அப்போது தான் திரு ரூம் விட்டு வெளியே வந்தான்.

“இவன் என்ன குளிச்சிட்டு வந்துட்டான், ஷட்டல் போகலையா?” என்று யோசனையோடு பார்த்துக் கொண்டே உணவினை ஊட்டினாள்.

“தோ மா” என்று சொல்லிய மகள் பேக்கில் புக்கினை துருத்த, “சரியா வை” என்றபடி திரு வந்து சோஃபாவில் அமர்ந்தான்.

“லேட் ஆச்சுப்பா பஸ் போயிடும்” என்று மீண்டும் துருத்த,

“மீனா சரியா வை” என்றான் மீண்டும் அழுத்தமான குரலில்.

“பா” என்று சிணுங்கியபடி மகள் பார்க்க,

“நான் தான் கொண்டு போய் விடப் போறேன், அவசரமில்லை!”

“நீங்களா” என்று விழி விரித்தவள், “ம்ம், அப்போ சரி” என்றபடி எல்லாம் சரியாக வைத்த படி “அம்மா என்ன லஞ்ச்?” என கேட்க ஆரம்பிக்க,

திரு கொண்டு போய் விடப் போகிறான் என்பது மகிழ்ச்சி என்றாலும் தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே என்ற சுணக்கம் மனதில் தோன்றியதை துளசியால் தடுக்க முடியவில்லை.

துளசி மெதுவாக மீனாட்சியிடம் “இவ்வளவு நாள் ஏன் லீவ்ன்னு யாராவது கேட்டா என்ன சொல்லுவ?”

“ம்ம்” என்று யோசித்தவள், “என்ன சொல்லட்டும்” என்று அம்மாவிடமே கேட்க,

“உடம்பு சரியில்லைன்னு சொல்லு, எல்லாம் எல்லார் கிட்டயும் சொல்லணும்னு அவசியமில்லை, இதெல்லாம் உடம்புல நடக்குற இயற்கையான மாற்றம், இதை பெரிய விஷயமா நினைச்சுக்க வேண்டாம். ஃபிரண்ட்ஸ்னா கூட இதெல்லாம் பேசிக்க வேண்டாம்” என்று விட்டாள் துளசி.

மெல்லிய குரலில் மகளிடம் சொல்லிக் கொண்டு இருந்தாலும் தெளிவாக திருவின் காதினில் விழுந்தது. எப்போதும் போல இப்போது தினசரி அவன் கையினில். ஆனால் கவனம் முழுவதும் துளசியிடமும் மகளிடமும்.

அகிலாண்டேஸ்வரி அப்போது தான் குளித்து வந்தவர், திரு ஹாலில் குளித்து தயாராகி அமர்ந்திருப்பதை பார்த்து "எங்கே போகிறாய்?" என்று கேட்க கூடாது என்பதற்காக "எங்கே? எங்கே?" என்று சைகையில் கேட்க,

திருவும் "என்னமா? என்னமா?" என்றான் மீண்டும் மீண்டும் புரியாமல்.

இருவரின் பாஷையும் பார்த்தபடி எழுந்து வந்த வெங்கடேஷ், "திரு, நீ எங்க போறன்னு அம்மா கேட்கறாங்க" என்று சொல்லியபடி அகிலாண்டேஸ்வரியின் அருகில் அமர்ந்தான்.

அவனின் தோளில் அடித்தவர் "டேய் போகும் போது எங்க போறன்னு கேட்க கூடாது" என,

மீனாக்ஷி அதற்கு பதிலாக "அப்பா எங்கே போறார் உட்கார்ந்து தானே இருக்கார் பாட்டி" என்றாள்.

"நீ வா செல்லம்" என்று அழைத்து மீனாக்ஷியிடம் வெங்கடேஷ் ஹய் ஃபை கொடுத்தான்.

“டைம் ஆகுது” என்றபடி திரு எழ,

“பாட்டி என்னை அப்பா கொண்டு போய் விடறார்” என்ற படி மீனாக்ஷி உற்சாகத்தோடு கிளம்ப,

வீடே அதிசயமாக பார்த்தது. “என்ன உங்கப்பாவா?” என்று வாய் விட்டு கேட்டான் வெங்கடேஷ்.

“ம்ம்ம் எஸ் சித்தப்ஸ்” என்றபடி மீனாக்ஷி கிளம்ப,

அவள் அப்பாவின் பைக்கில் பின்னால் அமரும் சமயம் தான் மேகநாதன் வாக்கிங் முடித்து தன் தம்பிகளோடு வந்தார்.

மேகநாதன் மகனுக்கு இப்போதாவது பொறுப்பு வந்ததே என்றபடி ஒரு பார்வையை மகனை நோக்கி வீச,

அவர் தன்னை தான் பார்க்கிறார் என்று தெரிந்தும் கண்டுகொள்ளாமல் கிளம்பினான்.

போகிற போக்கில் சித்தப்பாக்கள் இரண்டு பேரிடமும் “கிளம்பிட வேண்டாம் சித்தப்பா, உங்க ரெண்டு பேர் கிட்டயும் பேசணும், சாப்பிட்டிட்டு வீட்டுக்கு வாங்க” என்று சொல்லியபடி போக,

“என்ன பேசணும் இவனுக்கு?” என்று எல்லோருக்கும் யோசனையாகிப் போனது.

மகளை விட்டு வந்தவன் "துளசி" என்று ரூமின் உள் இருந்து குரல் கொடுத்தான்.

துளசி சமையல் அறையில் இருப்பாள் என்று நினைத்து குரல் கொடுக்க, அவளோ அப்போது தான் குளித்து உள் அறையில் தயாராகி கொண்டு இருந்தவள், "இங்கே தான் இருக்கேன்" என்று சன்னக் குரலில் சொல்ல, உள் அறைக்குள் அவன் சொல்ல, புடவையை கட்டி முடித்திருந்தவள், கொசுவத்தை உள்ளே சொருகிக் கொண்டிருக்க,

"வந்தா ரூம்குள்ள எட்டி பார்க்க மாட்டியாடா?" என்று அவனுக்கு அவனே திட்டுக் கொண்டு "வட போச்சே" என்ற பார்வையை துளசியினிடம் செலுத்தினான்.

"எதுக்கு கூப்பிட்டீங்க"

"பேசணும்" என்றான் ஒற்றை வார்த்தையில்.

துளசி "பேசுங்க" என்ற பார்வையைப் பார்த்தாள்.

"ஒரு இடம் ஒன்னு வாங்க போறோம். பஸ் ஸ்டாண்ட்ல இருந்து கொஞ்சம் தள்ளி மெயினான இடத்துல. அட்வான்ஸ் குடுத்துட்டோம், நாலு மாசம் ஆச்சு, இந்த மாசத்துக்குள்ள கிரையம் பண்ணிடுவோம். அது எல்லோர் கிட்டயும் சொல்லப் போறேன். அதுக்கு தான் முன்ன உன்கிட்ட சொன்னேன்"

“ம்ம் சரி” என்று விட்டு வெளியில் போகப் போனாள். உண்மையில் மகளை பள்ளிக்கு விடப் போவதை பற்றி அவன் சொல்லவில்லை என்று சுணங்கிய மனம் இதனை ஒரு விஷயமாகக்கூட எடுக்கவில்லை. சொத்தெல்லாம் அவளுக்கு ஒரு விஷயமேயில்லை.

“ஏய், என்னடி? நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கேன். நீ பாட்டுக்கு உம் சரின்னு சொல்லிட்டு போனா என்ன அர்த்தம்? உட்காருடி, ஆளும் அவளும்! நான் என்ன பேச வந்தாலும் என்னை கோபப்படுத்திடற” என்று வார்த்தைகளை கடித்து துப்பினான்.

“இல்லை, உங்களுக்கு டைம் ஆகிடும். இன்னும் ஒன்னும் செய்யலை, தனம் இன்னைக்கு வரமாட்டா, அதான் போனேன், சமைக்கணும்” என்று துளசி விளக்கம் கொடுக்க,

“சமைக்க தான் நீ பொறந்தியா! ஒன்னு சமை, இல்லை சாப்பாடு போடு, எரிச்சல் பண்றடி!” என்று கத்தினான்.

உடனே அமைதியாய் “என்ன பேசணுமோ பேசு” என்ற பார்வையை தாங்கி அமர்ந்து கொண்டாள்.

வெறுத்துப் போனான் திரு. “யாருக்கு உழைக்க வேண்டும்?” என்ற எண்ணம் சட்டென்று தோன்ற,

சில நொடிகள் அவளை, அவளின் பார்வையை தாங்கி பார்த்தவன், "போடி" என்ற பார்வையை கொடுத்து பேசாமல் வெளியில் சென்று அமர்ந்து கொண்டான்.

துளசிக்கு உணமையாய் எப்படி அவனிடம் நடந்து கொள்வது என்று தெரியவில்லை. ஒரு பதினைந்து நாட்களில் எல்லாம் மாறிவிடுமா என்ன?

அவன் நினைப்பது போல உரிமை மனதில் வானளவு இருந்தாலும், அதனை காண்பிக்க முடியவில்லை. வெகுவாக ஒரு மன உளைச்சல் ஆரம்பித்தது.

எதற்கு கோபப்படுகிறான்? ஏன் கோபப்படுகிறான்? என்றே புரியவில்லை. இந்த வாழ்க்கைக்கு அவள் பழகியிருந்தாள். புதிதாய் திருவினுள் விழித்திருக்கும் ஆசை புரியவுமில்லை, அவன் சொன்னாலும் அப்படி நடந்து கொள்ள முடியவில்லை. அது இயல்பாய் வரவேண்டும் அல்லாவா, துளசியின் இயல்பே அல்ல அது?

அதுவும் கர்ப்பமாய் இருக்கும் பொழுது அவளுள் நடக்கும் மாற்றங்கள் அவளை சரியாய் சிந்திக்க விடவில்லை. ஒரு சோர்வு எப்போதும்.

திரு இப்படி எழுந்து போனது மனதிற்குள் பிசைந்தது.

திருவிற்கோ தான் தன் எதிர்பார்ப்பை சொல்லியும் துளசி அருகில் வரவில்லை என்பது அப்படி ஒரு

காயத்தைக் கொடுத்தது. பேசினாலும் பேசாவிட்டாலும் அவனின் வாழ்க்கை நன்றாக தானே சென்றது. தான் பாராமுகம் காட்டினாலும் அவள் என்னிடம் நன்றாக தானே நடந்தாள். அப்போது அதெல்லாம் என்ன? நான் யார் அவளிற்கு?

அவனுக்குள் எதோ வந்து அமர்ந்து கொண்டதா? இல்லை அவளுக்குள்ளா? கருங்கல் சுவரா? மாயத்திரையா?

அவனுள் இருந்த உற்சாகமும் மொத்தமாய் வடிந்தது.

அவன் அமர்ந்த ஓரிரு நிமிடங்களுக்கு எல்லாம் அவனின் சித்தப்பாக்கள் வந்து விட, கூட அவனின் அப்பா, வெங்கடேஷ், அம்மாவும் இருந்தனர். அவர்களிடம் இடம் வாங்குவதை பற்றி கூறினான்.

ஊரின் மிக முக்கிய இடத்தில இருப்பதால் அதுவும் தொகையும் மிக அதிகம் என்பதால் ‘‘வாங்கி என்ன செய்ய போற திரு அங்கே’’ என்ற கேள்வி எழ,

சமைத்துக் கொண்டே அந்த பேச்சு வார்த்தையை கேட்டுக் கொண்டு தானிருந்தாள். ஷோபனா அங்கே ஹாலில் இருந்து கேட்டுக் கொண்டிருக்க, துளசி சமையல் அறையில் நின்று. தனம் இல்லாததால், எல்லோருக்கும் காஃபியும் டீயும் அவரவர்க்கு தக்க மாதிரி போட்டு எடுத்து துளசி அங்கே சென்று கொடுக்க, எல்லோரும்

எடுத்துக் கொள்ள "வேண்டாம்" என்று திரு மறுத்து விட்டான்.

அவள் சென்ற நேரம் தான் அதனை என்ன செய்யப் போகிறாய் என்ற கேள்வி!

"ஷாப்பிங் மால் வித் சினிமா தியேட்டர் கட்டப் போறேன் சித்தப்பா"

"பட்ஜெட் என்ன?" என்று அவர் கேட்க,

"அது இன்னும் முடிவு பண்ணலை, பட் பட்ஜெட் பெருசு" என்றான். அவன் முடிவு செய்து விட்டான், ஆனால் பகிரப் பிரியப்படவில்லை. அவனின் செயல்கள் எல்லாம் துளசிக்கும் அவனின் அம்மாவிற்கு தெரிந்தால் போதும் என்ற எண்ணம் தான்

துளசிக்கு சொல்லாமல் அம்மாவிடம் மட்டும் சொல்ல இஷ்டமில்லை, விட்டுவிட்டான்.

"ஆனா இந்த ஊர்ல அது ஓடுமா என்ன?"

"என்னோட டார்கெட் இந்த ஊர் இல்லை சித்தப்பா, சுத்தி இருக்குற ஊருங்க தான். ஓடும், எனக்கு நம்பிக்கை இருக்கு" என்றான் ஸ்திரமாக.

காஃபி கொடுத்த பிறகு எல்லாம் துளசி கேட்டு தான் இருந்தால். அவளிடம் ஒரு பிரதிபலிப்பும் இல்லை.

கோடிக்கணக்கில் ஒரு ப்ராஜெக்ட், இடமும் கட்டுமானம் செயல் பாடு எல்லாம் சேர்த்து. யாரோ என்னவோ பேசுவதாக நின்றிருந்தாள்.

அது அவர்களது என்ற உணர்வோ அல்லது ஒரு சந்தோஷமோ எதுவுமே இல்லை.

“இப்போ துளசி மாசமா இருக்கு, நிலம் வாங்கற சரி, இப்போ வேலையும் ஆரம்பிக்க போறியா” என சத்தியநாதன் கேட்க,

“எஸ் சித்தப்பா, இப்போ ஆரம்பிச்சாதான் முடிக்க முடியும். எப்படியும் ஒரு வருஷத்துக்கும் மேல ஆகிடும். அதுவுமில்லாம நிலம் மட்டும் தான் என்னோட பணம், பாக்கி பேங்க் லோன். நம்ம ஃபிரண்ட் ஒருத்தர் மேனேஜரா இருக்கார். இப்போவே வாங்கி வேலையை ஆரம்பிச்சிட்டா பரவாயில்லை”

“பார்த்து செய் திரு, ரொம்ப அகலக் கால் வேண்டாம்” என்று கமலநாதன் சொல்ல,

“பார்த்துக்கலாம் சித்தப்பா, கொஞ்சம் ரிஸ்க் தான். நிறைய பணம் இறக்கரேன். சரியா வரும்னு நம்பிக்கை இருக்கு” என்றான்.

அவன் அப்படி சொல்லும் போது என்ன செய்ய முடியும்? சித்தப்பாக்கள் கிளம்பிவிட்டனர்.

பின்னர் வெங்கடேஷிடம் "உன் மாமனார்க்கு குடுத்த பணம் வேணும்டா, கேளு, கேட்டு வாங்கு" என்றான்.

"ராதா கிட்டயும் பேசியிருக்கேன், இன்னும் பத்து நாள்ல பணம் வேணும்னு பார்ப்போம்" என்றான்.

இப்படியாக பணத்தை பற்றி பேச ஆரம்பிக்க, மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

அவர்கள் எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று என்றாலும் எல்லோருக்கும் பொதுவாய் சொல்லும் போது தங்களுக்கும் மகன் சொல்வது எதோ மாதிரி இருக்க, சிறிது நேரம் கழித்து அகிலாண்டேஸ்வரி சொல்லியே காண்பித்து விட்டார்.

"என் பையன் என்ன பண்றான்னு எங்களுக்கு தெரியலை? எல்லோருக்கும் சொல்ற மாதிரி சொல்ற!" என்று சொல்ல,

உண்மையில் துளசியிடம் சொல்லிவிட்டு அம்மாவிடம் சொல்லி பின் தான் அனைவரிடமும் சொல்ல நினைத்திருந்தான், துளசி செய்த கலாட்டாவில் எல்லாம் மறந்து விட்டது.

"அதும்மா சொல்லக் கூடாதுன்னு எல்லாம் இல்லை, கொஞ்சம் டென்ஷன்" என்று முகத்தினில் வேதனையோடு சொல்லவும்,

அவ்வளவு தான் அகிலாண்டேஸ்வரிக்கு திருவின் மீது வருத்தம் போய் "என்ன திரு?" என்று மகனின் அருகில் எழுந்து அமர்ந்து கொண்டார்.

என்ன சொல்வது என்று தெரியாமல் "பணம் கொஞ்சம் எல்லா இடத்துலையும் மாட்டிகிச்சு, நானும் யோசிக்காம நிலத்துக்கு அட்வான்ஸ் கொடுத்துட்டேன், ஐம்பது லட்சம் கொடுத்திருக்கேன்" என்றான்.

"ஒரு வார்த்தை சொல்லணும் திரு, நீ என்ன பண்றேன்னு யாருக்காவது தெரியணும்! இப்படி யாருக்கும் தெரியாம இவ்வளவு பெரிய தொகை கொடுத்திருக்க" என்றவர்,

"இப்போ இன்னும் எவ்வளவு வேணும்" என,

"எழுவத்தஞ்சு லட்சம்" என்றான்.

மேகநாதன் மௌனமாக எல்லாம் கேட்டு அமர்ந்திருந்தார். துளசியும் அங்கே தான் இருந்தாள்.

"சரி நான் தர்றேன், நீ இந்த வாரத்துக்குள்ளயே பத்திரப் பதிவை வெச்சிக்கோ" என்றார்.

வீடே "ஆங்" என அகிலாண்டேஸ்வரியைப் பார்த்தது. அகிலாண்டேஸ்வரியிடம் பணம் இருப்பது தெரியும் ஆனால் எவ்வளவு என்று மேகநாதனிற்கே தெரியாது.

“மா, என்ன சொல்ற? உன்கிட்ட அவ்வளவு பணம் இருக்கா?”

“இல்லாம எப்படி தர்றேன்னு சொல்லுவேன், என் அப்பா வீடு எனக்கு கொடுத்த காசுடா, ஆனா நீ எனக்கு திரும்ப கொடுத்துடணும்” என்றார் கறாராக.

“கண்டிப்பா கொடுத்துடுவேன், நம்பும்மா என்னை!”

“நம்பாமன்றது கிடையாது, ஆனா பணம்ன்னு வந்துட்டா நாம உஷாரா இருக்கணும், அது புருஷன்னாலும் சரி, பையன்னாலும் சரி, யார் கையையும் எதிர்பார்க்க முடியாது, கூடவும் கூடாது!” என்றார்.

“அதுதான்மா இடத்தை துளசி பேர்ல வாங்கறேன்! அதுல வர்ற வருமானம் எல்லாம் அவளுக்கு போகற மாதிரி தான் செய்ய போறேன்!” என அம்மாவிடம் சொன்னான். துளசியை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

இப்போதே வீடே “ஆங்” என திருவையும் துளசியையும் பார்த்தது.

“என்கிட்டே ஒரு வார்த்தைக் கூட சொல்லலை துளசி” என்று அகிலாண்டேஸ்வரி கேட்க,

அவர் கேட்பது கூட உணராமல் “என்ன? என் மீதா?” துளசி அதிர்ச்சியாய் திருவைப் பார்த்திருந்தாள்.

அதை சொல்ல தான் திரு பேசவந்தான், அவள் தான் சமையல் அது இதென்று பேசி அவனை எரிச்சல் படுத்தி விட்டாள்.

“அவளுக்கு இன்னும் தெரியாது மா” என்று திரு சொல்ல,

வெங்கடேஷை ஷோபனா பார்த்திருந்தாள், “பாருங்க உங்க அண்ணன் எப்படி?” என்பது போல,

“உங்கப்பா இந்த மாதிரி எனக்கு செய்யலைடா?” என அகிலாண்டேஸ்வரி குறைப்பட்டார்.

“விடு முதல்ல துளசி பேர்ல செய்வோம், அடுத்தது உன் பேர்ல செஞ்சிடலாம்” என திரு பேசினான்.

இப்படியாக பேச்சுக்கள் நீண்டு கொண்டே போனது. ஒரு கட்டத்தில் பேச்சு தேங்க,

திரு எழுந்து மில்லிற்கு கிளம்பிவிட்டான். சாப்பிடவில்லை. தெரிந்தே தான் செய்தான். அவன் கிளம்புகிறான் என்று தெரிந்து துளசி வேகமாக வாயில் வந்த போது கிளம்பியிருந்தான்.

என்ன செய்வது என்று புரியாமல் அவனின் அலைபேசிக்கு அழைக்க அது வீட்டின் உள் இருந்து ஒலித்தது.

விட்டு சென்றிருந்தான். சிறிது நேரத்தில் மில்லில் இருந்து ஆள் வந்தது அவனின் ஃபோன் எடுக்க, உணவை கொடுத்து விட்டாள்.

மாலையில் மீனாவை பள்ளியில் இருந்து அழைத்து வந்தவன் வாசலோடு விட்டுச் சென்று விட, பின்பு இரவு வரையிலுமே அவன் வரவில்லை.

கோபமாக இருக்கிறான் என்று புரிந்தது. சண்டை போடவும் பிடிக்கவில்லை, கோபம் காட்டவும் பிடிக்கவில்லை, மீனாவிடம் கைபேசியை கொடுத்து "அப்பாவை வீட்டுக்கு வரச் சொல்லு நிறைய டைம் ஆச்சு சொல்லு" என்றாள்.

மீனாட்சியும் அப்படியே ஒலிபரப்ப,

உறங்கும் மகளை எழுப்பி பேசச் சொல்கிறாள் எனப் புரிந்து விரைந்து வந்து விட்டான்.

அவன் வருவதை பார்த்ததுமே உணவு மேஜையின் முன் இருதட்டுக்களை வைத்து விட, காலையில் இருந்து உணவு உண்ணாமல் தன்னை வருத்திக் கொண்டிருந்த திருவும் பேசாமல் வந்துவிடவிட்டான். துளசி அனுப்பியதை அவன் உண்ணவில்லை.

உண்டு முடித்து திரு உறங்கப் போய்விட, எப்போதும் போல கணவனுக்கு பால் எடுத்துக் கொண்டு போனவள்

“என் பேர்ல எல்லாம் வேண்டாம், வேணும்னா மீனாக்ஷி பேர்ல வாங்குங்க” என்று சொல்லியபடி கொடுக்க

“அட, அதிசயமா இருக்கு. சாப்பாடை தவிர இதெல்லாம் கூட என்கூட பேசுவியா” என்றான் படு நக்கலாக.

“கல்யாணம் ஆனதுல இருந்து எனக்கு உங்களோட சம்மந்தம் அதிகம்ன்னு பார்த்தா சாப்பிடற நேரம் மட்டும் தான். அந்த நேரம், அந்த பொறுப்பு, அது மட்டும் தானே! இப்போ நீ அதை மட்டும் செய்யறன்னு சொன்னா, நான் என்ன செய்வேன்? எனக்கு அது மட்டும் தான் உங்ககிட்ட வருது!” என்று நீளமாக ஆதங்கத்தில் பேசியே விட்டாள்.

“ஓஹ் அப்படியா?” என்று நக்கலாய் கேட்டவன், “நீ எனக்கு சாப்பாடு போடறதுனால மட்டும் உனக்கு குழந்தை வந்துடுச்சா? என்னவோ அது மட்டும் தான் சம்மந்தம்ன்னு பேசற, நீ என்ன குந்தி தேவியா? மந்திரத்தை சொல்லி குழந்தை பெத்துக்கிடியா? இல்லை இப்பவும் அப்படி தான் உருவாகி இருக்கா?” என்று நேரடியாக காட்டமாக பேசினான்.

அவளுக்கு அவன் சொல்ல வருவது புரிந்தது. ஆனாலும் அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. இந்த பேச்சு அவளுக்கு அப்படி ஒரு

வருத்தத்தை கொடுத்தது. அதற்கான பிரதிபலிப்பு என்ன காண்பிக்க என்று கூட தெரியவில்லை.

கோபமா? ஆவேசமா? ஆக்ரோஷமா? வருத்தமா? எதுவாகினும் அவனின் அருகில் போகும் நினைப்பு மட்டும் வரவேயில்லை அவன் வரவேண்டும் என்பது தான் எதிர்பார்ப்பு எப்போதுமே! அவன் அப்படி தான் பழக்கியிருந்தான்.

"என் பேர்ல வேண்டாம்" என்று திரும்பவும் சொல்ல,

"உனக்கு பிள்ளையை கொடுக்கவே உன் கிட்ட கேட்டதில்லை. இன்னும் சொத்து குடுக்கவா கேட்கப் போறேன்! வாயை மூடிட்டு போடி!" என்று அதட்டினான்.

அவனை முறைத்தவாரே உள்ளே செல்ல,

"அட, முறைக்க கூட செய்வியா நீ! ஒரு ஃபோன் செஞ்சு வான்னு கூப்பிட முடியலை. மீனா விட்டு ஃபோன் பண்ற" என்று அதற்கும் கிண்டலடித்தான்.

முன்பெல்லாம் எப்போதும் அப்படி தான் பேசுவாள்.

"ஏன் நிக்கற? போ, போ, போய் தூங்கு! எவ்வளவு நேரம்னாலும் நின்னுட்டு தான் இருக்க போற? என் பக்கத்துல தூங்கவா போற?" என்றும் சொல்ல,

அவனின் கோபத்தை விட அவனின் கிண்டல் வெகுவாக பாதித்து. "இங்கேயே படு" என்று

சொல்லியிருந்தால் படுத்திருப்பாள். ஆனா திரு சொல்லவில்லை. அவனுக்கு இன்னும் புரியவில்லை, அவளாக வருவதற்கு நாட்களாகும், அது சரியாவது அவனின் கையினில் என்று.

கோபப்பட்டு "இங்கே படு" என்று சொல்லிவிடமாட்டானா என்று சில நொடிகள் நிற்க, திரு கண்டு கொள்ளவேயில்லை. அவன் கோபத்தை காண்பிக்க, திட்ட , கிண்டல் செய்ய என்று இப்படி இருக்க, மனம் அவனின் அமைதியான அருகாமைக்கு ஏங்க ஆரம்பித்தது. முன்பு போல அவன் பேசாமல் இருந்து விட்டால் கூட போதும் என்று நினைக்க ஆரம்பித்தது.

மீனாவின் அருகில் சென்று படுத்துக் கொண்டாலும் உறக்கம் அணுகவில்லை.

திருவிற்கு அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்றே தெரியவில்லை. அவள் அருகில் வரவேண்டும் என்று விருப்பட்டு அவளை இன்னும் தள்ளி போக செய்து கொண்டிருந்தான்.

அத்தியாயம் இருபது

அடுத்த நாளும் மீனாட்சியை திரு தான் பள்ளிக்கு கொண்டு போய் விட்டான்.

துளசியின் முகம் பார்த்தே அவளை எதுவும் பேசவில்லை, எதுவும் தொந்தரவு செய்யவில்லை. ஆம், இரவு சரியாக உறக்கம் இல்லாமல் முகம் ஒரு மாதிரி இருக்க கண்கள் சற்று வீங்கி இருக்க, பார்த்தவுடனேயே "உடம்பு சரியில்லையா துளசி" என்றான்.

"இல்லை" என்பது போல ஒரு தலையசைப்பை கொடுத்து வேலையைப் பார்க்க,

"உடம்பு சரியில்லன்னா சொல்லிடணும், டாக்டர் கிட்ட போயிடணும், இது என்ன பண்ணுதுன்னு விடக்கூடாது" என்றான் பொறுமையாக.

அதற்கும் சரி என்பது போல தலையசைத்து மகளுக்கு சமையல் வேலை பார்க்க, அதில் திருவிற்கு அப்படி ஒரு கோபம் வந்தாலும், அவளின் முகம் பார்த்த பிறகு அவளை அரட்டமுடியவில்லை, கோபமும் காண்பிக்க முடியவில்லை. அமைதியாக சென்று அமர்ந்து கொண்டான்.

தன்னை அதட்டி, உருட்டி, மிரட்டும், உரிமை பாராட்டும், சண்டையிடும் துளசி வேண்டும் என்ற எண்ணம் திருவினுள் ஓங்கி இருக்க, அதன்

வெளிப்பாடே இந்த குறை சொல்வதும், சண்டையிடுவதும். ம்கூம்! என்ன சண்டையிட்டாலும் அதன் வெளிப்பாடுகள் துளசியிடம் இல்லை.

ஆனால் திரு இப்போது சண்டையிடவில்லை, அமைதியாகி விட்டான். எல்லாம் உடனே சரியாகிவிடாது என்று புரிந்தாலும், தான் சரியாக பேசாத போதும் கூட தன் முகம் பார்த்தே தன் எண்ணம் புரிந்து நடப்பவள் இப்போது சொல்லியும் எதுவும் செய்வதில்லை என்ற திருவின் ஆதங்கம், கோபமாக மாறி அவளை தாக்கியது.

அவனுக்கு புரியவில்லை வீட்டை விட்டு கோபித்து பிறந்த வீடு செல்வது துளசியின் இயல்பு கிடையாது. சென்றாலும் மகளை கணவனை மூன்று மாதங்கள் பிரிந்து இருப்பது எல்லாம் அவளின் இயல்பே அல்ல. அப்படி அவளையும் மீறி அவளுள் மாற்றங்கள் இருக்க, திருவின் எதிர்பார்ப்பு முட்டாள் தனமானது. அது அவனுக்கு அவ்வளவாக புரியவில்லை என்றாலும் அவளை திரும்ப காய்ச்சி எடுக்கவில்லை.

பின் வந்த நாட்களிலும் துளசி அப்படியே தான் இருந்தால் ஒரு சோர்வு, ஒரு பிடித்தமின்மை, எப்போதும் அவளுள் யோசனைகள், மகளிடம் கூட உற்சாகமின்றியே பேசினாள்.

மகளுக்கும் தனக்கும் ஒரு இணக்கம் வரட்டுமென்று இப்போது மீனாக்ஷியை பள்ளிக்கு அழைத்து செல்வதும் அவனே கூட்டிக் கொண்டு வருவதும் அவனே. கூடவே

மகளின் படிப்பையும் கவனிக்க வேண்டும், படிப்பில் மிகவும் பின் தங்கி இருந்தாள். சற்று தூரம் தான் பள்ளி, அவனுக்கு நேர விரயமும் கூட, ஆனாலும் செய்தே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தவனாக அதை செய்தான்.

இத்தனை நாட்கள் எப்படியோ? இனி எல்லாம் சரியாக நடக்க வேண்டும் இருக்க வேண்டும் என்ற எண்ணம். கூடவே மகள் இப்போது பதின் வயதின் ஆரம்பத்தில் இருக்க அவளை தனியாக விட விருப்பமில்லை. வீட்டை விட்டு போக வேண்டும் என்ற எண்ணம் எல்லாம் வர விடவே கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டவனாக மகளிடம் சற்று அதீத அக்கறை எடுத்துக் கொண்டான். அவளிடம் சற்று பேச்சு கொடுத்தான். அவன் கொஞ்சமாக கொடுத்தால் மகள் அதனையும் விட அதிகம் பேசினால் அவனிடம்.

மாலையில் பள்ளியில் இருந்து அழைத்து வருபவன் அப்படியே வீடும் வர ஆரம்பித்தான். துளசியின் முகம் பார்ப்பதற்காகவே. அவளிடம் தெளிவே இல்லை. அதனால் அவளிடம் சண்டையிடவேயில்லை. அவள் திரும்ப பழையபடி ஆனால் போதும் என்ற எண்ணம் மட்டுமே பிரதானமாய் இருந்தது.

துளசி தன்னை கொஞ்சவில்லை என்ற எண்ணம் பின்னுக்கு போய்விட, அம்மா மூலமாக பணப்

பிரச்சனைகள் தீர்ந்து, இப்போது கவனம் முழுவதும் துளசியிடம் மட்டுமே.

அப்போதும் திருவிற்கு தான் போய் துளசியை கொஞ்ச வேண்டும் என்று தோன்றவில்லை. இந்த வாரமாக சண்டையிடாமல் குறை சொல்லாமல் அமைதி காத்தாலும், அவனின் பார்வையே மாறி அதில் துளசியை பார்க்கும் போது ஒரு அனுசரணை தெரிந்தாலும், கணவனின் அருகாமை இப்போது முக்கியம் என்று அவனுக்கு புரியவில்லை.

இப்படி கவனித்தாலும் அவனாக அருகில் செல்ல வில்லை. இவன் இருக்கும் இடத்தில் அவளாக எப்போதுமே வந்து அமர மாட்டாள். அவள் இருக்கும் இடத்திற்கு இவன் போவதும் கிடையாது. பார்வையால் தொடருவான், கவனிப்பான் அவ்வளவே. பேச்சுக்களும், அவளாகினும் சரி அவனாகினும் சரி தேவையான பேச்சுக்கள் மட்டுமே!

அதற்கு மேல் இருவருவருக்குமே வருவதில்லை. அதுவும் திரு ஒரு வார்த்தை கூட அதிகம் பேசவில்லை. திரும்ப எதுவும் சண்டையிடுவது போலவோ அல்லது குற்றம் சொல்லுவது போலவே பேசிவிடுவோம் என்று அளவாகவே பேசினான்.

அன்றும் "நீ ரொம்ப டல்லா இருக்க துளசி ஹாஸ்பிடல் போயிட்டு வர்றியா அம்மா கூட" என்றான்.

“இல்லை, அடுத்த வாரம் தான் வர சொல்லியிருக்காங்க தேவையில்லை” என்று விட்டாள். மீனாட்சியை பள்ளிக்கு அழைத்து செல்வதும் வருவதுமாய் இருக்க, மற்ற நேரங்களில் தொழிலைக் கொண்டு பிசியாக இருந்தான். அதனால் தான் அப்படி கேட்டான். அவள் வேண்டாம் என்ற போதும் “அம்மா, அவளை கூட்டிட்டு போம்மா, ரொம்ப சோர்வா தெரியறா” என்று விட,

அகிலாண்டேஸ்வரிக்கு வேறு என்ன வேலை? “போயிட்டு வரலாம் துளசி” என்று ஒரு அதட்டலிட்டார்.

அதற்கு எப்படி துளசி மறுப்பாள் “சரி” என்று உடனே கிளம்பிவிட்டாள்.

டாக்டர் அவளை பரிசோதித்து விட்டு “நல்லா தான் இருக்கா” என்று சொல்ல,

“ஆனா திரு சொல்றான் அக்கா, இவ ரொம்ப சோர்வா இருக்கான்னு” என்று அகிலாண்டேஸ்வரி சொன்னார்.

“என்ன துளசி? அப்படியா இருக்க! ஏன்? சொல்லு! எங்களுக்கு எப்பவாவது பார்க்கறதுனால தெரிய வாய்ப்புகள் குறைவு. உனக்கு தான் தெரியணும்! அப்படி இருக்கா!” என்றார்.

“எனக்கு தெரியலை, நான் எப்பவும் போல தான் இருக்கேன்!” என்றாள்.

“துளசி மனசை உற்சாகமா வெச்சிக்கோ, இப்ப நீ எப்படி இருந்தாலும் அது உன் குழந்தைகிட்ட பரிமளிக்கும். நல்லா சாப்பிடு, நல்லா தூங்கு, மனசை சந்தோஷமா, உற்சாகமா வெச்சிக்கோ, இப்படி இருந்தா இந்த உலகத்துக்கு உன் குழந்தை வரும் போது அதுவும் உற்சாகமில்லாம இருக்கும்”

“ஏதாவது உனக்கு மன வருத்தம் இருக்கா, குழந்தை நல்லா தான் இருக்கு. ஆனா போன தடவை நீ வந்ததுக்கும் இப்போதைக்கும் கொஞ்சம் கூட உடல் எடை ஏறலை. அதையும் விட ரெண்டு கிலோ குறைஞ்சிருக்க, இது நல்லதுக்கில்லை” என பேசிக் கொண்டே செல்ல,

அவ்வளவு தான் அகிலாண்டேஸ்வரி வீட்டிற்கு வந்ததும் திருவிடம் எல்லாம் ஒப்பித்து, “நீ இடம் வாங்குவியோ, எதையாவது கட்டுவியோ, எனக்கு தெரியாது, ஆனா துளசி நல்ல படியா பெத்து குழந்தையை குடுக்கணும்” என்று அவனை மிரட்டினார்.

திரு என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாய் இருக்க, “நீ ரொம்ப அவகிட்ட கோபப் படறியோ?”

“இல்லையேம்மா, இந்த கொஞ்சம் நாளா நான் சண்டையே போடலை”

“அப்போ அதுக்கு முன்ன போட்டியா? அடேய் குழந்தை நல்ல படியா இந்த பூமிக்கு வரணும். அதுவரைக்கும் நீ அவ கிட்ட சண்டை போட்ட பிச்சுபுடுவேன்”

“நானே எதுவும் சொல்றதில்லை இப்போல்லாம் அவளை. இப்போ அவ உடல் ஆரோக்கியம் மட்டுமில்லை மன ஆரோக்யமும் முக்கியம், எனக்கு குறிப்பா சொல்ல தெரியலை. ஆனா அவ முன்ன மாதிரி இல்லை, எதுலயும் கவனமில்லை, இப்போ ஷோபனா கொஞ்சம் வீட்டை கவனிக்கறதால வேலை ஆகுது” என்று திருவை வருத்தெடுத்தார். இதெல்லாம் துளசிக்கு தெரியாமல் தான் பேசினார்.

துளசிக்கும் இப்போது திரு நிறைய மாறி இருக்கிறான் என்று புரிந்தது. தானும் அதற்கு தக்கார் போல பேசவேண்டும் பழகவேண்டும் என்று நினைத்தாலும் அதை செயல் படுத்த முடியவில்லை. இப்போது இருக்கும் அவளின் கர்ப்ப கால மாற்றமா? இல்லை முன்பிருந்து இத்தனை வருடங்களாக இருந்த வாழ்க்கையினால் வந்த தயக்கமா? அவளுக்கே தெரியவில்லை.

அவள் ஏங்கி இருந்த வாழ்க்கை அவளின் கையருகில் ஆனால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

நிறைய இது குறித்து யோசிக்கும் போது, என்ன செய்வது என்று தெரியாத நிலை வரும் போது, ஒரு சோர்வு வந்து விடுகிறது அவளுக்குள். அதுவும் இன்று டாக்டர் "நீ இப்படி இருந்தால் அது உன் குழந்தைக்கும் அப்படி தான் சோர்வை கொடுக்கும்" என்று சொல்லிவிட, ஒரு பயம் மனதில் சேர்ந்து கொண்டது.

மனது என்னவோ முழு நேரமும் பிசைந்தது. சகஜ பேச்சுக்கள் எல்லாம் எப்போதும் இருந்ததில்லை என்பதால் திருவிடம் இதை பகிர வரவில்லை. அவளின் பயம் அவளோடே.

திருவிற்கும் அவளை உற்சாகமாக வைக்க என்ன செய்வது என்று தெரியவில்லை. அவனின் ஒற்றை அணைப்பு எல்லாம் மீட்டெடுக்கும் என்று தெரியவில்லை.

துளசி எடை குறைந்து விட்டாள் என்று அவளின் உணவிலும் அகிலாண்டேஸ்வரியும் திருவும் அக்கறை எடுக்க ஆரம்பித்தனர்.

அம்மா திட்டிய யோசனையோடே திரு படுத்திருந்தான். உறக்கம் வரவில்லை. "நான் தான் இப்போ அவளோட சண்டையே போடலையே, அப்புறம் ஏன் இப்படி இருக்கா?" என்ற யோசனை மட்டுமே.

நீண்ட நேரம் உறக்கம் வராது போக, வெறுமனே படுத்திருந்தான். பாத்ரூமில் தண்ணீர் விழும் சத்தம் அந்த இரவின் மடியில் நன்கு கேட்க, துளசியாக தான் இருக்கும் என்று அனுமானித்தவன், எழுந்து மகளும் மனைவியும் படுக்கும் உள் ரூம் சென்றான்.

ஆம்! மீனாக்ஷி மட்டும் இருக்க, திடீரென்று கதவை திறந்து வெளியே வரும் துளசி பயந்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்து, "துளசி, உள்ளயா இருக்க" என்று லேசாக கதவை தட்டி கேட்டான்.

"ஆமாம், இருக்கேன்" என்று துளசியின் குரல் கேட்ட பிறகு சென்று படுக்கையில் அமர்ந்து கொண்டான்.

வெகுநேரம் கழித்தே துளசி வர, அவளை பார்த்ததும் எதோ சரியில்லை என்று தோன்ற, "ஏன் இவ்வளவு நேரம் துளசி, என்ன பண்ணுது?" என்றான் கவலையாக.

உடல் உபாதைகளை பற்றி மிகவும் சகஜமான பேச்சுக்கள் இதுவரை இருந்ததில்லை. துளசி தயங்க,

"லூஸ் மோஷன் ஆகுதா?" என்றான்.

"இல்லையில்லை" என்றவள் வேறு சொல்லாமல் ஒரு புறம் அமர்ந்து கொண்டாள்.

சட்டென்று கோபம் எட்டிப் பார்த்தது. முயன்று "கோபப்படாதே" என்று சொல்லிக் கொண்டவன், "என்ன பண்ணுது துளசி? ஏற்கனவே வெயிட் எல்லாம்

குறைஞ்சிருக்க போல, சொல்லு, சொன்னாதானே தெரியும். இல்லை, அம்மாவை கூப்பிடவா?'' என்று எழுந்தான்.

''வேண்டாம், வேண்டாம்'' என்று சொன்னவள்,

''சூடு பிடிச்சிடுச்சு, அது தான் ஒரு மாதிரி இருக்கு'' என்று தயங்கித் தயங்கி சொல்லவும்,

''என்ன பண்ணினா சரியாகும்?'' என்றான் அவளிடமே.

''மோர் இல்லை, ஜூஸ் மாதிரி எதுவும் வேண்டாம், கொஞ்சம் பால் குடிச்சு பார்க்கிறேன்'' என்று சமையல் அறை செல்ல, அவளுடனே சென்றான்.

ஃபிரிட்ஜில் இருந்து துளசி பால் எடுத்து காய்ச்சும் வரை கதவில் சாய்ந்து அவளை பார்த்து நின்றிருந்தான். இதற்கு பால் எடுக்கும் போதே ''நான் பால் காய்ச்சட்டுமா?'' என்று கேட்டும் இருந்தான்.

சமையலறையும் திருவும் எதிர் எதிர் துருவங்கள்!

கேட்டது அவனா என்ற சிந்தனை இருந்த போதும் அமைதியாய் அவனை தலையசைத்து மறுத்தவள், அவளே செய்தாள்.

அவளுக்கு மட்டுமல்ல, அவனுக்கும் கூட சேர்த்து விட்டவள், அவனுக்கு ஒரு டம்பளர் கொடுக்க, "முதல்ல நீ குடி" என்றான்.

அவள் அவளின் பாலை சூடு குறையும் வரை ஆற்ற ஆரம்பிக்க,

"எதுக்கு இப்படி ஆத்துற" என்று திரு கேட்கவும்,

"சூடா இருக்கக் கூடாது" என்று துளசி சொன்னாள்.

"கொடு" என்றவன் வாங்கி அதனை ஆற்ற ஆரம்பித்தான்.

திருவிற்கு இதெல்லாம் கூட வருமா என்று துளசி பார்த்திருக்க, அவள் நின்று கொண்டே தன்னை பார்த்திருப்பதை புரிந்தவன், கையினில் இருந்த பாலை கீழே வைத்து, அவளின் அருகினில் வந்தவன், அவள் என்ன என்று உணரும் முன்னே அவளின் இடையில் இரு பக்கமும் கை கொடுத்து தூக்கி சமையல் மேடையில் அமரவைத்தான்.

சிறு சிரமமும் இன்றி இடையில் கை கொடுத்து, எதோ குழந்தையை தூக்குவது போல அனாயாசமாக தூக்கியதை உணர்ந்த துளசி "ஆங்" எனப் பார்த்திருந்தாள்.

"என்ன அப்படி பார்க்கற துளசி?" என்று பால் ஆற்றியபடியே கேட்க,

துளசிக்கு நடப்பது எதுவும் நம்ப முடியவில்லை!

இப்படியான பொழுதுகள் எல்லாம் அவள் வாழ்வில் வரும் என்று நினைத்தது இல்லை.

பார்த்தது பார்த்தபடியே இருந்தாள்.

“என்ன துளசி?” என்றான் இப்போது திரும்பி அவளை பார்த்து.

என்ன சொல்வது என்று தெரியாமல், “ரொம்ப ஈசியா தூக்கிட்டீங்க ரெண்டு கைல” என்று சொல்ல,

“ஒன்னு நீ வெயிட் குறைவா இருக்கணும், இல்லை நான் ஸ்ட்ராங்கா இருக்கணும். எது உன்னோட சாய்ஸ்?” என்றான்.

திருவிற்கு இவ்வளவு இலகுவாக கூடப் பேச வருமா என்ற ஒரு பிரமிப்பில் இருந்தாள் துளசி.

அந்த பிரமிப்பு அகலும் முன்னே “குடி” என்று அவளின் கையினில் கொடுத்து அவனும் திட்டில் சாய்ந்த படி அவனதை அருந்த ஆரம்பித்தான்.

துளசிக்கு அவளின் உள் இருந்த உடல் சூட்டின் அவஸ்தை கூட குறைந்தது போலத் தோன்றியது.

மெதுவாக அவள் பருக, அவளையே தான் பார்த்திருந்தான் திரு. அந்த பார்வையில் அவளின் கையினில் இருந்த டம்பளர் கூட நடுங்கியது.

“சுடுதா என்ன?” என்று அவளின் கை பிடிக்க,

“இல்லையில்லை” என்ற தலையசைப்பு மட்டும் துளசியிடம்.

“கையெல்லாம் நடுங்குது, என்ன பண்ணுது துளசி?” என்றான் கவலையாக.

“உன் பார்வையின் தாக்கம்!” என்றா சொல்ல முடியும், “ஒன்றுமில்லை” என்பது போல தலையசைத்தவள், மளமளவென்று அதனை குடித்தாள்.

எந்த கேள்வி கேட்டாலும் தலையசைப்பு மட்டுமே வருவதை பார்த்த திரு,

“நான் உன்கிட்ட முன்ன பேசினதில்லைன்னு இப்போ நீ இப்படி பண்றியா துளசி?” என்றான் ஆழ்ந்த குரலில்.

அவனின் கேள்வியில் அதுவரை இருந்த துளசியின் முகமே மாறிவிட்டது.

“எப்படி பண்றேன்?” என்றாள்.

“நான் கேட்டா பதில் பேச மாட்டேங்கற” என்றான் சிறுபிள்ளை போல்.

அவனின் முக சுணக்கம் மனதை பிசைய “அது, அது, எனக்கு சட்டுன்னு வர்றதில்லை!”

“ஏன் வர்றதில்லை?” என்ற கேட்ட திருவின் குரலில் நீ பதில் சொல்லியே ஆகவேண்டும் என்ற பிடிவாதம் அளவுக்கு அதிகமாய் இருந்தது.

“நிறைய லைஃப்ல மிஸ் பண்ணிட்டோம் துளசி. இன்னும் இன்னும் மிஸ் பண்ணவேண்டாம்” என்று சொல்லி கைகளை கட்டி அவள் அமர்திருந்ததற்கு பக்கவாட்டு சமையல் திட்டில் இன்னும் வாகாக பொருந்தி நின்று கொண்டான்.

துளசி அமைதியாய் இருக்க, திருவும் அமைதியாகினான். ஆனால் நீ பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற கூர்மையான பார்வை அவளை துளைத்து எடுத்தது.

தயக்கமாய் ஆரம்பித்தாள், “நான் இங்க கல்யாணம் பண்ணி வந்த பிறகு என்னோட பேச்சு ரொம்ப குறைவு தானே! யாரோடவும் அப்படி சகஜமா பேசறதேயில்லைல்ல மீனாவைத் தவிர, அதான் வர மாட்டேங்குது. அதுவும் உங்க கிட்ட வரவே மாட்டேங்குது” என்றாள்.

“நான் தான் உன்னோட பேசலை ஓகே, ஆனா பாக்கி எல்லோர் கிட்டயும் நீ ஏன் சகஜமா பேசலை? அம்மா எல்லாம் பேசினா வாயே மூட மாட்டாங்க. சரி விடு, எங்க ஆளுங்களை விடு! உன்னோட அப்பா, அம்மா, தம்பி, தங்கைன்னு யார்கிட்டயும் நீ சகஜமா

பேசி நான் பார்த்ததில்லை! ஏன்?'' என்ற கேள்வியோடு நின்றான்.

''நீங்க என்கிட்டே பேச மாட்டீங்க இல்லையா? அப்போ எனக்கு யார் கூடவும் பேசப் பிடிக்காம போயிடுச்சு'' என்றாள் மெல்லிய குரலில் அவனை பார்க்காமல் எங்கோ பார்த்து.

அவளுடைய இத்தனை வருடங்களின் ஏக்கம் எல்லாம் அந்த குரலில் தெரிய, என்ன பேசுவது என்று கூடத் தெரியாமல் திரு ஸ்தம்பித்து நின்றான்.

''உங்களை பெருசா தப்பு சொல்ல முடியாது! உங்களை பேச வைக்கணும்னு நினைச்சிருந்தா கண்டிப்பா என்னால முடிஞ்சிருக்கும். நீங்க சொன்னீங்க இல்லையா, நான் கொஞ்சறதே இல்லைன்னு, நான் கொஞ்சியிருந்தா எல்லாம் சில வருஷத்துக்கு முன்னமே கூட சரியாகியிருக்கலாம். ஆனா எனக்கு அது பிடிக்கலை!'' என்றாள் மெல்லிய தெளிவான குரலில்.

''ஏன்னா எனக்கு தெரியும், நீங்க யாரையோ லவ் பண்ணுனீங்க. என்கிட்டையும் அதை சொன்னீங்க, எல்லாம் எனக்கு தெரியும். ஒரு கட்டாயத்துல தான் நம்ம கல்யாணம் நடந்தது. அதை சரி பண்ண நானா முயற்சி செய்யறது எனக்கு தப்பு மாதிரி தோனுச்சு!''

“எனக்கு நானே சொல்லிக்கிட்டது, நான் இல்லைன்னா வேற யாரையாவது உங்க அப்பா உங்களுக்கு கல்யாணம் பண்ணி வெச்சிருப்பார்ன்னு. ஒரு வேளை நான் மறுத்திருந்தா, ஏதாவது செஞ்சு அந்த பொண்ணை கூட நீங்க கல்யாணம் செஞ்சிருக்கலாம், எதுவேணா நடந்திருக்கலாம்! எப்பவும் பைக்ல சுத்துவீங்க, ஸ்கூல் போகும் போது வரும் போது எல்லாம் பார்த்திருக்கேன். எங்கப்பாவோட மொதலாளி வீட்டு பையன்! நீங்க, உங்க வீடு, உங்க வசதி வாய்ப்புகள், நான் கிட்ட நெருங்க முடியாத ஒருத்தங்க. அந்த வயசுல காதல் எல்லாம் சொல்ல முடியாது. அது ஒரு ஈர்ப்பு. எட்ட முடியாத கனவு. உங்க மேல, உங்க வீட்டு மேல, எங்க வீடு மாதிரி கஷ்ட ஜீவனம் இல்லாம, உங்க வசதியான வாழ்க்கை முறைல எல்லாம். திடீர்ன்னு என்கிட்ட அது வரும் போது, நான் எப்படி அதை வேண்டாம்னு சொல்வேன். எங்கப்பா சொன்ன போது எங்கம்மா கூட சின்ன பொண்ணு வேண்டாம்னு முதல்ல ரொம்ப தடுத்தாங்க. என்னோட இஷ்டம் பார்த்து தான் சரின்னு சொன்னாங்க”

“கல்யாணம் செஞ்சு வந்துட்டாலும், வேற ஒரு பொண்ணை பிடிச்சிருக்கு சொல்றவங்களை நீ எப்படி கல்யாணம் பண்ணுவ, அவர், இந்த வீடு, வசதி வாய்ப்பு எல்லாம் உன்னை அப்படி வசியப் படுத்துதா, நீ செஞ்சது தப்புன்னு ஒரு நினைப்பு இருந்திட்டே இருந்தது!”

“நான் ரொம்ப சுயநலவாதியா தோணிச்சு. உங்க கிட்ட மட்டுமில்லை, இங்க வீட்ல யார்கிட்டையும் கூட என்னோட உறவை நான் சரி படுத்திக்கணும்ன்னு தோணலை. நீங்களா வந்தா வாழ்க்கை சரியாகட்டும், இல்லை இப்படியே போகட்டும் தான் என்னோட எண்ணம். எப்பவும் நீங்க எப்போ வருவீங்க தான் பார்த்து இருப்பேன். ”

“ஒரு கட்டத்துல, இனி சரியாகாதுன்னு நினைச்சு, உங்களுக்கு தோணும் போது நீங்க என் பக்கத்துல வர்றது மட்டும் போதும்னு நினைச்சு இருந்தேன். இப்போ திடீர்ன்னு எல்லாம் நீங்க எதிர்பார்க்க, எனக்கு அது வரமாட்டேங்குது!” என்று குரலில் முகத்தில் ஒரு இனம் காண முடியாத பாவனையோடு தவிப்போடு அவள் பேசப் பேச நொடியில் அவளின் அருகில் வந்தவன் அவளை இறுக அணைத்திருந்தான்.

அவளின் தவிப்பு அவனை தவிக்க வைத்தது!

அவனின் அணைப்பிலேயே பேசினாள், “இதெல்லாம் யோசிக்க, யோசிக்க, எனக்கு, எனக்கு...” என்று அவள் தடுமாற,

“ஷ், பேசாத துளசி” என்று அவளின் முதுகில் மெதுவாய் குழந்தையை தட்டி கொடுப்பது போல தட்டிக் கொடுத்தவன்,

“எது நடந்திருந்தாலும் நடந்ததாவே இருக்கட்டும் எதுவும் யோசிக்காதே! நீ என் பக்கத்துல வரவேண்டாம், கொஞ்ச வேண்டாம், எதுவும் வேண்டாம். எப்பவும் போலவே இரு, எப்போவாவது வர முடிஞ்சா வா, இல்லைன்னா கூட ஒன்னுமில்லை, நானே வர்றேன், நானே உன்னை கொஞ்சிக்குவேன். உனக்கு எந்த டென்ஷனும் வேண்டாம்! புரியுதா?” என்றவன்,

துளசியை விலக்கி அவளின் முகம் பார்த்தான், துளசியும் அவனை தான் பார்த்தாள், அவளின் பார்வை, முகம், இன்னும் ஏதோ அவனிடம் சொல்ல தவிக்கும் உதடுகள், எல்லாம் அவனை எதோ செய்ய,

அந்த உதடுகளில் அழுத்தமாக, ஆழமாக, சத்தமின்றி முத்தமிட்டான்!

சமையல் மேடையில் துளசி அமர்ந்திருக்க, திரு நின்ற படியே முத்தமிட்ட போதும், உதடுகள் அந்த வேலையில் இருந்த போதும் கைகள் துளசியின் கைகளை தேடி அவனை சுற்றி அவனே போட்டுக் கொண்டான்.

அவனாக போட்ட பிறகு துளசியின் கைகள் அவனை சற்று இறுக்கிப் பிடிக்க, இப்போது திருவின் உதடுகள் அவளை இன்னும் இறுக்கிப் பிடித்தன. அந்த இறுக்கம் துளசிக்கு மிகவும் தேவையாய் இருக்க, அவளுள் இருந்த சஞ்சலங்கள் குறைந்து ஒரு பிடிப்பு, ஒரு தைரியம் வர,

முத்தத்தை திரு முடிக்க நினைக்க, துளசி முடிக்க விடவில்லை.

ஆம்! திரு விலகி துளசியின் முகம் பார்க்க, அதில் தெரிந்த உணர்வுகள், அந்த பார்வை, அதில் தெரிந்தது யாசிப்பா, தேவையா, வேட்கையா, ஏக்கமா, எதோ ஒன்று, அவனை முடிக்க விடாமல் மீண்டும் முத்தமிட வைத்தது.

திரு மொத்தத்தையும் முத்தத்தால் காண்பிக்க, மொத்தமாக வீழ்ந்து கொண்டிருந்தாள் துளசி!

அத்தியாயம் இருபத்தி ஒன்று

திரு துளசியை கண்ணுக்குள் வைத்து தாங்கினான் என்று சொல்லவே முடியாது. ஏனென்றால் அவர்கள் முந்தைய இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி இருந்தனர். அதாகப்பட்டது முன்பு போல காலையில் எழுந்து திரு ஷட்டில் ப்ராக்டிஸ் சென்றான். ஆனால் நேரமாக வந்து மீனாக்ஷியை அவனே பள்ளிக்கு கொண்டு விட்டு வந்து குளித்து உண்டு மில்லுக்கு கிளம்பினான். மதியம் வருவான், உண்பான், கிளம்புவான். மாலை மீனாக்ஷியை விட வருவான், காஃபி குடிப்பான், கிளம்புவான். இரவு வருவான், உண்பான், உறங்குவான்.

என்ன துளசியின் முகம் பார்த்து பத்தி சொல்ல ஆரம்பித்து இருந்தான். ஆனால் துளசி கேள்வி கேட்டால் தானே.

ஆம்! பேச்சுக்கள் அதிகம் இருவருக்குள்ளும் இன்னும் வரவில்லை, அவசியமான பேச்சுக்கள் மட்டுமே!

ஆனாலும் கண்ணுக்குள் வைத்து தான் தாங்கினான். இதுவரை முகம் பார்க்காமல் காலையில் துளசியிடம் வாங்கிய காஃபிக்கும் இப்போது பளிச்சென்ற புன்னகையோடு துளசியிடம் வாங்கும் காஃபிக்கும் அவ்வளவு வித்தியாசம். அந்த புன்னகையிலேயே துளசியின் அன்றைய நாள் அழகாகிவிடும். கனிவான பேச்சுக்கள் திருவிற்கு வரவிட்டாலும் அந்த அதட்டல்

பேச்சிலேயே தெரியும் கனிவும், அக்கறையும், துளசிக்கு மட்டுமல்ல, வீட்டில் இருக்கும் அனைவருக்கும் புரிந்தது.

மேகநாதனிற்கு பல வருடங்களுக்கு பிறகு அப்படி ஒரு நிம்மதி மனதினுள்!

வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் யாரும் கவனியாதவாரு அவனின் பார்வைகள் துளசியை தொடரும், அது துளசிக்கு அவளையறியாமல் மனதிற்கு ஒரு இதத்தையும் தைரியத்தையும் கொடுத்தது என்றால் மிகையல்ல.

அவ்வபோது "துளசி" என்ற திருவின் குரல் அவன் வீட்டில் இருக்கும் நேரம் எல்லாம் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தது. ஆனால் இன்னும் "என்னங்க" என்றோ "வர்றேங்க" என்ற துளசியின் சத்தமோ ஓங்கி ஒலிக்கவில்லை.

அவனின் அழைப்பிற்கு பதிலாய் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அப்படியே விட்டு வேகமாய் அவன் முன் சென்று நின்று கொள்வாள்.

"எதுக்கு இவ்வளவு வேகமா வர்ற? இதோ வர்றேன்னு ஒரு சத்தம் கொடுக்க வேண்டியது தானே!" என்று திரு கடிந்தாலும் தலையை தலையை ஆட்டுவாள், ஆனாலும் குரல் மட்டும் ஓங்கி ஒலிக்கவே ஒலிக்காது. முன்பாவது மகளிடம் ஒலிக்கும் இப்போது அவளிடமும் இல்லை.

மீனாக்ஷி தான் குறும்பே செய்வதில்லையே, திருவின் ஆதிக்கம் மீனாக்ஷியிடம் அதிகம் இருக்க, கொஞ்சம் பொறுப்பாய் மாறிக் கொண்டு இருந்தாள். இயல்பிலேயே புத்திசாலி, படிப்பில் கவனமில்லாமல் இருந்தாள்.

இப்போது திரு அவளை சிறிது சிறிதாக மாற்றிக் கொண்டு இருந்தான். அவனுடைய போதனைகளும் அவனை போலவே வித்தியாசமானவை.

“நான் உன்னை ஃபர்ஸ்ட் வான்னு சொல்லலை. ஆனா நாம ஃபெயில் ஆகக் கூடாது. உன் கிளாஸ்ல நாற்பது பேர் இருக்காங்களா, நீ அதுல பெஸ்டா வரணும்னு கிடையாது. ஆனா நீ கிளாஸ் ஒரு கவனிக்கப்படற ஆளா இருக்கணும். முன்னையும் அப்படி தான் இருந்த, ஆனா அது வேற அது உன்னோட டல்நெஸ்னால, நீ பண்ணின கலாட்டானால. இனி அப்படி இருக்கக் கூடாது” என பேசினான். சமயம் கிடைக்கும் போதெல்லாம் வேறு வேறு வார்த்தைகளை கொண்டு.

மீனாக்ஷிக்கு திருவின் மீது என்ன கோபம்? அம்மாவிடம் அவன் நடந்து கொண்ட முறை தான், இப்போது திரு துளசியை திட்டுவதில்லை என்பது மட்டுமே மீனாக்ஷிக்கு போதுமானது. அப்பாவிடம் ஃபிரண்ட் ஆகிவிட்டாள். ஆம்! ஃபிரண்ட் தான் ஆகிவிட்டாள். அப்படி தான் திரு மீனாக்ஷியை

நடத்தினான். கண்டிப்பு நிச்சயம் இருந்தது, ஆனால் முன்பு போல அதட்டல் உருட்டல் மிரட்டல் இல்லை.

திருவின் நிம்மதியான வாழ்க்கை அவனின் முரட்டுத்தனத்தை சற்று குறைக்க ஆரம்பித்தது.

அதனையும் விட திரு துளசியின் வாழ்வில் நடந்த மிக முக்கியமான விஷயம் இருவரும் ஒரே படுக்கையை பகிர்ந்து கொண்டது. ஆம், திருமணமான நாள் முதல் அது இருந்தது இல்லை. எப்போதும் அவனின் ரூம் உள்ளே ஒரு ரூம் என்பதால் இவன் வெளியில் இருந்த ரூமில் தான் படுத்துக் கொள்வான்.

அவனின் தேவைகளுக்கு மட்டுமே உள்ளே செல்பவன், பின் வெளியில் வந்து படுத்துக் கொள்வான். இந்த சில வருடங்களாக தான் அவனுக்கு கட்டில் மெத்தை எல்லாம்.

அதற்கு முன் வெறும் தரை தான் அவனின் படுக்கை. துளசியை கீழே படுத்துக் கொள் என்று சொல்லியிருந்தாலும் அவள் செய்திருப்பாள் ஆனால் சொன்னதில்லை.

துளசி கூட சில முறை "நீங்க இங்க படுத்துக்கங்க, நான் கீழ படுத்துக்கறேன்" என்று சொல்லியிருக்கின்றாள், ஆனால் சில முறை தான். அதன் பிறகு அவளின் கர்ப்பம் பின்னே குழந்தை, அதனால் அவள் மேலேயே உபயோகித்து கொள்ள,

இவன் முன் ரூமில் வெறும் தரையில்! வெறும் தரையில் தான் எப்போதும் அவனின் உறக்கம். மீனாக்ஷிக்கு விவரம் தெரிய ஆரம்பித்த பிறகு "அப்பா ஏன் கீழ படுக்கறார், பெட் கூட இல்லை" என்று கேட்ட பிறகு துளசி தான் "கீழ படுக்காதீங்க, மீனாக்ஷி கேள்வி கேட்கறா" என்ற பிறகு தான் கட்டில் மெத்தை எல்லாம்.

மீனாக்ஷியுடன் ஃபிரண்ட் ஆனதும் திரு செய்த முதல் வேலை, "நீ இனிமே தனியா படுக்கணும், நீ வளர்ந்துட்ட, அம்மாவை எப்பவும் தேடக் கூடாது" என அதையும் இதையும் சொல்லி துளசியை தன்னோடு அழைத்துக் கொண்டான்.

அதை செய்து முடிப்பதற்குள் அவன் பட்ட பாடு!! ஷப்பா!!!

துளசியிடம் தான் முதலில் சொன்னான், "நீ இங்கே என்னோட படுத்துக்கோ" என்று.

"மீனாக்ஷி விட மாட்டா என்னோட தான் படுக்கணும்ன்னு சொல்வா"

"நீ சொல்லு, நீ பெரிய பொண்ணாகிட்ட தனியா படுக்கணும்னு"

"நானா.. அதெல்லாம் முடியாது! என்னை நிறைய கேள்வி கேட்பா"

“இப்போ நீ என்னோட படுத்துக்குவியாயா? மாட்டியா?” என்று கோபமாக ஆரம்பித்தவன், “ஏற்கனவே நிறைய வருஷம் போச்சு” ஆதகங்கமாக முடித்தான்.

“நானா வேண்டாம்னு சொன்னேன்” என்றெல்லாம் துளசி சண்டையிடவெல்லாம் இல்லை.

“என்னால அவ கிட்ட நான் அப்பாவோட படுத்துக்கறேன்னு சொல்ல முடியுமா? நானெல்லாம் சொல்லவே மாட்டேன்!”.

“அப்படி சொல்லாத, நீ இனிமே தனியா படுக்கணும்னு சொல்லு!”

“ஏதாவது சொதப்பிட்டேன்னா, அவ நிறைய கேள்வி கேட்பா, அப்புறம் அந்த சான்சே எடுக்க முடியாது” என்று துளசி கவலையாக சொன்ன விதத்தில்,

“சரி! நானே பார்த்துக்கறேன்” என்று தான் திரு களத்தில் இறங்கினான்.

செய்து முடிப்பதற்குள் எப்படி மீனாட்சியிடம் பேச என்று எத்தனை ஒத்திகை! எத்தனை வார்த்தை கோர்வைகள்! ஷப்பா எப்படியோ செய்து முடித்து விட்டான்!

இதுவரை அவனின் வாழ்க்கையில் செய்த சாதனை என்ன என்று கேட்டால் இதனை தான் சொல்லுவான்! ஆனால் மனதிற்குள்!

இதோ துளசி அவனின் அருகில், அவளின் சோர்வு குறைந்து விட்டது. ஒரு அமைதி அவளிடம் வந்து விட்டது. மனது அதையும் இதையும் நினைக்கவில்லை. ஆனாலும் திருவிற்கு போதவில்லை, அவளிடம் இன்னும் ஒரு கலகலப்பை எதிர்பார்த்தான்.

இந்த யோசனை மனதில் தோன்றும் போதே துளசியிடம் அசைவு தெரிய, அவளை பார்த்திருந்தான்.

விழிப்பு வரவும் துளசியும் அவனை தான் பார்த்தாள் "தூங்கலையா?" என்றவளிடம்,

"பன்னண்டு மணி தான் ஆகுது. இன்னும் தூக்கம் வரலை, இன்னும் கொஞ்சம் நேரம் ஆகும் தூங்க!" என்றான்.

துளசி எழுந்து அமர, அவனும் எழுந்து அமர்ந்தான்!

"எப்பவுமே இப்படி தான் தூங்குவீங்களா? எனக்கு அது கூட தெரியலை! பத்து பத்தரைக்கே தூங்கிடுவேன்!" என்று கவலையாகப் பேச,

"நான் தூங்கலைன்றது எப்படி தெரியும்! நான் தான் உன்னை என் பக்கத்துலயே விடலையே!"

“இருந்தாலும் தெரிஞ்சிருக்கணும் இல்லையா?”

“எப்படி தெரியும்? நான் தான் தெரியவிட்டதே இல்லையே, டீ வீ கூட பதினோரு மணிகெல்லாம் ஆஃப் பண்ணிடுவேன். அப்புறம் சும்மா தான் படுத்திருப்பேன். ஆனா தூக்கம் மட்டும் சீக்கிரத்துல வராது!

“ஏன் வராது?” என்று துளசி கேட்க,

“வேண்டாம்! நாம் அதை பத்தி பேசவே வேண்டாம்! பழசு எதுவுமே பேச வேண்டாம்! இனி எப்படி சீக்கிரம் தூங்கறது மட்டும் யோசிப்போம். இப்போவே எனக்கு முப்பத்தி நாலு வயசு, இப்போ தான் ஒரு குழந்தை பெத்துக்கப் போறேன், பையனோ பொண்ணோ தெரியாது, எப்படியும் ஒரு இருபத்து அஞ்சு வருஷம் நான் ஆரோக்யமா இருக்கணும். அதுக்கு நல்ல தூக்கம், நல்ல சாப்பாடு முக்கியம்! சாப்பாடு எனக்கு குறையில்லை எப்பவும் நீ பார்த்துக்கற , தூக்கம் அது சீக்கிரம் தூங்கி பழகணும்” என்றவன் படுத்துக் கொண்டான்.

துளசி அவன் பேசும் வரை அவனையே பார்த்திருந்தவள், அவன் படுத்துக் கொண்டதும் எழுந்து பாத்ரூம் சென்று வந்தாள். இப்போது ஐந்தாவது மாதம் வயிறு கொஞ்சம் நன்றாக தெரிய ஆரம்பித்து இருந்தது.

பின் சென்று மீனாக்ஷியை பார்த்து அவளுக்கு நன்றாக போர்வையை போர்த்தி விட்டு வந்தாள்.

வந்தவள் திருவைப் பார்க்க, அவன் நேராக படுத்து கண்களை மூடி இருந்தான். ஆனால் உறங்கவில்லை என்று புரிந்தது. கையை தலைக்கு முட்டுக் கொடுத்து இருந்தான்.

இந்த ஒரு வாரமாக சேர்ந்து உறங்கினாலும் பக்கத்தில் மட்டுமே படுத்தனர் அவ்வளவே தான்! உடல்கள் கூட உரசவில்லை. துளசியாக அருகில் செல்ல நினைத்தாலும் அந்த உரிமை வரவில்லை, எதோ ஒரு தயக்கம் இருந்தது.

“ஒரு வாரமாக அவனின் பக்கத்தில் உறங்குகிறேன், ஆனால் அவன் எப்போது உறங்குகிறான் என்று கூடத் தெரியவில்லை. அவ்வளவு நிம்மதியான உறக்கம் அவன் உனக்கு கொடுக்க, நீ என்ன செய்கிறாய்” என்ற யோசனை தான்.

திருவிற்கு ஒரு நிம்மதியான உறக்கம் கொடுத்தே ஆகவேண்டும் என்று புரிய, படுத்தவள் நெருங்கி உடல் உரச படுக்க, திரு கைகளை எடுத்து தலையை மட்டும் திருப்பி “என்ன துளசி?” என்றான் அவளின் செய்கையில்.

“என்ன, என்ன?” என்றாள் துளசி ஒரு புன்னகையுடன்.

அந்த மங்கிய ஒளியில் துளசியின் சோபையான புன்னகை அப்படி திருவை வசீகரித்தது.

“அதுதான் நானும் கேட்கறேன், என்ன?”

“ஒன்னுமில்லையே” என்ற துளசியின் முகத்தினில் புன்னகை விரிய,

“ஒன்னுமில்லையா! ம்ம்ம், யோசிக்கணும்? இப்படி நீ என்னை இடிச்சிட்டு படுததேயில்லையே!”

“நான் ஒன்னும் இடிச்சிட்டு படுக்கலை, ஒட்டிக்கிட்டு தான் படுத்திருக்கேன்!” என்று இரு புறம் புருவம் உயர்த்தி பாவனையாக துளசி சொன்ன விதத்தில் திருவின் இதயம் ஒரு நொடி நின்று தான் துடித்தது.

யார் சொன்னது பருவத்தில் தான் காதல் வருமென்று, பருவத்தில் தான் காதல் அதிகரிக்குமென்று, பருவத்தில் தான் பித்தாக்கும் என்று! திருவை கேட்டால் இல்லவே இல்லை என்பான்.

“ம்ம், ஒட்டிக்கிட்டு படுத்து என்ன பண்ண? கட்டிக்கிட்டு படுத்தா கூட பரவாயில்லை!” என்று மெல்ல அவனுக்கு அவனே பேசிக் கொள்வது போல முனகினான்.

“ஒட்டிக்காம எப்படி கட்டிக்கறதாம்?” என்று மெல்லிய குரலில் துளசியும் முனக,

“இப்படி!” என்று திரு திரும்பி அவளை அணைக்க,

“ஒட்டிக்கிட்டு தானே கட்டிட்கிடீங்க!” என்று இன்னும் கிசு கிசுப்பாய் துளசி ரகசியம் பேசினாள்.

“நான் எங்க ஒட்டிக்கிட்டேன், நீ தானே ஒட்டிகிட்ட, நான் கட்டிக்க மட்டும் தானே செஞ்சேன்!” என்றான் அவளைப் போலவே,

“அப்போ சரி, இன்னும் ஒட்டிக்கறேன்!” என்று துளசி அணைப்பிலேயே இன்னும் ஒரு நெருக்கம் கொடுத்தாள்.

“ஷ், துளசி! ஏற்கனவே தூக்கம் வரலை, இன்னும் என்னை தூங்க விடாம நீ செய்யப் போற போல!” என்று பேச,

“ஏன் தூக்கம் வராதாம்?” என்று துளசி கேட்ட போது, அவளின் குரலில் தானாய் ஒரு கொஞ்சல் வந்து அமர்ந்திருந்தது.

“ஒட்டிக்கிட்டு கட்டிக்கிட்டு எப்படி பேசாம படுக்கறதாம்” என்று திருவின் வாய் மொழிக்கு,

“நான் பேசாம படுங்கன்னு எப்போ சொன்னேன்?” என்றாள் சிணுங்கள் குரலில்.

“பேச்சிலயே கொல்றடி என்னை” என்று திரு சொன்ன போது,

“நான் இன்னும் பேசவே ஆரம்பிக்கலையே” என்று துளசி பதில் கொடுக்க,

“ரொம்ப பேசுவியா நீ!” என்றான் திரு.

“ம்ம், ரொம்ப! சின்ன பொண்ணுல!”

“உனக்கு கல்யாணம் ஆகிற வரை” என்று திரு எடுத்துக் கொடுக்க,

“ம்ம்” என்று முனகினாள்.

“நீ எவ்வளவு பேசினாலும் நான் கேட்பேன்” என்று திரு பேச,

“அதெல்லாம் மறந்து போச்சு இப்போ” என்றாள் தயக்கமாக.

“ஞாபகப் படுத்திக்கோ!” என்றான் திருவும் விடாமல்.

“வருமான்னு தெரியலை!”

“எப்படி வராம போகுதுன்னு நான் பார்க்கிறேன்” என்று திரு வாய் மொழி பேசிக் கொண்டே அவளை விட்டு விலகி எழுந்தான்.

என்னவோ என்று துளசி பார்த்திருக்கும் போதே சென்று மீனாக்ஷியின் ரூம் கதவினை தாளிட்டு வர, துளசியின் முகத்தினில் ஒரு விரிந்த புன்னகை!

“சிரிக்கிற நீ!” என்று அவளை செல்லமாய் திட்டிக் கொண்டே வந்தவன்,

“அவ கிட்ட தனியா படுக்கணும்னு சொல்றதுக்குள்ள எவ்வளவு பயந்தேன் தெரியுமா?” என்று முறைத்தான்.

அவனின் பாவனைகளில் துளசிக்கு சிரிப்பு வந்து விட சிரித்து விட்டாள்.

“பேச்சை மட்டுமில்ல சிரிக்கக் கூட மறந்துட்ட போல” என்று சொல்லிக் கொண்டே திரு அருகினில் வர,

துளசி பேசவேயில்லை! அவளின் பார்வை எல்லாம் கணவன் மீது மட்டுமே, “என்னுடைய வாழ்க்கை மாறிவிட்டது” என்ற எண்ணம், அது கொடுத்த உவகை கண்களில் கசிய, அதனைக் கொண்டே கணவனை காண,

“பேச்சுல மட்டுமில்ல பார்வைல கூட கொல்லபோறேன்னு சொல்றயா” என்று சொல்லிக் கொண்டே திரு நெருங்கியிருக்க,

கணவன் தொடுமுன்னே அவனின் தொடுகையை எதிர்பார்த்து துளசியின் கண்கள் மயக்கத்தில் மூடிக் கொண்டது.

திரு அவளை இதமாக அணைத்து படுத்தான். அந்த அணைப்பே துளசிக்கு சொல்லியது அவனுக்கே அதற்கு மேல் வேறு எந்த எண்ணமும் இல்லை என்று.

அவளை சுற்றி இருந்த திருவின் கைகளை துளசி பிடித்துக் கொண்டாள். அந்த பிடிப்பிலேயே ஏன் என்ற

கேள்வி இருக்க "பக்கத்துல வரவே ஒரு வாரம் ஆச்சு, இதுக்கு மேல எல்லாம் இப்போதைக்கு முடியாது!" என்று திரு தன்னிலை விளக்கம் கொடுக்க,

அவனின் புறம் திரும்பிய துளசியின் கண்கள் "ஏன்?" என்ற பார்வையை தாங்கி நின்றது.

"என்னவோ தப்பு மாதிரி ஒரு ஃபீல்" என்று திரு பேச,

"என்ன தப்பு?" என்றாள் புரியாமல் துளசி.

"அது மீனாக்ஷி கிட்ட பேசி உன்னை இங்கே கூப்பிட்டுக்கிட்டேன் இல்லையா அதுக்கு. இது ரொம்ப சென்சிடிவ் விஷயம். இந்த ஏஜ்ல அவகிட்ட இதை பேசும் போது எதுவும் தப்பாகிடக் கூடாதேன்னு ரொம்ப டென்ஷன் ஆகிடுச்சு!"

"இப்போதைய குழந்தைகளுக்கு என்ன தெரியும்? என்ன தெரியாதுன்னு நம்மளால கணிக்க முடியாது! எல்லாம் எல்லா இடத்துலையும் வெளிச்சம் போட்டு காட்டுற தொலைதொடர்ப்பு சாதனங்கள் நிறைய!"

"நீ கன்சீவ் ஆகிட்டன்னு தெரிஞ்ச உடனேயே உன்னை கூட அழைச்சுக்கணும்னு நினைச்சேன், அதுக்கு முன்ன பத்தி பேச வேண்டாம் எனக்கு விருப்பமில்லை, ஆனா இப்போ நினைச்சேன்! முதல் குழந்தை உருவான போது அப்படி ஒன்னும் எனக்கு மெச்சுரிட்டி இல்லை,

வேற சில குழப்பங்கள், ஆனா இப்போ ஒவ்வொரு நொடியும் அனுபவிக்கணும் நினைச்சேன்!”

“கூடவே குழந்தை பிறந்த பிறகு நீ மீனாக்ஷியோட படுக்க முடியாது. ராத்திரில எல்லாம் எழுந்து குழந்தைக்கு ஃபீட் பண்ற மாதிரி இருக்கும், குழந்தை அழும், அது எல்லாம் அவ தூக்கத்தை டிஸ்டர்ப் பண்ணும்! அவ முன்ன உட்கார்ந்து உனக்கு ஃபீட் பண்ண முடியாது! அதையெல்லாம் விட அவ உன்னோட ரொம்ப க்ளோஸ். நீ இல்லாத போது அவ்வளவு கலாட்டா பண்ணிட்டா, ஹப்பா நினைச்சா இப்போ கூட கண்ணை கட்டுது!”

“குழந்தை பிறக்கற அந்த பீரியட்ல அவ உன்கிட்ட இருந்து கொஞ்சம் தள்ளி தான் நிற்கணும். அப்போ இப்போ இருந்தே அவ தனியா படுத்து பழகணும், இதுக்கு எல்லாம் அவ தனியா படுத்து தான் ஆகணும்!”

“அப்புறம் ஏன் கதவை தாள் போட்டீங்க!”

“உன்னை கட்டி பிடிச்சு தூங்க, நாம தூங்கும் போது ஒரு வேளை தூக்கம் முழிச்சு எழுந்து வந்துட்டா”

புன்னகைத்தவள் “தூங்கினா எல்லாம் எழ மாட்டா” என்று துளசி சொல்ல,

“இருந்தாலும் எனக்கு பயம்” என்று திரு சொன்னான்.

துளசியின் முகத்தினில் விரிந்த புன்னகை.

“இந்த மாதிரி இருக்கும் போது நிறைய நிறைய ஆசைகள் இருக்குமாமே உனக்கு எதாவது இருக்கா அப்படி?” என்று திரு கேட்க

“எந்த மாதிரி?” என்று இரு புருவம் உயர்த்தி துளசி வேண்டுமென்றே கேட்டாள்.

அணைப்பில் இருந்து கையை எடுத்து சேலையை விலக்கி அவளின் வெற்றிடையில் கைவைத்தவன் “இப்படி” என மெதுவாக தடவி கொடுத்து, “அசைவு எல்லாம் தெரியுமாமே, எப்போ தெரியும்?” என்றவனின் குரலில் அப்படி ஒரு ஆவல்.

“நானும் அப்போ ரொம்ப சின்ன பொண்ணு தானே, நிறைய வருஷமும் ஆகிடிச்சு! எப்போ தெரியும்னு தெரியலை? டாக்டர் கிட்ட போகும் போது கேட்டுட்டு வர்றேன்” என்றாள் அவனின் வருடலில் மயங்க ஆரம்பித்த மனதை அடக்கி.

“என்ன வேணும் உனக்கு?” என்றான் மீண்டும்.

“நீங்க அந்த இடத்தை என் பேர்ல வாங்க வேண்டாம், உங்க பேர்ல இல்லை மீனா பேர்ல வாங்கலாம் ப்ளீஸ்”

“ம்கூம், உன்னோட இந்த ஆசை நிறைவேறாது, உன் பேர்ல தான் வாங்குவேன்!” என்றான் ஸ்திரமாக.

“ஏன் இவ்வளவு பிடிவாதம்”

“இப்போ முடிவு பண்ணலை, நீ என்னை விட்டு போன போது அம்மா கிட்ட பேசின தானே, அதை அம்மா வந்து என்கிட்டே சொன்ன போதே நான் முடிவு பண்ணினது”

அவனை பார்த்து கொண்டிருந்த துளசியின் கண்களில் ஒரு கலக்கம் எட்டி பார்த்தது.

திரும்ப அவளை அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் அவளின் உடல் தளர அவனின் நெஞ்சில் அவளாக முகம் புதைத்துக் கொண்டு,

“ஏன் அப்படி நினைச்சீங்க, எனக்கு புரியலை?” என்று கேட்டாள்.

“நீ அம்மா கிட்ட சொன்னியாமே, நான் படிக்கலை, வேலைக்கும் போக முடியாது, எனக்கு போக இடமும் கிடையாது, அதனால வந்துடுவேன்னு!”

“அப்போ திரும்ப வந்தா அதுக்காக என்கிட்டே வருவியான்னு எனக்கு கோபம்! கூடவே உன்னோட வாழ்வாதாரத்துக்காக நீ என்னை கூட சார்ந்து இருக்க கூடாதுன்னு நினைச்சேன். அப்போவே முடிவு

பண்ணிட்டேன், நான் உனக்கு செலவுக்கு பணம் கொடுக்காம, உனக்கு தனியா வருமானம் வர்ற மாதிரி பண்ணணும்னு" என்று திரு பேசப் பேச என்ன மாதிரி உணர்ந்தாள் என்று துளசிக்கே புரியவில்லை. பேசிய திரு அவளின் உச்சந்தலையில் ஒரு முத்தம் பத்திதான்.

அவனுள் புதைத்திருந்த முகத்தை விலக்கி அவனை பார்க்க, மிக அருகில் தெரிந்த அவளின் முகத்தை ஒரு சாந்தமான முகத்தோடு பார்த்திருந்தான்.

"எனக்கு உங்களை புரியவேயில்லை" என்று ஆதங்கமாக துளசி சொல்ல,

"வாழ்க்கை முழுசும் இருக்கு புரிஞ்சிக்க! ஆனா புரியணும்னு இல்லவே இல்லை பிடிச்சிருந்தா போதும்! என்றவனின் முகம் அத்தனை அமைதியாய் இருந்தது.

"எனக்கு உங்களை பிடிக்காதா என்ன?" என்று முறுக்கினாள்.

"எப்போ நான் அப்படி சொன்னேன் என்று மின்னலென அவளின் உதடுகள் முத்தம் பதித்து விலகினான்.

"ஆனா அப்போ ரொம்ப கோபப்பட்டீங்க"

"அப்போ ஏன் பட்டேன்னும் தெரியாது! இப்போ ஏன் படலைன்னும் தெரியாது! இனிமே படமாட்டேனான்னும் தெரியாது!"

“எவ்வளவு பட்டாலும் நான் பொருத்துக்குவேன்!” என்றவளிடம்,

“அதுதான் எனக்கு தெரியுமே! அதனால தானே கோபமே வருது!” என்றவனின் பாஷை புரியாமல் விழிக்க,

“அதெல்லாம் விடு, உனக்கு என்ன ஆசை சொல்லு!” என்று மீண்டும் கேட்டான்.

மெதுவாக அவனின் உதடுகளை தொட,

“முத்தமா” என ரகசியம் பேசினான்.

“இல்லை” என்பது போல தலையசைத்தவள் உதடுகளுக்கு மேல் தொட,

அப்போதும் திருவிற்கு புரியவில்லை,

“என்ன?” என்றான்.

“மீசை, நீங்க மீசை வெச்சிக்கங்க!” என துளசி சொல்லவும்,

திருவின் முகம் ஆச்சர்யத்தை காண்பித்தது!

“மீசை வெச்சிக்கங்க, கல்யாணத்துக்கு முன்ன உங்களை பார்த்த போது மீசை இருந்தது. கம்பீரமா இருக்கும் உங்களுக்கு, நீங்க ஏன் மீசை எடுத்துட்டீங்க?”

“எங்கப்பா எனக்கு கட்டாயமா கல்யாணம் செஞ்சு வெச்சார், ஷெரீனா வீட்டை கடத்தி வெச்சார். என்னால எதுவும் பண்ண முடியலை. அப்போ எனக்கு தோணிச்சு, உனக்கு எதுக்குடா மீசைன்னு அப்போ எடுத்தது தான், இன்னும் வைக்கலை!” என்று அன்றைய மனநிலையை மறைக்காமல் அப்படியே சொன்னான்.

எல்லாம் தெரிந்த உண்மை தான் என்றாலும் அதற்காக அவன் மீசை வைக்காமல் இருப்பான் என்று துளசி எதிர்பார்த்திருக்கவில்லை. திருவின் முகம் பார்க்காமல் அவனின் நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்.

திருவும் அவள் இலகுவாக படுக்குமாறு அணைத்துக் கொண்டவன், “காலையில நீ எழுந்ததும் மீனாக்ஷி ரூம் கதவை மறக்காம உடனே திறந்து விட்டுடு!” என்று சொல்லி கண்களை மூடிக் கொண்டான்.

துளசியும் பதில் பேசாமல் கண்களை மூடி கொண்டாள். திரு அவள் இலகுவாக படுக்குமாறு இதமான அணைப்பில் வைத்திருக்க, துளசியோ இன்னும் நெருங்கி படுத்துக் கொண்டாள். திருவின் பதிலில் இத்தனை நேரம் இருந்த இதம் தொலைந்து இருக்க, நடந்ததை மாற்ற முடியாது என்று புரிந்த போதும், இப்போது எல்லாம் சரியாகிவிட்டது என்று தெரிந்த போதும், ஏதோ ஒரு சஞ்சலம்!

கணவனின் நெருக்கத்தில் அதனை தொலைக்க முயல, திருவிற்கு என்னவென்று புரியாத போதும் அவள் தன்னை தேடுகின்றாள் என்று புரிய, மீண்டும் ஒரு முறை மீனாக்ஷியின் ரூம் கதவை பார்த்தான் மூடி இருக்கிறதா என்று!

பின்னே மனைவியின் புறம் திரும்பியவன், இதழில் மென்மையாய் ஒரு முத்தம் பதிக்க, துளசியின் உடல் மொழியே இது தனக்கு போதாது என்று காண்பிக்க, மெதுவாக முன்னேற, துளசி தன்னுடைய சஞ்சலத்தை எல்லாம் அவனுள் கரைக்க முயன்று கொண்டிருந்தாள்.

என்னவோ திருவின் வெகுநாளைய ஏக்கமான துளசி தன்னை கொஞ்சியதில்லை என்ற ஏக்கமும் அதில் கரைந்து கொண்டிருந்தது!

அத்தியாயம் இருபத்தி இரண்டு

அன்று கட்டடம் ஆரம்பிப்பதற்கான பூமி பூஜை, மேகநாதனின் குடும்பத்தில் எல்லோரும் ஆஜர்! துளசியின் வீட்டிலும் எல்லோரும் ஆஜர்.

ஒரு மாதத்திற்கு முன்பு துளசி பேரில் நிலம் பதிவாகியிருக்க, லோன் சேங்க்ஷன் ஆகியிருக்க, இதோ வேலை ஆரம்பிப்பதற்கான பூமி பூஜை.

துளசிக்கு இப்போது ஏழாம் மாதம், வயிறு நன்றாகவே தெரிய ஆரம்பித்து இருந்தது.

வேலவன், ரத்னா, பிரசன்னா, மீரா என்று எல்லோரும் வந்திருக்க, பூமி பூஜை அதனோடு துளசியின் வளைகாப்பும் கூட. அவர்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று தெரிந்து நிருபமாவும் வந்திருந்தாள். சத்தியநாதனிடம் அவள் பேசியிருந்தாலும் இன்னும் அவர் யோசனையிலேயே இருந்தார். மனைவியிடம் கூட இதனை பற்றி பேசவில்லை.

நிருபமாவும் அம்மாவிடம் கூட பேசவில்லை. அம்மா திட்டுவார் என்ற பயம் இருக்க, அப்பாவிடம் மட்டும் பேசியிருந்தாள். அவர் இன்னம் ஒன்றுமே சொல்லவில்லை, அவளாக கேட்கவும் இல்லை.

பிரசன்னாவை அவள் பார்த்தது அவளின் கல்லூரிக்கு அவன் ஒரு செமினார் எடுக்க வந்த போது. எங்கேயோ இவனை பார்த்திருக்கிறோமே என்ற யோசனை தான்.

செமினார் முடிந்து அவளின் வகுப்பு தோழர்கள் சென்று அவனிடம் பேச்சு கொடுக்க, அவளும் பக்கத்தில் நின்றிருந்தாள்.

பிரசன்னாவின் வசீகரமான தோற்றம் அவளை கவர்ந்து இருந்தது. இப்போது பக்கத்தில் இருந்து பார்க்கும் போது அவனின் பேச்சு நடை உடை பாவனை எல்லாம் அவ்வளவு மரியாதையாய் இருக்க, மாணவர்களுக்கு சொல்லவா வேண்டும், அவனை கேள்வியால் துளைக்க, அத்தனை பேருக்கும் அசராமல் இன் முகத்தோடு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவன் எடுக்க வந்திருந்தது துறை சார்ந்த செமினார் அல்ல, பிரசன்னாவின் துறை பவர் எலக்ட்ரானிக்ஸ், அவன் எடுக்க வந்தது எப்படி மின்சாரத்தை சேமிப்பது என்ற விழிப்புணர்வு! பலரும் பலகாலமாய் சொல்லும் விஷயம், ஆனால் அவன் சொன்ன விதம் அப்படி ஈர்த்தது எல்லோரையுமே!

நிருபமா எதுவும் பேசாமல் அமைதியாய் நின்று தான் பார்த்திருந்தாள். அப்போது ஒரு மாணவன் “நீங்க எந்த ஊர் சார்?” என, “சென்னை” என்றவனிடம், “அது தான் உங்க நேடிவ்வா?” என்று பேச்சை வளர்த்தான். அதில் தான் தர்மபுரி என்று தெரிய, பின் “இப்போ நாங்க அங்கே இல்லை, அக்கா மட்டுமே” என்று சொல்லி அவளின் குடும்ப பெயர் சொல்ல,

அப்படித் தான் பிரசன்னாவை நிருபமாவிற்கு தெரியும்!

அவளுக்கு அவனிடம் பேசவேண்டும் என்ற ஆர்வம் கொள்ளை கொள்ளையாய் இருந்தது.

அன்றைக்கு தான் மீனாக்ஷி அடிபட்டது அம்மா சொல்லியிருக்க, அவன் கிளம்பும் நேரம் அவனை தனியாய் பிடித்தவள், "ஹாய் நான் நிருபமா" என்று சொல்லி, "எனக்கு துளசி அண்ணியாகனும்" என்று சொல்லி மீனாக்ஷி அடிப்பட்டதை சொன்னாள்.

பிரசன்னா அப்படியா என்றவன் பின்பு அவனின் கவனம் எல்லாம் மீனாட்சியிடம் சென்று விட்டது.

ஒரு தலையசைப்போடு நிருபமாவிடம் விடை பெற்று விட்டான். பின்பு அவன் மீனாக்ஷிக்கு குடிசை கட்ட வந்த போது தான் நிருபமா பார்த்தது. முதல் முறை பார்த்த போதிருந்தே அவனின் ஞாபகங்கள், இப்போது மீண்டும் பார்க்கவும் அவனின் ஞாபகங்கள அதிகமாகவும், திரும்ப அவனை மீனாக்ஷியின் விஷேஷத்தில் பார்க்கவும் அப்பாவிடம் சொல்லிவிட்டிருந்தாள். அவ்வளவே!

மீண்டும் இருமுறை பார்த்த போதும் பிரசன்னாவிடம் "உங்களுக்கு என்னை ஞாபகம் இருக்கா" என்று கூட பேச முற்படவில்லை.

அவளுக்கு பிடித்தது அப்பாவிடம் சொல்லி விட்டால் அவ்வளவே! எல்லாம் அப்பா பார்த்துக்கொள்வார் என்ற நினைப்பு அவளிடம் அதிகமாய் இருந்தது.

உண்மையில் பிரசன்னாவிற்கு அவளை ஞாபகம் இல்லவே இல்லை. அக்கா வீட்டிற்கு இருமுறை வந்த போதும் நிருபமாவை எல்லாம் கவனிக்கவில்லை. அவனுண்டு அவன் வேலை உண்டு என்று தான் இருந்தான்.

சத்தியநாதநிற்கு ஒரே யோசனை, படித்திருக்கிறான், நல்ல வேளையில் இருக்கிறான் என்பதற்காக வீடு கூட இல்லாதவனுக்கு திருமணம் செய்து கொடுக்க முடியுமா? அப்படியே வீடு வாங்கினாலும் அதன் டியுவை அத்தனை வருடம் கட்டுவர். அதையும் விட தங்களிடம் வேலை பார்ப்பவர் அவனின் அப்பா! பெண்ணை எடுப்பது வேறு கொடுப்பது வேறு.

எப்படி அவரை சம்மந்தியாக சமமமாக நடத்த! துளசியின் பொருட்டு சம்மந்தியாகி விட்டாலும் அப்படி பெரிதாக இவர்கள் அவர்களின் வீட்டினருக்கு மரியாதை கொடுத்தது கிடையாதே.

அதிலும் பிரசன்னவிற்கும் நிருபமாவிற்கும் பழக்கமா இல்லையா எதுவும் தெரியாது.

இப்போது மகள் இந்த நாளில் குதிக்கவும், அவருக்கு சற்று எரிச்சலாக வந்தது. "இப்போ எதுக்கு வந்த? உனக்கு லீவ் கூட இல்லையே" என கோபப்படவும்,

எப்போதும் கோபப்படாத அப்பா கோபத்தை காண்பிக்கவும், நிருபமாவின் முகம் சுருங்கி போய்விட்டது.

ஆனாலும் சத்தியநாதனுக்கு என்னவோ ஒரு கோபம், தன்னை இந்த குழப்ப நிலையில் வைத்து விட்டாளே என்று. மகளை மிக அதிகமாக கோபப்பட்டு பேசி விட்டார்.

அப்பாவிடம் இப்படி ஒன்றை எதிர்பார்த்திராத நிருபமா அடுத்த அரைமணியில் சென்னை திரும்ப கல்லூரிக்கே கிளம்பிவிட்டாள்.

அதே போல தான் மீராவை பார்த்ததும் மேகலா திருமண பேச்சை கமலநாதனிடம் ஆரம்பிக்க,

"அழகும் படிப்பும் மட்டும் போதாது! வசதில்லை, நாளைக்கு மாமனார் வீடு நம்ம பையனுக்கு நிறைய செய்ய வேண்டாமா? அதெல்லாம் பேசாதே" என்று விட்டார் முடிவாக.

பின் அதுவும் பேச்சில்லை!

எது எப்படி இருந்தாலும் இன்னும் வசதி வாய்ப்புகள் முக்கியமாக திருமண சந்தையில் பார்க்கப்படுகின்றன!

அதனால் இரு பேச்சுக்களும் ஒற்றிபோய் விட்டன.

அவரவற்குள் இது நடக்க மற்றவர்களுக்கு இது தெரியாமலேயே போனது. ஆம்! இந்த திருமணங்கள் நடக்குமா? நடக்காதா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

பூமி பூஜையில் துளசி பின்னால் தான் நின்றிருந்தாள், முன் எல்லாம் போகவில்லை. அங்கே பூஜைக்கு யார் என்ன கேட்டாலும் அகிலாண்டேஸ்வரியிடம் "போங்க அத்தை" என்றாள் மீனாக்ஷியை கூட விடவில்லை.

இன்னும் வீட்டினர் தவிர அந்த இடம் துளசியின் பேரில் வாங்கப் பட்டிருக்கிறது என்று மற்றவர்களுக்கு தெரியவில்லை.

பூஜை ஆரம்பிக்கும் நேரம் தான் சித்தப்பாக்களிடம் சொன்னான். அப்போது தான் துளசி வீட்டினருக்கே தெரியும். ஆங் என ஆச்சர்யப் பட்டு போயினர் அனைவரும். கூட எப்படி இப்படி என்றும்!

"நம்ம பேர்ல எல்லாம் வாங்கலையே" என்று திருவின் சித்திகள் கூட நினைத்தனர்.

"இது முழுக்க துளசியோடது சித்தப்பா" என்று சொல்லிவிட்டான். அப்படி ஒரு சலசலப்பு! எப்படி இவ்வளவு பெரிய சொத்தை அவனின் மனைவி பேரில் வாங்க முடியும், அதுவும் சொத்துக்கள் பிரிக்கப்படாத

நிலையில். அப்போது ஷோபனா பேரில் என்று சித்தப்பாவே கேள்வி எழுப்பினார்.

சாரதாவும் சித்ராவும் அவருடன் சேர்ந்து பேசினர்.

துளசி முகத்தினை தான் விரைந்து திரும்பி பார்த்தான் திரு.

அவளின் முகத்தினில் ஒரு சலனமும் இல்லை, ஆசுவாசத்தோடு மூச்சு விட்டான். துளசிக்கு இவன் எதுவும் பேசிவிடுவானோ என்ற கவலை.

துளசி "கண்டு கொள்ளாதீர்கள்" என்று கண்களில் தைரியம் சொல்ல, திரு பேச வரவும், "பேச வேண்டாம்" என்ற துளசியின் சிறு தலையசைவில் அமைதியாகி விட்டவன் அம்மாவை பார்த்தான்.

அப்போதும் விடாமல் ஒரு வார்த்தை பேசியே விட்டான். "நீங்கல்லாம் சித்திங்க பேர்ல வாங்கலைன்னா நானும் துளசி பேர்ல வாங்க கூடாதா?" என்று. துளசி என்ன பேச்சு இது எனக்கு பிடிக்கவில்லை என்ற பாவனையை முகத்தினில் காண்பிக்க அப்படியே வேறு பேசாமல் அமைதியாகிவிட்டான்.

துளசி ஓரிருமுறை அவனிடம் சொல்லியிருந்தால், "சண்டை போடலாம்! எப்போ? முழுசா அவங்க கிட்ட உறவை முறிச்சிக்கறோம்ன்றப்போ! அதை நாம எப்போவுமே பண்ண போறதில்லை! உங்க அத்தைங்க

வீடுன்றதை விட, ஒன்னு ஷோபனா வீடு, இன்னொன்னு ராதா அண்ணி வீடு! அதனால் சண்டை போடக் கூடாது! சும்மா சண்டை போட்டுட்டு அப்புறம் அவங்க வரும் போது ஒன்னுமே நடக்காத மாதிரி பேசுவோமா! இது வேண்டாம்!'' என்று ஸ்திரமாய் சொல்லியிருந்தாள்.

திருவும் இப்போது அப்படி எதுவும் செய்வதில்லை, ஆனாலும் இன்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டான்.

''சின்ன பையன் நம்மளை பார்த்து என்ன வார்த்தை சொல்லிட்டான்!'' என்று சித்தப்பாக்கள் மனம் சுணங்கிய போதும், ஆம்! நாம் செய்யவில்லை! இப்போது செய்யும் அவனை குறை சொல்ல என்ன இருக்கின்றது என்றும் யோசித்தனர்.

மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் தான் பேசினர். ''சொத்து பிரிக்கலைன்னாலும் யாருக்கு என்னன்னு சொல்லிட்டோம், அவங்க அவங்களதை அவங்க அவங்க எடுத்துக்கறாங்க! அதுவுமில்லாம இதுல போட்ட பணம் குடும்ப தொழில்ல வந்ததே இல்லை! திருவுக்கு வேற சில தொழிலும் இருக்கு!''

''நான் இப்போவே எழுதிக் கொடுக்கறேன்னு தான் சொன்னேன். ஆனா பசங்க தான் நீங்க இருக்குற வரை உங்க பேர்ல இருக்கட்டும், அதுக்கு அப்புறம் எங்களுக்கு வந்தா போதும்னு சொல்லிட்டாங்க!'' என்றார் மேகநாதன்.

“அப்போ ஷோபனா பேர்ல இடம்” என்று சாரதா சீறி எழ,

“அதை அவ புருஷன் கிட்ட கேளுங்க அண்ணி” என்றார் அகிலாண்டேஸ்வரி.

“அப்போ என் மருமகளுக்கு?” என சித்ரா பேச , ராதா அமைதியாக பார்த்து தான் இருந்தாள். அகிலாண்டேஸ்வரியும் மேகநாதனும் அவளிடம் முன்பே பேசியிருந்தனர்.

முன்பானால் வீட்டில் நடப்பதை தன் தம்பிகள் இருவரிடமும் சொல்லி விடுவார். ஆனால் இந்த முறை மேகநாதன் சொல்லவில்லை. இது திருவின் முடிவு, வேண்டுமானால் அவன் சொல்லிக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டார்.

நடப்பதனைத்தையும் வெங்கடேஷ் ஷோபனாவோடு வேடிக்கை தான் பார்த்திருந்தான். ஷோபனாவின் இயல்பு குணமான எடுத்தெறிந்து பேசுவது அவ்வப்போது எட்டி பார்த்தாலும் மிகவும் குறைந்து இருந்தது . இவளோடு தான் வாழ்க்கை என்றான பிறகு மனது சுணங்குவதில் பயனில்லை என்று புரிந்து வெங்கடேஷ் அவளை சிறிது சிறிதாக மாற்றிக் கொண்டிருந்தான்.

சென்ற முறை துளசியின் அப்பாவும் அம்மாவும் துளசியை பார்க்க வந்த போது தயங்கி தயங்கி தான்

என்றாலும் எப்படியோ ஒரு மன்னிப்பை கேட்டு விட்டாள்.

அது போதுமே துளசிக்கு எப்போதுமே ஷோபனாவிடம் ஒதுங்கி போகும் துளசி இப்போது ஓரிருவார்த்தை பேச ஆரம்பித்து இருந்தாள்.

“தொழில் எப்பவும் பசங்களுக்கு தான், அதுல பொண்ணுங்களுக்கு பங்கு கிடையாது. என் பொண்ணுக்கு நிறைய செஞ்சிட்டேன், இன்னம் செய்வேன்!” என்றார் மேகநாதன்.

அகிலாண்டேஸ்வரி ஒரு படி மேலே போய், “என்னோட நகை பணம் எல்லாம் என் பொண்ணுக்கு தான். என் மருமகளுங்களுக்கோ பேரப் பிள்ளைகளுக்கோ கிடையாது. ஆனா வரும்போது அது என் மகளுக்கு மட்டும் தான். உன் பையன் அதை வாங்கி வட்டிக்கு விடறதுக்கு கிடையாது. அதுவும் எனக்கு அப்புறம் தான்!” என்றார் தெளிவாய்.

எல்லாம் பூஜைக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் போதே பேசி முடிக்கப் பட்டு விட்டது. மேகநாதனும் அகிலாண்டேஸ்வரியும் பேசிய பிறகு அங்கே வேறு பேச்சுக்கள் இல்லை.

“ஐயோ! சண்டை வந்து விடுமோ!” என்று துளசியின் அம்மா வீட்டினர் பார்த்திருக்க, அங்கே அப்படி எதுவும் இல்லை. திரு பேசியிருந்தால் வார்த்தைகள் முற்றி

இருக்குமோ என்னவோ துளசி தான் திருவை பேசவே விடவில்லை.

இவ்வளவு பேசும் போதும் நாகேதிரனும் தருணும் அங்கேயே தான் இருந்தனர். "அச்சோ, இந்த பெண் பேரிலா? வராமல் இருந்திருக்கலாமோ!" என்று தோன்றிய போதும் வராமல் இருந்திருக்க முடியாது என்று தெரியும்.

திரு இருவரின் தொழிலையே முடக்கி இருந்தான். "நீங்கள் என் பணத்தை திரும்ப கொடுக்காமல் செயல் பட முடியாது" என்பது போல,

சத்தம் மட்டும் தான் போடுவான் திரு என்று இருவரும் நினைத்திருக்க, அவர்களிடம் பணத்தை கொடுங்கள் என்று ஒரு வார்த்தை கூட கேளாமல், அவர்களையே தன்னை வந்து பார்த்து, இன்னும் கொஞ்சம் அவகாசம் கேட்க செய்திருந்தான். அந்த அவகாசமும் பாதி பணம் கொடுத்த பிறகே கொடுத்திருந்தான்.

நாகேந்திரனுக்கு கொடுக்கும் நெருக்கடிகள் வெங்கடேஷிற்கு தெரியும், தருணிற்கு கொடுக்கும் நெருக்கடிகள் ராதாவிற்கு தெரியும். இருவரிடம் சொல்லியே செய்தான். ஆனாலும் இருவரும் தெரிந்தது போல யாரிடமும் காண்பித்து கொள்ளவில்லை.

மொத்தத்தில் அண்ணன், தங்கை, தம்பி என அவர்களின் ஒற்றுமை யாருடைய கண்களையும் கவராத போதும் மிகவும் ஸ்திரமாய் இருந்தது.

அதனால் திருவை தெரிந்தவர்களாக அவர்கள் அமைதியாயிருக்க, அவனின் சித்தப்பாக்களே யோசனையோடு பார்த்து இருந்தனர்.

முகம் முழுவதும் புதர் போல தாடி மண்டி கிடக்க, திரு பார்ப்பதற்கே வித்தியாசமாக இருந்தான்.

“எதுக்குடா இப்படி இருக்க?” என்று வீட்டினர் கேட்டிருக்க, பார்ப்பவர்கள் கேட்க , வேண்டுதல் என்று முடித்து விடுவான்.

“என்ன வேண்டுதல்?” என்று துளசிக்கு தானே தெரியும், ஆம்! மீசை வைப்பதற்காக என்று புரிந்து, மீசையோடான அவனின் முகம் பார்க்க அத்தனை ஆவலாய் இருந்தாள். இன்னும் கண்ணில் காட்டவில்லை திரு.

கூடவே துளசியிடம் வந்திருந்த ஒரு நிமிர்வு யாரும் எதிர்பாராதது. பேச்சுக்கள் இல்லவே இல்லை, அந்த பார்வை, அந்த முகத்தினில் தெரிந்த ஒரு தீட்சண்யம், யாரையும் அவளிடம் முன்பு போல வம்பு செய்ய விடவில்லை. திருவினது அங்கீகாரம் தானாக எல்லாம் அவளுள் கொண்டு வந்திருந்தது.

அவனை அதட்டும், அதிகாரம் செய்யும், கோபப்படும், சண்டையிடும் துளசியை திரு எதிர்பார்க்க, இல்லை, அது மட்டும் அவளிடம் வரவே இல்லை. ஆனால் கொஞ்சலும் உரிமையும் நன்கு வெளிப்பட ஆரம்பித்து இருந்தது. அது கூட அவர்களின் தனிமையில் மட்டுமே. மகளின் முன் கூட காண்பிக்க மாட்டாள்.

ஆனால் மற்றவர்களை நன்கு கையாண்டாள். திருவிற்கு புரிந்தது, இது உடனே வந்திருக்க கூடியது அல்ல. இயல்பிலேயே அவளிடம் இருந்திருக்க கூடும். ஆயினும் அதனை காண்பித்து இருக்க மாட்டாள் என்று. எதுவோ ஒன்று இதுவாகினும் தேறிக் கொண்டாளே என்பது தான் அவனின் எண்ணம்.

பூஜை செவ்வனே முடிய, அதன் பிறகு துளசிக்கு ஏழாம் மாதம் வளவி பூட்டினர்.

அந்த மாதத்தில் அதுவே நல்ல நாள் என்பதால் எல்லாம் அன்றே. இரண்டாவது குழந்தை என்பதால் பெரிதாக செய்யவில்லை என்றாலும் வீடு வரை செய்ய அகிலாண்டேஸ்வரி ஆசைப் பட்டார்.

துளசியின் அம்மா வீட்டினர் மற்றும் மேகநாதனின் உடன் பிறந்தவர்கள் வீடு மட்டுமே!

அவளை அமர வைத்து நலங்கிட்டு, வளையல் போட்டனர். முன்பு உடல் எடை குறைந்திருக்கிறது

என்றது போய், இப்போது நன்றாக எடை அதிகரித்து இருந்தாள். உடல் நன்றாகவே பூசி இருந்தது.

மீரா அவளிடம் வந்தவுடனே கேட்டு இருந்தாள், "என்ன அக்கா இவ்வளவு வெயிட் போட்டுட்ட? இன்னும் மூணு மாசம் இருக்கு! அப்போ இன்னும் போடுவ!"

"தானா போடுது, நான் என்ன பண்ண? இப்போ சாப்பாடும் குறைக்க முடியாது. குழந்தை பிறந்து ஒரு வருஷம் கழிச்சு பார்த்துக்கலாம்" என்றாள் அசால்டாய் துளசி.

"இப்படியே போ, யாரு இந்த குண்டு லேடின்னு மாமாக்கு உன்னை அடையாளம் தெரியாது. துளசியை காணோம்னு யார் பின்னேயாவது போயிடப் போறார்" என கிண்டல் செய்தாள்.

"அப்படியா இரு, உன் மாமா கிட்ட கேட்கலாம்!" என்று திருவை தேடுவது போல பாவனை செய்ய,

"அம்மாடி, உன் கிட்ட சொன்னேன் பாரு!" என்று மீரா ஓடியே போனாள்.

திருவாவது வேறு ஒருத்தியின் பின்னால் போவதாவது, தாலி கட்டியதில் இருந்து காதலித்த பெண்ணின் பின் கூட, அவன் காதலி என்ற எண்ணத்தோடு போனதில்லையே. அவளை காப்பாற்ற ஒரு நல்ல வாழ்க்கை அவளுக்கு அமைய என்று தானே

உதவ போனான். நெறி தவறாத மனிதன் என் கணவன் என்ற கர்வம் துளசியின் முகத்தினில் அப்பட்டமாய் தெரிந்தது. அந்த கர்வத்தோடே அவளின் பார்வை திருவை தொட்டு தொட்டு மீண்டது.

“எதுக்கு இவ நம்மை இப்படி பார்க்கிறா? கண்லயே சாப்பிடறா என்னை?” என்று திருவின் மனது முழுவதும் உல்லாசங்கள்.

பெண்கள் எல்லோரும் வளையல் இட்டு முடிக்க கடைசியாய் ராதா வந்தவள், “உங்க பொண்ணு போட்டோ எடுக்க ஃபோகஸ் லைட்டே வேண்டாம் அண்ணி, உங்க முகமே அவ்வளவு ப்ரைட்டா பளிச்சின்னு இருக்கு!” என்று சொல்லியடி சந்தனத்தை எடுத்து அதிகப் படியாய் துளசியின் கன்னங்களில் அப்பினாள்.

ஆம்! அந்த நிகழ்ச்சியில் படம் பிடித்துக் கொண்டிருந்தது மீனாக்ஷி, அப்பாவிடம் சொல்லி கேமரா வாங்கியிருந்தவள், அம்மாவை வளைத்து வளைத்து போட்டோ எடுத்தாள். அதற்க்காக ஒரு நாள் கிளாஸ் அவளின் அப்பாவோடு சென்று படித்தாள். பதிமூன்று வயது பிறந்திருக்க, அந்த வயதிற்கு சற்று அதிகம் தான் ஆனாலும் திரு உடன் சென்று மகளுக்கு பயிற்று வித்தான்.

விளைவு தரையில் முட்டிகாலிட்டு அமர்ந்து போகஸ் செய்து கொண்டிருந்தாள்.

“மீனா அம்மாவை மட்டும் எடுக்கக் கூடாது, வந்தவங்களையும் எடுக்கணும்” என்று வெங்கடேஷ் சொல்ல,

“அம்மாவை முதல்ல எடுக்கறேன் சித்தப்பா, அப்புறம் எல்லோரையும் எடுக்கலாம். நீங்க நான் ஃபோட்டோ எடுக்கற வரை யாரையும் வெளில விடக் கூடாது!” என்று அதட்டி சொல்ல,

“இது வேறையா!” என்று வெங்கடேஷ் நொடிப்பது போல பாவனை செய்தான்.

“இது வேறையா இல்லை, இது மட்டும் தான் உங்க வேலை!” என்றவள் “சித்தி” என்று ஷோபனாவையும் அழைத்து “சித்தப்பா, நான் சொன்ன வேலையை செய்யறாரா பார்த்துக்கங்க” என்று அவளையும் இழுத்தாள்.

“ஆன்னா ஊன்னா என் பொண்ணு எனக்கு ஃபோன் பண்ணுவா, பேசுவா, நடக்கிறதெல்லாம் சொல்லுவா, இப்போல்லாம் அப்படியே மாறிட்டாளே!” என்று சாரதா பார்த்திருந்தார்.

அடுத்து திரு வந்தவன், கண்ணாடி வளையல்களையே அணிவித்தான். பின் அவளின் கன்னத்தில் சந்தனம் பூசி, நெற்றியில் பொட்டு வைக்க,

ஒன்றோன்றிர்க்கும் "அப்பா இருங்க, இங்க பாருங்க, இன்னும் கொஞ்சம் திரும்புங்க" என்று மீனாக்ஷி படுத்தி எடுத்தாள். அவள் செய்த கலாட்டாவில் மனைவியின் முகத்தில் கூட திருவின் கவனமில்லை.

"அப்பா போயிடறேனே ப்ளீஸ்" என்று திரு ஏறக்குறைய கெஞ்சல் குரலில் கேட்டான்.

"அதெல்லாம் முடியாது" என்று வித விதமாய் எடுத்தவள்,

"இப்போ அம்மா பக்கத்துல நில்லுங்க, இந்த ஒரு ஷாட் மட்டும் தான்!" என்று நிறுத்தி வைத்தாள். துளசி அமர்ந்திருக்க திரு அவளின் பின்னால் அந்த நாற்காலியை பிடித்த படி நிற்பது போல.

எல்லாம், எல்லாம், துளசி ஒரு வாடாத புன்னகையோடு பார்த்திருந்தாள்.

ஷாட் வைத்தவள் ராதாவை கூப்பிட்டு "அத்தை, அம்மா முகத்துல சந்தனம் இருக்கு, அப்பா முகத்துல அது மிஸ்ஸிங்! பூசிவிடுங்க!" என,

எல்லோர் முகத்திலும் சிரிப்பு!

“உங்கப்பன் முகத்துல தாடி தான் இருக்கு, எங்க முகம் தெரியுது!” என்று அகிலாண்டேஸ்வரி நொடித்தார்.

“மீனா அதெல்லாம் வேண்டாம்” என்று திரு நகர, துளசியின் முகத்திலும் அப்படி ஒரு சிரிப்பு!

திரு நகரப் போக, “வெங்கடேஷ் பிடி” என்று ராதா சொல்ல,

வெங்கடேஷ் விரைந்து பிடித்து கொண்டான், திமிரியா விடு பட முடியும்? “விடுங்கடா” என்று பரிதாபமாய் திரு சொன்னான்.

ராதா வந்து அவனின் கன்னத்திலும் அப்பி விட்டாள்.

மக்கள் மூவரும் இந்த கலாட்டா செய்ய, மீனாக்ஷியின் கேமரா எல்லாம் படம் பிடித்தது. ஒரு வழியாய் பின் திருவை துளசியின் பின் நிற்க வைத்து புகை படம் எடுத்த பிறகு தான் அந்த இடத்தை விட்டு திருவால் நகர முடிந்தது.

“ஷப்பா” என்று வந்து திரு அமர, துளசியின் பார்வை முழுவது திருவிடம் தான்.

அவனின் பக்கத்தில் அமர்ந்த ராதா, “என்ன அண்ணா, நீ எதோ ஸ்பெஷலா அண்ணிக்கு தங்கமோ வைரமோ மரகதமோ இப்படி வளையல் போடுவேன்னு பார்த்தா, இப்படி ஏமாத்திட்டியே” என்று வாயடித்தாள்.

“அதெல்லாம் யார் வேணா போடலாம், எப்போ வேணா போடலாம், ஆனா இப்போ இது தான் போடணும்! கண்ணாடி வளையல் தான் சுமங்கலி பொண்ணுங்களுக்கு அழகு, அதையும் விட இப்போ இந்த சத்தம் வயத்துக்குள்ள இருக்குற குழந்தையோட பேசுமாம்” என்று திரு பேசிக் கொண்டே மனைவியை பார்த்தான்.

இருவரின் பார்வையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டது கவிதையாய் இருக்க, மீனாக்ஷி அதையும் படம் பிடித்தாள்.

அவ்வளவு இனிமையான ஒரு நாள் துளசியின் வாழ்வில் வந்ததே இல்லை.

ஒரு இனிய கனவு போல இருந்தது.

அவளையே பார்த்திருத்த திருவிற்குள் ஷெரினாவின் ஞாபகங்கள். திருமணத்திற்கு பின்னான அவனின் வாழ்வு எப்போதும் நிம்மதியான ஒன்று தான், அதையும் விட இப்போது உயிர்ப்பு, காதல், மகிழ்ச்சி என்று திளைக்க, அவளது வாழ்வு முடிந்தே விட்டது.

ஷெரீனாவின் வாழ்க்கையும் தன்னதை போல நன்றாய் இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றியது. மனதின் ஒரு ஓரத்தில் கூட அவளோடு தன்னுடைய வாழ்வு இருந்திருக்க கூடாதா என்று இப்போது

மட்டுமல்ல, திருமணம் முடிந்த பின் எப்போதுமே தோன்றியதில்லை.

நடப்பவை எவற்றிர்க்கும் யாரும் காரணமல்ல என்று சொல்லிக் கொண்டாலும், நடந்தவை எதுவும் இல்லை என்றாகிவிடாது, அதன் காரணியும் அவன் இல்லை என்றாகிவிடாது.

மனதில் ஒரு வலி தானாய் எழுந்தது.

அதனை திருவின் முகமும் பிரதிபலிக்க,

நொடியில் அதனை உணர்ந்த துளசி ‘‘என்ன?’’ என்பது போல இரு புருவம் உயர்த்தினாள்.

‘‘ஒன்றுமில்லை’’ என்பது போல தலையசைத்தவன், இரு உதடுகளையும் குவித்து யாரும் அறியாமல் இருந்த இடத்தில் இருந்தே ஒரு மாத்திரையில் சத்தமின்றி முத்தமிட்டான்.

வித விதமாய் முத்தமிடும் கலையை கற்றும் இருந்தான், கற்றுக் கொடுத்ததும் இருந்தான், அது அவளை தொட்டு, முத்தமிட்டு!

அன்பாய், அணைப்பாய், காதலாய், காமமாய், வேட்கையாய், ஊடலாய், கூடலாய், சண்டையாய், சமாதானமாய், மயக்க, மயங்க, எனப் பலப் பலவிதம்.

அதில் இது எந்த விதம்?

அதுவும் தொடாமல்!

மனதை மறைக்க ஒரு முத்தம்!

இந்த முத்தம் நிறைய கணவன்மார்களிடம் பிரசித்தம்!

இதுவும் சத்தமில்லாத ஒரு முத்தம்!

மனைவியின் சிரிப்பை வாட விடக் கூடாது என்று கொடுக்கப் படும் முத்தம்!

அத்தியாயம் இருபத்தி மூன்று

இரவு எட்டு மணியாகிவிட துளசி வாசலில் ஒரு பார்வை பார்ப்பதும், பின்பு உள்ளே செல்வதுமாக சமையலைறைக்கும் கூடத்திற்கும் நடந்து கொண்டிருந்தாள். ஒரு இடத்தில் தடுமாறி பின் தன்னை ஸ்திரமாக்கி கொள்ள, அப்போது பார்த்து அகிலாண்டேஸ்வரி அவளை பார்த்து விட்டார். அவருக்கு அப்படியே ரத்த கொதிப்பு எகிறி விட்டது.

சிறிது நேரம் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு,

“எதுக்கு இப்படி நடந்துட்டே இருக்க, பேசாம உட்கார்” என்று அகிலாண்டேஸ்வரி சற்று சத்தமாகவே அதட்டி விட்டார். அவளின் பெரிய வயிறை தூக்கி அவள் அங்கும் இங்கும் நடக்கும் போது பயமாய் இருந்தது.

விஷயம் ஒன்றுமில்லை! மதியம் உணவிற்கும் திரு வரவில்லை, மாலையும் வரவில்லை. அதனால் இப்படி வாசலிற்கும் உள்ளிற்கும் துளசி நடந்து கொண்டிருந்தாள்.

அகிலாண்டேஸ்வரி அதட்டவும் முகம் சுருங்கிவிட, அமைதியாய் ரூமின் உள்ளே போகப் போக,

“இங்கேயே உட்காரு, நான் சொல்றவரை எழுந்திரிக்கக் கூடாது. எழுந்திரிச்சே..” என்று மீண்டும் கடுமையாக அதட்டலிட்டார்.

அவளின் முகம் முன்பே வாடித் தெரிந்ததை கவனித்திருந்தார், இப்போது அதட்டலிடவும் அது அதிகமாகிவிட, தனியாக விட முடியவில்லை. பின்னே இன்றோ நாளையோ என்று தான் அவளின் பிரசவிக்கும் நேரம் சொல்லப் பட்டிருந்தது.

மீனாக்ஷியும் அங்கே தானிருந்தாள், மேகநாதனும் அங்கே தான் இருந்தார். ஷோபனாவும் கூட அங்கே தானிருந்தாள்.

மீனாக்ஷி அம்மாவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டவள், "எதுக்கு பாட்டி அம்மாவை திட்டுறீங்க" என்று நேரடியாய் முறைக்க,

"ஆமா, எனக்கு வேற வேலை இல்லை பாரு" என்று மீனாக்ஷியையும் முறைத்தவர், "வேக வேகமாக அங்கயும் இங்கயும் நடக்கறா உங்கம்மா, எங்கேயாவது இடிச்சிக்கிட்டா, தடுமாறிட்டா, அதை நீ கவனிக்க மாட்டியா? உங்கப்பன் உன்னையா கேட்பான், அதை கூட பார்க்காம நீ எதுக்கு உயிரோட இருக்கேன்னு என்னை நிக்க வெச்சு கேட்பான். ராதாக்கு அப்படி தான் கேட்டான். அவன் தங்கைக்கே கேட்கும் பொது அவன் பொண்டாட்டிக்கு கேட்க மாட்டானா? பேசாமா உங்கப்பா வர்ற வரை உங்கம்மாவோட உட்காரு. அப்புறம் நான் எதுவும் வாயே திறக்க மாட்டேன்" என்று கோபமாய் கத்தி விட்டார்.

அங்கே ஒரு கணமான சூழ்நிலை!

“எதுக்கு இவ்வளவு கோபம்?” என்று மேகநாதன் பேசினார்.

“அந்த பக்கம் இந்த பக்கம் நடக்கிறா, எனக்கு பயமா இருக்கு! வழில சோஃபா இருக்கு, டேபிள் இருக்கு, கால் மிதி இருக்கு, வழுக்கிடுச்சுன்னா? எனக்கு பயமா இருக்கு!” என்று பேசினார். முதல் குழந்தைக்கு அம்மா வீடு அனுப்பிவிட்டனர். அதனால் இவருக்கு பதட்டமில்லை. ராதாவிற்கும் கூட இவ்வளவு பதட்டமில்லை. என்னவோ துளசியை கொண்டு அவ்வளவு பயம் அவருக்கு. அப்படி உடம்பு வந்திருந்தது. வயிறும் மிகவும் பெரியதாக இருந்தது.

சரியாக அப்போது வாயிலில் கார் வந்து நிற்க, “யார்” என்று பார்க்க மீனாக்ஷி எழுந்து போக, வாயிலில் புத்தம் புது கரும் பச்சை நிற ஸ்கார்பியோ நின்றது.

உள்ளே ஓட்டுனர் இருக்கையில் வெங்கடேஷ் இருக்க, பக்கத்தில் திருநீர்வண்ணன்.

வேகமாக மீனாக்ஷி இறங்கி ஓடி வெங்கடேஷிடம் சென்றவள், “யாருது சித்தப்பா இது?” என்றாள்.

“உன்னோடது தான்!” என்று சொல்லியபடி இறங்கியவன், “உங்கப்பா புதுசா வாங்கியிருக்கான்!” என,

“ஹை” என்றவள், “எனக்கு எப்போ ஓட்டக் கத்துக் கொடுப்பீங்க” என்று வெங்கடேஷிடம் கேட்கும் போதே,

“ம்ம்ம், உனக்கு லைசன்ஸ் எடுக்கும் வயசு வந்ததுக்கு அப்புறம்!” என்று சொல்லிக் கொண்டே திருநீர்வண்ணன் இறங்கினான்.

“இப்படி தான் நீங்க என்னை டூ வீலர் ஓட்ட விடலை!” என மீனாக்ஷி குறைபட்டாள்.

வெங்கடேஷை தான் முறைத்தான் “உன்னை யாருடா கத்துக் கொடுக்க சொன்னா?” என்பது போல.

“எப்போ எது செய்யணுமோ, அப்போ தான் அதை செய்யணும். லைசன்ஸ் இல்லாம நீ இந்த காம்பௌன்ட் விட்டு வண்டியை இறக்கக் கூடாது!” என்று ஏறக்குறை மிரட்டல் தொனியில் பேசினான்.

அவனுக்கு தெரியும் இப்படி மகளிடம் பேசாவிட்டால் வண்டி ஓட்ட ரகளை செய்வாள் என்று.

ஆம்! ஷோபனாவிடம் ஒரு ஸ்கூட்டி இருக்க, அதனை சென்ற வாரம் தான் வெங்கடேஷ் அவளிற்கு கற்று கொடுத்திருந்தான். மீனாக்ஷி உயரமும் இருக்க, அவளால் எளிதாக ஓட்ட முடிய பழகியதில் இருந்து இந்த பாடு தினமும்!

அதனால் இன்று சற்று கடுமையாக பேசி உள்ளே செல்ல, அவன் அந்த பக்கம் சென்ற உடனேயே. நீ சொல்லிக் கொடுப்ப தானே சித்தப்பா" என்றாள்.

"ம்கூம், உங்கப்பா பெர்மிஷன் இல்லாம இந்த விஷயம் ஆகாது. ஏற்கனவே டூ வீலர்க்கே என்னை வெச்சு செய்யறான். எப்போ எப்போ கோபம் வருதோ, அப்போ எல்லாம் கூப்பிட்டு திட்டறான். அவனுக்கு ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் ரொம்ப முக்கியம். லைசன்ஸ் எடுக்கும் வயசு வந்தா தான் சொல்லி கொடுக்கணுமாம்!"

"கோபம் வந்தா உன்னையாவது திட்டுவான்? என்னை அடிப்பான்!" என்று சொல்லிக் கொண்டே அவனும் உள்ளே சென்று விட,

யாரோ என்னவோ சொல்லிக் கொள்ளுங்கள் என்று ஸ்கார்பியோவின் கதவை திறந்து டிரைவர் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

உள்ளே சென்று அப்பாவையும் அம்மாவையும் திரு அழைத்தவன், "வா ஷோபனா" என்று தம்பி மனைவியையும் அழைத்து, பின் துளசியை கண்களால் அழைத்தான்.

உள்ளே நுழைந்ததில் இருந்து அவனை தான் பார்த்திருந்தாள் துளசி. வந்தவுடனே திருவின் பார்வை

அவளை தழுவினாலும், பின் அப்பாவிடம் அம்மாவிடம் என்று தாவி விட்டது!

இப்போது பார்வையால் அழைத்தபடி சில அடிகள் எடுத்து வைக்க, துளசி அந்த இடத்தை விட்டு எழாதது புரிய "வா துளசி" என்றான்.

அப்போதும் அவள் அந்த இடம் விட்டு எழாமல் இருக்க, "என்ன பண்ணுது?" என்று அவன் அவளிடம் சென்ற வேகத்திற்கு எல்லோரும் அவனை தான் பார்த்தனர்.

அருகில் வரவும் "அத்தை என்னை அவங்க சொல்றவரை எழுந்துக்க கூடாது சொன்னாங்க" என்று கொஞ்சம் முறைப்போடு சொல்ல,

"அம்மா ஏன் அப்படி சொன்னாங்க? நீ என்ன பண்ணின?" என்று பேச ஆரம்பிக்க, அவர்களை விட்டு எல்லோரும் காரை பார்க்க படியிறங்கி விட்டனர்.

"நான் அந்த பக்கம் இந்த பக்கம் நடந்தேன்" என்றவள், "அத்தை கிட்ட சொல்லி என்னை எழுப்பி விடுங்க, நான் போகணும்!" என்று ஒற்றை விரலை காண்பிக்க,

அவளின் பாவனையை ரசித்தாலும், சிரிப்பும் வந்து விட, சத்தமிட்டு சிரித்தவன், "மா" என்று அம்மாவை கத்தி அழைத்தான்.

“ஏன் கத்துறீங்க?” என்று பதட்டமானவள், “நீங்களே சொல்லுங்க” என,

“ம்கூம் நீயே கேளு” என்று சொல்லும் போதே அகிலாண்டேஸ்வரி வந்து விட்டார்.

“எதுக்குடா கத்துற?”

திரு எதுவும் சொல்லாமல் துளசியை பார்த்தான். அதுவே சொன்னது நீதான் கேட்க வேண்டும் என்று.

“அத்தை நான் எழுந்துக்கடுமா?”

“ம்ம்” என்று அப்போதும் ஸ்ட்ரிக்ட் ஆஃபிசராய் முகத்தை வைத்து சொன்னார்.

துளசி விட்டால் போதும் என்று உள்ளே சென்று விட்டாள்.

அம்மாவின் அருகில் சென்றவன் “எதுக்கு இவ்வளவு கோபம்? அப்படி என்ன செஞ்சா?” என்றான்.

“அந்த பக்கம் இந்த பக்கம் நடந்துட்டே இருக்கா, ஒரு இடத்துல தடுமாறிட்டா, விழுந்தா என்ன ஆகறது? அப்படி என்ன உனக்கு? அவ கிட்ட எப்போ வர்றன்னு சொல்ல மாட்டியா? கொஞ்சமாவது உனக்கு பொறுப்பிருக்கா!” என்று அவனை ஏகத்திற்கும் பிடித்து விட்டார்.

“மா ஒரு சர்பரைஸ் குடுக்கலாம்னு கார் வாங்க போயிட்டேன் மா. இவளும் இன்னைக்கோ நாளைக்கோன்னு இருக்கா. அப்புறம் அவசரத்துக்கு யார் கிட்டயாவது போய் நிக்கணும். எனக்கு அதுல இஷ்டமில்லை. என்னவோ தள்ளி போயிட்டே இருந்தது மூணு நாளா வாங்கியே ஆகணும்னு அலைச்சல்”

“அது என்னன்னா கொஞ்சம் லேட் ஆகிடுச்சு ரெஜிஸ்டரேஷன் முடிஞ்சு வர” என்று சமாதானாம் சொன்னான்.

“அவளை உட்காரு சொன்னா, எங்கம்மாவை ஏன் திட்டுறன்னு மீனாக்ஷி சண்டை போடறா?” என்று சொல்லும் பொது அவரின் குரல் சிறிது கலங்கிவிட, கண்களிலும் கண்ணீர் நின்றது.

“மா உன் பேத்தி எப்படி இருப்பா? உன்னை மாதிரி தானே!” என்று மீண்டும் சமாதானம் செய்து அவரை அழைத்துக் கொண்டு காரை பார்க்க போனான்.

அவர்கள் வாயிலில் நின்று கொண்டிருக்கும் போது, துளசி வர அவளை பார்த்து திரு முறைத்த முறைப்பில் அகிலாண்டேஸ்வரி சொல்லி விட்டார் என்று புரிந்தது.

“தெரியாமல் நடந்து விட்டது” என்ற பாவனையோடு துளசி பார்த்தாலும், “இன்று தன்னுடைய காது

கேட்காமல் போனால் பராவயில்லை'' என்று அவளிற்கு தோன்றியது.

பின் வெங்கடேஷை அழைத்து ''ஒரு ரவுண்டு போயிட்டு வாடா எல்லோருரையும் கூட்டிகிட்டு'' என்றான்.

ஷோபனா, அகிலாண்டேஸ்வரி, மேகநாதன் எல்லோரையும் அழைத்து துளசியையும் ''அண்ணி வாங்க'' என்று அழைத்தான்.

''வரவில்லை'' என்று எப்படி சொல்வது என்று புரியாமல் திருவை பார்த்தால் துளசி. அவளுக்கு திருவோடு தான் போக வேண்டும்.

''நான் அப்புறம் துளசியை கூட்டிட்டு போறேன் நீ போ'' என்றான் திரு.

மீனாக்ஷி ஸ்கார்பியோவில் அமர்ந்திருந்தவள், ''நானும் உங்களோட வர்றேன்'' என்று இறங்கி கொண்டாள்.

கார் கேட்டை விட்டு வெளியே சென்றதும் ஆரம்பித்தவன் தான் திரு, அம்மாவிற்கும் மகளிர்க்கும் ''வொய் ப்ளட் சேம் ப்ளட்'' தான்.

''பாட்டி கிட்ட சண்டை போடுவியா? எதிர்த்து பேசுவியா? அவங்க எவ்வளவு வருத்தப்பட்டாங்க

தெரியுமா? வந்ததும் சாரி கேட்கற! என்ன பண்ணிட்டு இருக்க நீ?'' என்று ஆரம்பித்து மீனாக்ஷியை ஒரு வழியாக்கி,

திரும்பி துளசியை பார்க்க ''எனக்கு ஒன்னும் ஆகலை'' என்று அவள் அவசரமாய் சொல்ல,

''எதாவது ஆகியிருந்தா என்னடி செஞ்சிருப்ப?'' என்று அவன் கத்திய கத்தலுக்கு துளசியை விட மீனாக்ஷி பயந்து அம்மாவின் அருகில் சென்று நின்று கொண்டாள்.

''பயம் வேண்டாம்'' என்று துளசி மென்மையாய் மகளின் தோளை அணைவாய் பிடித்தாள்.

''இந்த கத்து கத்தறேன், கொஞ்சமாவது பயமிருக்கா?'' என்று சொல்லியபடியே முறைக்க,

துளசி அவனை பார்த்து ஒரு மோகனப் புன்னகை சிந்தினாள்.

இதற்கெல்லாம் தான் அசரமாட்டேன் என்பது போல அப்போதும் முறைத்துப் பார்த்தவன், ''ஏண்டி இப்படி பண்ற? எத்தனை தடவை ஜாக்கிரதை சொல்றோம்! விழுந்திருந்தா என்ன ஆகறது?'' என்று கலங்கியபடி திரு பேச,

“ஒன்னுமாகாது நானும் இனிமே இப்படி பண்ண மாட்டேன்” என்று துளசி கெஞ்சல் குரலில் பேச, அப்போதும் திருவின் முகம் தெளியவில்லை. ஆனாலும் திரும்ப பேசவில்லை.

அதற்குள் கார் வந்து விட, பின் சித்தப்பாக்கள் வீட்டினரை அழைத்து காண்பித்தான்.

இப்படியாக எல்லாம் முடித்து, உணவும் முடிந்து துளசி உள்ளே வந்த போதும் திரு ரூமின் உள் வரவில்லை.

ஹாலில் அவன் அமர்ந்திருப்பதை பார்த்து திரும்ப வந்தவள் “எனக்கு தூக்கம் வருது!” என்றாள்

“தூங்கு! நானா வேண்டாம் சொன்னேன்!” என்று திரு முறுக்கினான்.

ஒன்றும் பேசாமல் அவனின் அருகில் அமர்ந்து கொள்ள, “மனுஷனை படுத்தி எடுக்கிறடி” என்று சொல்லி எழுந்து சென்று படுக்கையில் அவளுக்கு முதுகு காண்பித்து படுத்துக் கொண்டான்.

அவனின் அருகில் படுத்தவள் “சாரி, காலை ஊனி வெச்சு தான் நடந்தேன். அதான் சமாளிச்சிட்டேன்!” என்று சொல்லிக் கொண்டே அவன் மேல் கையிட்டு அணைக்க முயல, அவளின் பெரிய வயிறு அதற்கு தடையாய் இருந்தது.

அவளின் வயிறு அவனின் முதுகில் உரச, அவனின் குழந்தையும் அப்பாவை உரசியது. ஆம்! குழந்தையின் அசைவை உணர்ந்தான்.

அவ்வளவு தான் திருவின் கோபம் எல்லாம் பஞ்சாய் பறந்து போக, வேகமாக திரும்பியவன், அவளின் வயிற்றில் கைவைத்து குழந்தையை உணர்ந்தான்.

“இன்னும் இந்த புடவையை விட மாட்டியா நீ” என்று அதட்டலிட்டு அவளை முறைத்தான்.

துளசியின் முகத்தினில் அப்போதும் வாடாப் புன்னகை,

“சிரிச்சே, என்னை கொல்றடி” என்று சொல்லிக் கொண்டே அவளின் புடவையை அவனே தளர்த்த, துளசி கண்களை மூடிக் கொண்டாள்.

மெதுவாக அவனின் கைகள் அவளின் வெற்று வயிற்றில் ஊர்ந்த நேரம் குழந்தையின் அசைவு இன்னும் அதிகமாய் இருக்க,

அந்த மணி வயற்றில் இதழ் பதித்தான்.

சத்தமல்லாத முத்தம்!

ஆம், திரு உதடுகளை விலக்கவில்லை! அப்படியே இருந்தான். அப்படியே இருந்திருந்தாலும் பரவாயில்லை, குழந்தையின் அசைவைக் கொண்டு வயிற்றில் உதடுகளால் கோல மிட்டான். குழந்தைக்கும்

அப்பாவிற்கும் போட்டியோ? அம்மாவின் வயிற்றை யார் முட்டுவது என்று! உள்ளிருந்து குழந்தை என்ன செய்தது என்று தெரியாவிட்டாலும். திரு உதடுகளால் வலிக்காமல் முட்டி மோத,

அம்மா! துளசிக்கு உடல் கூசி சிலிர்த்தது, என்னவோ ஆகியது அவளிற்கு. அப்போது அந்த நிலையை அவள் விரும்பவில்லை.

துளசியிடம் இருந்து முதல் முறையாக ஒரு அதட்டல் கிளம்பியது, "என்ன பண்றீங்க? இப்படி எல்லாம் பண்ணக் கூடாது!" என்று.

அவளின் குரலில் வியந்து "ஏண்டி, ஏன்?" என்று முகம் நிமிர்த்தி கேட்க,

"அதெல்லாம் பண்ணக் கூடாது" என்ற துளசியின் குரலில் அவளை உற்றுப் பார்த்தவன், சிறு புன்னகையோடு "சரி பண்ணலை" என்று விலகி படுத்தான்.

சில நொடி விட்டவள் "முத்தம் தான் குடுக்க வேண்டாம்னு சொன்னேன்!" என்று மெல்லிய குரலில் சொல்ல,

"ஏன் குடுக்கக் கூடாது?" என்று சொல்லிக் கொண்டே விட்டேனா என்று திரு மீண்டும் முத்தமிட்டான். ஆனால் இப்போது வயிற்றில் அல்ல!

கைகள் மட்டும் குழந்தையின் அசைவை உணர்ந்து சிலிர்க்க, உதடுகள் வேறு வேலையில் இருக்க,

இப்போது துளசியால் அதட்ட முடியவில்லை, இதழ்கள் தான் அவள் வசமில்லையே!

இன்றோ நாளையோ என்று குழந்தை பிறப்பை கொண்டிருப்பவர்கள் செய்யும் வேலையா இது! ஹச்சோ! என்று சுற்றி நின்ற காற்று கூட வெட்கம் கொண்டு முகத்தை திருப்பியதோ!

சில பல நொடிகள் கழித்து விட்டவன், "ம்ம், இப்போ சொல்லு நான் ஏன் கிஸ் பண்ண கூடாது?" என்று முகம் பார்த்து கேட்டான்.

"ம்ம்" முறைக்க முயன்றாலும் அது வருவேனா என்று துளசியிடம் அடம் பிடித்தது! பார்வை விடாமல் திருவின் முகத்தினை பார்த்தது!

"திரும்பவும் சைட் அடிக்க ஆரம்பிச்சிட்டியா?" என்று சலிப்பது போல திருவின் குரல் பேசினாலும், கண்கள் விடாமல் துளசியை பார்வையால் கபளீகரம் செய்தது.

அவனின் பார்வை வீச்சினை தாங்க முடியாமல், நிறைய நேரம் நேராகவும் படுக்க முடியாமல் சிரமப்பட்டு ஒருகளித்து படுத்தாள்.

இப்போது இருவருக்கும் இடையில் அவளின் நிறைமாத வயிறு இருக்க,

அதனை வருடுவதை திருவின் கைகள் நிறுத்தவே இல்லை. கணவனின் சுகமான வருடலை அனுபவித்தபடி, அவனின் முகம் பார்த்து கொண்டே இருந்தாள் விடாமல்.

“ஷப்பா, மீசை வெச்சதும் வெச்சேன். ஒருத்தி என்னை விடாம பார்க்கும் போதேல்லாம் சைட் அடிக்கறா!” என்று திரு பேசினான்.

அவனின் மீசையை மெதுவாக ஆனால் வலிக்கும் படி பிடித்து துளசி இழுக்க,

“ஷ் விடுடி” என்று மெல்லிய குரலில் திரு அலறினான்.

“நான் ஒருத்தன் ஜோக்கர் மாதிரி பேசியே சலிக்கறேன். ஒரு வார்த்தை பேசறியா நீ?” என்று திரு அதட்டியபடியே அவளின் கையை அவனுடைய மீசையில் இருந்து எடுத்து விட்டான்.

துளசி அவனின் முகம் பார்த்து, அவன் மயங்கும் புன்னகையை மீண்டும் சிந்த, திருவின் முகத்திலும் புன்னகை!

ஆம்! போன மாதம் தான் திரு மீசை வைத்தான். பெரிய மீசை தான் வேண்டும் என்று துளசி சொல்லிவிட,

அதனால் சில மாதங்கள் தாடி வளர்த்து பின் மீசை வைத்தான்.

எல்லோருமே அவனுக்கு நன்றாக இருப்பதா சொன்னாலும், அன்றிலிருந்து துளசி அவனை பார்க்கும் பார்வையே மாறிவிட்டது.

அவனை ரசித்து ரசித்து பார்க்க, பல சமயம் "என்னை அப்படி பார்க்காதடி, என்னால வேலை செய்ய முடியலை, இயல்பா இருக்க முடியலை, ஒரு மீசை வெச்சதுக்கு இந்த கலாட்டா பண்ற நீ!" என்று திரு பல முறை சொல்லிவிட்ட போதும் அதற்கு ஒரு பிரதிபலிப்பும் இருக்காது.

இப்போதும் அந்த பார்வை தான் பார்த்திருந்தாள்.

"இரு, உன்னை என்ன பண்ணறேன் பார்!" என்று திரு மீண்டும் வயிற்றில் உதட்டை மட்டும் பதிக்க,

"அச்சோ, ப்ளீஸ் வேண்டாம்!" என்று துளசி கெஞ்சினாள்.

"அப்போ நீ என்னை அப்படி பார்க்காதே!" என்று திரு ப்ளாக் மெயில் செய்ய, ஒரு ரகசிய நாடகம் அங்கே அரங்கேறியது.

திரு விடாமல் உதடுகளால் அவளை சீண்ட,

“இதெல்லாம் வேலைக்காகாது” என்று புரிந்தவள், அவளின் வயிற்றில் இருந்த அவனின் முடியை பற்றி இழுத்து, அவனின் முகத்தினை மேலேற்றியவள், அவன் என்ன என்று உணரும்முன்னே முகத்தினை அருகில் இழுத்து வலிக்க ஒரு முத்தமிட்டாள்.

அவள் விட்ட போது “என்னடி பண்ற ராட்சசி?” என்று முறைத்தான்.

“என்ன பண்ணினேன்?” என்று ஒன்றொன்றாய் இரு புருவங்களையும் உயர்த்தி அவள் கேட்ட பாவனையில், “அம்மாடி, இதெல்லாம் வேலைக்காகாது!” என்று அவள் மனதினில் நினைத்ததை உணர்ந்து திரு விலகிப் படுத்தான்.

அத்தியாயம் இருபத்தி நான்கு

“பின்னே நான் விழுந்திருந்தா உங்களுக்கு மட்டும் தான் டென்ஷனா? எனக்கு இல்லையா? எதனால இப்படி ஆச்சு? உங்களால! எத்தனை தடவை வீட்டுக்கு வாசலுக்கும் நடந்தேன் தெரியுமா? இனிமே இப்படி பண்ணுனீங்க..!” என்று சொல்லிவிட்டு அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

“அம்மாடி, என்னோட பல வருஷ கனவு நனவாச்சு! துளசி என்கூட சண்டை போடறா! முறைக்கிறா! என்னை கேள்வி கேட்கறா! அதையும் விட வலிக்க வலிக்க கொஞ்சறா!” என்று திரு பேச,

“நீ என்னவோ பேசிக் கொள்” என்று அவனின் மீசையை மீண்டும் இழுத்தாள்.

“என்னடி இப்படி என்னை கொடுமை பண்ற, கொஞ்சம் நேரமாவது தூங்கு! இல்லை இன்னும் கொஞ்சம் நேரத்துல தூக்கம் முழுச்சு, எனக்கு தூக்கம் வரலைன்னு என்னை படுத்துவ!” என்று அதட்டல் குரலில் சொன்னான்.

பிரசவ நாள் நெருங்கியிருக்க, இந்த ஒரு வாரமாக சரியான உறக்கமில்லை துளசிக்கு. பாதி ராத்திரியில் எழுந்து கொள்வாள், பின்னே விடியும் போது தான் மீண்டும் உறக்கம்!

அவள் எழும் நேரம் துளசி எழுப்பாவிட்டாலும், திரு எழுந்து கொள்வான்.

திருவோடு தன்னுடைய வாழ்க்கை இப்படி மாறக் கூடும் என்று கிஞ்சித்தும் துளசி நினைத்திருக்கவில்லை! முகம் பார்த்து ஓரிரு வார்த்தைகள் பேசினால் போதும் என்ற எதிர்பார்ப்பே அதிகமாக இருந்தது.

அதட்டல், உருட்டல், மிரட்டல் என்று எதுவும் மாறாத போதும், திகட்ட திகட்ட காதல் செய்தான், செய்ய வைத்தான். எல்லோருக்கும் சற்று சலிப்பு தட்டிவிடும் ஒரு கால கட்டத்தில எனக்கு எல்லாம் புதிதாய், இளமை பருவத்திற்கு சற்று குறையாத பருவமாய்! பதிமூன்று வருட தவம் இதற்கு தானோ! இந்த வாழ்க்கைக்கு தானோ!'' என்ற எண்ணம் தான் துளசியிடம்!

''ம்ம், சரி தூங்க வைங்க!'' என்று துளசி வார்த்தையை உதிர்த்து கண்களை மூடினாள்.

''இது வேறையா, நான் தூங்க வைக்கிற நேரம் கூட நீ தூங்கறதில்லை! என்ன நம்ம குழந்தையை தூங்க வைக்க இப்போ இருந்தே ப்ராக்டிஸ்! ஆனா அது கூட இவ்வளவு படுத்தாதுடி!'' என்று குறை படுவது பேசினாலும்,

அவன் நேராகப் படுத்து இதமாய் அவளை தன் மேல சாய்வாய் படுக்க வைத்து, அவளை தட்டிக் கொடுக்க ஆரம்பித்தான்.

இருவரும் கண்ணயரும் நேரம் மீனாக்ஷி இருந்த ரூம் கதவு தட்டப்பட்டது.

சிறு சத்தத்திற்கு இருவரும் விழித்து விட்டனர். இருவர் மட்டும் தானே என்று துளசி உடை தளர்த்தி படுத்திருக்க, வேகமாய் அவளுக்கு போர்த்தி விட்டவன், மகளுக்கு "மீனாக்ஷி வர்றேன்" என்று குரல் கொடுத்துக் கொண்டே சென்று கதவை திறக்க,

மீனாக்ஷி அங்கே நின்றிருந்தாள்.

"என்ன மீனாக்ஷி?" என்றான் சற்று பதட்டமாக.

"தூக்கம் வரலைப்பா" என்றாள் பரிதாபமாக.

நிறைய திட்டி விட்டான், அவனுக்கே புரிந்தது. உணவு உண்ணும் போதும் முகம் கொடுத்து பேசவில்லை, துளசி அப்போதும் மீனாக்ஷியை வெகுவாக சமாதானம் செய்தால் தான், ஆனாலும் மீனாக்ஷிக்கு அதன் தாக்கம் இருப்பது புரிய,

"நீ போ, போய் படு, அம்மாவை அனுப்பறேன்!" என்றான்.

"ம்ம்" என்றபடி மீனாக்ஷி உள்ளே சென்றாள்.

துளசியிடம் வந்தவன் "கொஞ்சம் ரொம்ப மிரட்டிடேன் போல தூக்கம் வரலையாம்" என்றான் அசடு வழிந்து.

"உங்களை.. சும்மா அவளை பயப்படுத்திடீங்க" என்று திருவை முறைத்துக் கொண்டே எழுந்தவள், நைட்டி மாற்றி உள்ளே சென்று மீனாக்ஷியை பார்க்க,

"மா தூக்கம் வரலை" என்றாள் மகள்.

"ஏன் தூக்கம் வரலை" என்று கேட்டுக் கொண்டே அருகில் அமர்ந்தாள்.

"அப்பா, உங்கம்மாவை திட்டுனா எங்கம்மாவை அழ வைப்பியா கேட்டாங்க" என்று கண்கள் கலங்க சொன்னாள்.

துளசி பார்த்த பார்வையில், "துளசி சண்டை போடலைன்னா வருத்தப் பட்ட மகனே, நீ இப்போ அடியே வாங்கப் போற போலடா!" என்று திரு மனதிற்குள் நினைத்தாலும் கெத்து மாறாமல் அம்மாவையும் மகளையும் பார்த்திருந்தான்.

"சமாதானம் செய்!" என்ற கட்டளை மனைவியின் கண்ணில் இருக்க,

"பாட்டி லேசுல அழ மாட்டாங்க, அவங்களை நீ வருத்தப் படுத்தலாமா?"

“முன்னே எல்லாம் உன்னோட அம்மாவை எப்படி திட்டுவாங்க. இப்போ உன்னோட ஃபிரண்ட் ஆன பிறகு உங்கம்மாவை திட்டுறாங்களா? இல்லையே! அப்போ நீயும் அவங்க கூட சண்டை போடக் கூடாது இல்லையா? தப்பு தானே!”

“பாட்டி சொன்னா ஏன் சொல்றாங்க? அதுல ஒரு மீனிங் இருக்கும்னு யோசிக்க வேண்டாமா!” என்று மெதுவாய் ஆரம்பித்து பலமாய் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று பேசினான்.

சிறிது நேரத்தில் “ஷ்” என்ற மனைவியின் சப்தம் கேட்க,

“என்ன?” என்று பார்த்தவனிடம்,

“தூங்கிட்டா!” என்று சைகை செய்தான்.

அவனும் அப்படியே கீழேயே ஒரு தலையணை போட்டு படுத்துக் கொண்டான்.

அவன் கீழே படுக்க மேலே இருந்து துளசி அவனையே பார்த்து படுத்திருந்தாள். மீனாக்ஷி அவளை பின் புறம் இருந்து அணைத்து படுத்திருந்தாள்.

கண்களை மூடியபடியே, “துளசி என்னை தூங்க விடு!” என்ற திருவின் குரல் கேட்க,

“எனக்கு தூக்கம் வரலை”

அவனின் செல் எடுத்து இளையராஜாவின் அவனுக்கு மிகவும் பிடித்தமான பாடலை ஒலிக்க விட்டான் "கண்ணை மூடு தூக்கம் வரும்" என்று சொல்லியபடி

பாடல் வரிகள் கூட வரவில்லை முன் இசை ஒலிக்கவுமே அவளின் கண்கள் மூடியது,

"பூவிலே மேடை நான் போடவா

பூவிழி மூட நான் பாடவா

தோளிரண்டில் இரு பூங்கொடி

என் சொந்தமெல்லாம் இதுதானடி"

உறக்கமும் சுகமாய் தழுவியது.

காலையில் எழுந்த உடனேயே மீனாக்ஷி அகிலாண்டேஸ்வரியிடம் "சாரி பாட்டி" என்று போய் நின்றாள்.

"எதுக்கு சாரி" என்ற அகிலாண்டேஸ்வரிக்கு சுத்தமாய் நேற்றை நினைவுகள் இல்லை.

"ம்ம்ம், சும்மா கேட்டேன்" என்றபடி மீனாக்ஷி ஓடி விட,

"டேய் திரு, எதுக்குடா அவ சாரி கேட்கறா" என்று அகிலாண்டேஸ்வரியின் குரலுக்கு, திரு அவரை முறைத்து பார்த்தான்.

அப்போது தான் துளசி ரூமின் உள் இருந்து வந்தாள். வந்தவளின் முகம் ஒரு மாதிரி இருக்க, திருவின் கவனமும் அகிலாண்டேஸ்வரியின் கவனமும் அவளிடம் தான்.

“என்ன பண்ணுது துளசி” என அகிலாண்டேஸ்வரி கேட்க,

“கொஞ்சமா வலிக்கற மாதிரி இருக்கு அத்தை” என்று பதில் அவரிடம் கொடுத்தாலும் பார்வை முழுக்க திருவிடம்.

“பயப்படாதே” என்று கண்களால் துளசிக்கு தைரியம் சொன்னவன்,

“மா, ஹாஸ்பிடல் போயிடலாம்” என்று சொல்லும் போதே, “போயிடலாம்” என்று சொல்லிக் கொண்டே கைபேசியை எடுத்து அகிலாண்டேஸ்வரி டாக்டருக்கு அழைத்து விட்டார்.

துளசி திருவின் கைபேசியை வாங்கி மீராவிற்கும் அழைத்து கேட்டாள்.

“ஹாஸ்பிடல் போயிடுக்கா, நாங்க இங்கே இருந்து வர்றோம்” என்று சொல்லி அங்கே வீட்டில் இருந்து பிரசன்னாவும் ரத்னாவும் மீராவும் கிளம்பிவிட்டனர் ஒரு காரில்.

இங்கே எல்லோரையும் அகிலாண்டேஸ்வரி எழுப்பி விட, வீடே பரபரப்பானது.

பின்பு ஷோபனாவிடம் ஹாஸ்பிடலுக்கு இதெல்லாம் எடுத்து வா என்று ஒரு லிஸ்ட் கொடுத்து , வாக்கிங் சென்றிருந்த மேகனாதனுக்கும் அவரின் தம்பிகளுக்கும் சொல்லி இங்கே தம்பி வீடுகளுக்கும் சொல்ல, வசுமதியும் மேகலாவும் உடனே வந்து விட்டனர்.

அப்போது தான் மீனாக்ஷி குளித்து வந்திருந்தாள். வீட்டில் இத்தனை பேரையும் பரபரப்பையும் பார்த்து அவளின் முகம் குழப்பத்தை தத்தெடுக்க,

‘‘ஸ்கூல் போக வேண்டாம், அம்மாவோட ஹாஸ்பிடல் போகலாம், ட்ரெஸ் சேஞ் பண்ணிட்டு வா’’ என்று திரு மீனாக்ஷியிடம் சொன்னான்.

உடனே துளசி நைட்டியில் இருந்து சேலை மாற்ற செல்ல,

‘‘அதை அவளுக்கு சொன்னேன் உனக்கில்லை’’ என்று திரு அதட்டல் இட்டான்.

பின்னே தான் நின்றாள். பின்பு அகிலாண்டேஸ்வரி பூஜை அறையில் விளக்கேற்றி கற்பூரம் பொருத்தியவர், துளசியை அழைத்து வணங்க வைத்து திருநீர் பூசி விட,

அங்கே அப்படி ஒரு அமைதி!

மீனாக்ஷியின் முகத்தில் தான் அப்படி ஒரு கலவரம். அம்மாவிடம் ஒட்டி நிற்க போனவளை திரு அழைத்து அருகில் நிறுத்திக் கொண்டான்.

பின்னே திரு வண்டி ஓட்ட துளசியும் அகிலாண்டேஸ்வரியும் பின்னே ஏறிக் கொள்ள , மீனாக்ஷி முன்னே ஏறிக் கொண்டாள்.

ஷோபனா அத்தை சொன்ன பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வெங்கடேஷுடன் வருவதாக சொல்லியிருந்தாள்.

ஹாஸ்பிடல் சென்று இறங்க வீல் சேருடன் பணியாளர் நின்றனர் டாக்டர் அழைத்து சொல்லியிருந்ததால்.

“இல்லை, நடந்து வர்றேன்!” என்று சொல்லி துளசி நடந்து செல்ல,

“நீ வா” என்று அகிலாண்டேஸ்வரி மீனாக்ஷியை கூட வைத்து கொண்டார்.

திரு தான் துளசியுடன் நடந்தவன், “ஒன்னும் பயமில்லை” என்று சொல்லிக் கொண்டே நடக்க,

“ஒன்னும் பயமில்லை, பயமில்லைன்னு சொல்லி என்னை பயப்படுத்தக் கூடாது!” என்று சொன்ன துளசியின் குரலில் அவளின் பதட்டத்தை உணர முடிந்தது.

சுற்றிலும் பார்வையை ஓட்ட அதிக ஆட்கள் இல்லை, ஒன்றும் பேசாமல் அவளின் கையை மட்டும் பிடித்துக் கொண்டான்.

அவர்கள் மெதுவாக நடக்க "சர் பேஷன்ட் நேம் அண்ட் டீடையில்ஸ், இவங்களோட அட்டை" என்று அங்கிருந்த சிஸ்டர் கேட்க,

"அதெல்லாம் சொல்லுவோம் முதல்ல இவங்களை பாருங்க" என்று திரு அதட்டினான்.

திருவை முறைத்த துளசி "சாரி சிஸ்டர், எழுதிக் கொடுப்பாங்க, அட்டை எங்க அத்தை கிட்ட இருக்கு குடுப்பாங்க" என்று சொல்லும் போதே டாக்டர் வந்து விட்டார்.

துளசியின் கை பிடித்திருந்த திருவை பார்த்து,

"திரு அவ கையை விடு" என்று சொல்லி டாக்டரே அவளை பிரசவ அறையின் உள் அழைத்து சென்றார்.

அன்று நாள் முழுவதுமே வலி விட்டு விட்டு எடுக்க, காலையில் பிரசவ அறைக்குள் கொண்டு செல்லப் பட்டவள் மாலை வரை அங்கேயே தான் இருந்தாள். மீரா ரத்னா மதியம் போல வந்து விட்டனர்.

அகிலாண்டேஸ்வரிக்கு துளசியை அவளின் அம்மாவிடம் ஒப்படைத்த பிறகு தான் சற்று ஆசுவாசமாகியது.

“நான் அம்மாவை பார்க்கணும்” என்று மீனாக்ஷி வேறு படுத்தி எடுக்க,

அவளை பார்ப்பதற்கே திருவிற்கு நேரம் போனது. துளசியை வேறு குழந்தை பிறந்த தான் பார்க்க முடியும் என்று சொல்லி விட்டனர்.

வசுமதி, மேகலா, சாரதா, சித்ரா, ராதா, அகிலாண்டேஸ்வரி, ரத்னா, மீரா, ஷோபனா, வெங்கடேஷ், பிரசன்னா என்று பெரிய கும்பல் அங்கே இருந்தனர்.

உறவினரின் ஹாஸ்பிடல் என்பதால் யாரும் ஒன்றும் சொல்லவும் முடியவில்லை.

“ஒரு ரெண்டு நாள் இவங்கள பொறுத்துக்கங்க” என்று டாக்டரே அவரின் ஸ்ஃடாப்களிடம் சொல்லியிருந்தார்.

ஜே ஜே என்று அத்தனை பெண்கள்.

அவர்களை உணவிற்கு அழைத்து போவது அவர்களின் தேவையை பார்ப்பது என்று வெங்கடேஷும் ஷோபனாவும் அவ்வளவு பிசியாக இருந்தனர்.

மீரா முழுவதுமாக துளசியுடன் ப்ரசவ அறையின் உள்ளேயே இருக்க, திரு தன்னை சமாளித்துக் கொண்டான். யாருக்கும் உள்ளே அனுமதி இல்லை.

இன்னும் ஒரு பெண்ணும் வலி எடுத்து அங்கே உள்ளே இருந்ததால்.

மீரா கூட இருந்தாலும் திருவின் மனதினில் ஒரு பயம் ஒரு கவலை அதிகமாகிக் கொண்டே இருக்க, துளசியை பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் வெகுவாக தாக்கியது.

ஒரு வழியாக மாலை ஆறு மணிக்கு தான் பிறந்தான் அவனின் மகன்.

முன்பே ஒரு பெண் என்பதால், இப்போது ஆண் மகனை எதிர்பார்த்து இருந்ததால், அதுவே வந்து விட, திருவின் முகத்தினில் அவ்வளவு மகிழ்ச்சி. ஸ்கேனில் கேட்டால் சொல்லியிருப்பர், உறவினர் தானே, ஆனாலும் திருவும் கேட்கவில்லை, துளசியும் கேட்கவில்லை.

ஒரு நர்ஸ் வந்து சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள். பின்னும் இருபது நிமிடங்கள் கழித்து குழந்தையை எடுத்து கொண்டு டாக்டரே வந்து "யார் குழந்தையை வாங்கறீங்க" என்று அகிலாண்டேஸ்வரியிடம் கேட்க,

எட்டு பத்து பெண்கள் இருக்க,

திரு "என்னிடம்" என்று சொல்ல முடியாமல், "துளசி எப்படி இருக்கா அத்தை" என்று கேட்டுக் கொண்டே

முன்னே வந்து கொடுங்கள் என்பது போல கை நீட்டினான்.

“நீ நல்லா பிடிச்சிக்குவியா திரு” என்று கேட்டுக் கொண்டே டாக்டர் அவரின் கையினில் இருந்த குழந்தையை கொடுக்க, வாகாக வாங்கிக் கொண்டான்.

“துளசி நல்லா இருக்கா! நீ என்னவோ பிரசவிச்ச மாதிரி எதுக்குடா இப்படி முகத்தை வெச்சிருக்க!” என்று அவனை அதட்டிக் கொண்டே டாக்டர் உள்ளே சென்றார்.

குழந்தையை பார்த்தான் பஞ்சுப் பொதிகை, ரோஸ் நிறத்தில் இருந்தது. அந்த பிஞ்சு கைகளையும் கால்களையும் பார்த்ததும் அப்படி பரவசம். கண்கள் மூடி இருக்க, குழந்தையின் முகத்தை தான் பார்த்திருந்தான். என்னவோ உள்ளுக்குள் பிரவாகமாய் ஒரு உணர்வு!

“அப்பா நானு” என்று அடுத்த நொடி மீனாக்ஷி வந்து நின்றாள். “உனக்கு தூக்க தெரியாது” என்று ரத்னா சொல்ல,

“தாய் மாமா, நான் தான் மாமா, என் கைல தான் கொடுக்கணும்” என்று பிரசன்னா வந்தான்.

“அப்போ நானு அத்தை” என்றபடி ராதா வந்து நின்றாள்.

“முதல்ல பாட்டி தான்” என்று அகிலாண்டேஸ்வரி வந்தார்.

அதற்குள் வேகமாக வந்த நர்ஸ் "குழந்தையை டாக்டர் கேட்கறாங்க" என்றாள், பின்னே அத்தனை பேர் கை மாறினால் குழந்தை என்னாவது என்று டாக்டரே வாங்கி வரச் சொல்லி விட்டிருந்தார்.

இப்படியாக அந்த சின்ன கண்ணன் பிறக்கும் போதே அத்தனை பேரின் கவனிப்போடு பிறக்க,

மீனாக்ஷி பிறந்த போது, அகிலாண்டேஸ்வரியும் ரத்னாவும் மட்டுமே, திரு வரக் கூட இல்லை. ஏன் ஆண்கள் என்று யாருமே இல்லை. வேறு உறவுகளும் இல்லை. குழந்தையை கையினில் வாங்கியது கூட அகிலாண்டேஸ்வரி தான்.

இப்போது திருவின் மனதினில் தான் மீனாக்ஷி பிறந்த போது இங்கே வராதது நினைவு வர, மகளை எப்போதும் நன்றாய் தான் பார்த்துக் கொள்வான். ஆனாலும் கவனிப்பு அன்பு இது போல எதனையும் இப்போது போல, அப்போது காட்டியதில்லை. மகள் இழந்த அனைத்தையும் அப்போதே கொடுக்க வேண்டும் என்ற ஒரு வேகம்.

அந்த சிந்தனையோடே மீனாக்ஷியை பார்த்திருக்க, "என்னப்பா?" என்றாள்.

ஒன்றுமில்லை என்பது போல தலையசைத்தவன், மீனாட்சியிடம் "உட்காரு" என்று சொல்லி கூட அமர்ந்து கொண்டான்.

மனதில் அந்த சஞ்சலம் கூடக் கூட அவனால் ஒன்றும் முடியவில்லை, அவனையே மன்னிக்க முடியவில்லை.

“டேய் அண்ணா, அதான் நல்ல படியா குழந்தை பிறந்துடுச்சில்ல, பின்ன ஏன் இப்படி இருக்க?” என்று ராதா வந்து அமர்ந்தாள்.

“அதானே ஏன்டா இப்படி இருக்க?” என்று வெங்கடேஷும் கேட்டான்.

அகிலாண்டேஸ்வரி அந்த பக்கம் வந்த டாக்டரிடம் “இன்னும் எவ்வளவு நேரம் ஆகும், துளசியை பார்க்க காலையில இருந்து விடலை” என்று கேட்க,

எல்லோரும் துளசிக்காக என்று நினைக்க, துளசிக்காகவும் தான், ஆனால் திரு மட்டுமே அவரின் நினைவில் அப்போது!

காலையில் இருந்து ஹாஸ்பிடலிலேயே இருந்ததினால் மீனாக்ஷிக்கு சற்று தூக்கம் வருவது போல இருக்க,

அப்பாவின் கை பிடித்து, அவனின் தோளில் மீனாக்ஷி தலை வைக்க, அப்போது தான் சற்று உணர்வுக்கே வந்தான்.

மகளின் தலையை லேசாக தட்டிக் கொடுக்க, உறங்கிவிட்டாள். அவளை எழுப்ப யாரையும் விடவில்லை.

அதன் பின் ஒரு மணிநரம் கழித்து துளசியை ரூமிற்கு மாற்றி விட்டு சொல்ல, எல்லோரும் அங்கே சென்றனர்.

திரு மகளின் உறக்கம் கலையக் கூடாது என்று அப்படியே இருந்தான்.

“நான் பார்த்துக்கறேன் நீ போ” என்று ராதா சொல்ல, மீனாட்சியை விட்டு நகர்ந்தான். உடனே அவள் விழித்துக் கொண்டாள்.

“அம்மா பார்க்க போகலாமா” என்று திரு மகளை அழைத்து சென்றான்.

அத்தனை நேரமாக கணவனை கண்கள் தேடியிருக்க,

திருவை மீனாக்ஷியோடு பார்த்தும் துளசியின் முகத்தினில் ஒரு சோர்ந்த புன்னகை.

“மா” என்று மீனாக்ஷி விரைந்து சென்று கை பிடித்துக் கொண்டாள்.

“எப்படி இருக்கான் தம்பி பாப்பா” என்று கேள்வி மகளிடம் கேட்டாலும் பார்வை திருவிடம் இருந்தது.

“இரு பார்த்துட்டு வர்றேன்” என்று மீனாக்ஷி குழந்தையிடம் விரைய, குழந்தை தொட்டிலில் தான் இருந்தான்.

“குழந்தையை அப்படியே பார்த்துட்டு போங்க, யாரும் தூக்க வேண்டாம். ஒரு ஒருவாரம் பத்து நாள் ஆகட்டும்ன்னு சொல்லுங்க அத்தை” என்று அகிலாண்டேஸ்வரியிடம் மீரா சொல்லியிருக்க, அதனால் தொட்டிலிலிட்டு அவர் அரணாய் நின்று கொண்டிருந்தார்.

“பாட்டி குழந்தை யார் மாதிரி?” என்ற மீனாக்ஷியின் கேள்விக்கு,

“அப்படியே உங்கப்பா மாதிரி, அவன் குழந்தைல எப்படி இருந்தானோ அப்படி!” என்று அகிலாண்டேஸ்வரி சொல்ல,

“அதான் விடாம என்னை சைட் அடிச்சாளே, அப்புறம் எப்படி என்னை மாதிரி இல்லாமப் போகும்” என்று மனதிற்குள் திரு நினைத்தபடி துளசியை பார்த்தான்.

அதற்குள் “குழந்தைங்க டாக்டர் பார்க்கணும் எல்லோரும் வெளில போங்க” என்றபடி நர்ஸ் வர,

எல்லோரும் போக, அங்கே மீராவும் திருவும் மட்டுமே!

அவர் குழந்தை ஆரோக்யமாய் இருப்பதை உறுதி செய்து பின்னர் வெளியேறினார்.

திருவின் முகத்தினை பார்த்தே எதோ சரியில்லை என்று புரிய "என்னவோ" என்று துளசிக்கு கவலையாகி போய்விட்டது.

மீராவின் முன் "என்ன?" என்று கேட்க முடியாமல், "மீரா ஒரு ரெண்டு நிமிஷம் யாரும் வராம பார்த்துக்கிறியா?" என்று துளசி கேட்க,

மீரா "சரி" என்று தலையை ஆட்டி குழந்தையை தூக்கி வெளியே சென்றாள்.

"என்ன ஆச்சு? ஏன் இப்படி இருக்கீங்க?" என்றாள் மீரா வெளியே சென்ற நொடி.

"ஒன்றுமில்லை" என்பது போல திரு தலையசைத்தான்.

பக்கத்தில் அவனை அழைக்க, வந்ததும், "என்ன" என்றாள் ஒரு நேர் பார்வை பார்த்து.

அந்த பார்வைக்கு தானாய் பதில் வந்தது, "கொஞ்சம் கஷ்டமா ஃபீல் பண்ணினேன், உன்னை கூட்டிட்டி போய் கிட்ட தட்ட பத்து மணிநேரம் ஆச்சு!"

"அப்புறம்"

"அப்புறம் என்ன?"

"சொல்லணும்" என்றாள் பிடிவாதக் குரலில்.

“மீனாக்ஷிக்கு இத்தனை பேர் இல்லை, ஏன் நானும் இல்லை, இப்படி நான் அவளை கைல வாங்கவும் இல்லை, குழந்தையை வாங்கினதும் என்னால அந்த சந்தோஷத்தை கூட அனுபவிக்க முடியலை. மீனாக்ஷியை நான் இப்படி வாங்கலையே தோணிச்சு!” என்று சொல்லும் போது திருவின் குரலில் ஏகத்திற்கும் குற்ற உணர்வும் கலக்கமும்.

அவனின் கையை பிடித்துக் கொண்டவள் “இப்படி நீங்க கலங்கக் கூடாது, போனதை பத்தி நினைச்சிட்டு இருந்தா வர்ற காலத்தை நாம எப்படி சந்தோஷமா வெச்சிக்குவோம்!” என்று சொல்ல,

என்னவோ துளசி கையை பிடித்ததும் அப்படி ஒரு பலம், சஞ்சலங்களும் குறைய, வெளியே நிறைய பேர் இருப்பதால் அவளுக்கு ஒரு புன்னகையை கொடுத்து “நினைக்க மாட்டேன்” என்றபடி கை விலக்க, துளசி பிடியை விட்டால் தானே!

“எதையும் நினைக்க மாட்டேன்” என்ற படி அவளின் நெற்றியில் மென்மையாய் இதழ் பதித்தான்.

பின்னே தான் கை விட்டாள்.

“மீரா” என்று குரல் கொடுக்க, உடனே மீரா வர கூடவே அத்தனை பேரும் வர, கண்கள் மகளை தான் தேடியது.

மீனாக்ஷி உள்ளே வந்தவளும் அப்பாவின் அருகில் அனிச்சையாய் வர, ‘‘நீ குட்டி பாப்பா பார்த்தியா, எப்படி இருக்கான்?’’ என்று மகளிடம் திரு பேச ஆரம்பிக்க,

‘‘அதுப்பா..’’ என்று மகள் பதில் பேச ஆரம்பிக்க,

‘‘இத்தனை பேர் உள்ள இருக்க கூடாது!’’ என்று சொல்லியபடி நர்ஸ் வந்தார்.

‘‘நாங்க ரெண்டு பேரும் வெளில இருக்கோம்’’ என்று சைகை காட்டியபடி திரு செல்ல, துளசியின் முகத்தினில் நிறைவான புன்னகை.

கதவை நெருங்கிய நேரம் திருவும் திரும்பி துளசியை பார்த்து ஒரு புன்னகை புரிய, அந்த நொடி இருவருக்குள்ளும் அப்படி ஒரு நிம்மதி, திருப்தி.

வாழ்க்கையை இன்னும் சந்தோஷமாய் வாழ்ந்து பார்க்கும் ஆசையும் கூட!

சொல்லப் படுவது காதல் இல்லை! உணரப் படுவது காதல்! இது உன்னுள் மட்டுமல்ல! இதற்கு வயது வரம்பும் கிடையாது! வாழ்க்கை வரம்பும் கிடையாது!

அத்தியாயம் இருபத்தி ஐந்து

இங்கே இருந்தால் அதையும் இதையும் செய்து கொண்டிருப்பாள் என்று திருநீர்வண்ணன் துளசியை ஹாஸ்பிடலில் இருந்து அழைத்து வந்த இரண்டே நாட்களில் புண்ணியாதானம் செய்து அவளின் அம்மா வீட்டிற்கு அனுப்பியிருந்தான்.

ஆனால் மகனுக்கு பெயர் மட்டும் இன்னம் சூட்டவில்லை. அதுவரை அவனை குட்டி திரு என்றே எல்லோரும் அழைத்தனர் குழந்தை அவனை போலவே இருந்ததினால்.

இங்கே யாரும் வேலை சொல்லப்போவதில்லை, அவளிற்கும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்ற போதும், இங்கே இருந்தால் கணவனையும் மகளையும் கவனிப்பது தலையாய கடமை என்பது போல எப்படியும் ஓய்வு எடுக்க மாட்டாள் என்று புரிந்து தான் அனுப்பினான்.

இதோ இது மூன்றாவது மாதம், நேற்று தான் அகிலாண்டேஸ்வரி சொல்லிக் கொண்டிருந்தார், "மீனாக்ஷிக்கு பரீட்சை வருது, துளசியை கூட்டிட்டு வா. அப்போ தான் அவ கொஞ்சமாவது உற்சாகமா இருப்பா!"

"முன்ன மாதிரி கலாட்டா எல்லாம் இல்லைன்னாலும், புக் எடுத்து படிக்கறான்னாலும் வீடு வெறிச்சுன்னு இருக்கு, இவளும் வெறிச்சுன்னு இருக்கா!"

“சின்னதை பார்க்கறதை விட பெரியவளை பார், இப்போ அவங்கம்மா கூட இருக்கணும். என்ன தான் நீயும் நானும் நல்லா பேசினாலும் கவனிச்சாலும் அவளுக்கு துளசியோட தான் ஒட்டுதல் அதிகம், இப்போ மீனாக்ஷியும் கொஞ்சம் பொறுப்பா இருக்கறதால அம்மாவை கேட்கலை ஆனா ரொம்ப தேடறா” என்று நீளமாகப் பேசினார்.

“என்னம்மா நீ இவ்வளவு பில்ட் அப் குடுக்கற, வாரா வாரம் போய் பார்த்துட்டு வர்றோம் நானும் மீனாக்ஷியும், அப்புறம் என்ன?”

“இருந்தாலும்” என அகிலாண்டேஸ்வரி இழுத்தார்.

“என்னம்மா?” என்று திரு இழுக்க,

“எனக்கும் என் பேரனை கொஞ்சணும்” என்றார் பட்டென்று.

“மா” என்று அவரை போலவே சொன்னவன்,

“நாம யாரும் சரியா மீனாக்ஷியை கொஞ்சினோமா தெரியாது. அப்பா மட்டும் தான் எப்பவும் அவளை வெச்சிட்டு சுத்துவார், அப்புறம் வெங்கடேஷ்!”

“இப்போ இருக்குறவனுக்கு கிடைக்கற ஒரு கவனிப்பு இவளுக்கு கிடைக்கலை, முதல்ல நாம அவளை பார்ப்போம்!”

“அப்படி சொல்லாதடா கவனிப்புன்றது கைல தூக்கி வெச்சு கொஞ்சி கேட்கறதெல்லாம் வாங்கி கொடுத்து இப்படி எல்லாம் கிடையாது!”

“நீ எப்பவும் வீட்ல இருக்கும் போது அவளை கண்பார்வைல வெச்சிருப்ப, அவ ஸ்கூல் போகும் போதும் அங்க உன் பொண்ணு என்ன பண்றான்னு எப்பவும் உனக்கு தெரியற மாதிரி தான் வெச்சிருப்ப, இதுக்கு மேல என்ன கவனிப்பு வேணும்”

“உன் பொண்ணு ஆசைப்பட்டு கேட்டு எதுவும் வாங்கிக் கொடுக்காம இருந்திருக்கலாம். ஏன்னா அவ ஆசைப் பட்டு கேட்கற அளவுக்கு எதுவுமே இல்லையே. எல்லாம் தான் முன்னமே அவளுக்கு கிடைக்கற மாதிரி செஞ்சிடுவியே”

“மா” என அவரை அடக்கினான். ஆனாலும் அகிலாண்டேஸ்வரி பேசிக் கொண்டே போனார்.

“மீனாக்ஷி பொறக்கற வரை நீ எந்த வேலையும் உருப்படியா செஞ்சது கிடையாது. வாழ்க்கைல ஒரு பிடிப்பில்லாம சுத்திட்டு இருந்த! ஏன்னு எனக்கு இன்னம் தெரியாது! உனக்கும் அப்பாக்கும் என்ன பிரச்சனை திடீர்ன்னு! ஏன் உன்னோட கல்யாணம் எதுவும் தெரியாது!”

“ஆனா நீ அவ பொறந்த பிறகு தான் சரியான, கொஞ்சம் முகமும் சரியாச்சு, நல்லா உழைக்க ஆரம்பிச்ச!”

“ஆனா இப்போ கொஞ்சம் மாசம் முன்ன வரை கூட உனக்கு துளசியை பிடிக்கும்னு எனக்கு தெரியவே தெரியாது. அதனால் நான் கூட அவளை தள்ளி தான் வைப்பேன், அதட்டுவேன், எல்லாம் பண்ணுவேன் தப்பு தானே!” என்றார்.

“அதுதான் இப்போ மாறிட்டல்ல” என்று அவன் சொல்ல,

“பின்ன இப்போ என் வேலையை நான் செய்யறேன். எனக்கு முடியாத போது என்னை யார் கவனிப்பா. உண்மையா அதுக்கு தான் அவளோட ராசியாயிட்டேன்” இதில் பொய் உரைக்க என்ன இருக்கிறது என்பது போல மகனிடம் அப்படியே உள்ளதை உரைத்தார்.

“அப்போ உன்னை அவ பார்த்துக்கணும்னு தான் இப்போல்லாம் நல்லா நடந்துக்கறியா” என திரு அவரை முறைத்தான்.

“உண்மையா அதுக்கு தான்! ஆனா அது மட்டும் இல்லை, ஏன்னா எப்படி இருந்தாலும் நீயோ வெங்கடேஷோ எங்களை விடப் போறதில்லை, ஏன் ராதாவே விட மாட்டா! ஆனாலும் உங்களை விட துளசி

நல்லா பார்த்துக்குவான்னு தோணுது. ஏன்னா உங்களுக்கு எல்லாம் பொறுமை கம்மி!''

''மா, இதெல்லாம் ரொம்ப அநியாயம்'' என்று சொல்லும் போதே மேகநாதன் இரவு உணவிற்கு டைனிங் டேபிள் முன் அமர்ந்தார்.

''மீனா'' என்று திரு குரல் கொடுக்க, காரிடாரில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தவள், எழுந்து உள்ளே வந்து ''என்னபா?'' எனவும், திரு கண் காட்டியதும் தாத்தாவிற்கு பரிமாற சென்றாள்.

''படிக்கற புள்ளையை ஏன் எழுப்பற?'' என்று மேகநாதன் கடிந்தார்.

''என்ன எழுப்பறாங்கலாம்? படிப்பெல்லாம் அப்புறம், முதல்ல வாழ்க்கைல வேண்டியது பொறுப்பு, பணிவு, மனுஷங்களை புரிஞ்சிக்கிற தன்மை. என் பொண்ணுன்னு இதை சொல்லலை, என் பையனுக்கும் இதை தான் சொல்வேன்!'' என திரு சொல்ல,

''ஆமா, இவன் இருந்துட்டான், இவன் சொல்றான்!'' என்று அவரும் வார்த்தையை விட்டார்.

அவ்வளவு தான் சேரை தள்ளிக் கொண்டு திரு எழுந்த வேகத்திற்கு அங்கிருந்த அனைவரும் பயந்து விட்டனர்.

“நான் பொறுப்பா இருக்கவும் தான் நீங்க எனக்கு என்ன பண்ணியிருந்தாலும் உங்களை விட்டு போகலை. உங்களை விட்டு போகாத ஒரே காரணத்துனால நிறைய பாவத்தை கூட சம்பாரிச்சிட்டேன். நீங்க எதோ பெருசா பண்ணிட்ட மாதிரி எப்பவும் பேசவேண்டாம்” என்று வார்த்தைகளை கடித்து துப்பினான்.

முகத்தினில் அவ்வளவு கோபம் ஆவேசம் ஆக்ரோஷம்!

ஒரே நொடியில் இன்னும் பெரிய சண்டை வந்திருக்கும். அகிலாண்டேஸ்வரி நடுவில் புகுந்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தார்.

“திரு அமைதியாயிரு, உங்கப்பா பெரிய பேச்சுன்னு உனக்கு தெரியாதா!” என்று மகனை அதட்டி,

“உங்க பசங்களை நீங்க வளர்த்துட்டீங்க தானே! அவன் பசங்களை அவன் வளர்த்துக்குவான். உங்க வேலையை பாருங்க!” என்று கணவனை அடக்கினார்.

அப்படி எல்லாம் மேகநாதனிடம் யாரும் பேசிவிட முடியாது!

மனைவியை பார்க்க அகிலாண்டேஸ்வரியின் முகத்தினில் தெரிந்த கோபத்தில் அமைதியானார்.

“அவருக்கு எப்பவும் அவர் சொல்றது தான் சரி!” என்று திரு இடத்தை விட்டு நகரப்போனான்.

“டேய் உட்காருறா” என்று அவனையும் அதட்டினார் அகிலாண்டேஸ்வரி.

இப்படியாக சண்டைகளும் சச்சரவுகளும் இருந்தாலும், மகனுக்கும் தந்தைக்கும் அதிகம் முட்டிக் கொள்ள அகிலாண்டேஸ்வரி விடவில்லை.

துளசி வரும் வரை தான் அவருக்கு இந்த கடமை, பின் துளசி பார்த்துக் கொள்வாள்.

“என்ன தாத்தா நீங்க? நானே எப்போடா இதை கீழ வைக்கலாம்ன்னு பார்த்தா, நீங்க அப்பாவை ஏத்தி விடறீங்க!” என்று மேகநாதனிடம் மீனாக்ஷி முறுக்கினாள்.

“என்ன புள்ளையை படிக்க சொல்றானா உங்கப்பன். உனக்கு சம்பாரிச்சி வைக்கறதை விட அவனுக்கு என்ன வேலை? நீ புக்கை அந்த பக்கம் வை கண்ணு!” என்று அவர் சொல்ல,

“அச்சோ தாத்தா, எங்கப்பாவை நீங்க திரும்பவும் சண்டைக்கு இழுக்கறீங்க போங்க!” என்று மீனாக்ஷி குறை படவும் தான் அமைதியாய் உண்ண ஆரம்பித்தார்.

இப்படியாக இங்கே ஓட, வீடு அடங்கியதும்,

“என்னை எப்போ கூட்டிட்டு போறீங்க?” என்று துளசி அலைபேசியில் கேட்டாள்.

“என்னடி அவசரம் உனக்கு?” என்று அவளிடம் எரிந்து விழுந்தான்.

“எங்கம்மா கூட்டிட்டு வா சொல்றாங்க, நீ வர்றேன்னு சொல்ற. அப்போ நான் தான் கொடுமைக்காரனா. நீ இங்க வந்தா என்னை கொடுமை பண்ணுவ. அஞ்சு மாசத்துல வந்தா போதும்!” என்றான் ஸ்ட்ரிக்டாக.

“ஏன்?” என்று சோர்வான குரலில் மனம் சுணங்கியபடி துளசி கேட்டாள்.

“அவ்வளவு ஒன்னும் நான் நல்லவன் எல்லாம் கிடையாது. திரும்ப பேபி ஃபார்ம் ஆனா அப்புறம் நான் பொறுப்பில்லை. உன்னை பக்கத்துல வெச்சிக்கிட்டு அவ்வளவு கட்டுப்பாடு எல்லாம் கிடையாது. சும்மாவே கிடையாது, இப்போ என்னை நீ அநியாயத்துக்கு சைட் அடிக்கற. ஒழுங்கா அங்கேயே இரு, எங்களை நாங்க பார்த்துக்குவோம்!” என்றான் கடுப்பாக.

பின்னே அவனே கஷ்டப்பட்டு பிரிந்து இருந்தால், இவள் இப்படி பேசுகின்றாள் என்ற ஆற்றாமை.

“ஆங்” என்று வாயை பிளந்தாள்.

சில நொடி தான், பின்னே அவனையும் விட அதிகமாக கடுப்பாக பேசினாள்.

“யாரு? நீங்க! உங்களுக்கு கட்டுப்பாடு கிடையாது! இதை நாங்க நம்பணும்! எதோ மிஸ் ஆகி பேபி ஃபார்ம், ஆனா எல்லா நேரமும் ஆகிடுமா?”

“அப்படியே என்னை பார்த்தவுடனே நீங்க கட்டில்ல பாஞ்சுடுவீங்க பாருங்க, சும்மா அலப்பறை! ஒழுங்கா வந்து என்னை கூட்டிட்டு போங்க! மீனாக்ஷி தினமும் எப்போம்மா வருவா கேட்கறா? அவ ஏங்கிட மாட்டாளா? முன்னயே ரொம்ப கலாட்டா பண்ணிட்டோம்! ஒழுங்கா பொண்ணை பார்க்கணும்!” என்று எகிறினாள்.

அதற்க்கு சற்றும் குறையாமல் “ஏண்டி, நான் பாயாம தான் உனக்கும் பொண்ணும் பையனும் வந்துட்டாங்களா?” என்று திருவும் எகிறினான்.

“என்னமோ வருஷத்துக்கு ஒன்னு வந்த மாதிரி பேசறீங்க? இவ்வளவு பெரிய கேப் இருக்கும் போதே இந்த பேச்சு!” என்று துளசி நொடித்தாள்.

“அடிங்க, என் எதிர்ல மட்டும் நீ இருந்த...” என திரு பேச,

“இல்லன்னா என்ன? கார் எடுத்தா அஞ்சு மணிநேரம் வந்துடலாம். அப்புறம் நான் உங்க எதிர்ல தான் இருப்பேன்!” என்று துளசி உசுப்பேட்றினாள்.

“அம்மாடி பெரிய வாயாடி ஆகிட்ட, இவ்வளவு பேசுவியா நீ!” என்று திரு ஆச்சர்யம் போல வினவினான்,

“அதுதானே என்னை தானே பேசுவீங்க, ஆனாலும் வரவா போறீங்க, இல்லை பாயாவா போறீங்க!” என்று சொன்ன துளசிக்கு சிரிப்பு வந்து விட, சிரித்து விட்டாள், திருவும் சிரித்து விட்டான்.

கணவன் மனைவி இருவருமே சத்தமாக வாய்விட்டு சிரித்துக் கொண்டனர்.

பின்பு கனிவாகவே பேசினாள், “எனக்கு உங்களை பத்தி தெரியும், உங்க கட்டுப்பாடும் தெரியும். அதனால் பயப்படாம என்னை கூட்டிட்டு போங்க, புருஷன் பொண்டாட்டினா இந்த வேலை மட்டும் தானா, வேற வேலையே இல்லையா?” என்று கிண்டலடித்தாள்.

“ஹ ஹ” என்று இன்னம் சத்தமாக சிரித்தவன், “அதென்னவோ எல்லோரும் அப்படி தான் நினைக்கறாங்க போல, தினமும்ன்றாங்க, விடிய விடியன்றாங்க, ஒரு நாளைக்கு நாலைஞ்சு தடவைன்றாங்க” என்று ரகசியத்தை அம்பலமாக பேசினான்.

“அய்யே என்ன பேச்சு இது?” என்று முகம் சுளித்தவள், “முதல் பேஸ்ட் போட்டு வாயை விளக்குங்க” என்றாள்.

“நீயே என் பக்கத்துல இல்லை, உன்னை ஒரு கிஸ் கூட பண்ண முடியாது. அப்புறம் எதுக்கு இந்த நேரத்துல அந்த வேலை!” என்று திரு சரசமாக பேச,

“ஷ் பா, என்னால முடியலை! ஃபோன் வைக்கறேன்” என்று துளசி ஃபோனை வைக்கப் போக, “வெச்சிடாதடி” என்று அதட்டினான்.

“வெச்சிடாதடி” என்று கத்தியவன் கைகளில் இருந்தது கேலண்டர். நாளை நல்ல நாளா என்று பார்த்துக் கொண்டிருந்தான்

“வைக்காம என்ன பண்றதாம்” என்று திருவைப் போல முறைப்பாய் பேசினாள்.

“என்ன பண்ணவா? நான் பேசறதை கேளு!”

“கேட்கற மாதிரியா பேசறீங்க” என சலிக்க,

“ஏன்? ஏன் கேட்க முடியாது?” என்று எகிறினான்.

“ரகசியம் எல்லாம் இப்படி பப்ளிக்கா பேசுவாங்களா?”

“நீயும் நானும் பேசினா அது பப்ளிக்கா!” என்று ஃபோனிலேயே அவனின் கோபம் புரிந்தது.

“எதுக்கு உங்களுக்கு இப்படி சட்டுன்னு கோபம் வருது?”

“வராம! நானே கஷ்டப்பட்டு டைலாக் அடிக்கறேன்! அதை ரசிக்காம என்னை கடுப்படிக்கற!”

“என்ன கடுப்படிச்சாங்கலாம், அந்த டைலாக் உங்களுக்கு நீங்களே சொல்லிக்கறீங்கன்னு எனக்கு தெரியாதா?” என்று கிளுக்கி சிரித்தாள்.

“கண்டு பிடிச்சிட்டியா?” என்று அசடு வழிவது துளசியின் கண் முன்னாள் தெரிய,

இன்னும் அதிகமாய் கலகலவென அவள் சிரிக்க, “மனுஷன் பேசுவானா உன் கூட!” என்று சலிப்பாய் சொல்வது போல பாவனை செய்தான்.

“அப்புறம் நீங்க யாராம்?”

“ராட்சசண்டி!” என்றான் முறைப்பாக.

“அழகான, பெரிய மீசை வெச்ச, ராட்சசனா?” என்றாள் அப்போதும் புன்னகை முகமாக.

“அழகா இருக்கேன்னு என்னை சொல்றியா, இல்லை மீசையை சொல்றியா?”

“ம்ம், கண்டுபிடிங்க!”

“ரொம்ப பேசற நீ!”

“பிடிக்கலையா?” என்று சற்று சுருதி குறைந்தது அவளின் குரலில்.

“பிடிக்கலையாவா? அடி வாங்க போற நீ! ரொம்ப பிடிச்சிருக்கு துளசி” என்றான் அதையும் கூட முறைப்பாக.

“பிடிச்சிருக்குன்றதை இவ்வளவு ரொமாண்டிக்கா யாரும் சொல்ல மாட்டாங்க!” என்று முணுமுணுப்பாய் சொல்ல,

“என்னடி முணுமுணுக்கற?”

“ம்ம், நானும் டைலாக் அடிச்சேன்!”

“என்ன டைலாக்?”

“ம்ம், ரொமான்ஸ் எல்லாம் சாப்பாடு கிடையாது! சாப்பாடுல இருக்குற உப்பு! உப்பு இல்லைன்னா சாப்பாடு ருசிக்காது! ஆனா உப்பை சாப்பாடா சாப்பிட முடியாது!” என்று கடகடவென்று சொல்ல,

“பின்ற பின்ற துளசி, நீ செமையா பேசற” என்றான் உற்சாகமாக.

“யாரு நானு? திருவோட பொண்டாட்டியாக்கும்!” என்று துளசியும் பதிலுக்கு உற்சாகமாய் பேசினாள்.

அவளின் குரலில் இருந்த உற்சாகம் அவனின் அணு அணுவிலும் தொற்றியது என்றால் மிகையல்ல!

அதை அனுபவிக்க அப்படியே அமைதியாகிவிட்டான்.

“என்ன? என்ன பேச்சை காணோம்?” என துளசி சத்தமாகக் கேட்டாள்.

“ஏண்டி கத்துற ஃபோன் இல்லாமையே கேட்குது!” என்று இலகுவாக திரு பதில் சொல்ல,

“அது தான்! ஃபோன் இல்லாம என் பேச்சை கேட்க தான் என்னை கூப்பிட்டுக்கங்க சொல்றேன்!”

“ம்ம்” என்று அப்போதும் யோசிப்பது போன்ற பாவனையை காண்பித்தான். உண்மையில் நாளை அழைத்துக் கொள்ளலாம் என்று முடிவே செய்து விட்டான்.

“இப்ப என்ன? உங்களை பார்க்காம இருக்க முடியலை சொல்லணுமா!” என்று கோபமாய் துளசி பேச,

“ஏன் சொன்னா தான் என்னவாம்?” என்றான் திரு ஒரு இலகுவான குரலில்.

“சொல்றேன், ஆனா நேர்ல தான் சொல்லுவேன்!” என்று கோபமாக சொல்லியபடி ஃபோனை டக்கென்று வைத்து விட்டாள்.

“பா, என்னமா கோபம் வருது!” என்ற திருவின் முகத்தினில் அப்படி ஒரு மலர்ச்சி புன்னகை.

“இதற்கு தானே ஆசைப்பட்டாய் திருநீர்வண்ணா!” என்று கண் முன் தெரிந்த அவனின் பிம்பத்திடம் அவனே கேட்டுக் கொண்டான்.

ஆம்! அவன் கண்ணாடி முன்னாடி நின்றிருந்தான். முகத்தில் அத்தனை மலர்ச்சி!

இப்படியா பேசி உறங்கும் போதே வெகு நேரம் ஆகிவிட்டது.

காலையில் ஆறு மணிக்கு எழுந்து தான் அன்று போய் துளசியை அழைத்து வருவதாக சொன்னான் அம்மாவிடம்!

அங்கே அப்போது மேகநாதனும் இருந்தார், வெங்கடேஷும் இருந்தான்.

அவனின் முகத்தை பார்த்த வெங்கடேஷ் “நீயா டிரைவ் பண்ற, ரொம்ப டையர்டா தெரியற தூங்குனியா இல்லையா?” என்றான்.

என் பொண்டாட்டி கூட பேசிட்டு இருந்தேன் என்றா சொல்ல முடியும்! "சரியா தூக்கம் வரலை" என்று மழுப்பினான்.

"அப்போ நான் டிரைவ் பண்றேன் எப்போ போகலாம்"

திரு அகிலாண்டேஸ்வரியை பார்க்க, "மீனாக்ஷியை ஸ்கூல்ல விட்டுட்டு அப்படியே போங்க, போய், எழுப்பு அவளை, லீவ் போடப் போறா, அவ வேண்டாம். சும்மா ஸ்கூல்க்கு லீவ் போட்டா பழகிடும் அதுவே, நைட் எப்படியும் நீங்க வந்துவீங்க தானே!" என்று சொல்ல,

மகளை எழுப்பி அவளிடம் சொல்லி, அவளை மிகவும் சமாதானம் செய்து பள்ளிக்கு கிளப்பினான்.

வெங்கடேஷ் தயாரானது பார்த்து ஷோபனா என்னவென்று கேட்க, அவன் சொல்லியதும்,

"நானும் வர்றேன்!" என்று அவளும் நின்றாள்.

"அதெல்லாம் வேண்டாம், நாங்க போறோம்!" என்று சொல்லிவிட்டான்.

நேராக திருவிடம் போய் நின்றாள், "நானும் வர்றேன் மாமா!" என்று.

"சரி வா" என்று திரு சொல்லிவிட,

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாம், வீட்டுக்கு வந்தவங்களை மரியாதையில்லாம பேசிட்டு, இப்போ அவங்க வீட்டுக்கே வருவாளா?” என்று வெங்கடேஷ் சத்தமிட்டான்.

“டேய், என்ன சௌண்டு? ஒன்னு தலைமேல தூக்கி வெச்சு ஆடு, இல்லை இப்படி ஒதுக்கு!” என்று திட்டியவன், “பிரச்சனையை முடிச்சிவிடு, இழுக்காத, பேசினது தப்புதான்! அதுக்காக அப்படியே போகாம வராம இருக்க முடியுமா? அவ வந்தா வரட்டும்!” என்று சொல்ல,

அப்போதும் வெங்கடேஷ் முறைத்தான்.

அகிலாண்டேஸ்வரியை ஷோபனா “சொல்லுங்கள்” என்பது போல பார்க்க,

“டேய், கூட்டிட்டு போடா! முன்னையாவது அவங்க அம்மா வீட்டுக்கு போவா, வருவா. இப்ப அதையும் நீ குறைச்சிட்ட. அவங்களும் இங்க வர்றது குறைஞ்சு போச்சு. கூட்டிட்டு போ, எங்க போறா வர்றா? சும்மா பொண்ணுங்கன்னா வீட்டுக்காரன் முகத்தையே பார்த்துட்டு சுத்தனுமா. நாலு பேரை பார்க்க வேண்டாம்!” என்று ஆரம்பிக்க,

“ஐயோ, கிழவி நீ இருக்கியே” என்று அம்மாவை திட்டிய வெங்கடேஷ், “போ, போய் ரெடியாகு” என்று சொன்னான்.

இப்படியாக குடும்பமாக அவர்கள் துளசியை அழைத்து வர கிளம்பினர். ஆனால் அவளிடம் சொல்லாமல்..

துளசி மிகுந்த கோபத்தில் இருந்தாள். அவ்வளவு சொல்லியும் அழைக்க வரவில்லை. சமாதானம் செய்யக் கூட மீண்டும் அழைக்கவில்லை.

முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருந்தாள்.

வீட்டில் கூட அவளின் அம்மா, மீரா, பிரசன்னா என்று எல்லோரும் “என்ன? என்ன?” என்று கேட்டனர்.

“ஒன்றுமில்லை” என்று சொல்லிவிட்டாலும் முகம் கோபத்தை, சோர்வை, என்று பலவித பாவங்களை காட்டியபடி தான் இருந்தது.

இவளை அழைக்க வருவது யாருக்கும் தெரியாது. அன்று மீராவிற்கு ஆஃப் அதனால் அவள் வீட்டினில் இருக்க, பிரசன்னாவும் விடுப்பு எடுத்து கொண்டான்.

இப்படியாக அவர்கள் வீட்டில் விசிராந்தையாய் இருக்க, திரு வீட்டினர் அங்கே வந்த போது ஒன்றரை மணி, உணவு உண்ணாமல் தான் வந்தனர்.

திரு சொல்லிவிட்டான், "உணவு வேண்டாம், வீட்டிற்கு போய்விடலாம். உணவு கூட உண்ணாமல் அழைத்தால் மனம் சுணங்குவர்" என்று விட்டான்.

இப்படியாக அவர்கள் வர, கதவின் பெல் ஒலித்ததும் "யாரோ?" என்று வந்து திறந்தது மீரா.

இவர்களை பார்த்ததும் அதிர்ச்சியாகி, பின்பு சந்தோஷமாகி, "அக்கா" என்று துளசியை அழைக்க,

"எதுக்குடி இப்படி கத்தற, என் மகன் எழுந்துக்குவான், இப்போ தான் கஷ்டப் பட்டு தூங்க வெச்சேன்" என்று சொல்லியபடி துளசி ரூமில் இருந்து வெளியே வந்தாள்.

இவர்களை பார்த்ததும் அப்படி ஒரு அதிர்ச்சி, பின்பு அப்படியே மகிழ்ச்சி பொங்கினாலும், நேற்றிலிருந்து என்னை அலைக்கழித்து விட்டான் என்ற எரிச்சல் பொங்கியது.

அதனை முகத்தினில் காண்பிக்காத போதும், "வாங்க" என்று கூடச் சொல்லாமல் திருவை பார்த்து ஒரு முறைப்பை வெளியிட்டாள்.

"வெங்கடேஷும் ஷோபனாவும் வந்திருக்காங்க!" என்று திரு எடுத்துக் கொடுத்தான்.

பின்பு தான் உணர்வுக்கு வந்தவள் "வாங்க தம்பி" என வெங்கடேஷை பார்த்து சொல்லி, "வா ஷோபனா" என்று வரவேற்றாள்.

அவர்கள் இருவரும் தாங்கள் வந்தது பிடிக்கவில்லையோ என்ற நினைக்க ஆரம்பித்தனர். துளசியின் முகம் தான் இறுக்கமாய் இருந்ததே!

அதற்குள் ரத்னாவும் பிரசன்னாவும் வந்துவிட,

"வாங்க, வாங்க மாமா!" என்ற முகமன்கள் எல்லாம் கேட்க,

"அக்கா ஏன் மாமா இப்படி இருக்கா? காலையில இருந்து முகத்தை தூக்கி வெச்சிருக்கா!" என்றான் பிரசன்னா.

"அண்ணா, நாம கூட இருக்கோம். மாமா இப்போ தான் வர்றாங்க. அவங்களுக்கு என்ன தெரியும்?" என்று மீரா எடுத்துக் கொடுத்தாள்.

"அதெப்படி எனக்கு தெரியாம போகும் மீரா. அதொண்ணுமில்லை, நான் கூப்பிட வர்றேன்னு சொன்னேன். அதுக்குள்ள என்ன அவசரம்ன்னு கோபம்!" என்று துளசியை பார்த்தவாறே சொன்னான். கண்களில் மட்டுமே புன்னகை முகம் அமைதியாய் இருந்தது திருவிற்கு.

அப்படியே மாற்றி சொல்லவும் துளசிக்கு கடுப்பை கிளப்பியது!

“என்ன கூப்பிட வந்திருக்கீங்களா? சொல்லவேயில்லை!” என்று மீரா கேட்க,

“அதுக்கா கோபம்? எப்போ இருந்தாலும் போக தானே செய்யனும்!” என்று ரத்னா சீரியசாய் பேசினார்.

“அடேய் கிராதகா” என்பது போல துளசியின் முகத்தினில் தெரிந்த பாவனையில், திருவிற்கு அப்படி ஒரு சிரிப்பு பொங்கியது. முயன்று அடக்கி ஒன்றையும் காண்பிக்காமல் நின்று கொண்டிருந்தான்.

துளசி நேரடியாக அவனை முறைத்தாள்!

துளசி முறைக்கவும் அவனையும் மீறி சிரித்து விட்டான். திரு அப்படி சிரித்து துளசியின் வீட்டினர் பார்த்தே இராததால், ஆங் என்று பார்த்தனர். அப்போது பார்த்து வேலவனும் மதிய உணவிற்கு வர அவரும் அதிசயமாய் பார்த்து நின்றார்.

திரு சிரித்துக் கொண்டே இருக்க, அதற்கு மேல் துளசியால் பொறுக்க முடியவில்லை, “ஒரு நிமிஷம்” என்பது போல வெங்கடேஷிடமும், ஷோபனாவிடமும் சொல்லி, “மீரா பார்த்துக்கோ” என்று சொல்லி, மகன் உறங்கிக் கொண்டிருந்த ரூமின் உள் திருவின் கை பிடித்து இழுத்து சென்றாள்.

ஆம்! கை பிடித்து தான் இழுத்து போனால் அத்தனை பேர் முன்னும்!

எல்லோரும் வரவில்லை என்று சொல்ல அழைத்து போகிறாள் என்று தான் நினைத்தனர்.

திரு உள்ளே போனதும், துளசியின் டென்ஷன் பார்த்து, சிறிது சிரிப்பை அடக்கி புன்னகை முகமாக நின்றான்.

“சிரிக்கிறீங்க நீங்க, உங்களை...” என்று சொல்லி அவனை என்ன செய்வது என்பது போல பார்த்தாள்.

பின்னே அடிக்கவா முடியும்? அடித்தெல்லாம் பழக்கமில்லையே?

“என்ன பண்ணப் போற? என்னை அடிக்கப் போறியா?” என்று கையை கட்டி நின்று கேட்ட தோரணையில், துளசிக்கு சத்தியமாய் அடிக்க தோன்றவில்லை!

துளசி பார்த்தபடி நிற்க, திருவின் பார்வை தொட்டிலில் உறங்கும் மகனிடம் தாவியது.

குழந்தையை நோக்கி நகரப் போனான்.

“நகரக் கூடாது!” என்றாள் துளசி கோபத்தை இறுக்கி பிடித்தபடி

“அம்மாடி, செம பனிஷ்மென்ட்!” என்று திரு அங்கேயே கையை கட்டி அசையாமல் நின்று கொண்டான்.

துளசிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, ஆனால் ஏதாவது செய்ய வேண்டும்!

யோசித்தே ஒரு நிமிடத்தை ஓட்டினாள். திருவின் பொறுமை பறந்தது.

துளசி அடிக்கவாவது செய் இந்த இடத்தை விட்டு நகர்றேன். “அவனை பார்க்கணும்” என்று மகனை காண்பித்தான்.

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாம். நீங்க தான் எங்களை கூட்டிப் போகலை சொன்னீங்க தானே!” என்று முறுக்கி நின்றாள்.

திருவும் பார்த்து நிற்க, துளசியும் பார்த்து நிற்க, திரும்பவும் திருவிற்கு சிரிப்பு பொங்கியது அவளின் இந்த கோபத்தில்.

சொல்லியும் அவன் செவி சாய்க்கவில்லை என்று நினைத்து துளசி அப்படி மனதை உளப்பிக் கொண்டிருந்தாள். அதன் வெளிப்பாடு தான் இது.

“உங்களை” என்றபடி கோபமாக துளசி அருகில் வரவும், என்ன நடந்தது என்றே ஒரு நொடி துளசிக்கு புரியவில்லை.

“இதுக்கு தான் துளசி நான் கூட்டிட்டு போக பயந்தேன்” என்று சொல்லிய திருவின் கைகளுக்குள் துளசி இருந்தாள்.

ஆம்! அணைத்துப் பிடித்திருந்தான்.

“பயப்படறவங்க கூட்டிட்டு போக வேண்டாம்!” என்று முகத்தை சுருக்கினாள்.

“ஆமாம், எனக்கு சின்ன வயசுல இருந்தே இந்த பேய் பிசாசை பார்த்து பயம்!” என்று திரு சொல்ல,

“அச்சோ” என்றவள் “விடுங்க, விடுங்க” என்று திருவின் மார்பினில் அடித்து விலக முற்பட்டாள்.

“நீ என்னடி அடிக்கறேன் பேர்வழின்னு மசாஜ் பண்ற!” என்று திரு அதற்கும் போட்டு தாக்கினான்.

“போடா டேய்!” என்று துளசி சொல்லியே விட்டாள்.

“ஹா, ஹா, எங்கே போக?” என்று திரு அதற்கும் சிரித்துக் கொண்டே வாய் கொடுத்தான்.

“உங்களை” என்றவளுக்கு வேறு வழியே இருக்கவில்லை அவனின் வாயடைக்க,

சற்று அவனின் உயரத்திற்கு எம்பி ஒரு முற்றுகை போராட்டம்! நிச்சயம் போராட்டமே! அவ்வளவு வன்மை துளசியிடம், “பேசுவியா நீ” என்பது போல,

ஹா! ஹா! அவளுக்கு தெரியவில்லை! இப்படி ஒரு தண்டனை கிடைத்தால் திரு என்ன பேசாமலா இருப்பான்!

சத்தமின்றி ஒரு முத்தம்! வெளியே அத்தனை பேர் இருக்க, அந்த வெளி உலக அரவமில்லாத ஒரு முத்தம்!

விலகிய போது "இன்னொன்னு" என்று திரு சிறு பிள்ளை போல கேட்கவே செய்தான். கொடுக்க தோன்றவில்லை! வாங்கத்தான் தோன்றியது!

"தோடா, கூட்டிட்டு போகாதவங்களுக்கு எல்லாம் குடுக்க மாட்டோம்!" என்றாள்.

"அட, இங்க நீ மட்டும் தானே இருக்க. அந்த மாட்டோம்ல இருக்குறவங்க வேற யாரு?" என்று திரு மீண்டும் சீண்டினான்.

"அந்த ஆசை வேறையா?" என்று துளசி மீண்டும் பொங்க,

"நீதானே சொன்ன, அப்போ அந்த இன்னொருத்தங்களுக்கும் சேர்த்து நீயே குடு!" என்று திரு பிடிவாதமாய் சொல்ல,

"ஷப்பா" என்றவள், குடுக்கும் வரை விடமாட்டான், ஆனாலும் வெளியே என்ன நினைப்பார்கள் என்று புரிந்து, ஒரு அவசர முத்தம் பதித்தாள். பதட்டத்தோடு கொடுத்த அந்த முத்தம் திருவை மயக்கியது.

விலகவும், திரு மீண்டும் பேச்சை ஆரம்பிக்க, "மூச்" என்று மிரட்டியவள், "இனிமே பேசக் கூடாது, அப்புறம் நான்" என்று நிறுத்தியவள்,

"அழுதுடுவேன்" என்று பாவமாய் சொன்னாள்.

"ஹ ஹ" என்று பெரும் குரலில் சிரித்தவன், "சரி ஒன்னும் பண்ண மாட்டேன்!" என்று சொல்லி அவன் மகனின் புறம் செல்ல, வெளியே சென்ற இவள் "வா ஷோபனா, வாங்க தம்பி!" என்று வெங்கடேஷை அழைத்து குழந்தை இருக்கும் அறைக்கு அழைத்து சென்றாள்.

ஷோபனா அவளிடம் "உங்களுக்கு நாங்க வந்தது பிடிக்கலையா? சாரி, கேட்டுட்டு வந்திருக்கணும்!" என்று சொல்ல,

"அம்மாடி! என்ன இது?" என்று பயந்து விட்டவள், "அப்படி எதுவும் இல்லையே!" என்று அவசரமாய் துளசி மறுத்து திருவை பாவமாய் பார்த்தாள்.

திரு ஷோபனாவின் புறம் திரும்பியவன் "ஷோபனா அவ என்னை முறைச்சிட்டு நின்னா, உங்களை கவனிக்கலை, கவனிச்ச பிறகும் கருத்துல பதியலை. துளசியை கொஞ்சம் ரொம்ப டென்ஷன் பண்ணிட்டேன். சோ, என்னை பார்த்ததும் அவளுக்கு வேற எதுவும்

ஓடலை. நீ எதுவும் தப்பா நினைக்க கூடாது!" என்று பொறுமையாக சொன்னான்.

அதன் பிறகே இருவர் முகமும் தெளிந்தது.

"எஸ், கொஞ்சம் ரொம்ப பண்ணிட்டாங்க!" என்று இன்னும் பாவமாய் துளசி சொன்னாள்.

"என்ன பண்ணினான் அண்ணி, அவனை பிச்சிடலாம்" என்று வெங்கடேஷ் சொல்ல வேறு செய்தான்.

முகம் அத்தனை நிச்சலனமாய் இருந்த போதும் "அதுதான் இவ ஏற்கனவே என் உதடை பிச்சிட்டாலே" என்று திருவிற்கு தோன்ற அதனை துளசிக்கு மட்டும் புரியுமாறு கண்ணில் காட்டினான்.

துளசி என்ன சொல்வது என்று புரியாமல், இதற்கு மேல் தங்காது என்பது போல ரூமை விட்டு வெளியில் சென்று விட்டாள்.

ஷோபனா சிரித்தபடி "மாமா எதோ வம்பு பண்றார். நீங்க அதுக்கு பஞ்சாயத்து பண்றீங்களா?" என்று வெங்கடேஷை கிண்டல் செய்தாள்.

வெங்கடேஷ் திருவை பார்க்க அவனின் முகத்தில் இருந்து ஒன்றும் கண்டறிய முடியவில்லை. "அநியாயத்துக்கு முறைச்சிக்கிட்டே ரொமான்ஸ் பண்றடா

நீ!” என்று வெங்கடேஷ் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

சமையல் அறையில் என்ன செய்வது ரத்னாவும் மீராவும் பார்த்துக் கொண்டிருந்தனர்! துளசியும் போய் நிற்க, விரைந்து சமையல் ஆகியது.

அதற்கு பிறகு திரு எந்த வம்பும் செய்யவில்லை பின்பே துளசி இயல்பானால். அவன் வேலவனுடனும், பிரசன்னாவுடனும் பேசிக் கொண்டிருந்தான். ஷோபனாவும் வெங்கடேஷும் ரூமை விட்டு வெளியில் வரவில்லை. குழந்தை எப்போதும் விழிப்பான் என்று ஆர்வமாய் பார்த்து இருந்தனர்.

சிறுது நேரத்தில் வெளியே வந்த வெங்கடேஷ், “அண்ணி குழந்தை அசையறான், வாங்க, வாங்க!” என்று பரபரப்பாக அழைத்தான்.

அதன் பின்னே எல்லோரையும் குட்டி திரு வசியப் படுத்த, அவர்கள் கிளம்பும் போது மாலையாகிட்டது.

வீடு வந்த போது இரவு பத்து மணி. உறங்காமல் வாசலிலியே மீனாக்ஷி அமர்ந்திருந்தாள். கூட அவளின் தாத்தாவும் பாட்டியும்.

கார் பார்த்ததும் அப்படியே ஓடி வந்து கேட்டை திறந்து விட்டதே அவள் தான்.

துளசி இறங்கும் போதே "மா" என்று ஓடி வந்து அம்மாவை அணைத்துக் கொண்டாள். இதற்கு துளசி கையில் குழந்தை வேறு வைத்திருந்தாள், குட்டி திரு நல்ல உறக்கத்தில் இருந்தான்.

இவள் வேகமாக அணைக்கவும் சிறு அசைவு அவனிடம்!

திரு "பார்த்து மீனா, பாப்பா இருக்கான் கைல" என்று ஆரம்பிக்கும் போதே, மீனாக்ஷி கவனியாமல் ஆனாலும் எல்லோரும் பார்க்கவே , அவனை நோக்கி அவசரமாக கையை நீட்டியவள், "பேசாதே" என்று வாய் மீது விரல் வைத்து காட்டினாள்.

கண்களிலும் ஒரு கண்டனம்!

"சரி, பேசவில்லை!" என்பது போல திருவும் உடனே கை தூக்கி காண்பித்தான்.

அம்மாவை வேகமாக அணைத்து முடித்தவள், "தம்பியை என் கிட்ட குடு!" என்று கை நீட்டினாள்.

துளசி யோசிக்காமல் "இப்படி பிடிக்கனும்" என்று சொல்லியபடி கொடுத்தாள்.

பின்பு ஆராத்தி எடுக்க வேண்டும் என்று அகிலாண்டேஸ்வரி சொல்ல, "அப்படியே எடுங்க அத்தை!" என்று மகளோடும் மகனோடும் துளசி நின்றாள்.

அகிலாண்டேஸ்வரி "நீயும் வாடா" என்று திருவையும் அழைத்து ஆலம் சுற்றினார்.

பின்பு மீனாக்ஷி குழந்தையை தூக்கி உள்ளே செல்ல,

"சும்மா மீனா வரும்போது குழந்தை இருக்கான், அதை செய்யாதே இதை செய்யாதேன்னு சொல்லக் கூடாது. நீங்க மட்டுமில்லை யாரும் சொல்லக் கூடாது. அப்புறம் இவன்னால தான்னு அவளுக்கு குழந்தையை பிடிக்காம போய்டும், புரிஞ்சதா!" என்று மெல்லிய குரலில் என்றாலும் துளசி திருவை அதட்டுவது வெங்கடேஷ் ஷோபனா மேகநாதன் என்று எல்லோருக்கும் கேட்டது.

இதற்குள் பக்கத்துக்கு வீட்டில் இருந்து சித்தப்பாக்களும் தங்கள் மனைவியோடு பார்க்க வந்த விட்டனர் அந்த நேரத்திலும்.

இப்படியாக நேரம் கழிந்தது.

எல்லோரும் சென்ற பிறகு இவர்கள் உணவு உண்டு உறங்க பன்னிரண்டு ஆனது. அதுவரை மீனாக்ஷி தான் குழந்தையை வைத்திருந்தாள்.

யார் எடுத்தாலும் சிறிது நேரத்தில் குழந்தையை வாங்கிக் கொள்வாள்.

துளசி பால் கொடுக்க ரூமின் உள் எடுத்து சென்ற போதும், அம்மாவை உள்ளே விட்டு கதவை மூடி "மா, அப்புறம் கூப்பிடுங்க" என்றாள்.

இப்படியாக மீனாக்ஷி யாரும் கற்றுக் கொடுக்காமலேயே பொறுப்புகள் வந்து விட்டது. குழந்தையை மட்டுமல்ல, அம்மாவையும் பார்த்துக் கொள்ளும் பாங்கு! வீட்டினர் எல்லோர் முகத்திலும் புன்னகை.

பின்பு மீனாக்ஷியும் உறங்க செல்ல, குழந்தையை சிறிது நேரம் தொட்டிலில் போட்டு ஆட்டி விட்டாள்.

அதன் பிறகே கணவன் மனைவி இருவருக்கு தனிமை கிடைத்தது.

"அநியாயத்துக்கு எல்லோர் முன்னாடியும், நீ அதட்டுடறடி, திருவோட கெத்து என்னாகறது!" என்று வருத்தப்படுவது போல திரு வேண்டுமென்றே பேசினான்.

"என்னாவாம் திருவோட கெத்துக்கு?" என்று ஒற்றை புருவம் உயர்த்தி துளசியும் கெத்தாக கேட்டாள்.

"அதுதானே என்னவாம், ம்?" என்று திரு வெகு அருகில் நெருங்கி நின்று கேட்டான். ஆனால் உடல்கள் உரசவில்லை.

கணவனை பார்வையால் ஆசையாய் தழுவியவள், "என்னவாம், ம்?" என அவன் போலவே பேசினாள்.

“இப்படி எல்லாம் பார்த்தா மட்டும், நான் பக்கத்துல வந்துடுவனா, திரு ரொம்ப ஸ்டெடி!” என்று பேசினான்.

“இப்போதான் யாரோ கெத்து என்னாகறது சொன்னாங்க. இதுக்கு பேர் என்னவாம்!” என்று அவன் அருகில் நின்றதை கொஞ்சலாக துளசி சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

மீனாக்ஷி “அம்மா” என்று பாதி உறங்கியும் உறங்காமலும் இருந்த நிலையில் சத்தமாக குரல் கொடுத்தாள்.

அந்த சத்தத்தில் குட்டி திரு அசைய,

பிள்ளைகளின் குரல்கள் கேட்ட நொடி, அருகில் தெரிந்த திருவின் முகத்தில் இருந்த மீசையை இழுத்தாள்.

“அம்மா விடுடி” என்று வலியில் அவன் சிணுங்கும் போதே, அவனின் உதடுகளிலும் ஒரு அவசர முத்தம் பதித்தவள், “தோ வர்றேன்” என்று மீனாக்ஷிக்கு குரல் கொடுத்து,

“குழந்தையை பாருங்க” என்று திருவிடம் சொல்லி ரூமின் உள் சென்றாள்.

திருவிற்கு என்ன நடந்தது என்றே புரியவில்லை!

குழந்தையின் சிணுங்களில் அனிச்சையாய் தொட்டில் புறம் நகர்ந்தவன், அதனை ஆட்டி விட்டான். கூடவே

ஒரு யோசனை! “என்னடா செஞ்சா இவ நம்மளை?” — நினைக்கும் போதே முகத்தினில் புன்னகை!

இதுவும் சத்தமின்றி ஒரு முத்தம்! வேலைகளுக்கு நடுவிலும் வேலையாய் கொடுக்கப்படும் சத்தமில்லாத ஒரு ரகசிய முத்தம்!

ஆகச் சிறந்தது — இதுவே இல்லறம்!

இது நல்லறமாய் ஆகுவது ஆகாததும் அவரவர் வாழ்க்கையை அவரவர் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் உள்ளது. நீயா நானா போட்டி கூடவே கூடாது!

நீ வாழ்க்கையை வெல்ல உன் வாழ்க்கை துணையிடம் கட்டாயம் தோற்றுப் போக வேண்டும்! அது ஆணாகினும் சரி! பெண்ணாகினும் சரி!

இது வாழ்க்கையின் எழுதப் படாத விதி!

ஷ்ஷ்ஷ்!

சத்தமின்றி முத்தமிடு!

(நிறைவுற்றது)